N15
16113

கடவுள் துணை.

யூநாநி குஸ்ஸூம

# சிகிச்சா போதினி.

மூன்றும்பாகம்.

M. A. Press, MADRAS.

ஹகீம்-பா-முகம்மது அப்துல்லா

M15
76713

கடவுள் துணை.

யூநாநி குஸ்தமை

# சிகிச்சாபோதினி.

மூன்று பாகம்.

இதை
சுதேசவைத்தியர்களின் உபயோகத்திற்காக,
யூநாநி வைத்திய போதினி முதலிய
பல வைத்திய நூற்களின்
கிரந்தகர்த்தராகிய

ஹக்கீம்
பா. முஹம்மது அப்துல்லா சாயபு
இயற்றி அச்சிட்டனர்.

சென்னை
முஸ்லிம் அபிமானி அச்சியந்திரசாலை

FIRST EDITION.

1915 ௵

Copy right.

கைவிலை ரூ. 1-0-0 வி. பி. ரூ 1-2-0.

## விளம்பரம்.

இதனால் சகலருக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்:—"யூனானி சுஸ்ருஷா சிகிச்சா போதினி மூன்றாம்பாகம்" என்ற இக்கிரந்தம் ௲அ௱௪௰௭ளு (௨௫-வது) ஆக்டின் (௨௰-வது) பிரிவில் (௬-வது) விதியின் பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மத்ராஸிலும்,

இன்னும் பிரான்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும், காரைக்காலிலும் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால், இக்கிரந்தத்தையாவது, அல்லது இதைவேறு பாஷையில் மொழிபெயர்த்தாவது, அல்லது, இதில் ஏதேனும் பாகத்தையாவது, என் உத்தரவின்றி ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால், மேற்கண்ட ஆக்டில் சொல்லியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய் அதனாலுண்டாகும் நஷ்டமனைத்தும் வசூல் செய்யப்படும்.

ஹக்கிம்-பா-முகம்மது அப்துல்லாசாயபு அன்ஸன்ஸ்

12 அப்புமேஸ்திரி தெரு,

ஜார்ஜ்டவுன், சென்னை.

76713

## விசேஷ விளம்பரம்.

எம்மால் அச்சிடப்பட்டிருக்கும் கிரந்தங்களின் டைட்டில்பேஜில் அடியில் கண்டிருக்கின்ற எம்முடைய பெயர் எழுதப்பட்டிருக்கும்; அவ்விதப் பெயர் எழுதப்படாத கிரந்தங்கள் மாறுபாடானவையாயிருக்கும்; ஆனதுபற்றி அப்படிப்பட்ட கிரந்தங்களைக்கொண்டுவந்து கொடுக்குமவர்களுக்கும், அல்லது அப்படிப்பட்ட கிரந்தங்களை வைத்து விற்பனை செய்யுமவர்களைக் காண்பிக்குமவர்களுக்கும்தக்க வெகுமதி கொடுக்கப்படும்.

ஹக்கீம் பா-முகம்மது அப்துல்லா சாயபு அன்ஸன்ஸ்.

## புத்தக விளம்பரம்.

இதனடியிற்கண்ட புத்தகங்கள் வேண்டியவர்கள் சென்னை மாநூல்கான்தேவடி, அப்புமேஸ்திரிவீதி, 12-வது நெம்பர் கிரகத்தில் இருக்கும் ஹக்கீம் பா-முகம்மது அப்துல்லா சாஹிபு அன்சன்ஸில் கைவிலைக்கும், வாலியு பேயபல் போஸ்ட் மூலமாகவும் இதனடியிற்கண்ட விலை விகிதப்படி பெற்றுக்கொள்ளலாம்.

### புத்தகங்கள்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| பூநாக வைத்திய தாருட்யவிருத்திபோதினி முதற்பாகம் | 1 | 5 | 0 |
| டிடி இரண்டாம்பாகம் | 2 | 0 | 0 |
| டிடி தறவுகோல | 0 | 10 | 0 |
| டிடி நான்காம்பாகம் | 1 | 0 | 0 |
| பூநாதி கிகிச்சா சாரசங்கிரகம் முதற்பாகம் (இரோகிரோக கிவாரணபோதினி) | 1 | 5 | 0 |
| பூநாக சிகிச்சாசார சங்கிரகம் இரண்டாம்பாகம் (நயனரோக கிவாரணபோதினி) | 1 | 5 | 0 |
| பூநாகி குக்ஷ்மசிகிச்சாபோதினி 1ம்பாகம் | 1 | 2 | 0 |
| டிடி இரண்டாம்பாகம் | 1 | 2 | 0 |
| அநுபோகவைத்திய நவநீதம் முதற்பாகம் | 2 | 0 | [illegible] |
| இரண்டாம்பாகம் | 1 | [illegible] | 0 |



| | | | |
|---|---|---|---|
| மூன்றாம்பாகம் | 1 | 0 | 0 |
| நான்காம் பாகம் | 1 | 0 | 0 |
| ஐந்தாம்பாகம் | 1 | 2 | 0 |
| ஆறாம்பாகம் | 1 | 0 | 0 |
| ஏழாம்பாகம் | 1 | 0 | 0 |
| எட்டாம்பாகம் | 1 | 0 | 0 |
| ஒன்பதாம்பாகம் | 1 | 0 | 0 |
| பத்தாம்பாகம் | 1 | 0 | 0 |
| அகத்திய மகாமுனி அருளிச்செய்த மகாதிராவகம் என்னுமநூல் | 1 | 0 | 0 |
| பிரமேக கிவாரணபோதினி | 0 | 12 | 0 |
| சிராவக கிவாரணபோதினி | 0 | 13 | 0 |
| ஆயுர்வேத சிரோமணியென்னும்வைத்திய சிந்தாமணி முதற்பாகம் | 0 | 14 | 0 |
| மந்திர மேக கிவாரணபோதினி | 1 | 0 | 0 |
| சரபேந்திர கபமருந்து மஞ்சரி | 0 | 8 | 0 |
| இராஜவைத்திய மகுடமென்னும் தேரையர் எதுகையமகவெண்பா மூலமும் உரையும் முதற்பாகம் | 1 | [illegible] | 0 |
| இராஜ வைத்திய மகுடமென்னும் தேரையர் எதுகை யமகவெண்பா மூலமும் உரையும் இரண்டாம்பாகம் | 1 | [illegible] | 0 |
| இராஜவைத்திய மகுடமென்னும் தேரையர் எதுகையமகவெண்பா மூலம் | 0 | 6 | 0 |
| தன்வந்திரி சூக்ஷ்ம வைத்தியம் | 0 | 5 | 0 |
| அகத்திய மகாமுனி வைத்தியப் பிள்ளைத்தமிழ் | 1 | 4 | 0 |
| அகத்தியர் மெய்ஞ்ஞானம் | 1 | 4 | 0 |
| தேரையர்வைத்திய மகாகரிசல் | 0 | 10 | 0 |
| மூலரோகச் சிகிச்சாபோதினி | 1 | 0 | 0 |
| வைத்தியத் திருப்புகழ் | 0 | 12 | 0 |
| விஷபேதி கிவாரணி | 0 | 4 | 0 |
| பிளேக் சிகிச்சாபோதினி | 0 | 8 | 0 |
| நடுக்கற்சுர பிரபாவபோதினி | 0 | 2 | 0 |

| | | | |
|---|---|---|---|
| போகரேழாயிர சூத்திர மெழுநூறு | 0 | 12 | 0 |
| வீரமாமுனி வாகடத்திரட்டு முதற்பாகம் | 1 | 0 | 0 |
| வீரமாமுனி வாகடத்திரட்டு இரண்டாம் பாகம் | 1 | 0 | 0 |
| அகத்தியமாமுனி வைத்தியஅந்தாதி | 1 | 0 | 0 |
| வல்லாரைப் பிரபாவ போதினி | 0 | 8 | 0 |
| சதசுலோகமென்னும் வைத்திய சதகம் | 0 | 12 | 0 |
| இரசவாதசிந்தாமணி முதற்பாகம் | 1 | 5 | 0 |
| இரசவாதசிந்தாமணி இரண்டாம்பாகம் | 1 | 5 | 0 |
| கொங்கணர் வாதகாவியம் மூவாயிரம் | 1 | 8 | 0 |
| அகஸ்தியர் பள்ளு | 1 | 2 | 0 |
| இரசவாத மஞ்சரி | 1 | 2 | 0 |
| இலக்க சௌமியசாகரம் முதற்பாகம் | 1 | 0 | 0 |
| இலக்கசௌமியசாகரம் இரண்டாம்பாகம் | 0 | 14 | 0 |
| இலக்கசௌமியசாகரம் மூன்றாம் பாகம் | 0 | 14 | 0 |
| இலக்கசௌமியசாகரம் நான்காம்பாகம் | 0 | 14 | 0 |
| இலக்கசௌமியசாகரம்ஐந்தாம்பாகம் | 1 | 0 | 0 |
| ஹிப்னாடிஸம் என்னும்மனோவசிய தத்துவம் | 2 | 0 | 0 |
| அப்பியாச சக்கரம் | 0 | 5 | 0 |
| மர்னிடவசியம் | 2 | 8 | 0 |
| ஹிப்னாடிஸத் திரட்டு | 0 | 8 | 0 |
| ஞானதரிசனக்கண்ணாடி | 1 | 0 | 0 |
| பர்ஸனல் மாக்னடிஸம் | 2 | 0 | 0 |
| மெஸ்மரிஸபாடங்கள் | 2 | 0 | 0 |
| சுவாசமேஉயிர் | 1 | 0 | 0 |
| பண்டிதை மெஸ்மரிஸா | 1 | 0 | 0 |
| உலக அதிசய விளக்கம் | 0 | 8 | 0 |
| ஞாய அஷ்டாங்கதீபம் | 0 | 4 | 0 |
| அசன்பேசரித்திரம் | 0 | 8 | 0 |
| சந்திரகாசனை சாமர்த்தியத்தால் விழுங்கிய தாதி | 0 | 2 | 6 |

ஷேக்இம்-பா-முகம்மது அப்துல்லாசாயபு அண்ட்ஸன்ஸ்.
12 அப்புமேஸ்திரி தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.


பூநாகி ருக்ஷமா சிகிச்சாபோதினி மூன்றாம்பாகம்

## அட்டவணை.

விஷயம். பக்கம்.

அ.


அக்கிரோக உசிதங்கள் ... 187-188
அக்கிரோகச் சிகிச்சை ... ... 187
அக்கிரோக மாத்திரை ... 189-190
அக்கிரோக மேற்பூச்சு ... ... 191
அங்குலிவாதப் பற்றுக்கள் ... ... 136
அடிதள்ளுசிதம் ... ... 32
அடிதள்ளுப்பொடி ... ... 32
அடியிறங்குச்சூரணம் ... ... 33
அடியிறங்குத உசிதம் ... ... 31
அடியிறங்குதல் அல்லது அண்டிதள்ளுதல்சிகிச்சை 30
அண்டரோக உசிதங்கள் ... 108-110
அண்டவாத குக்கிரிக்கச்சூரணம் ... ... 110
அண்டவீக்கப்பூச்சு ... ... 32
அண்டிக்குக கஷாயங்கள் ... ... 31
அண்டிப்பொடிகள் ... ... 30
அதிமூத்திர அரக்கை ஜவாரிஷ் ... ... 101
அதிமூத்திர உசிதமுறைகள் . 95 முதல் 97 வரை
அதிமூத்திரகந்தச்சூரணம் ... ... 99
அதிமூத்திர குக்கிரிக்க ஜவாரிஷ் ... ... 100
அதிமூத்திர குக்கிரிக்கச்சூரணம் ... ... 97
அதிமூத்திர திரிபலாதி ஜவாரிஷ் ... ... 98
அதிமூத்திர திலதச்சூரணம் ... ... 98
அதிமூத்திரப்பற்று ... ... 101
அதிமூத்திர ரோகசிகிச்சைகள் ... ... 95
அபின் எண்ணெய் ... ... 198
அரசுசிரியோகம் ... ... 11
அர்திகிச்சூரணம் ... ... 8

விஷயம். பக்கம்.

அரிதகிப்பிச்சமருந்து ... ... 94
அலரியெண்ணெய் ... ... 193
அஸ்மரி அல்லது கல்லடைப்புரோகச்சிகிச்சை 62
அஸ்மரித்திலா ... ... 73
அஸ்மரிரோக அரைஸ்கானமுறைகள் ... 71-72
அஸ்மரிரோக உசிதங்கள் 63 முதல் 68 வரை

ஆ.

ஆமணக்குசிதம் ... ... 2
ஆமணக்குத்திலா ... ... 16
ஆமில உசிதம் ... ... 3
ஆமிலக ஜயாரிஷ்ட ... ... 15
ஆவிபிடிக்கும் முறைகள் ... ... 142
ஆணி உசிதம் ... ... [illegible]

இ.

இங்கிலீஷ் பிராண்டிரி ... ... 209
இடுப்புநோய்க்கட்டு ... ... 133
இந்துமுறைப்பற்று ... ... 16
இரச உசிதம் ... ... 6
இரண எண்ணெய் ... ... 215
இரத்தமூத்திர அவஸ்தானம் ... ... 108
இரத்தமூத்திர உசிதங்கள் ... ... 107
இரத்தமூத்திர சிகிச்சைகள் ... ... 107
இரத்தமூத்திர சினமாத்திரை ... ... 107
இரத்தமூலச்சூரணம் ... ... 43
இரைப்பைக்கிருமி மாத்திரை ... ... 26

எ.

எருக்கெண்ணெய் ... ... 196
எலும்புமுறிவுசிதங்கள் ... ... 215

ஏ.

ஏரண்டகற்பம் ... ... 120
ஏரண்டக்கஷாயம் ... ... 9



விஷயம் பக்கம்.

க.

கடலையுசிதம் ... ... 153
கடல்தேங்காய் மாத்திரை ... ... 12
கமேலாக்களிம்பு ... ... 207
கருப்பெண்ணெய் ... ... 197
கல்லடைப்பிற்காம் கஷாயங்கள் ... ... 68-69
கல்லடைப்பிற்காம் சூரணங்கள் ... ... 69

கா.

கார்பேர்கரிசிப் பக்குவம் ... ... 167

கி.

கிருமி ஆசனத்திரிகள் ... ... 28-29
கிருமி ஆவாரை மாத்திரை ... ... 24
கிருமிகளை வெளிப்படுத்தும் உசித முறைகள் 19-20
கிருமிக்கமேலா மாத்திரை ... ... 27
கிருமிச்சிரக மாத்திரை ... ... 28
கிருமித்திரி பலாதி ... ... 22
கிருமி மாத்திரை ... ... 23
கிருமிரோகச்சிகிச்சை ... ... 19
கிருமி விளங்காதி மாத்திரை ... ... 26

கீ.

கீரைக்கிருமி மாத்திரை ... ... 25
கீல்வாத அபின் மாத்திரை ... ... 131
கீல்வாத இலுப்பை நெய் உசிதம் ... ... 143
கீல்வாத ஐவண எண்ணெய் ... ... 149
கீல்வாத எருக்குத்தைலங்கள் ... ... 145
கீல்வாத ஏரண்ட அல்வா ... ... 132
கீல்வாத ஏரண்டத்தைலம் ... ... 144
கீல்வாத ஒற்றடம் ... ... 134
கீல்வாத ஓமத்தைலம் ... ... 146
கீல்வாதக் கட்டுக்கள் ... 134-135
கீல்வாத சதாப் எண்ணெய் ... ... 151
கீல்வாத தாழைத்தைலங்கள் ... ... 151

| விஷயம். | பக்கம். |
|---|---|
| கில்வாத தோன்றித்தைலங்கள் ... | 145-146 |
| கில்வாத கவ சென்னெய் ... ... | 150 |
| கில்வாத பட்டைத்தைலம் ... ... | 143 |
| கில்வாத புகையிலைத்தைலம் ... ... | 146 |
| கில்வாத பூண்டுத்தைலம் ... ... | 145 |
| கில்வாதப்பற்றுக்கள் | 137 முதல் 141 வரை |
| கில்வாத முக்கூட்டெண்ணெய் ... ... | 144 |
| கில்வாத மூலிகையெண்ணெய் ... ... | 149 |
| கில்வாதரைசான் எண்ணெய் ... ... | 147 |
| கில்வாதலிங்க சூதமாத்திரை ... ... | 130 |
| கில்வாத லிங்கமாத்திரை ... ... | 129 |
| கில்வாத வெண்ணொச்சித்தைலம் ... ... | 143 |
| கில்வாயு சித்திர மூலமாத்திரை ... ... | 125 |
| கில்வாயு காஞ்சான் மாஜூன் ... ... | 132 |
| கில்வாயுச்சூரணம் ... ... | 124 |
| கில்வாயு மாத்திரை ... ... | 127 |
| கில்வாயு மைசாக்ஷி மாத்திரை ... ... | 127 |

கு

| விஷயம். | பக்கம். |
|---|---|
| குங்கிலியக்களிம்பு ... | 208-210 |
| குங்கிலியப்பிளாஸ்திரி ... | 210-212 |
| குஷ்ட அபின் உசிதம் ... ... | 156 |
| குஷ்ட ஊறற் கஷாயம் ... ... | 157 |
| குஷ்ட ஜவண க்ஷாரற் கஷாயம் ... ... | 154 |
| குஷ்ட கருவேல் உசிதம் ... ... | 155 |
| குஷ்டசூத மாத்திரை ... ... | 160 |
| குஷ்டதார பற்பம் ... | 161-162 |
| குஷ்ட திராவக உசிதங்கள் ... ... | 154 |
| குஷ்டநாபி மாஜூன் ... ... | 158 |
| குஷ்ட நிம்பலவண உசிதம் ... ... | 156 |
| குஷ்டநிவாரண ஷர்பத் ... ... | 159-160 |
| குஷ்டபச்சையுசிதம் ... ... | 155 |
| குஷ்டரோக உசிதங்கள் ... ... | 152 |





| விஷயம். | பக்கம். |
|---|---|
| குஷ்டரோக சிகிச்சை ... ... | 151 |
| குஷ்டவாகை யுசிதம் ... ... | 155 |
| குஷ்ட வேம்புச்சூரணங்கள் ... | 157-158 |
| குந்திரிக்க மாத்திரை ... ... | 14 |
| குன்ம ஆசனத்திரிகள் ... ... | 17-18 |
| குன்மரோகச் சிகிச்சை ... ... | 2 |
| குன்மரோக மாத்திரை ... ... | 10 |

கெ.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| கெந்தி யெண்ணெய் ... ... | 195 |
| கொங்கணி கற்பம் ... ... | 120 |

ச.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| ஜங்கால் பிளாஸ்திரி ... ... | 211 |
| சதாப் உசிதம் ... .. | 4 |
| சம்பங்கி யுசிதம் ... ... | 6 |
| சர்வரணப் பிளாஸ்திரி ... ... | 212 |
| சர்வாங்கவாயு மாத்திரை ... ... | 128 |
| சவ்வச்சார மாத்திரை ... ... | 13 |

சி.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| சிங்கிப்பிளாஸ்திரி ... — | 209 |
| சிங்கிப் பீச்சுமருந்து ... — | 93 |
| சிங்கியுசிதம் — — | 5 |
| சிலையெண்ணெய் ... — | 195 |

சீ

| விஷயம். | பக்கம். |
|---|---|
| சீரக ஆசனக்குளிகை — | 62 |

சொ.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| சொறிரோக ஹல்வா — | 193-194 |
| சொறிரோக உசிதங்கள் — | 192 |
| சொறிரோக ஊறற்கஷாயம் | 192-193 |
| சொறிரோக எண்ணெய்கள் ... ... | 195 |
| சொறிரோகச் சிகிச்சை ... ... | 191 |
| சொறிரோக மாத்திரை ... ... | 194 |
| சொறிரோக மேற்பூச்சுக்கள் | 193 முதல் 202 வரை. |

விஷயம். பக்கம்.

சோ.

சோப்புசிதம் ... ... 7

த.

தகரையெண்ணெய் ... ... 194
தண்ணீர்ப்பிளாஸ்திரி ... ... 217

தா.

தாளக எண்ணெய் ... ... 199

தி.

திராக்ஷாதி ஷர்பத் ... ... 72
திலத உசிதம் ... ... 5

து.

துத்தப்பீச்சு மருந்து ... ... 93

ந.

நரம்புச்சிலந்தி உசிதங்கள் 203 முதல் 206 வரை.
நரம்புச்சிலந்தி ரோகச்சிகிச்சை ... ... 202

நா.

நாபியுசிதம் ... ... 113
நாபிவிரோதம் ... ... 7

நி.

நிலஆவாரை மாஜூன் ... ... 14

நீ.

நீரடைப்பு அதாவது மூத்திர அடைப்பின் சிகிச்சைகள் ... ... 104
நீரடைப்பு கலிங்கமூலக் கஷாயம் — — 106
நீரடைப்புசிதங்கள் 102 முதல் 106 வரை
நீர்க்கட்டுக்கஷாயம் ... ... 106

நு.

நுணு உசிதம் ... ... 152

ப.

படர்தாமரை உசிதங்கள் 179 முதல் 187 வரை
படர்தாமரைச் சிகிச்சை — — 178
பவுத்திரப் பிளாஸ்திரி — — 213



விஷயம். பக்கம்.

பி.

பிரமேக உசிதங்கள் 74 முதல் 84 வரை
பிரமேக ஊறற்கஷாயம் — — 83
பிரமேகக் கஷாயம் — — 82
பிரமேகக் காக்னஜ்மாத்திரை — — 91
பிரமேகசீனச்சூரணம் — — 85
பிரமேக[illegible]டை மாத்திரை — — 90
பிரமேகத்திரி — — 95
பிரமேகத்திற்காம் சூரணங்கள் — — 85
பிரமேகத்திற்காம் சொட்டுமருந்துகள் — — 94
பிரமேகத்திற்காம் பீச்சுமருந்துகள் — — 92
பிரமேகப்பிசின்சூரணம் — — 86
பிரமேகப் புரசச்சூரணம் — — 87
பிரமேக மஞ்சளாதிச்சூரணம் — — 86
பிரமேக மதச்சூரணம் — — 85
பிரமேக முள்ளியாதிச் சூரணம் — — 86
பிரமேகரோஜா மாத்திரை — — 89
பிரமேக வித்தாதி மாத்திரை — — 88
பிரமேக வியாதியின் சிகிச்சைகள் — — 73
பிரமேக வெடியுப்புச் சூரணம் — — 87
பிளாஸ்திரி வகைகள் — — 207

பீ.

பீஜச்சொறிக்கட்டுக்களும் பற்றுக்களும். 113 முதல் 118 வரை
பீஜப்புண் கமேலா எண்ணெய் — — 110
பீஜப்புண்பொடி — — 111
பீஜரணநீர் — — 113
பீஜரோகச்சிகிச்சை — — 108
பீஜவீக்க ஒற்றிடம் — — 111
பீஜவீக்கத்திலாக்கள் — — 112-113

விஷயம். பக்கம்.


பு.

புலித்தோல் விநோதம் — — 7
புருவெச்சச்சூரணம் — — 44

பூ.

பூனைக்காலிக்களிம்பு — — 212

பெ.

பெருச்சாளிவெண்ணெய் — — 170

ம.

மதுரக்கஷாயம் — — 9
மரவிப்புச்சூரணம் — — 70

மா.

மாதுளைக்கஷாயம் — — 22

மீ.

மீன் கொல்லி உசிதம் ... ... 153

மு.

முருக்குக்கஷாயம் — — 22
முழுங்கால் வாதப்பற்று — — 136

மூ.

மூல அரிதகி மாத்திரை — — 38
மூல அமிர்தசில் சூரணம் — — 43
மூலக்கடுப்புச்சூரணம் — — 45
மூலக்களாக் கஷாயம் — — 41
மூலக்கற்கடக சிங்கிமாத்திரை — — 39
மூலக்காலிச்சூரணம் — — 44
மூலத்திராக்ஷாதி மாத்திரை — — 37
மூலத்திரி சிரட்டைச்சூரணம் — — 42
மூலத்திற்குத்துத்தி உசிதம் — — 35
மூலத்திற்கு முள்ளங்கி உசிதம் — — 35
மூலத்துத்திக் கஷாயம் — — 42
மூல நிம்பப்பிரயோகம் — — 36
மூல நெல்லிமுள்ளி ஊறற்கஷாயம் — — 41




விஷயம். பக்கம்.


மூல மைசாக்ஷிதிரிபலாதி — — 40
மூல மைசாக்ஷி மாத்திரை — — 39
மூலரசாஞ்சனாதி மாத்திரை — — 33
மூலரோக உசிதம் — — 34
மூலரோகச் சிகிச்சை — — 33
மூலரோகங்களுக்காம் மேற்பூச்சுமருந்துகள் 54-55
மூலரோகங்களுக்குபயோகப்படும்
மேற்பூச்சுத்தைலங்கள் — — 57-58
மூலரோகத்தில் உபயோகப்படும்
தாவுபொடிகள் — — 59-60
மூலரோகத்திற்காம் அரை ஸ்நானங்கள் 61
மூலரோகத்திற்காம் ஆசனத்திரிகள் — — 62
மூலரோகத்திற்காம் உசிதமுறைகள் 45 முதல் 51 வரை
மூலரோகத்திற்காம் கட்டுக்கள் — — 56
மூலரோகத்திற்காம் பிளாஸ்திரிகள் — 60
மூலரோகத்திற்காம் புகைகள் 51 முதல் 54 வரை
மூலிவெடிப்பிரயோகம் — — 36
மூலவெட்பாலைச்சூரணம் — — 43
மூலவேம்புச்சூரணம் — — 42
மூலவேம்பு மாத்திரை — — 40

மெ.

மெழுக்கு பிளாஸ்திரி — 203-210

மே.

மேத்தி உசிதம் — — 4

யூ.

யூதக்கல் சூரணம் — — 69

ரோ.

ரோஜனப்பிச்சமருந்து — — 93

ல.

லசுனை உசிதங்கள் — — 7-18

வ.

வறள்மூல உசிதம் — — 34

| விஷயம். | பக்கம். |
|---|---|
| **வா.** | |
| வாதரோக வௌவால் எண்ணெய் | 148 |
| வாயுக்கஷாயங்கள் | 123 |
| வாயுசரிஞ்சான் சூரணம் | 125 |
| வாயுரோக உசிதமுறைகள் | 119-121-122 |
| வாயுரோகங்களுக்குபயோகமாம் மேற்பூச்சுத்தைலங்கள் | 143 |
| வாயுரோகச்சிகிச்சை | 118 |
| வாயுரோகப்புகை | 141-142 |
| **வி.** | |
| விளங்காத்தீச்சூரணங்கள் | 21 |
| **வெ.** | |
| வெடியுப்பு ஆசனக்குளிகை | 62 |
| வெண்குஷ்ட கத்திரியெண்ணெய் | 171 |
| வெண்குஷ்ட கொங்கணித்தைலம் | 171 |
| வெண்குஷ்டச்சூரணங்கள் | 163 முதல் 165 வரை |
| வெண்குஷ்ட தைலங்கள் | 170 |
| வெண்குஷ்ட பேரீச்சன்தைலங்கள் | 172 |
| வெண்குஷ்ட மாத்திரைகள் | 166 முதல் 170 வரை |
| வெண்குஷ்ட மேற்பூச்சுப்பிரயோகங்கள் | 172 முதல் 178 வரை |
| வெண்குஷ்டரோகச்சிகிச்சை | 163 |
| வெள்ளறுகு திராவகம் | 82 |
| வெ[illegible]ட்டுசிதம் | 6 |
| வெள்ளைப்பிளாஸ்திரி | 207 |
| வெள்ளை மெழுக்குப்பிளாஸ்திரி | 211 |
| **வே.** | |
| வேதனை அண்டி உசிதம் | 31 |
| வேம்புசிதம் | 153 |


அட்டவணை முற்றுப்பெற்றது.



## முகவுரை.

நண்பர்களே! “பூரணி அனுபவசிகிச்சாபோதினி” யாகிய இக்கிரந்தத்தை வெளிப்படுத்த நேர்ந்த காரணம், இதன் தன்மை, சிறப்பு முதலியவைகளெல்லாம் இதன் முதற்பாகம் இரண்டாம் பாகங்களில் அடங்கியவைகளாலும், அவற்றின் முகவுரை முதலியவற்றாலும் நன்கு விளங்கும். ஆகலின், அவற்றைப்பற்றி இங்கெழுதுதல் அநாவசியமாம்.

இதற்கு முந்திய பாகங்களைப்பார்த்து அவற்றிலுள்ள எண்ணிறந்த முறைகளைச் செய்தநுபவித்து, அவற்றின் உபயோகத்தைத்தெரிந்த புத்திமான்களெல்லோரும், இது ஒவ்வொரு குடும்பத்திற்கும் மிகவும் அவசியமானதாமென்றும், இதன் அடுத்த பாகத்தையும் விரைவில் வெளிப்படுத்தவேண்டுமென்றும் கடிதமுகத்தாலும், நேரிலும் வற்புறுத்தி வந்தபடியாலும், முந்திய பாகங்களின் காப்பிகள் விரைவாகச் செலவாகி விட்டபடியாலும், மற்றபாகங்களும் நம்நண்பர்களால் நன்கு மதிக்கப்படுமென்று கருதி இப்போது முடிவாகிய இம்மூன்றாம் பாகத்தை மிக்க பிரயாசையுடன் வெளிப்படுத்தியிருக்கிறோம்.

இது, முறைகளின் உயர்வாலும் மிகுதியாலும் மற்றக்காரணங்களாலும் முந்தின பாகங்களைக்காட்டிலும் எத்தனையோ பங்கு சிறப்புற்றதாகும்.

இதில், குன்மரோகச்சிகிச்சைகளாகிய ஆமணக்குசிதம், ஆயிலஉசிதம், சதாப் உசிதம், ஆளி உசிதம் மேத்தி உசிதம், சிங்கியுசிதம், திலத உசிதம் வெள்ளாட்டுசிதம், இரசஉசிதம், சம்பங்கிஉசிதம், சோப்புசிதம், காபிஸிலேகதம், பு[illegible]த்தோல் விலேகதம், லசுன உசிதங்கள், பித்துசிதம், அரிதகிசூரணம், மதுரக்கஷாயம், ஏரண்டக்கஷாயம், குன்மரோகமாத்திரை, அர்சுப்பிரயோகம், கட[illegible]தேங்காய் மாத்திரை, சங்குச்சை மாத்திரை, [illegible] ஆவாரை மாத்திரைகள், குத்திரிக்கமாத்திரை, ஆமிலக ஜவாரிஷ், ஆமலகிகுத்திலா, இங்குமுறைப்பற்று, குன்மஆசனத்திரிகள் ஆகியவைகளும்;

கிருமிரோகச்சிகிச்சைகளாகிய பூச்சிகளை வெளிப்படுத்தும் உசிதமுறைகள், விளங்காதி சூரணங்கள், மாதுளைக்கஷாயம், முருக்குக்கஷாயம், கிருமித்திரிபலாதி, கிருமிமாத்திரை, கிருமி ஆவாரை மாத்திரை, இரைக்கிருமிமாத்திரை, இரைப்பைக்கிருமி மாத்திரை, கிருமி விளங்காதி மாத்திரை, கிருமிக் கமேலா மாத்திரை, கிருமிசிரகமாத்திரை, கிருமி ஆசனத்திரிகள் ஆகியவைகளும்;

அடியிறங்குதல் அல்லது அண்டிதள்ளுதற் சிகிச்சைகளாகிய அண்டிப்பொடிகள், அடியிறங்குதலுக்குசிதம், அண்டிக்குக்கஷாயங்கள், வெதுவை அண்டி உசிதம், அடிதள்ளுப்பொடி, அடிதள்ளுசிதம், அண்டிவீக்கப்பூச்சு, அடியிறங்குச்சூரணம் முதலியவைகளும்;

மூலரோகச்சிகிச்சைகளாகிய மூலரோக உசிதங்கள வறள்மூல உசிதம், மூலத்திற்கு முள்ளங்கி உசிதம்,



மூலத்திற்குத்துத்தி உசிதம், மூலவெடிப்பிரயோகம், மூல கிம்பப்பிரயோகம், மூலதிராக்ஷாதி மாத்திரை, மூலக்கற்கடக சிங்கிமாத்திரை, மூலவேம்பு மாத்திரை, மூல மைசாக்ஷிதிரிபலாதி, மூலக்களாக்கஷாயம், மூல நெல்லிமுள்ளி ஊறற்கஷாயம், மூலத்துத்திக்கஷாயம், மூலத்திரிகிரட்டைச்சூரணம், மூலவேம்புச்சூரணம், இரத்தமூ[illegible]சூரணம், மூலவெட்பாலைச்சூரணம், மூல அழிஞ்சில் சூரணம், பு[illegible]யச்சம்சூரணம், மூல காவிச்சூரணம், மூல[illegible]சூரணம், மூல[illegible] சிகிமுறைகள், மூலரோகத்திற்காம் புகைகள், மூலரோகங்களுக்காம் மேற்பூச்சு மருந்துகள், மூலரோகத்திற்காம் கட்டுக்கள், மூலரோகங்களுக்கு உபயோகப்படும் மேற்பூச்சுத்தைலங்கள், மூலரோகத்தில் உபயோகப்படும் தாவுப்பொடிகள், மூலரோகத்திற்காம் வொரால்திரிகள், மூலரோகத்திற்காம் அரை ஸ்நானங்கள், மூலரோகத்திற்காம் ஆசனத்திரி, வெடியுப்பு ஆசனக்குளிகை, [illegible] ஆசனக்குளிகை, ஆகியவைகளும்;

அஸ்மரி அல்லது கல்லடைப்பு ரோகச்சிகிச்சைகளாகிய அஸ்மரிரோக உசிதங்கள், கல்லடைப்பிற்காம் கஷாயங்கள், கல்லடைப்பிற்காம் சூரணங்கள், புதுக்கல் சூரணம், நெருஞ்சிச்சூரணம், அஸ்மரிரோக அரை ஸ்நான முறைகள், திராக்ஷாதி ஷர்பத், அஸ்மரித்திலா ஆகியவைகளும்.

பிரமேக வியாதியின் சிகிச்சைகளாகிய பிரமேக உசிதங்கள், வெள்ளருகுத்திராவகம், பிரமேகக்கஷாயங்கள், பிரமேக ஊறற்கஷாயங்கள், பிரமேகத்திற்

காம் சூரணங்கள், பிரமேகமதச்சூரணம், பிரமேகசிலாச்சூரணம், பிரமேக முள்ளியாதிச்சூரணம், பிரமேகப்பிசின்சூரணம், பிரமேக மஞ்சளாக்திசூரணம், பிரமேகப்புரகச்சூரணம், பிரமேகவெடியுப்புச்சூரணம், பிரமேகவித்தாதி மாத்திரை, பிரமேகசிராஜா மாத்திரை, பிரமேகதோடை மாத்திரை, பிரமேககாக்னஜு மாத்திரை, பிரமேகத்திற்காம் [illegible]மருந்துகள், துத்தப்பிச்சமருந்து. சோறுப்பிச்ச[illegible]ந்து, சிங்கிப்பிச்சமருந்து, அரிதனப்பிச்சுமருந்து, பிரமேகத்திற்காம சொட்டுமருந்துகள், பிரமேகத்திரி ஆகியவைகளும்;

அதிமூத்திரரோகச் சிகிச்சைகளாகிய அதிமூத்திர உசிதமுறைகள், அதிமூத்திர குந்திரிக்கச்சூரணம், அதிமூத்திர திலதச்சூரணம், அதிமூத்திர திரிபலாதி ஜவாரிஷ், அதிமூத்திர கந்தச்சூரணம், அதிமூத்திர குந்திரிக்கஜவாரிஷ், அதிமூத்திர அரக்கை ஜவாரிஷ், அதிமூத்திரப்பற்று ஆகியவைகளும்;

நீரடைப்புச் சிகிச்சைகளாகிய நீரடைப்புசிதங்கள், நீர்க்கட்டிக்கஷாயம், நீரடைப்புக்கலிங்க மூலக்கஷாயம் ஆகியவைகளும்;

இரத்தமூத்திர சிகிச்சைகளாகிய இரத்தஉசிதங்கள், இரத்தமூத்திர சின்மாத்திரை, இரத்தமூத்திர அரைஸ்நானம், முதலியவைகளும்;

பீஜரோகச்சிகிச்சைகளாகிய அண்டரோக உசிதங்கள், அண்டவாத குந்திரிக்கச்சூரணம், பீஜப்புண் கமேலா எண்ணெய், பீஜப்புண்பொடி, பீஜவீக்க ஒற்றிடம், பீஜவீக்கத்திலாக்களை, தாபியுசிதம், பீஜச்சொ



றிக்கட்டுக்கள், பீஜச்சொறிப்பற்றுக்கள், பீஜவீக்கப்பற்றுக்கள் ஆகியவைகளும்;

வாயுரோகச்சிகிச்சைகளாகிய வாயுஉசித முறைகள், கொங்கணிகற்பம், எரண்டகற்பம், வாயுக்கஷாயங்கள், கீல்வாயுச்சூரணங்கள், வாயுசரிஞ்சான் சூரணம், கீல்வாயுசித்திரமூல மாத்திரை, கீல்வாயு மைசாகுமாத்திரை, கீல்வாயுமாத்திரை, சர்வாங்கவாயு மாத்திரை, கீல்வாத [illegible]மாத்திரை, கீல்வாதலிங்க ரூதமாத்திரை, கீல்வாத அபினி மாத்திரை, கீல்வாத எரண்ட அல்வா, கீல்வாயு சூரஞ்சான் மாஜூன், இடுப்புநோய்க்கட்டு, கீல்வாதக்கட்டுக்கள், கீல்வாத ஒற்றிடம், அங்குலி வாதப்பற்றுக்கள், முழங்கால் வாதப்பற்று, கீல்வாதப்பற்றுக்கள், வாயுரோகப்புகைகள், ஆவிபிடிக்கும் முறைகள், வாயுரோக மேற்பூச்சுத்தைலங்கள், கீல்வாத இலுப்பை நெய் உசிதம், கீல்வாத வெண்ணொச்சித்தைலம் கீல்வாத எரண்டத்தைலம், கீல்வாத முக்கூட்டெண்ணெய், கீல்வாத எருக்குத்தைலங்கள், கீல்வாத [illegible]த்தைலம், கீல்வாத தோன்றித்தைலங்கள், கீல்வாத புகையிலைத்தைலம், கீல்வாத ஓமத்தைலம், கீல்வாதமைராகான்எண்ணெய், கீல்வாத பட்டைத்தைலம், வாதரோகவெளவால் எண்ணெய், கீல்வாத ஜவணஎண்ணெய், கீல்வாத மூலிகையெண்ணெய், கீல்வாத நவசெண்ணெய், கீல்வாத தாமழத்தைலம், கீல்வாதசதாப் எண்ணெய் ஆகியவைகளும்;

குஷ்டரோகச்சிகிச்சைகளாகிய நுனை உசிதம், மீன் கொல்லி உசிதம், கடலையுசிதம், வேப்புசிதம்,

குஷ்டதிராவக உசிதங்கள், குஷ்டஐவண ஊறற்கஷாயம், குஷ்டவாகையுசிதம், குஷ்டகருவேல் உசிதம், குஷ்டபச்சையுசிதம், குஷ்ட கிம்பலவண உசிதம், குஷ்டஅபின் உசிதம், குஷ்ட ஊறற்கஷாயம், குஷ்டவேம்புச்சூரணம், குஷ்டகாபி மாஜூன், குஷ்டநிவாரண ஷர்பத்கள், குஷ்டசூத மாத்திரை, குஷ்டதாரபற்பங்கள், வெண்குஷ்டரோகச்சிகிச்சை, வெண்குஷ்டச்சூரணங்கள், வெண்குஷ்டமாத்திரைகள், கார்போக்கரிசிப்பக்குவம், வெண்குஷ்டதைலங்கள், பெருஞ்சீசாளி எண்ணெய், வெண்குஷ்ட கொங்கணித்தைலம், வெண்குஷ்ட கஸ்தூரியெண்ணெய், வெண்குஷ்ட பேரிச்சன்தைலங்கள், வெண்குஷ்ட மேற்பூச்சுப் பிரயோகங்கள் ஆகியவைகளும்;

படர்தாமரைச்சிகிச்சைகளாகிய உசிதங்களும், அக்கிரோகச் சிகிச்சைகளாகிய உசிதங்கள், அக்கிரோக ஊறற்கஷாயங்கள், அக்கிரோக மாத்திரைகள், அக்கிரோக மேற்பூச்சு ஆகியவைகளும்;

சொறிரோகச்சிகிச்சைகளாகிய உசிதங்கள், சொறி ஊறற்கஷாயங்கள், சொறிரோக ஹல்வாக்கள், சொறிரோக மாத்திரைகள், சொறிரோக எண்ணெய்களாகிய சிலேயெண்ணெய், கெந்தியெண்ணெய், எருக்கெண்ணெய், தாளகஎண்ணெய், தகரையெண்ணெய், கருப்பெண்ணெய், அவுரியெண்ணெய், அபின்எண்ணெய், சொறிரோக மேற்பூச்சுகள் ஆகியவைகளும்; காம்புச்சிலந்திரோகச் சிகிச்சைகளாகிய உசிதங்களும், வெள்ளைப்பிளாஸ்திரி, கமேலாக்களிம்பு, குங்கிலியக்களிம்பு, மெழுக்குப்பிளாஸ்திரி, இங்கிலீஷ் பிளாஸ்



திரி, சிங்கிபிளாஸ்திரி, மெழுக்குப்பிளாஸ்திரி, குங்கிலியப் பிளாஸ்திரிகள், ஐங்கால் பிளாஸ்திரி, வெள்ளைமெழுக்குப் பிளாஸ்திரி, ஆமணக்காலிக்களிம்பு, சர்வரணப்பிளாஸ்திரி, பவுத்திரப்பிளாஸ்திரி, தண்ணீர்ப்பிளாஸ்திரிகள், இரண எண்ணெய், எலும்பு முறிவுசிதங்கள் ஆகியவைகளும் வகை விவரமாக எழுதப்பட்டிருக்கின்றன.

இம்முறைகளெல்லாம் பிரசித்தமானவைகளும், எல்லோரும் எளிதில் தெரிந்துகொள்ளக்கூடியவைகளும், இங்குக்கிடைக்கத்தக்க சரக்குகளைக்கொண்டு சொற்பச்செலவில் முடிக்கத்தக்கவைகளும், நோய்களை வெகு சீக்கிரத்தில் தீர்க்கத்தக்கவைகளுமாம். இவைகளைத் தேர்ந்தெடுத்தெழுதி அச்சிட்டவிஷயத்தில் ஏற்பட்டபணச்செலவு, சிரமம், பிரயாசம், ஆகியவைகள் அதிகம், ஆயினும், அவற்றைக்கருதாமல், லோகோபகாரத்தைக்கருதிய மிக்க பிரயாசையுடன் இப்பாகத்தை வெளிப்படுத்தினோம். ஆதலால், வைத்தியாபிமானமுள்ள அன்பர்களெல்லோரும் இதற்குமுன் நம்மால் வெளிப்படுத்தப்பட்ட கிரந்தங்களையும் இதன் முந்திய இரண்டு பாகங்களையும் நன்குமதித்து வாங்கிவாசித்து எங்களுக்கு உற்சாகத்தை உண்டாக்கினதுபோலவே இதனையும் வாங்கி, மேன்மேலும் இத்தகைய நூல்களை வெளிப்படுத்துதற்காம் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் உண்டாக்குமாறு விரும்புகின்றோம்.

இங்ஙனம்.

அ-பா-மு-அ.

٧٨٦

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

யூநாநி [illegible]

# சிகிச்சா போதினி.

மூன்றாம்பாகம்.

## கடவுள் வணக்கம்.

அறபுவாக்கியம்.

الحمد لله رب العالمين

الصلوة والسلام على سيد

المرسلين واله واصحابه

اجمعين

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்; அஸ்ஸலாது வஸ்ஸலாமு அலா ஸெய்யிதில் முர்ஸலீன்; வ ஆலிஹி, வ அஸ்ஹாபிஹி அஜ்மஈன்.

## நூல்.

### பீடிகை.

இதற்குமுன் வெளிப்படுத்தப்பட்ட இதன் முதலிரண்டாம் பாகங்களைப் பார்வையிட்டு அவற்றிலுள்ள முறைகளைச் செய்தனுபவித்து நற்பயன்களையடைந்த நண்பர்கள் பலரும் அவற்றை நன்குமதித்துப் புகழ்ந்து பலகடிதங்கள் எழுதிவருகின்றனர். அன்றியும் அவ்விரண்டுபாகங்களும் மிக்க உயர்வுடையவை

களாதலின், சீக்கிரம் செலவாய்விட்டன. அப்பாகங்களைப் பார்வையிட்ட கனவான்களெல்லோரும் இப்பாகத்தையும் விரைவில் வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இக்காரணங்களை முன்னிட்டு இதனை விரைவில் வெளிப்படுத்தமுயன்றும் இடையில் சில அசந்தர்ப்பங்களால் தாமதம்நேரிட்டது. ஆயினும், அம்முயற்சியைக் கைவிடாமல் நம் நண்பர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி இப்போது இதனை வெளிப்படுத்த முன்வந்தோம். இப்பாகமும் இதற்கு முந்தின பாகங்களைப்போலவே உலகத்தாருக்குப் பயன்படுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆதலால், இதனை வாசிக்கும் நண்பர்கள் இதைப்போல மற்ற கிரந்தங்களும் வெளிப்படுவதற்கூக்கத்தை உண்டாக்குவார்களாக.

### குன்மரோகச் சிகிச்சை.

இது, சிறு குடற்களில் அசுத்தமலம் வறண்டுதிய்ந்து சிக்கற்பட்டு உண்டாகும். வாயுவு அடங்குதங்கிநிற்பதனாலும் இந்த வியாதி உண்டாகும். கபசத்துநீய்ந்துவறண்டு கெட்டிப்பட்டுப்போவதனாலும் இந்த வியாதியுண்டாகும். அந்தந்த காரணத்திற்குத் தகுந்தபடி ஒற்றிடம், இலகுபேதி முதலியவைகளை உபயோகப்படுத்தி வசப்படுத்தவேண்டும். இந்த வியாதிக்கு கைவல்யமான சில உசிதமுறைகளை முன்னர் எழுதுவாம்.

### ஆமணக்குசிதம்.

சிற்றாமணக்கு அல்லது பேராமணக்கின் வேர்ப்பட்டையை நிழலிலுலர்த்தி ஒரு சிறுகலயத்திற்போட்டு நன்றாக அழுத்தித்திணித்து வாய்மூடிச் சீலைமண்



செய்துலர்த்திக் கவசத்தின் பத்துப்பங்கெடை வறட்டியிற் புடமிட்டாறின்பின் எடுக்கப் பஸ்பமாகி வெளுத்திருக்கும். இதனைச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௧, இதனை உட்கொண்டுமேலே வெந்நீர் பானஞ்செய்யவும். காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:— வயிற்றுவலி, மலபந்தம் ஆகியவை தீரும்.

### ஆமில உசிதம்.

தேவையான புளியம்புறணியைச் சட்டியில்வறுத்துச் சாம்பலாக்கினாலுஞ்சரியே, அல்லது புடமிட்டுப் பஸ்பமாக்கினாலுஞ்சரியே, அல்லது நெருப்பிற்கொளுத்திச் சாம்பலாக்கினாலுஞ்சரியே எவ்விதமாயினும் பஸ்பமாக்கி வஸ்திரகாயஞ்செய்து சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௩, ௪. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

அநுபானம்:— எலுமிச்சம்பழச்சாறு, புளித்தமோர், காடி.

உபயோகம்:—வாயுசம்பந்தமான வயிற்றுவலி, அஜீரணரோ[illegible]கியவை தீரும்.

### குறிப்பு.

இது வேகமான மருந்தாகையால் தேகசுபாவத்தையறிந்து இதனை உபயோகிக்கவேண்டும். இதனை முறைப்படி நீற்றினால் தாம்பிர பஸ்பத்திற்கு மேலானதாம்.

## சதாப் உசிதம்.

சதாபிலைச்சாறு பங்கு-௧, விளக்கெண்ணெய் பங்கு-௨.

இவ்விரண்டையும் சேர்த்துக்காய்ச்சிக் கடுகுதிரள்பதத்திலிறக்கி வடிகட்டிச்சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௧, ௨.

அநுபானம்:—சோம்பையரைத்துப் பிழிந்தசாறு அல்லது சோம்புதிராவகம்.

உபயோகம்:— வாயுசம்பந்தமான வயிற்றுவலி, அஜீரணம், வயிற்றுக்கிருமி ஆகியவைகள் தீரும்.

### குறிப்பு.

மேற்கண்ட சாற்றுடன் மேற்கண்டபடி நல்லெண்ணெயைச்சேர்த்துக்காய்ச்சி வயிற்றின்மீது பூசிவருவதனாலும் மேற்கண்டரோகங்கள் தீரும்.

## ஆளி உசிதம்.

ஆளிவிதை வராகனெடை-௫, இதனை ஒன்றரை ஆழாக்கு ஜலத்திற்போட்டு அரைஆழாக்காகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டிக் கொஞ்சம் சர்க்கரையும், நல்லெண்ணெயும் சேர்த்து[illegible]ணஞ்செய்யவேண்டும்

இவ்விதம் காலையில் ஒருவேளை அல்லது காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்[illegible]ம்.

உபயோகம்:—வயிற்றுவலி, வயிற்றிலுள்ளவாயு, கபக்கட்டு ஆகியவை தீரும்.

## மேகதி உசிதம்

மருதோன்றிவிதை விராகனெடை-௨, முதல்-௩. இதனைச் சோம்பையரைத்துப் பிழிந்தசாற்றில் அல்லது சோம்புதிராவகத்தில் மூன்றுமணிநேரம் ஊறவைத்து உட்கொள்ளவேண்டும்.

இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவந்தால் உடனேவயிற்றுவலி நிற்கும்,



## சிங்கி யுசிதம்.

கலைமான்கொம்பைச் சிறுதுண்டுகளாக்கிச் சுட்டுக்கரியாக்கி அகத்திக்கீரையிலைச்சாற்றை அல்லது பசுவின்பாலை விட்டரைத்து வில்லைசெய்துலர்த்திப் புடமிட்டுப் பற்பஞ்செய்துகொள்ளவும் அல்லது நமது அநுபோகவைத்திய நவநீதத்திற் சொல்லியிருக்கிற முறைகளில் ஒன்றின்படி செய்துகொள்ளலாம், அல்லது அவரவர்களுக்குத் தெரிந்தவேறு முறைப்படியும்செய்து கொள்ளலாம் எந்தவிதத்திலும் பஸ்பமாக்கிக்கொள்வதுதான் பிரதானம்.

பிரமாணம்:—விராகனெடை-௨, ௩, ௧. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

அநுபானம்:—வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—வயிற்றுவலி, உஷ்ணசம்பந்த வயிற்றுவலி, கபக்கட்டு ஆகியவை தீரும்.

## திலத யுசிதம்.

எள்ளெண்ணெய் வராகனெடை-௧, ௨. இதனைக்கொஞ்சம் சர்க்கரையிற்சேர்த்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் மலச்சிக்கல் தீர்ந்து வயிற்றுவலி நீங்கும்.

## வெள்ளாட்டுசிதம்.

வெள்ளாட்டுப்புழுக்கை தேவையான அளவு. இதனைச் சிறு பெண்குழந்தையின்நீரில் வெண்ணெய்போலரைத்துத் துணியின்மீது தடவி வயிற்றின்மீது போடவேண்டும். பெண்ணாயிருந்தால் ஆண் சிறுகுழந்தையின்நீரில் அரைத்துப் போடவேண்டும். இவ்விதம் தினம் இரண்டு அல்லது மூன்றுதடவைகள்செய்தவரின் குன்மரோகம், வயிற்றுவலி ஆகியவை தீரும்.

## இரச உசிதம்.

தேவையான பாலரசத்தைக் கல்வத்திற்போட்டுக் கோவையிலைச்சாற்றை அல்லது வெற்றிலைச்சாற்றை விட்டு இரண்டுசாமநேரமரைத்து ஈரத்துடன் எடுத்துத் துண்டுத்துணியில் தடவி நாபியைச்சுற்றிலும் போடவேண்டியது. ஈரமுலராமல் மேற்படி சாறுகளில் ஒன்றினால் நனைத்து ஈரமாக்கிக்கொண்டிருக்கவேண்டியது. ஈரமுலர்ந்தால் இரசம் ஜனித்து வெளிப்பட்டுப்போம். அரைமுதல் ஒருமணி நேரமிருந்தால் போதுமானது. இவ்வாறுசெய்யின் வயிற்றுவலி உடனே நிற்கும்.

## சம்பங்கி உசிதம்.

சம்பங்கிவெண்ணெய் தேவையான அளவு. இதனைக்காய்ச்[illegible]கண்டவுடன் இதில் பஞ்சைநனைத்து அடையாகத்தட்டி வயிற்றின்மீது போட்டுவைக்கவும். இவ்விதம் தினம் இரண்டொருதடவைகள்செய்தவரின் வயிற்றுவலி, குன்மரோகம் ஆகியவை தீரும்.



## சோப்புசிதம்.

நாட்டுச்சோப்பை வெந்நீரில் இழைத்து வயிற்றின்மீது பற்றிடவும். இவ்விதம் தினம் இரண்டுமூன்று தடவைகள் செய்தவரின் குன்மரோகம், வயிற்றுவலி ஆகியவை தீரும்.

## நாபி விநோதம்.

ஆண்குழந்தைபிறந்து அதன் நாபிவிழுந்தவுடன் அதனையெடுத்து நன்றாயுலர்த்தி வெள்ளித்தாயத்தில் அல்லது தாம்பிரதாயத்தில் போட்டடைத்துத் தம் தேகத்தில் அதனைக் கட்டிக்கொண்டிருப்பவர்களுக்கு குன்மரோகம் வராதென்றும், குன்மரோகமிருந்தாலும் நாளுக்குநாள் குறைந்துபோகுமென்றும் அநுபோகசாலிகளான அநேகம் பண்டிதர்கள் எழுதியிருக்கின்றார்கள்.

## புலித்தோல் விநோதம்.

புலியின் அல்லது சிறுத்தைப்புலியின் தோலின் மேல் எந்நேரமும் உட்கார்ந்திருப்பதனாலும் அதிற்படுத்து நித்திரை செய்வதனாலும், குதிரையின்மீதுபோட்டுச் சவாரிசெய்வதனாலும் குன்மரோகமுண்டாகாது. குன்மரோகமிருந்தாலும் நாளுக்குநாள் குறைந்துபோகும்.

## லசுன உசிதம்.

தோலுரித்த பூண்டு[illegible] வராகனெடை. இதனைச் சாப்பிடவேண்டும். மாலையிலும் இவ்விதமே சாப்பிடவேண்டும். இவ்விதம் சிலநாட்கள்செய்யின் குன்மரோகம், வயிற்றுவலி, கபக்கட்டு முதலியவை தீரும்.

௨. வேறு:

மேற்படி பூண்டை வெண்ணெய்போலரைத்து வயிற்றின்மீது பற்றிட்டுவருவதாலும் மேற்கண்டரோகங்கள் தீரும்.

பித்தசிதம்.

வெள்ளாட்டுப்பித்தநீரை ஒரு இரும்புக்கரண்டியிற்போட்டுக்காய்ச்சிப் பொங்கினவுடன் இறக்கி ஆறவைத்து இளஞ்சூட்டுடன் நாபியைச்சுற்றிலும் பற்றிடவும். இவ்விதம் சிலதடவைகள் செய்யின் பேதியாகி வயிற்றுவலி, குன்மரோகம் ஆகியவை தீரும்.

அரிதகீச்சூரணம்.

மஞ்சட் கடுக்காய்த்தோல், பிஞ்சுக்கடுக்காய், வாகூருப்புத்தூள் அல்லது இந்துப்புத்தூள், குச்சி, காம்பு முதலியவைநீக்கிச் சுத்திசெய்த சூரத்துநிலாவாரை இவை வகை-௧-க்குச் சமனெடை.

செய்முறை:—மேற்படி இரண்டுவகைக் கடுக்காயையும் தனித்தனியிடித்துத் தெள்ளியெடுத்துக்கொள்ளவேண்டும். சூரத்துநிலாவாரையை இடித்துவஸ்திரகாயஞ்செய்துகொள்ளவேண்டும். இம்மூன்றையும் ஒன்றாகக்கலந்து கொஞ்சம் நெய்யைத்தெளித்து நெய்ப்பசையுண்டாக்கி மேற்படி உப்புத்தூளைச்சேர்த்து அரைமணிநேரமரைத்து மிஸ்ரமித்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—விராகனெடை-௧, ௨, ௩. இரவில் படுக்கைக்குப்போகும்போது இதனை உட்கொண்டு கொஞ்சம் வெந்நீர்பானஞ்செய்து நித்திரைசெய்யவேண்டும்.



உபயோகம்:—காலையில் மலம்போகும்; மலபந்தம் தீர்ந்து வயிற்றுவலி, குன்மரோகம் ஆகியவை தீரும். பசிதீபனமுண்டாகும்.

குறிப்பு

இதனை பேதிச்சூரணமாகவும் உபயோகிக்கலாம் ஆனால் தேகசுபாவத்திற்குத் தகுந்தபடி அளவை அதிகப்படுத்திக் காலையில் கொடுக்கலாம். குன்மரோகங்களுக்குக் குறைந்த அளவாகக் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

மதுரக் கஷாயம்.

மேற்சொல் சீவிச்சிதைத்த அதிமதுரம், சதகுப்பை இவை வகை-௧-க்கு விராகனெடை-௫-முதல்-௭-வரையில் இவற்றை ஒருபாத்திரத்திற்போட்டு மூன்று ஆழாக்கு ஜலம்விட்டு நான்கிலொருபாகமாகச்சுண்டவைத்து இறக்கி வடிகட்டி இளஞ்சூட்டுடன் ஐந்து அல்லது ஆறு வராகனெடை நெய்யைவிட்டுக்கலந்து பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும். தேகம் பலஹீனப்பட்டிருந்தால் ஒருவேளை மாத்திரம் உபயோகிக்கவும்.

உபயோகம்:—குன்மரோகம் தீரும்; ஜீரணசக்தியுண்டாகும்; மலபந்தம், மலச்சிக்கல் ஆகியவைதீரும்.

ஏரண்டக் கஷாயம்.

ஆமணக்குவேர்ப்பட்டை, ஈரமானதாயிருந்தால் பலம்-௧, உலர்ந்ததாயிருந்தால் பலம்-௨. சிற்றாமணக்கெண்ணெய் வராகனெடை-௬. பெருங்காயம் வராகனெடை-௫. (இதனைப் பொரித்துத் தூள்செய்துகொள்ளவும்)

செய்முறை,—மேற்படி லேப்பட்டையில் கால்படி ஜலத்தைவிட்டு நான்கிலொருபாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டி இளஞ்சூட்டுடன் மேற்படி எண்ணெயைவிட்டுப் பெருங்காயத்தூளையும் சேர்த்துக்கலக்கிப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலையில் ஒருவேளை செய்துவரவும்.

உபயோகம்:—குன்மரோகம், வயிற்றுவலி, மலபந்தம், மலச்சிக்கல் ஆகியவை தீரும். இது சீதளதேகிகளுக்கு மிகவும் ஏற்றது.

## குன்மரோக மாத்திரை.

கழற்சிப்பருப்புச் சூரணம், ஆமணக்குப்பருப்பு (இதிலுள்ள முளையிலை மேற்சருகு ஆகியவைகளை நீக்கிக்கொஞ்சம் வறுத்துக்கொள்ளவேண்டும்) குப்பைமேனியிலைச்சூரணம், அல்லது தும்மட்டிப்பூண்டுச்சூரணம், மேற்றோல்சீவின சுக்குச்சூரணம், பெருங்காயம் (இதனைப் பொரித்துக்கொள்ளவும்) இவை வகை-க-க்கு வராகனெடை-எ. தண்ணீர் அல்லது பன்னீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சூரணங்களை ஒன்றாகக் கலந்து கல்வத்திற்போட்டு ஒருமணிநேரமரைத்துஎல்லாம் மிஸ்ரமானபின்பு தண்ணீரை அல்லது பன்னீரைச் சிறுகச்சிறுகவூற்றி இரண்டுசாமமரைத்து கால் வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க. உ.

அநுபானம்:—சர்க்கரை, வெந்நீர் முதலியவைகளாம்.



உபயோகம்:—குன்மரோகம், வயிற்றுவலி, அஜீரணரோகம் ஆகியவைகள் தீரும்.

### குறிப்பு.

இது, கபசம்பந்தமானரோகம், சீதளசம்பந்தமானரோகம் ஆகியவைகளுக்கு மிகவும் ஏற்றது. இன்னும் இதைத் தகுந்த அநுபானங்களில் வேறுவியாதிகளிலும் உபயோகிக்கலாம். ஒரு மாத்திரையை உட்கொண்டு அதன்மீது மூன்றுமிடர் வெந்நீர்பானஞ்செய்துவர வயிற்றுப்பொருமல், வயிற்றுப்பிசம் ஆகியவை தீரும்.

சோம்பையரைத்துப் பிழிந்தசாறு பலம்-க. இதனுடன் இரண்டுமாத்திரைகளை அநுபானித்து உட்கொண்டுவர வயிற்றுவலி, பேதி ஆகியவை தீரும்.

குளிர்ந்த [illegible] பலம்-ரு. இதில் மூன்றுமுதல் ஐந்துமாத்திரை[illegible] அநுபானித்து உட்கொண்டுவர மலபந்தம், மல[illegible] ஆகியவை தீரும்.

மேற்கண்டபடி வெந்நீருடன் அநுபானித்துஉட்கொண்டுவந்தால் பேதியாம்.

இதனை உபயோகித்து உஷ்ணம் அதிகரித்தால் பன்னீரில் கற்கண்டைச்சேர்த்துக்கரைத்துப் பானஞ்செய்துவர அந்த உஷ்ணம் தணிந்துபோகும்.

## அரசுப் பிரயோகம்.

அரசமரத்தின் பச்சையிலை எண்-௫௦. இதன் காம்பைக்கிள்ளிவிட்டு அம்மியில்வைத்து வெண்ணெய்போலரைத்துப் பிறகு சமனெடை பனைவெல்லத்தை

க்கூடச்சேர்த்தரைத்து ஆறு மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்க.

பிரமாணம்:—வேளை ஒன்றுக்கு மாத்திரை - க. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—குன்மரோகம், வயிற்றுவலி, அஜீரணரோகம் ஆகியவை தீரும்.

குறிப்பு.

பப்பத்து இலைகளை வைத்தரைத்து மேற்கண்டபடி சித்தப்படுத்திக்கொள்ளவும். அதிகமாகச் செய்துகொள்ளவேண்டுமானால் வெல்லத்தைச் சேர்க்காமல் வேண்டியஅளவு தனிஇலைகளை அரைத்துப் பிரமாணப்படி மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு மாத்திரையின் சமனெடை வெல்லத்தைச்சேர்த்துச் சாப்பிடவேண்டும்.

கடல்தேங்காய் மாத்திரை.

கடல்தேங்காய்ச்சதை[illegible]ல்நரைத்தூள், லாகூருப்புத்தூள் அல்லது இந்துப்புத்தூள், கறுப்புப்புத்தூள், பூநீறு, சுத்திசெய்த சிவதைவேர்த்தூள், மரவுப்பு, பொரித்தவெண்காரத்தூள், மஞ்சட்கடுக்காய்த்தோற்சூரணம், அரிசித்திப்பிலிச்சூரணம், மேற்றோல்சீவின சுக்குச்சூரணம், பெருங்காயம், (இதனைப் பொரித்துக்கொள்ளவும்.) வாய்விளங்கச்சூரணம் இவை வகை-க-க்குப் பலம்-வ. அமல்பேதவராகனெடை-ய.

செய்முறை:—எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு ஜலத்தைவார்த்து எட்டுமணிநேரமரைத்து அரை வ



ராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்திச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ. ரு. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—குன்மரோகம், குன்மக்கட்டி, குடல்முறுக்குநோய், வயிற்றுவலி ஆகியவை தீரும்.

சவ்வச்சார மாத்திரை.

சவ்வச்சாரலவணம் அல்லது நவச்சாரத்தூள் வராகனெடை-ரு. பொரித்த பெருங்காயச்சூரணம் வராகனெடை-ரு.

செய்முறை:—இவ்விரண்டையும் கலந்து கல்வத்திலிட்டு அரைமணிநேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு தண்ணீரைச்சிறுகச்சிறுகவார்த்து இரண்டுமணிநேரமரைத்து இருபது மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

பிரமாணம்:—மாத்திரை-க. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

அநுபானம்:—மேற்றோல்சீவின சுக்கு, ஆமணக்குவேர்த்தோல் இவை வகை-க-க்கு வராகனெடை-க. இவ்விரண்டையும் சிதைத்து ஒன்றரை ஆழாக்கு ஜலத்திற்போட்டு அரைஆழாக்காகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டி மேற்படி மாத்திரையை உட்கொண்டு இந்தக் கஷாயத்தைப் பானஞ்செய்துவரவும்.

உபயோகம்:—குன்மரோகம், குடல்முறுக்குநோய், வயிற்றுவலி முதலியவை தீரும்.

## நிலஆவாரை மாஜூன்.

குச்சு காம்பு முதலியவைநீக்கின நிலஆவாரைச் சூரணம் பலம்-௨௰, பனப்தொபூச்சூரணம், ரோஜாப்பூச்சூரணம், மஞ்சட்கடுக்காய்த்தோற்சூரணம், துராச்சூரணம் இவை வகை-௧-க்கு வராகனெடை-௫, விதைநீக்கின திராக்ஷைப்பழம் பலம்-௮, தேன் பலம்-௫௨.

செய்முறை:—திராக்ஷைப்பழத்தைவெண்ணெய்போலரைத்து எல்லாச்சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து, அதில் மிஸ்ரமித்துக்கொள்ளவும். தேனைக்காய்ச்சி நுரையைநீக்கிவிட்டு முன்சித்தப்படுத்தினதைச் சிறுகச்சிறுகப்போட்டு மத்தாற்கடைந்து நன்றாகமிஸ்ரமானபின்பு கீழிறக்கிக் குளிர் ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-[illegible] காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும். பேதியாக வேண்டுமானால் ஐந்து வராகனெடைமுதல் ஏழரை வராகனெடைவரை சாப்பிடலாம்.

உபயோகம்:—குன்மரோகம், வயிற்றுவலி, மலபந்தம், மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

## குந்திரிக்க மாத்திரை

குந்திரிக்கத்தூள், சதகுப்பைச்சூரணம், சோம்புச்சூரணம் இவை வகை-௧-க்குப் பலம்-௧. கரப்பூமச்சூரணம் அல்லது ஓமச்சூரணம் வராகனெடை-௮, செர்திஓமச்சூரணம் வராகனெடை-௨௰.



செய்முறை:— எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு அரைமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு தண்ணீரைச் சிறுகச்சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்து அரை வராகனெடையுள்ளமாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

பிரமாணம்:—மாத்திரை-௧, ௨. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்

உபயோகம்:—சீதபேதி, அடிவயிற்றுவலி, சிறுகுடல் தாபிதம் ஆகியவை தீரும்.

## ஆமலக ஜவாரிஷ்.

விதைநீக்கின நெல்லிக்காய் முரப்பா பலம்-௫. பொதினா, [illegible]ம்பு, சாதத்தர், அனிசூன், சீரகம், நரிஞ்சிப்புஷ்பத்தோல், இலவங்கப்பட்டை, தாளிசபத்திரி, மேற்[illegible] இவற்றின் சூரணம் வகை-௧-க்கு வராகனெடை-௧. ஓமச்சூரணம் வராகனெடை-௫. ஏலக்காய், கொத்துமல்லிவிதை, பன்னீர்விட்டுலர்த்தின சந்தனம் இவற்றின் சூரணம் வகைக்கு வராகனெடை-௨. தேன் பலம்-௨௰.

செய்முறை:—நெல்லிக்காய் முரப்பாவை வெண்ணெய்போலரைத்து முன் சூரணங்களையெல்லாம் ஒன்றாகக்கலந்து அதில் மிஸ்ரமித்து வைத்துக்கொள்க. தேனைக்காய்ச்சி நுரைநீக்கி அதில் முன் சித்தப்படுத்தினதைச் சிறுகச் சிறுகப்போட்டு மத்தாற்கடைந்து கீழிறக்கி ஆறினபின்பு பீங்கான்பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௨ ௭, ௩.௭. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—குன்மரோகம், வயிற்றுவலி, மலபந்தம், மலச்சிக்கல் ஆகியவை தீரும். வயிற்றிலுள்ள கிருமிகள் வெளிப்பட்டுப்போகும்.

ஆமணக்குத்திலா.

ஆமணக்குப்பருப்பு, மூசாம்பரம், இலுப்பைக்கொட்டைப்பருப்பு இவை வகைக்குச்சமனெடை. இவற்றைத்தனித்தனி பொடித்துப்பிறகு ஒன்றாகக்கலந்து மறுபடியும் அரைமணி நேரமரைத்து நன்றாக மிருதுவானபின்பு கொஞ்சம் காடியை விட்டுக்குழம்பாகக்காய்ச்சி அடிவயிற்றில் பற்றிடவும். இவ்விதம் தினம் இரண்டு மூன்று தடவைகள் செய்துவரின் குன்மரோகம், குடல் முறுக்குநோய், வயிற்றுவலி முதலியவை தீரும்.

இந்து முறைப்பற்று.

காட்டுவெண்காரம், துத்தம், நேர்வாளப்பருப்பு, இம்மூன்றும் வகை-கூ க்கு வராகனெடை-வ-முதல்-௧. கள்ளிப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இம்மூன்றையும் தனித்தனி பொடித்துப்பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து பிறகு கள்ளிப்பாலைச் சிறுகச்சிறுகவார்த்து ஒருமணிநேரமரைத்து நாபியைச்சுற்றிலும் பற்றிடவும். தினம் ஒன்று அல்லது இரண்டுதடவை பற்றிடலாம்.



உபயோகம்:—பேதியாகும்; மலபந்தத்தை நீக்கும்; சிறுபிள்ளைகள் இவ்விதரோகத்தில் அதிகம் குணத்தைத் தரத்தக்கது.

குன்ம ஆசனத்திரி.

கொஞ்சம் வெல்லத்தை ஒரு தாம்பிரப்பாத்திரத்தில் வைத்து நெருப்பின்மீது வைத்தால் அது இளகி உருகும். அந்தச்சமயத்தில் அதற்குச்சமனெடை உப்பைப்பொடித்துப்போட்டு நன்றாகமிலாயித்து ஒன்றாக மிருதுவானபின்பு கீழிறக்கி ஆறவைத்து ஒருவிரற்கனமுள்ள திரியாகச்செய்து ஆசனத்திற்குட்செலுத்திவைக்க நன்றாகப் பேதியாகும். மலபந்தம், மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

ஆசனத்திரி வேறு.

இலுப்பைக்கொட்டைப்பருப்பைக் [illegible] ட்டிறைத்துச் [illegible]த்துண்டில் ஆசனத்திரி செய்து அதன்மீது தடவி ஆசனத்தில்வைக்க குன்மரோகத்திலுண்டாகும் மலபந்தம், மலச்சிக்கல் ஆகியவை நீங்கிப் [illegible]

[illegible] திரி வேறு.

தேன்மெழுகு வராகனெடை-௨, கறியுப்புத்தூள் வராகனெடை-௭. நெய் அல்லது விளக்கெண்ணெய் செல்லத்தக்க அளவு.

மெழுகை [illegible] உப்பையும் சேர்த்தரைத்து நெய்யைத்தெளித்து [illegible]ப்பசையுண்டாக்கி ஆசனத்திரிசெய்து ஆசன[illegible]த்தில்வைக்கவும். சிலசமயம் சிலருக்கு வெளிக்கிளம்பிப்போம். மறுபடியும் முன்போல் தள்ளி உள்ளேசெலுத்தி வைக்கவும். இவ்விதம்செய்

...மலக்கட்டு, மலபந்தம், மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

ஷை திரி வேறு.

எருக்கின்வேர்ப்பட்டையைத் தண்ணீர்வார்த்து வெண்ணெய்போலரைத்துத் திரியாகச்செய்து ஆசனத்தில்வைக்கத்தாராளமாகப் பேதியாகும்.

குறிப்பு.

இது தீக்ஷணியமான சரக்கானதால் சுகுமாரதேகிகள், ஸ்திரீகள், பாலர்கள் முதலியவர்களுக்கு அதிக ஜாக்கிரதையுடன் உபயோகிக்கவேண்டியது.

பற்று.

எருக்கன்வேரைத்தண்ணீர்வார்த்து வெண்ணெய்போலரைத்து வயிற்றின்மீது பற்றிடத் தாராளமாகப் பேதியாகும்.

ஆசனத்திரி வேறு.

எலிப்புழுக்கை, கறிஉப்பு, சர்க்கரை இவை மூன்றும் சமஎடை. இவற்றைக்கலந்து நெருப்பின்மீது வைத்தால் உருகும் நன்றாக மிஸ்ரித்து இறக்கி அதனின்பு பேரிச்சங்கொட்டைப்பிரமாணம் ஆசனத்திரிசெய்து நெய்ப்பசையூட்டாக்கி ஆசனத்திற்குட்செலுத்திவைக்க மலக்கட்டு, மலபந்தம் ஆகியவை தீரும்.

ஷை வேறு.

காட்டுச்சவுக்காரத்தை அல்லது சீமைச்சவுக்காரத்தை பேரிச்சங்கொட்டைப்போல் சீவி ஆசனத்திற்குட்செலுத்திவைக்க மலக்கட்டு, மலபந்தம் ஆகியவை தீரும்.



## கிருமிரோக சிகிச்சை.

கிருமிரோகமானது பலவகைப்படும். அசுத்த ஆகாரங்களை உட்கொள்வதனால், மலாசயத்தில் கிருமிகள் ஜனிக்கும். நாடாப்பூச்சி, தட்டைப்பூச்சி, கீரைப்பூச்சியென முக்கியமாய் மூன்றுவகையுண்டு. இவற்றால் அநேக ரோகங்களுண்டாகும். முக்கியமாய் அஜீரணரோகம், சிலசமயம் அளவுக்குமிஞ்சின பசி, எவ்வளவு சாப்பிட்டபோதிலும் தேகம் இளைத்துப்போதல், அளவிற்கதிகமாக வாய்நீரூறல், வாந்தி, ஆசனத்தில் அரிப்பு, சிறுபிள்ளைகளில் இரவு நாளுதல், வாய்த்தாடைகிட்டிக்கொள்ளுதல் முதலியவைகளாம்; இந்த இலக்ஷணங்கள் வேறு வியாதிகளிலும் காணப்படும். ஆகையால், இதை நிதானித்தறிந்து பூச்சிகளே காரணமாயிருந்தால் அதைநீக்க முயற்சிசெய்யவேண்டியது. இதற்குப் பிரதானமாய் சாண்டோனைன் என்னும் பூச்சிமருந்தை உபயோகப்படுத்துகின்றார்கள். ஆனால், சிலதேகிகளுக்கு கஞ்சின் குணமுண்டாகி அபாயத்திற்கேதுவாகிறது. ஆகையால் இதற்கு [illegible] ஆயுர்வேத முறைகளை இங்கெழுதுவாம்.

பூச்சிகளை [illegible]த்தும்
உத்தமமுறை.

விதையுள்ள திராக்ஷைப்பழம் தேவையான அளவு; வாய்விளங்கம் தேவையான அளவு. திராக்ஷைப்பழத்திலுள்ள விதையை நீக்கி அந்தவிதைப் பிரமாணம் வாய்விளங்கச்சூரணத்தை அதற்குட்செலுத்தி அவைகளைப் பழுக்களைச் சித்தப்படுத்தி வைத்துக்கொள்ளவேண்டும்.

யௌவனமானவர்களுக்கு இருபதுப்பழமும், பிள்ளைகளுக்கு வயதிற்குத்தகுந்தபடி ஐந்து முதல் பத்துப்பழங்கள்வரை கொடுக்கவேண்டும். இதனை மென்றுதின்னாமல் வாயிற்போட்டு விழுங்கிவிடுவது உத்தமம். இவ்விதம் காலையில் ஒருவேளை உபயோகிக்கவேண்டும். தொடர்ச்சியாக இரண்டு அல்லது மூன்று காலையில் உபயோகித்தால் வயிற்றிலுள்ள கிருமிகள் நாசமாகி மலத்தோடு வெளிப்பட்டுப்போம். சிறுவர்கள், ஸ்திரீகள், சுகுமாரதேகிகள் முதலிய எல்லோருக்கும் உபயோகிக்கலாம்.

ஷை வேறு.

மாட்டின்குளம்பைச்சுட்டுச் சாம்பலாக்கி வைத்துக்கொள்க. இதில் வராகனெடை ஒன்றுமுதல் மூன்றுவரையில் தேகசுபாவத்திற்குத் தகுந்தபடி தேனில் அல்லது வெல்லத்தில் மர்த்தித்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் சிலநாட்கள் செய்துவரின் தட்டைப்பூச்சிகள் நாசமாகிவிடும்.

ஷை வேறு.

முருக்கம்விதைத்தூளைச் சூர்ணித்து வைத்துக்கொள்க. இந்தச்சூரணம் வராகனெடை-க, மாதுளம்பழச்சுளை வராகனெடை-க. இவ்விரண்டையுமிடித்து வாயிற்போட்டு மென்றுதின்னவேண்டும். இவ்விதம் இரண்டுமூன்றுதினங்கள் செய்யின் பலவகைப் பூச்சிகள் நாசமாகும்.

ஷை வேறு.

ஆமணக்கிலைச்சாறு, கையாந்தகரைச்சாறு, ஊமத்தையிலைச்சாறு ஆகியவைகளிலொன்றைச்சிறுபிள்ளை



களின் ஆசனத்தில் தடவிவர மலாசயத்திலுள்ள சிறுகிருமிகள் நாசமாகிவிடும்.

விளங்காதிச் சூரணம்.

வாய்விளங்கம், அஜ்மோதாஓமம், லாகூருப்பு அல்லது இந்துப்பு, மரவுப்பு, மஞ்சட்கடுக்காய்த்தோல், அரிசித்திப்பிலி, மேற்சொல் சீனிசுக்கு இவற்றின் தனித்தனிச்சூரணம் வகை-க-க்கு வராகனெடை-ச. பொரித்துத் தூள்செய்த பெருங்காயச்சூரணம் வராகனெடை-உ. இவையெல்லாவற்றையும் சேர்த்து அரைமணிநேரமரைத்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-உ. வெறும்வயிற்றில் உட்கொள்ளவேண்டும்.

உபயோகம்:—வயிற்றிலுள்ள கிருமிகளை நாசமாக்கி வெளிப்படுத்திவிடும். ஜீரணசக்தியை அதிகப்படுத்தும். பசிதீபனத்தையுண்டாக்கும்.

ஷை வேறு.

வாய்விளங்கம், லாகூருப்பு அல்லது இந்துப்பு, கமேலாமா, மஞ்சட்கடுக்காய்த்தோல் இவற்றின்சூரணம் வகை-க-க்கு வராகனெடை-ச.

இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து அரைமணிநேரமரைத்து சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-உ. கொஞ்சம் பசுவின்தயிரில்போட்டுக் குழைத்து உட்கொள்ளவேண்டும்.

பத்தியம்:—கிச்சடிச்சாதம் சாப்பிடவேண்டும்.

உபயோகம்:—வயிற்றிலுள்ள எல்லாவகைக் கிருமிகளையும் நாசமாக்கும்.

## மாதுளைக் கஷாயம்.

மாதுளைத்தோல், கம்பிளிப்பூச்சி மரப்பட்டை இவை வகை-க-க்கு வராகனெடை-க. இவற்றைச் சிதைத்து இரண்டு ஆழாக்குஜலத்திற்போட்டு மூன்றிலொருபாகமாகச்சுண்டவைத்து இறக்கிவடிகட்டிப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் வயிற்றிலுள்ள கிருமிகள் நாசமாகி வெளிப்பட்டுப்போம்.

## முருக்குக் கஷாயம்.

முள்முருக்கின் மரப்பட்டை வராகனெடை-ங. இதனைச் சிதைத்து இரண்டாழாக்குஜலத்திற்போட்டு மூன்றிலொருபாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டிப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் இரண்டுவேளையும் மூன்றுநாள் செய்யின் நீளப்பூச்சி, தட்டைப்பூச்சி ஆகியவைகள் மாண்டு வெளிப்பட்டுப்போம்.

## கிருமித் தர்ப்பணம்.

சூரத்துக்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, பிஞ்சுக்கடுக்காய், வாய்விளங்கம் இவைகளின் தனித்தனிச்சூரணம் வகை-க-க்குப் பலம்-க. சுத்திசெய்த சிவதைவேர்ச்சூரணம், வறுத்தகட்டான்விதைச்சூரணம் இவை வகை-க-க்கு வராகனெடை-க. ஏலம், கோஷ்டம், இந்துப்பு இவற்றின் சூரணம் வகை-க-க்கு வராகனெடை-ரு. தேன் பலம்-உ0.



செய்முறை:—எல்லாச்சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து வைத்துக்கொள்க. தேனைக்காய்ச்சி நுரை நீக்கி அதில் சூரணங்களைத்தூவி நன்றாக மிசிரமித்துக் கீழிறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-க. முதல்-உ-வரை, காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—வயிற்றிலுள்ள கிருமிகள், நாசமாகி வெளிப்பட்டுப்போம். கிருமி சம்பந்தமாயுண்டாகும் தலைநோய், மயக்கம், ஆகியவை நீங்கும். கிருமிசம்பந்தமான வாந்தி, அரோசகம் முதலியவைகளும் நீங்கும்.

## கிருமி மாத்திரை.

மூசாம்பரச்சூரணம், வெள்[illegible]ச்சக்கட்டைச்சூரணம், அபின், உலர்ந்த இந்[illegible]யிலைச்சூரணம் பழையதேங்காய் இவை வகை-க-க்கு வராகனெடை-ரு. இலந்தையிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—தேங்காயின் மேற்தோலை நீக்கிவிட்டுச் சிறுதுண்டுகளாக[illegible]து மேற்படிசாற்றைவார்த்து வெண்ணெய்போலரைத்துக் கொள்ளவேண்டும். பிறகு அபினைச்சேர்த்து மேற்படிசாற்றை விட்டரைத்து நன்றாகமிசிரமானபின்பு முன் சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து இதிற்சேர்த்து மேற்படிசாற்றைச்சிறுகச்சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்து அரைகுன்றிமணியெடை மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்தி சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—சிறுபிள்ளைகளுக்கு மாத்திரை-க. பெரியவர்களுக்கு மாத்திரை-உ.

அபத்தியம்:—சர்க்கரை, வெல்லம் முதலியவைகளாம்.

உபயோகம்:—வயிற்றிலுள்ள கிருமிகள் நாசமாகி வெளிப்பட்டுப்போம். கிருமிகள் அடிக்கடி ஜனிப்பது தடைப்பட்டுப்போம். கிருமிசம்பந்தமான ரோகங்கள் தீரும்.

### கிருமி ஆவாரை மாத்திரை.

குச்சு, காம்பு முதலியவைநீக்கிச் சுத்திசெய்த குரத்தில்லா ஆவாரைச்சூரணம், குல்கந்து இவை வகைக்குப் பலம்-கஅ, மஞ்சட்கடுக்காய்த்தோற்சூரணம், பிஞ்சுக்கடுக்காய்ச்சூரணம் இவை வகை-க-க்கு வராகனெடை-க, மேற்றோல் சீவின சுக்குச்சூரணம், விதை நீக்கின திராக்ஷைப்பழம் இவை வகை-க-க்கு வராகனெடை-ஙு, தேன் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டுத் தேனைச்சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்து ஒன்றரை வராகனெடை மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்க.

பிரமாணம்:—மாத்திரை-க, உ. இதனை உபயோகிக்குமுன் இரண்டுநாள் அல்லது மூன்றுநாள் பாலைப் பரீஞ்செய்து வந்து பிறகு உபயோகிக்கவேண்டும்.

உபயோகம்:—வயிற்றிலுள்ள கிருமிகள் நாசமாகிப்போவதுடன் மறுபடியும் ஜனிக்க ஏதுவிராது.



கிருமிகள் மலத்துடன் வெளிப்பட்டுப்போம். கிருமி சம்பந்தமான பலரோகங்கள் தீரும். நீளக்கிருமி, தட்டைக்கிருமி, கீரைக்கிருமி முதலிய பலவகைக் கிருமிகள் வெளிப்பட்டுப்போம்.

### கீரைக்கிருமி மாத்திரை.

காட்டுக்கொள்ளுச்சூரணம், இரசாஞ்சனச்சூரணம், பொரித்த பெருங்காயத்தூள் இவை வகை-க-க்கு வராகனெடை-உ, மூசாம்பரத்தூள் வராகனெடை-க, மிளகுச்சூரணம் வராகனெடை-ஙு, உலர்ந்தவேப்பிலைச்சூரணம் வராகனெடை-ய, சுவற்றுமுள்ளங்கியிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து [illegible] ஒருமணி நேரமரைத்து எல்லாம் பிசைந்தபின்பு மேற்படிசாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து ஒருமணி நேரமரைத்து அரை [illegible] எடையுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்திச் சீசாவிற் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:—சிறுபிள்ளைகளுக்கு மாத்திரை-க, பெரியவர்களுக்கு மாத்திரை-உ.

உபயோகம்:—சிறுபிள்ளைகளுக்கு ஆசனவாயில் ஜனிக்கும் கிருமிகள்நாசமாகிவிடும். அவற்றால் உண்டாகும் தினவு, வேதனை முதலியவைகள் தீரும். பெரியவர்களுக்கு மலாசயத்திலும், ஆசனத்திலும் சிறுகிருமிகள் ஜனிப்பதுண்டு. அவ்வகைக்கிருமிகள் நாசமாகிப் போவதுடன் அவற்றாலுண்டாகும் தினவு, வேதனை முதலியவைகளும் தீரும்.

## இரைப்பைக்கிருமி மாத்திரை.

கழற்சி விதைப்பருப்புச்சூரணம், சுத்திசெய்த புரசம் விதைப்பருப்புச்சூரணம், ஓமச்சூரணம், கமேலாமா, வாய்விளங்கச்சூரணம் இவை வகை-க-க்குப் பலம்-ரு, பனைவெல்லம் பலம்-உ௰.

செய்முறை:—மேற்படி சூரணங்களெல்லாம் ஒன்றாகக்கலந்து அரைமணி நேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு மேற்படி வெல்லத்தைச் சிறுகச் சிறுகச்சேர்த்து இரண்டுமணி நேரமரைத்துக்கால் வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, உ.

உபயோகம்:—இரைப்பையின் ஜனிக்கும் நீளக்கிருமி, தட்டைக்கிருமி, சிரைக்கிருமி முதலிய எல்லா வகைக்கிருமிகளும் தீரும். கிருமிசம்பந்தமான குஷ்டரோகம், கிருமிசம்பந்தமான சுரம், கிருமிசம்பந்தமான மந்தாக்கினிரோகம், கிருமிசம்பந்தமான சொறிசிரங்கு, முதலிய அநேகரோகங்கள் தீரும்.

## கிருமிவிளங்காதி மாத்திரை.

வாய்விளங்கச்சூரணம், இந்துப்புத்தூள் இவை வகை-க-க்கு வராகனெடை-ச, சுத்திசெய்த சிவதை வேர்ச்சூரணம் வராகனெடை-க, பனைவெல்லம் வராகனெடை-க௰.

செய்முறை:—மேற்கண்டவைகளை ஒன்றாகக்கலந்து அரைமணி நேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு பனைவெல்லத்தைச் சிறுகச் சிறுகச்சேர்த்து இரண்டு



சாமநேரமரைத்து அரை வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்க.

பிரமாணம்:—மாத்திரை-க, உ.

உபயோகம்:—எல்லாவகைக்கிருமிகளும் நாசமாகி வெளிப்பட்டுப்போகும். பசிதீபனமுண்டாகும்.

## கிருமிக் கபேலா மாத்திரை.

பொரித்த பெருங்காயத்தூள், பொரிகாரச் சூரணம், வாய்விளங்கச்சூரணம், இந்துப்புத்தூள், மருசட்டுக்காய்த்தோற் சூரணம், இவை வகை-க-க்கு வராகனெடை-ச, தேன் அல்லது சுவற்று முள்ளங்கிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சூரணங்களை ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு தேனை அல்லது மேற்படிசாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுமணி நேரமரைத்து அரை வராகனெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து சீஸாவில் பத்திரப்படுத்தவும்.

### குறிப்பு.

அவசியமானால் மேற்கண்ட முன்றாலொன்று அல்லது இரண்டு வராகனெடை சுத்திசெய்தசிவதை வேர்ச்சூரணத்தைச் சேர்த்துக்கொள்ளலாம்.

பிரமாணம்:—மாத்திரை-க, உ.

உபயோகம்:—வயிற்றிலுள்ள கிருமிகள், சிறுகுடலிலுள்ள கிருமிகள், மலாசயத்திலுள்ள கிருமிகள் முதலிய பலகிருமிகள் நாசமாகித் தேகசௌக்கியமுண்டாகும்.

## கிருமிசிரக மாத்திரை.

கருஞ்சீரகச்சூரணம் வராகனெடை-௩. வாய்விளங்கச்சூரணம், சுத்திசெய்த புரசம்விதைப் பருப்புச்சூரணம் இவை வகை-௧-க்கு வராகனெடை-௨, சுத்திசெய்த சிவதைவேர்ச்சூரணம், மேற்றோல்சீவின சுக்குச்சூரணம், வாதுமைப்பிசின் தூள், மூசாம்பரத்தூள் இவை வகை-௧-க்கு வராகனெடை-௩ தேன் அல்லது சுவற்றுமுள்ளங்கிச்சாறு சேர்க்கத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சூரணங்களையெல்லாம் ஒன்றாகக்கலந்து அரைமணிநேரமரைத்து எல்லாம் நன்றாக மிஸ்ரமானபின்பு தேனை அல்லது சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுமணிநேரமரைத்து அரைவராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௨, ௩.

உபயோகம்:—பேதியாகும்; வயிற்றிலுள்ள கிருமிகளை வெளிப்படுத்திவிடும். கிருமிசம்பந்தமான பலரோகங்களை நிவர்த்திசெய்யும்.

## கிருமி ஆசனத்திரி.

௧. கருஊமத்தையிலைச்சாறு, வெற்றிலைச்சாறு இவையிரண்டையும் சமனாகச்சேர்த்து சீலைத்துண்டினால் சிறுவிரற்கனம் ஒருதிரி செய்து முன்சித்தப்படுத்தின சாற்றில் நனைத்து ஆசனத்திற்குட்செலுத்தி வைக்கவேண்டும். இவ்விதம் தினம் இரண்டு அல்லது மூன்று தடவைகள் செய்துவரின் மலாசயத்திலுள்ள கிருமிகள் நாசமாகி வெளிப்பட்டுப்போம்.



முன்சித்தப்படுத்தினசாற்றில் ஆட்காட்டிவிரலை நனைத்து ஆசனத்திற்குட் செலுத்தி அசைத்துவிடவேண்டும். இவ்விதம் செய்துவருவதனாலும் மேற்படி பூச்சிகள் வெளிப்பட்டுப்போம்.

## ௨. வேறு.

கருப்பில் கொஞ்சம் ஜலத்தை வார்த்துக்கரைத்துச் சீலைத்துண்டைத்திரிசெய்து அதில் நனைத்துச் சிறுபிள்ளைகளின் ஆசனத்திற்குட்செலுத்தி வைத்துவருவதனாலும் அந்தவித கிருமிகள் வெளிப்பட்டுப்போம்.

## குறிப்பு.

கிருமிரோகங்களில் பெரும்பான்மையும் சான்டோனைன் என்னும் மருந்தை உபயோகித்துவருகின்றார்கள். ஆனால், அதனால் அந்தச்சமயம் கிருமிகள் வெளிப்பட்டபோதிலும் அடிக்கடி ஜனித்து அடிக்கடி கஷ்டப்படவேண்டியதாயிருக்கிறது. இன்னும் இதனால், பூச்சிகள் வெளிப்பட்டபோதிலும் தேகம் கண் ஆகியவை மஞ்சளி[illegible]போகுதல், உஷ்ணம் அதிகரித்துப்போதல், விகாரமுண்டாகிவிடுதல் முதலிய பல துர்க்குணங்கள் காணப்படுகின்றன. இதனுடன் கெலோமல் என்னும் இரசகற்பூர பற்பத்தைச்சேர்த்துக்கொடுப்பதுமுண்டு. இதனாலும் பூச்சிவெளியாமெனினும் முன் சொல்லப்பட்ட மருந்துகளினாலுண்டாகும் நற்பிரயோசனங்கள் இம்மருந்தால் காணப்படவில்லை அனுபோகசாலிகள் தம் தம் அனுபவத்தில் கண்டு நிச்சயித்தறிந்து கொள்வார்களாதலால், நாமிங்கு அதிகம் எழுதத்தேவையில்லை.

## அடியிறங்குதல்.

ஆசனமானது தன் துவாரத்தை விட்டுக்கீழே இறங்கிவிடுவதற்கு அடியிறங்குதல், அண்டிதள்ளுதல், குதபிரம்சரோகம், குத நிர்க்கமரோகம் எனப்பல நாமங்களுண்டாம். இது பெரும்பான்மையும் சிறுபிள்ளைகளுக்கு அடிக்கடிபேதிகாணுவதால் நேரிடுவதுண்டு. இதற்கு சிகிச்சை வெளிப்பட்ட குதத்தைத்தண்ணீராற் கழுவிச்சுத்திசெய்து மெதுவாக உள்ளே தள்ளி மறுபடியும் அதை வெளிவராமல் வஸ்திரம் முதலியவைகளாற் கட்டிவைப்பதே பிரதான சிகிச்சை. ஆயினும் சில சமயங்களில் அப்படிச்செய்வதனாலும் நிஷ்பிரயோசனமாய்விடுகிறது. ஆகையால் அனுபோகசித்தமான சில அவுஷதங்களையும் இங்கெழுதுவாம்.

## அண்டிப்பொடி.

பழம்புதோலைச் சுட்டுக்கரியாக்கித் தூள்செய்து வஸ்திரகாயஞ்செய்து அண்டியின் மீது தூவி மெதுவாக உள்ளே தள்ளிக்கட்டிவைக்கவேண்டும். இவ்விதம் மூன்று நான்கு தடவை செய்யக்குணமாகும்.

## வேறு.

அண்டியைத் தண்ணீரால் கழுவிச்சுத்திசெய்து மெல்லிய வஸ்திரத்தால் மெதுவாகத் துடைத்து எண்ணெயைப்பூசி எண்ணெய்ப்பசையுண்டாக்கி உலர்ந்த நறுவிலிப்பழத்தைச் சுட்டுக்கரியாக்கிப் பொடித்து வடிகட்டி அதன்மீதுதூவி மெதுவாக உள்ளே தள்ளிக் கட்டிவைக்கவும், அடியிறங்காமல் நின்றுபோகும்.



## அடியிறங்குதலுக்கு உசிதம்.

அடிதள்ளியிருக்கிற நோயாளியின் சிறுநீரைப்பிடித்து அதனால் குதத்தைக்கழுவிப்பிறகு தண்ணீரால் கழுவிச்சுத்திசெய்து விடவேண்டும். இவ்விதம் தினம் இரண்டு மூன்று தடவைகள் செய்துவரின் அது சுருங்கி உள்ளுக்குப் போய்விடும்.

## அண்டிக்குக் கஷாயம்.

கருவேலங்காய், கருவேலின் இலை, வெற்றிலை, இலுப்பைப்பூ இவை வகைக்குப் பலம்-க.

இவைகளைச்சிதைத்து அரைப்படி ஜலத்திற்போட்டுக் கால்படியாகச் சுண்டவைத்து வடிகட்டி அதனைப் பின்பு சிறுபாத்திரத்தில்விட்டுக் குதம் அழுந்தும்படியாக அதில் உட்காரவேண்டியது. அல்லது இந்தக் கஷாயத்தால் குதத்தைக் கழுவவேண்டியது. இவ்வாறு சிலதடவைகள் செய்யின் அது சுருங்கி உள்ளே போய்விடும்.

## கஷா. வேறு.

மாம்பட்டை, மாவிலை, நாகமரப்பட்டை, நாகஇலை இவைவகைக்குப் பலம்-க.

இவற்றைச்சிதைத்து அரைப்படிஜலத்திற்போட்டுக் கால்படியாகச் சுண்டவைத்து வடிகட்டி அடியிறங்கியிருப்பதைக் கழுவவேண்டும். இவ்விதம் சில தடவைகள் செய்யின் அது சுருங்கி உள்ளே போய்விடும்.

## வேதனை அண்டி உசிதம்.

அண்டிதள்ளியிருந்து வீக்கத்தினால் உள்ளே போகாதிருந்தால் அந்தச்சமயங்களில் வெந்நீரில் உட்

காரஞ்செய்து பிறகு மெதுவாகத் துடைத்து ரோஜாப்பூ எண்ணெயை மேலே பூசவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்யின் வீக்கங்கரைந்து வெளியிறங்கின குதம் உள்ளே போக ஏதுவாகும்.

அடிதள்ளுப்பொடி.

ஆட்டுக்கொம்பைச் சுட்டுக்கரியாக்கி வடிகட்டினதூள். மாசக்காய்த்தோற்சூரணம், மாதுளம்பூச்சூரணம், மாதுளம்பட்டைச்சூரணம், பொரித்த சீனக்காரத்தூள் இவைகளைச் சமனெடையாகச் சேர்த்துவைத்துக்கொண்டு வெளிப்பட்டிருக்கும் குதத்தின்மீது தூவவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்துவரின் அடியிறங்கிப்போதல் குணமாகிவிடும்.

அடிதள்ளுசிதம்.

கோழிமுட்டை வெள்ளைக்கருவைக் கோழியிறகால் வெளிப்பட்டிருக்கும் குதத்தின்மீது பூசவேண்டும். இவ்விதம் தினம் இரண்டுமூன்றுதடவைகள் செய்துவரின் அது சுருங்கி உள்ளேபோய்விடும்.

வெள்ளையம்புவியைப்பூசி அதனை மெதுவாக உள்ளே தள்ளிக் கீழேவிழாமல் கட்டிவைப்பது உத்தமமாம்.

அண்டிவீக்கப் பூச்சு.

பவையரிசிமா, மகுரிப்பருப்புமா இவை வகைக்குப் பலம்-௰, கோழிமுட்டை வெள்ளையம்புவி, ரோஜாப்பூ எண்ணெய் இவையிரண்டையும் சமனெடையாகச்சேர்த்து முன்னிரண்டையும் இதிற்குழைத்து வெளிப்பட்டிருக்கிற குதத்தின்மீது பூசிவர அங்குள்ள வீக்கம், நோவு, வேதனை முதலியவைகள் தீரும்.



அடியிறங்குச் சூரணம்.

மேற்றோல்சீவின சுக்குச்சூரணம், நெல்லிமுள்ளிச்சூரணம் இவை வகை-௧-க்கு விராகனெடை-௨. கொத்துமல்லிச்சூரணம், மைகுருப்புத்தூள் அல்லது இந்துப்புத்தூள், சுருப்புப்புத்தூள் இவை வகை-௧-க்கு விராகனெடை-௪. மிளகுச்சூரணம் விராகனெடை-௮, கண்டத்திப்பிலிச்சூரணம் வராகனெடை-௨௪.

செய்முறை:—எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு ஒருமணி நேரமரைத்துச் சீசாவில் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௧, ௨.

அநுபானம்:—சர்க்கரை, தேன்.

உபயோகம்:—அடியிறங்கியிருத்தல், குதத்தில், வேதனை, குதத்தில் நோவுண்டாயிருத்தல் முதலிய ரோகங்கள் தீரும்.

மூலரோகச்சிகிச்சை.

இது மகாரோகங்களில் ஒன்று. இதன் பிறப்பு, இதன் இலட்சணம், இதன் வகைகள், இதற்காம் பலவித சிகிச்சைகள் முதலியவைகளெல்லாம் நமது மூலரோக நிவாரண போதினியில் வகை விவரமாகவும் தெளிவாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றி விவரமாகத் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் அக்கிரந்தத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். ஆயினும், இக்கிரந்தத்தைப் படிப்பவர்களுக்கும் உபயோகப்படும்படி சில சூக்ஷ்மமான முறைகளை இங்கெழுதுவாம்.

## மூலரோக உசிதம்.

கடுக்காய் விதைப்பருப்பு, இலந்தைக்கொட்டைப்பருப்பு இவற்றின் சூரணம் வகை-க-க்குப் பலம்-க. அத்தியிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:--மேற்கண்ட இரண்டையும் கல்வத்திலிட்டு அத்தியிலைச்சாற்றைச்சிறுகச் சிறுகவார்த்து ஒருசாம நேரமரைத்து எட்டுக்குன்றிமணிஎடையுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்திச்சீஷாவில் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:--மாத்திரை-க. உ.

அநுபானம்:—சர்க்கரை, நெய், வெண்ணெய், வாழைப்பழம் முதலியவைகளாம்.

உபயோகம்:—இரத்தமூலம், இரத்தப்போக்கு, பெரும்பாடு முதலியவை தீரும்.

பத்தியம்:—உஷ்ணமான பதார்த்தங்கள், மீன், கருவாடு, முதலியவைகளை நீக்கவும்.

## வறள்மூல உசிதம்.

சோம்பு, மஞ்சட்கடுக்காய்த்தோல், நான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, இவற்றின் சூரணம் வகை-க-க்கு வராகனெடை-ச, சுத்திசெய்த மைசாக்ஷி இரசாஞ்சனச்சூரணம் இவை வகை-க-க்கு வராகனெடை-அ, வெங்காய் விதைச்சூரணம் வராகனெடை-உ, அத்திப்பழம் பலம்-ரு. விதைநீக்கின திராக்ஷைப்பழம் பலம்-ரு.

செய்முறை:--கடுக்காயினங்களை நெய்ப்பசையுண்டாக்கி எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து வைத்துக்கொள்க. திராக்ஷைப்பழத்தையும் அத்திப்பழத்தையும் அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்து மற்றச்சூரணங்களையும் அதிற் சேர்த்து மறுபடியும் மசிய அரைத்து அரை வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.



பிரமாணம்:-மாத்திரை-க, உ. சமயோசிதம்போல் சாப்பிடவும்

உபயோகம்:---வறள்மூலம், மலபந்தம், ஆகியவைகளைப்போக்கும்; மலத்தையிளக்கும், மூலச்சூடு முதலியவைகளைச் சாந்தப்படுத்தும்.

## மூலத்திற்கு முள்ளங்கி உசிதம்.

கவற்று முள்ளங்கியிலைச்சாறு பலம்-அ, இதனை ஒருமண் பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து நீர்சுண்டித் திரளும்பதத்திலெடுத்துக் கல்வத்திலிட்டு ஒரு வராகனெடை மிளகுச்சூரணத்தைச் சேர்த்து மூன்றுமணி நேரமரைத்துக்கால்வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்திச்சீஷாவில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, உ.

அநுபானம்:--வெண்ணெய், வாழைப்பழம் முதலியவைகளாம்.

உபயோகம்:—மூலரோகம், மூலச்சூடு, மூலக்கடுப்பு முதலிய மூலசம்பந்தரோகங்கள் தீரும்.

## மூலத்திற்குத்துத்தி உசிதம்.

துத்தியிலை எண்ணிக்கை-உக, மிளகு எண்ணிக்கை-உக, இவ்விரண்டையும் சேர்த்து வெண்ணெய் போ

லரைத்து எழுபாகமாகச்செய்து காலைமாலை இரண்டு வேளையும் மூன்றுநாள் சாப்பிடவும்.

உபயோகம்:—இரத்தமூலம், வறள்மூலம், ஆகியவைகள் தீர்ந்து அவைசம்பந்தமான பலரோகங்களும் தீரும்.

### மூலவெடிப் பிரயோகம்.

நாலாங்காய்ச்சல் வெடியுப்புத்தூள், இரசாஞ்சனச்சூரணம்; இவை வகை-க-க்குப் பலம்-க, அத்திப்பிஞ்சுச்சாறு அல்லது சுவற்றுமுள்ளங்கியிலைச்சாறு, அல்லது தண்ணீர் இவற்றுள் ஒன்று செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட இரண்டையும் கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு மேற்கண்டவைகளுள் ஒன்றைச்சிறுகச் சிறுகவிட்டு இரண்டுசாம நேரமரைத்துக்கால் வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து வைத்துக்கொள்க.

பிரமாணம்:—மாத்திரை-க, உ. காலையில் ஒருவேளை மாத்திரம் சாப்பிடவேண்டும்.

உபயோகம்:—இரத்தமூலம் இரத்தக்கடுப்பு, மூலக்கடுப்பு ஆகியவைகள் தீரும். இதனை மேற்கண்ட சாறுகளில் ஒன்றில் இழைத்து மேற்பூசி வருவதனாலும் மேற்படி ரோகங்கள் தீரும்.

### மூலநிம்பப்பிரயோகம்.

வேப்பம் விதைப்பருப்பு, மலைவேப்பம் விதைப்பருப்பு, மைசாக்ஷி, இரசாஞ்சனம், மூசாம்பரம், மிளகு, பூங்காவி இவை வகைக்குச்சமவெடை, மணித்தக்காளியிலைச்சாறு செல்லத்தக்க அளவு.



செய்முறை:—மேற்கண்டவைகளுள் பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்தும், சூரணிக்கவேண்டியவைகளைச் சூரணித்தும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு ஒருமணிநேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு மேற்படிசாற்றைச்சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாம நேரமரைத்துக்கால் வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்திச் சீசாவில் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, உ. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

அநுபானம்:—வெண்ணெய், நெய், வாழைப்பழம் முதலியவைகளாம்.

உபயோகம்:—இரத்தமூலம், வறள்மூலம், முதலிய பல மூலரோகங்கள் தீரும்.

### மூலதிராக்ஷாதி மாத்திரை.

விதையுள்ள திராக்ஷைப்பழம் வராகனெடை-கச, இரசாஞ்சனம் வராகனெடை-எ, வாதுமைப்பிசின் வராகனெடை-எ.

செய்முறை:—இரண்டு சரக்குகளையும் சூரணித்து ஒன்றாகக்கலந்து திராக்ஷைப்பழத்தையும் சேர்த்து இரண்டுசாம நேரமரைத்து அரை வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, காலைமாலை இரண்டு வேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—மூல இரத்தப்போக்கைக் கட்டுப் படுத்தும். மூலக்கடுப்பைச் சாந்தப்படுத்தும்.

## மூலாஸாஞ்ஜநாதி மாத்திரை.

இரசாஞ்சனச்சூரணம் வராகனெடை-ச, உலர்த்தின மாதுளையோட்டுச்சூரணம் வராகனெடை-அ, நல்லவெல்லம் வராகனெடை-கஅ.

செய்முறை:—முன் இரண்டு சரக்குகளையும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்துப்பிறகு வெல்லத்தைச்சிறுகச் சிறுகச்சேர்த்து இரண்டுசாம நேரமரைத்துப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-ஐ, க. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—இரத்தமூலம், சீழ்மூலம், மூலக்கசிவு, வறள்மூலரோகங்கள் தீரும்.

## மூலஅரீதகி மாத்திரை.

மஞ்சட்கடுக்காய்த்தோல் பலம்-க, கருஞ்சீரகம் பலம்-ஐ, இவ்விரண்டையும் தனித்தனி இளவறுப்பாகவறுத்து இடித்துச்சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து கல்வத்திலிட்டு அத்திமேல் சாற்றைச்சிறுகச் சிறுகவிட்டு ஒருசாம நேரமரைத்து அரை வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்திப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.



பிரமாணம்:—மாத்திரை-க, காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—வறள்மூலம், கசிவுமூலம், ஆகியவை தீரும்.

## மூலமைசாக்ஷி மாத்திரை.

சுத்திசெய்த மைசாக்ஷி பலம்-எ, மஞ்சட்கடுக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, தான்றிக்காய்த்தோல், இவற்றின் சூரணம் வகை-க-க்குப் பலம்-க. சிப்பிச்சுண்ணம் கலைமான் கொம்புச்சுட்டெரித்த கரித்தூள் இவைவகை-க-க்கு வராகனெடை-க. ஓமச்சூரணம் வராகனெடை-ங.

செய்முறை:—மைசாக்ஷியை அம்மியில் வைத்தரைத்து மற்றச்சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து ஒருசாம நேரமரைத்து எல்லாம் நன்றாக மிஸ்ரமானபின்பு அதைவிட்டு மறுபடியுமரைத்து வெண்ணெய்போலானபின்பு கால் வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து [illegible] பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-உ, ங. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:— இரத்தமூலம், சீழ்மூலம், வறள்மூலம் முதலிய மூலரோகங்கள் தீரும்.

## மூலக்கற்கடக சிங்கி மாத்திரை.

கடுக்காய்ப்பிஞ்சு, தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி இவற்றின் தனித்தனிச்சூரணம் வகை-க-க்குப்

பலம்-க, கற்கண்டு பலம்-ரு., பன்னீர் அல்லது தண்ணீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:— கற்கண்டைக் கல்வத்திலிட்டுத் தூள்செய்து மற்றச் சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து அதிற்சேர்த்து ஒருமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு பன்னீர் அல்லது தண்ணீரைவிட்டு ஒரு சாமநேரமரைத்து அரை வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, உ. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—இரத்தமூலம், வறள்மூலம் ஆகியவை தீரும்.

### மூலவேம்பு மாத்திரை.

மலைவேம்பு இலை பலம்-க, கறியுப்பு பலம்-க. இவ்விரண்டையுஞ்சேர்த்து வெண்ணெய்போலரைத்து அரை வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து உலர்த்திச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, உ. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—இரத்தமூலம், வறள்மூலம் ஆகியவை தீரும்.

### மூலமைசாக்ஷி திரிபலாதி.

மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி கொத்துமல்லி விதை இவற்றின் தனித்தனிச் சூரணம் வராகன்-க-க்குப் பலம்-க, மைசாக்ஷி



யைத் தந்தியிலைச் சாற்றைவிட்டு அரைத்தெடுத்த விழுது பலம்-கஉ. தேன் பலம்-சஅ.

செய்முறை:—எல்லாவற்றையும் ஒன்றாக மிஸ்ரமித்துத் தேனைக்காய்ச்சி நுரைநீக்கி அதில் சிறுகச் சிறுகப்போட்டுக்கலந்து மத்தாற்கடைந்து ஒன்றாக மிஸ்ரமானபின்பு இறக்கிக் குளிர ஆறவைத்துப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-க, உ. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—இரத்தமூலம், வறள்மூலம், சீழ்மூலம் முதலிய ரோகங்கள் தீரும்.

### மூலக்களாக் கஷாயம்.

கிலக்களாவேர்ப்பட்டையைக் கிழித்துலர்த்தி நையச்சிதைத்த தூள் பலம்-ரு. இதனை ஆறு ஆழாக்கு ஜலத்திற்போட்டு இரண்டாழாக்காகச் சுண்டவைத்து இறக்கி வடிகட்டி வைத்துக்கொண்டு ஒரு தினத்தில் பலதடவை பான[illegible]ஞ்செய்துவிடவேண்டும். இவ்விதமே அ[illegible]நாளும் சித்தப்படுத்திப் பானஞ்செய்யவேண்டும். மூன்றுநாளைக்குள் மூலஇரத்தப்போக்கு நின்றுவிடும்.

### மூலநெல்லிமுள்ளி ஊறற்கஷாயம்.

நெல்லிமுள்ளி பலம் உஉ. மருதோன்றியிலை பலம்-உஉ. இவ்விரண்டையும் சிதைத்து முக்காற்படி ஜலத்திற்போட்டுக் காலையிற்பிசைந்து வடிகட்டி ஒருதினத்திற் பலதடவைகளாகப் பானஞ்செய்துவிடவேண்டும். இவ்விதம் மூன்றுநாட்செய்யின் இரத்தமூலம், மூலக்கடுப்பு, மூலஎரிவந்தம் முதலியவை தீரும்.

## மூலத் துத்திக் கஷாயம்.

துத்திப்பூ பலம்-க, இதனை அரைஆழாக்கு ஜலத்திற்போட்டுப் பனியில்வைத்துக் காலையில் பிசைபயல் இறுத்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் ஐந்துகாலையில் பானஞ்செய்ய இரத்தமூலம், மூலக்கடுப்பு, மூலவிரிவந்தம் ஆகியவை தீரும்.

### குறிப்பு.

துத்தியிலையையும் மேற்கண்டவிதமாகச் செய்து உபயோகித்தால் மேற்கண்ட குணமுண்டாகும்.

## மூலத்திரிசிரட்டைச் சூரணம்.

நடுத்தரமான ஒரு தேங்காய்மட்டையின் நாரையெல்லாம் எடுத்து எரித்துச் சாம்பலாக்கி வடிகட்டிச் சமனெடை சர்க்கரையைச்சேர்த்து மூன்று பாகமாகப்பிரித்து ஒருபாகத்தை ஒருதினத்தில் பலதடவையாக உட்கொள்ளவேண்டும். இவ்விதமே மற்ற இரண்டுபாகங்களையும் மறுஇரண்டு தினங்களில் உட்கொள்ளவேண்டும். மூலஇரத்தம் நின்றுவிடும். இவ்விதம் இரண்டொருதடவைகள் செய்யின் ஒருவருஷம்வரையில் மூலஇரத்தம் காணாது.

## மூலவேம்புச் சூரணம்.

மலைவேப்பங்கொட்டைப் பருப்புச்சூரணம், சோம்புச்சூரணம் இவை வகை-க-க்குப் பலம்-க. சீனிசர்க்கரை பலம்-உ. இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு அரைமணிநேரமரைத்துச் சீசாவில் பத்திரப்படுத்தவும்.



பிரமாணம்:—வராகனெடை-ரு, ஐ. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—வறள்மூலம், மூலவாயு, மூலக்கடுப்பு ஆகியவை தீரும்.

## இரத்தமூலச் சூரணம்.

வறுத்த மருதோன்றிவிதைச்சூரணம், வறுத்த கோதுமைமா வகைக்குப் பலம்-க. இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு அரைமணிநேரமரைத்து நன்றாகமிருதுவானபின்பு எடுத்து வைத்துக்கொள்க.

பிரமாணம்:—வராகனெடை-ஐ, க. இந்த வராகனெடை ப்பிற்தழைத்துக் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவேண்டும்.

உபயோகம்:—மூலஇரத்தப்போக்கு கட்டுப்படும்; மூலக்கசிவு, மூலக்கடுப்பு ஆகியவைகளும் தீரும்.

## மூலவெட்பாலைச் சூரணம்.

வெட்பாலையரிசி இரண்டு வகைப்படும்; ஒன்று இனிப்பு; மற்றொன்று கருப்பு கசப்பு வெட்பாலையானது மூலரோகத்தில் அதிகப்பயன் படத்தக்கது. இதனைச் சூரணித்து வைத்துக்கொள்க.

பிரமாணம்:—வராகனெடை-க, உ இதனை நெய்யில் அல்லது வெண்ணெயில் அனுபானித்துக் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகித்துவர எல்லாவகை மூலரோகமும் தீரும்.

## மூலஅழிஞ்சில் சூரணம்.

அழிஞ்சில்வேரை நிழலில் உலர்த்திடித்த சூரணம், மிளகுச்சூரணம் இவை வகை-க-க்குப் பலம்-உ,

இவ்விரண்டையும் ஒன்றாக்கலந்து கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்து நன்றாக மிஸ்ரமான பின்பு சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணி யெடை-அ, இ. நெய்யில் அல்லது வெண்ணெயில் அநுபானித்து உட்கொள்ளவும்.

உபயோகம்:—இரத்தமூலம், மூலக்கடுப்பு ஆகியவை தீரும்.

குறிப்பு.

அடுப்பில் வேர்த்தாலைக்கரி நெருப்பிற் போட்டெழும் புகையை ஆசனத்திற் பிடித்தால் ரத்தமூல ரோகம் தீரும்.

புறுவெச்சச் சூரணம்.

காட்டிப்புறு வெச்சச்சூரணம், கருவேலம்பூச்சூரணம் இவை வகைக்குப் பலம்-உ, இவற்றைக் கல்வத்திலிட்டு ஒருமணி நேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு சீசாவில் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:—குன்றிமணியெடை-அ, இ. கொஞ்சம் பன்னீரில் அநுபானித்து உட்கொள்ளவும்.

பத்தியம்:—புளி, புளிப்பு வஸ்துக்கள், வாயு பதார்த்தங்கள் ஆகியவைகளை நீக்கவும்.

உபயோகம்:—இரத்தமூலம், இரத்தக்கடுப்பு ஆகியவை மூன்று நாளையில் குணமாகிவிடும்.

மூலசாவிச் சூரணம்.

காவித்தூள், காயக்கட்டித்தூள் இவை வகைக்குப் பலம்-க, இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு ஒருமணி நேரமரைத்துச் சீசாவில் பத்திரப் படுத்தவும்.



பிரமாணம்:—வராகனெடை-க, கஉ.

அநுபானம்—தயிர்ச்சக்கை.

உபயோகம்:—இரத்தமூலம், சீழ்மூலம், மூலக்கசிவு ஆகியவை தீரும்.

மூலக்கடுப்புச் சூரணம்.

மஞ்சட்கடுக்காய்த்தோல் (இதனை நெய்யில் வறுத்து சேகப்பொடித்துக் கொள்ளவேண்டும்) சோம்புச்சூரணம் இவை வகைக்குப் பலம்-க. ஆளிவிதை பலம்-உ. (இதனை இடிக்காமல் முழுசாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.) இவையெல்லாவற்றையும் கையால் மிஸ்ரம்செய்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—வராகனெடை-உ, இதனைத் தயிரில் அநுபானித்து உட்கொள்ளவும்.

உபயோகம்:—இரத்தமூலம் தீரும்.

மூலரோகத்திற்கான உசித முறைகள்.

பூமிசர்க்கரைக்கிழங்கு தேவையான அளவு. (இதனைப் பச்சையாகக் கொண்டுவந்து சிறுதுண்டுகளாகத் துண்டித்து நிழலிலுலர்த்தி மேற்றோலை நீக்கி இடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொள்க.

இந்தச்சூரணத்தில் ஐந்து வராகனெடை வீதம் காலைமாலை இரண்டுவேளையும் உட்கொண்டுவரின் மூலரோகம் தீரும்.

ஷை வேறு.

பசுவின்பால் அரை ஆழாக்கு முதல் ஒரு ஆழாக்கு வரை. இதனை ஒரு பீங்கான் கிண்ணத்திலிட்டு வா

யிக்குச்சமீபத்தில் வைத்துக்கொண்டு மூன்று வராகனெடை எலுமிச்சம்பழச்சாற்றை அதில் விட்டுக்கொஞ்சமும் தாமதிக்காமல் உடனே பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் மூன்று காலையில் வெறும் வயிற்றில் உபயோகிக்கின் மூலவேதனை தணிந்து அது குணமாம்.

ஷை வேறு.

தேற்றான் கொட்டையைச் சுட்டுக்கரியாக்கிப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து அதற்குச்சமனெடை சர்க்கரையைச்சேர்த்து நன்றாக மிஸ்ரமித்து வைத்துக்கொள்க.

இதில் வராகனெடை-உ, வீதம் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகித்துவரின் இரத்தமூலம் தீரும்.

ஷை வேறு.

காட்டெருமுட்டையை எரித்தசாம்பல் பலம்-கஉ. இதனைத்தூள்செய்து ஒருமண் பாண்டத்திற் போட்டு அதில் நான்குபடி ஜலத்தைவிட்டு நன்றாகக் கலக்கி விடவேண்டும். எட்டுநாள் வரையில் பிரதிதினமும் இரண்டு மூன்றுதடவை கலக்கிவந்து ஒன்பதாம நாள் மெல்லிய வஸ்திரத்தில் வடிகட்டி அசையாமல் வைத்து விட்டால் அடியில் மண்டிபடிந்துவிடும். பிரதிதினமும் மேற்றெளிவைச்சிறுகச்சிறுக இறுத்துவரவேண்டும். அல்லது திரிபோட்டு இறுத்துவிடவேண்டும். இவ்விதம் தெளிவையெல்லாம இறுத்து நீக்கி மண்டியை வெயிலில் வைத்துலர்த்திப் பொடித்து வைத்துக்கொள்க இந்த பஸ்பத்தில் அரை வராகனெடை வீதம் காலைமாலை இரண்டுவேளையும் நெய்யில்



அல்லது வெண்ணெயில் அநுபானித்துட்கொண்டு வர இரத்தமூலம் தீரும்.

ஷை வேறு.

பிஞ்சுக்கடுக்காயை நெய்யில் சிவக்கவறுத்து மைபோலப்பொடித்து அதற்கு சமன்சர்க்கரை சேர்த்து நன்றாக மிஸ்ரமித்து வைத்துக்கொள்க இதில் மூன்று வராகனெடை வீதம் உட்கொண்டுவர இரத்தமூலம், சீழ்மூலம், ஆகியவை தீரும்.

ஷை வேறு.

நாற்றுக் கரையிலொட்டி அரைத்தவிழுது வராகனெடை-க, இதனை அரையாழாக்கு ஜலத்திற் கரைத்து ஒரு வராகனெடை பூங்காவித்தூளை அதிற்போட்டுக்கலக்கிப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் தினம் இரண்டு மூன்றுதடவை செய்துவரின் இரத்தமூலம் தீரும்.

ஷை வேறு.

நாகக்கொழுந்து பலம்-உ௦, இதனையிடித்துச்சாறு பிழிந்துகொஞ்சம் சர்க்கரை சேர்த்துக்கலக்கிப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் தினம் இரண்டு அல்லது மூன்றுதடவை செய்துவரின் இரத்தமூலரோகம் தீரும்.

ஷை வேறு.

மாங்கொழுந்து, நாகக்கொழுந்து இவையிரண்டும் வகைக்குப் பலம்-கல, பசுவின்பால் ஆழாக்கு-௩, முன் இரண்டையும் அரைத்துத் தனிச்சாறாகப் பிழியவேண்டும். சாறுவராவிட்டால் வேற்படிபாலிற் கொஞ்சம் சேர்த்திடித்துப்பிழிந்து மேற்படிபாலித்

சேர்த்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் தினம் இரண்டு அல்லது மூன்றுதடவை சமயோசிதம் போல் எட்டுநாள்வரையில் உபயோகிக்கவும். புளி, புளிப்பு வஸ்துக்கள் வாயு பதார்த்தம் ஆகியவைகளை நீக்கவேண்டியது. இரத்தமூலம், சீழ்மூலம், வறள்மூலம் ஆகியவை தீரும்.

ஷை வேறு.

வெந்தயம் [illegible]ராகனெடை-க, இதனை இளவறுப்பாகவறுத்து ஆழாக்கு ஜலத்தைவிட்டுக்கால் ஆழாக்காகச்சுண்டக்காய்ச்சி இறக்கிச்சற்று ஆறவைத்து இளஞ்சூட்டுடன் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் பானஞ்செய்துவரின் இரத்தமூலம், மூலக்கடுப்பு, மூலச்சூடு ஆகியவை தீரும்.

ஷை வேறு.

அத்திப்பிஞ்சு பலம்-க, உலர்ந்ததானல் பலம்-க, இதனை அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்து அரையாழாக்கு ஜலத்தில் கரைத்துக்கொஞ்சம் கற்கண்டைத்தூள்செய்து போட்டுக்கலக்கிப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் இரத்தமூலம், இரத்தபேதி, இரத்தக்கடுப்பு, பெரும்பாடு; அதிக இரத்தப்பெருக்கு ஆகியவை தீரும்.

ஷை வேறு.

அக்ரோட் கொட்டை ஓடு தேவையான அளவு இதனைச் சுட்டுக்கரியாக்கிப் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ளவேண்டும். இதில் வராக



னெடை-க, வீதம் துவர்ப்புச்சாறுகளில் அனுபானித்து உட்கொள்ளவேண்டும். அவையாவன: தயிர் ஆலம்விழுதுச்சாறு, வாழைப்பூச்சாறு, தென்னம்பாளைச்சாறு, மாதுளம் பழச்சாறு, இவைபோன்ற ஒன்றேயாம். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் இரத்தமூலம், இரத்தபேதி, இரத்தக்கடுப்பு ஆகியவை தீரும்.

ஷை வேறு.

கழற்சிப்பருப்பு-க, இதனைப்பொடித்துச்சமன் சர்க்கரை சேர்த்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும். இதனை உபயோகிக்குங்காலங்களில் நெய் சேர்ந்த பதார்த்தங்கள், நெய் ஆகியவைகளை அதிகமாக உபயோகித்து வரவேண்டும். இரத்தமூலம், வறள்மூலம், சீழ்மூலம் ஆகியவை தீரும்.

ஷை வேறு.

கருவேலம்பூவை நிழலிலுலர்த்தி இடித்துச்சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து சமனெடை சர்க்கரை சேர்த்து நன்றாக [illegible]த்து வைத்துக்கொள்க. இதில் ஐந்து வராகனெடை வீதம் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகித்துவரின் இரத்தமூலம் தீரும்.

ஷை வேறு.

உக்கா ஜலத்தினால் ஆசனத்தைக்கழுவிவர மூலரோகம் தீரும். இந்த ஜலமானது அதிக காட்டமாயிருந்தால் உத்தமம்.

ஷை வேறு.

[illegible]ட்டைத்தோல் ஆசனம் செய்து அதில் எப்போதும் [illegible]ட்கார்ந்துவருவதால் மூலரோகம் அன்[illegible]

து. ஒருவேளை உண்டாயிருந்தாலும் கிரமேணுவாய்ப்போய்விடும்.

ஷை வேறு.

மூட்டுப்பூச்சியை மூல முளையின் மேல் தேய்த்துவருவதால் மூல முளைகரைந்து தேய்ந்துபோகும் இதை நம்பிச்செய்பவர்களுக்கு அதிக பிரயோசனமுண்டு.

ஷை வேறு.

கேந்திப்பூவிதழ் பலம்-உச, வாழைக்கிழங்குச் சாறுபடி-உ, இவற்றை வாலையிலிட்டு இரண்டு சேர் திராவகமிறக்கி வைத்துக்கொள்க. இதில் இரண்டு பலம்விதம் காலைமாலை இரண்டுவேளையும் பானஞ்செய்துவர மூலரோகம், மூலக்கடுப்பு, மூலச்சூடு, ஆகியவை தீரும்.

ஷை வேறு.

காட்டுக்கொள் பருப்பைமாவாக அரைத்து வைத்துக்கொள்க. இந்தமாவு இரண்டுபங்கு, நாட்டுச்சர்க்கரை ஒருபங்கு, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து ஐந்து வராகனெடை விதம் காலைமாலை இரண்டுவேளையும் உட்கொண்டுவரின் மூலரோகம் தீரும்.

ஷை வேறு.

நல்லவேளைவிதை பலம்-க, நாட்டுச்சர்க்கரை பலம்-உ, இவ்விரண்டையும் ஒன்றாக மிஸ்ரமித்து வைத்துக்கொள்க. இதில் வேளை-க-க்கு ஒரு வராகனெடை விதம் உட்கொண்டுவரின் இரத்தமூலரோகம் தீரும்.

ஷை வேறு.

புளியங்கொட்டைத்தோலை எரித்துச்சாம்பலாக்கி வைத்துக்கொள்க. இதில் ஒன்றுமுதல் இரண்டு



வராகனெடை வரை கொஞ்சம் தயிரில் அனுபானித்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் இரத்தமூலரோகம் தீரும்.

குறிப்பு.

புளியங்கொட்டையைத் தோலுடன் சுட்டுக்கரியாக்கி மேற்கண்டபடி உபயோகிக்கின் மேற்கண்ட குணங்களுண்டாம்.

ஷை வேறு.

மாங்கொழுந்து பலம்-க, இதனை வெண்ணெய் போலரைத்து அரையாழாக்கு ஜலத்திற் கரைத்துக் கொஞ்சம் சர்க்கரை சேர்த்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் இரத்தமூலரோகம் தீரும்.

ஷை வேறு.

கேந்தியிலை வராகனெடை-ரு, மிளகு வராகனெடை-க, இவ்விரண்டையும் வெண்ணெய் போலரைத்து அரை ஆழாக்கு ஜலத்திற் கரைத்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் தினம் இரண்டுதடவை செய்துவரின் மூலரோகம் தீரும்.

மூலரோகத்திற்காம் புகை.

கஞ்சாவிலை, வேப்பிலை, மலைவேம்பிலை, புளியிலை, செம்பையிலை, ஆவுரியிலை இவைவகை-க-க்குப் பலம்-உ௦, இவற்றை உரலிலிட்டு இடித்து ஏழுபடி ஜலத்திற் போட்டுக்காய்ச்சி அரைபாகமாகச் சுண்டினவுடன் முறைப்படி ஆசனத்தில் புகைபிடிக்கவும். அவசியமானால் செங்கல்லை அடுப்பிற்போட்டுக் காய்ச்சி அதிற்போட்டுப் புகைபிடிக்கவும். இவ்விதம் தினம் இர

ண்டுதடவை செய்யின் மூலக்கடுப்பு, மூலவேதனை, மூலரோகம் ஆகியவை தீரும். மூலமுளை கரைந்து போகும்.

ஷை வேறு.

சிராவியிலை பலம்-௧0; இதனை ஒருபடி ஜலத்திற் போட்டுக்காய்ச்சி அரைவாசி சுண்டினவுடன் மேற்கண்டபடி புகைபிடித்துவர மூலத்திலுண்டான வீக்கம், மூலக்கடுப்பு முதலியவை தீர்ந்து மூலமுளைகள் கரைந்துபோகும்.

ஷை வேறு.

மனிதருடைய கைகாலின் நகத்தைக்கொஞ்சம் எரிநெருப்பிற் போட்டு ஆசனத்திற் புகைபிடித்துவர மூலமுளை கரைந்து மூலரோகம் குணப்படும்.

ஷை வேறு.

நொவணாயிலை திருநீற்றுப்பச்சையிலை, கஞ்சாவிலை, துத்திப்பூ அல்லது [illegible], ஓதப்பட்டை இவைவகை-௧-க்குப் பலம்-௧, இவற்றைச்சிதைத்து அரைப்படி ஜலத்திற் போட்டுக்காய்ச்சிக் கொஞ்சம் சுண்டினபதத்தில் மேற்கண்டபடி புகைபிடித்துவர மூலரோகத்திலுண்டாம் வேதனை, மூலக்கடுப்பு, ஆசனக்கடுப்பு முதலியவை தீர்வதுடன் மூல முளைகளும் கரைந்துபோகும்.

குறிப்பு.

பச்சைக்கஞ்சாவிலை அகப்படாவிட்டால் உலர்ந்த கஞ்சாவிலையில் அரைப்பங்கெடை சேர்த்துக்கொண்டால் போதுமானது.



ஷை வேறு.

கஞ்சாவிலையைப் பசுவின்பாலிற் போட்டுக்காய்ச்சிப் புகை யெழும்பினபதத்தில் ஆசனத்திற்பிடித்து வெந்தகஞ்சாவிலையை அரைத்தடைபில்லை செய்து ஆசனத்தில் வைத்துக்கட்டவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்யின், மூலரோகம், மூலக்கடுப்பு, ஆசனக்கடுப்பு முதலியவை தீரும்.

ஷை வேறு.

காண்டாமிருகத்தின் கொம்புத்தூளை நெருப்பிற் போட்டுப்புகையை ஆசனத்திற் பிடிப்பதனாலும் மூலரோகம் சாந்தப்படும்.

ஷை வேறு.

அணிப்பிள்ளையின் இறைச்சியை உலர்த்தித்தூள்செய்து வைத்துக்கொள்க. இதிற் கொஞ்சமெடுத்து நெருப்பிற் போட்டு ஆசனத்திற் புகைபிடிக்கவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் மூலக்கடுப்பு மூலரோகம் முதலியவை தீரும்.

ஷை வேறு.

எட்டிக்கொட்டையைச் சிறுதுண்டுகளாகச்செய்து நெருப்பிற் போட்டுப்புகைபிடித்துவர இரத்தமூலம், மூலக்கடுப்பு வேதனை முதலியவை தீரும்.

ஷை வேறு.

ஆமணக்கிலையைத்தண்ணீரில் வேகவைத்து அந்த ஆவியை ஆசனத்தில் பிடிப்பதனாலும் மூலரோகம், மூலத்தில் எரிவாதம், மூலக்கடுப்பு ஆகியவை தீரும்.

ஷை வேறு.

மாவிலையைக்கசக்கி அல்லது இடித்துச்சுங்கானில் அல்லது உக்காவில் சுருத்துப்புகைபிடிப்பதனாலும் மூலரோகம் சாந்தப்படும்.

### மூலரோகங்களுக்காம் மேற்பூச்சுமருந்துகள்.

இரண்டுபலம் காரீயத்தைச்சிறுகுழவிபோல் வார்த்துக்கொள்ளவேண்டும். ஒருபலம் பருத்திவிதைப்பருப்பைக் கல்வத்திலிட்டுக்கொஞ்சம் ஜலம்விட்டுமேற்படி குழவியால் அரைக்கவேண்டும், இவ்விதம் நான்குசாமநேரம் அரைத்துப்பிறகு எடுத்து நிறுத்தால் வங்கமும் இழைபட்டு ஒன்றரைப்பலம் அல்லது இரண்டுபலம் இருக்கவேண்டும். இதனையெடுத்துப் பீங்கான் சிமிழில் வைத்துக்கொண்டு மூலத்தில் தடவிவர மூலமுளை கரைந்து மூலரோகம் போம். அதிலுண்டாகும் எரிவந்தம், வேதனை, கடுப்பு முதலியவை தீர்ந்து அங்குகுளிர்ந்திருக்கும். இது செய்யச்சற்று கடினமாயினும் ஒருசிறந்த முறை. இதனைச்செய்ய மலைப்பவர்கள் பின்வருகிற சுலப விதானகச்செய்து கொள்ளலாம்.

ஷை வேறு.

பருத்திவிதைப்பருப்பு பலம்-க, காரீயஅரப்பொடி பலம்-க, இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு ஜலத்தைச்சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமம் அல்லது வெண்ணெய் போலாகிற வரையில் அரைத்துப் பீங்கான் சிமிழில் வைத்துக்கொள்க. இதனை மூலமுளைகளின் மீதுதடவிவருவதால் மூலமுளைகள் கரைந்து



போம். மூலக்கடுப்பு, மூலவேதனை, மூலவீக்கம், மூலஎரிவந்தம், ஆசனக்கடுப்பு ஆகியவைகள் தீரும்.

குறிப்பு.

தண்ணீருக்குப்பதிலாகச் சோற்றுக்கற்றாழைச்சாறு, துத்தியிலைச்சாறு, சுவற்றுமுள்ளங்கிச்சாறு ஆகியவைகளில் ஒன்றை விட்டரைத்துச் [illegible]ப்படுத்தினால் அதிகம் சிறந்த குணத்தைத்தரும்.

ஷை வேறு.

சுவற்றுமுள்ளங்கியை இடித்துத்தனிச்சாறெடுத்து மூலத்தின்மீது தடவிவரவேண்டும். பிறகு அந்த இலையை ஆசனத்தில் வைத்துக்கட்டிவரவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்துவரின் மூலரோகம், எரிவந்தம், கடுப்பு ஆகியவை தீரும்.

ஷை வேறு.

வெள்ளலரிவேர்த்தோலை வெண்ணெய்போலரைத்து வைத்துக்கொள்க. மலோபாதைக்கிருக்கும்போது வெளிப்படும் மூலத்தின் மீது மேற்படி மருந்தில் கொஞ்சமெடுத்துத் தடவவேண்டும். இதனால் வேதனை கொஞ்சம் அதிகப்படுமாயினும் மூலரோகத்தைப் போக்கிவிடும். வேதனையைச்சகித்துக்கொண்டு சிலதடவைகள் செய்வதால் அதிகப்பிரயோசனமடையலாம்.

ஷை வேறு.

காட்டுக்கொள்பருப்பு வராகனெடை-க. இதனை வெண்ணெய் போலரைத்து வைத்துக்கொண்டு மூலத்தின் மீது தடவிவர இரத்தமூலம் வறள்மூலம் ஆகியவை தீரும்.

## மூலரோகத்திற்காம் கட்டுகள்.

ஆமணக்கிலையை அரைத்துச் சிறுவில்லையாகச் செய்து ஆசனத்தின் மீது வைத்துக்கட்டவேண்டும். இவ்விதம் தினம் இரண்டு மூன்று தடவைகள்செய்து வரின் மூலரோகம், மூலத்தில் எரிவந்தல், மூலக்கடுப்பு ஆகியவைகள் தீரும்.

மேற்படி வேறு.

ஆமணக்குப்பருப்பு, தேவையான அளவு, இதனை வெண்ணெய்ப் போலரைத்து வில்லையாகச்செய்து ஆசனத்தில் வைத்துக்கட்டவேண்டும். இவ்விதம் தினம் இரண்டு மூன்றுதடவை செய்துவரின் எரிவந்தலில்லாமலிருக்கிற மூலக்கடுப்பு, மூலவேதனை, மூலவீக்கம் ஆகியவை தீரும்.

மேற்படி வேறு.

ஆத்திஇலை இரண்டுபங்கு, கருதோன்றியிலை ஒருபங்கு, இவ்விரண்டையும் தனித்தனி அரைத்து ஒன்றாகக்கலந்து அடைபோற் செய்து நெய்யிற்போட்டுவதக்கி ஒருதுணியில் வைத்து ஆசனத்தில் கட்டவேண்டும். இவ்விதம் தினம் இரண்டுதடவை செய்துவரின் மூலரோகம், மூலசம்பந்தமான வேதனை ஆகியவைகள் தீரும்.

குறிப்பு.

மேற்கண்ட ஆமணக்கிலை முதலியவைகளையும் நெய்யில் அல்லது விளக்கெண்ணெயில் மேற்கண்டபடி வதக்கிக்கட்டுவது உத்தமமும், சிரேஷ்டமுமாம்.

மேற்படி வேறு.

ஆத்தியிலையை விளக்கெண்ணெய் விட்டுவதக்கி மூலத்தில் வைத்துக்கட்டுவது வீட்டுவழக்கம்.



## மூலரோகங்களுக்கு உபயோகப்படும் மேற்பூச்சுத் தைலங்கள்.

சோஜனத்தை [illegible] தூள்செய்து மூன்றுபங்கு நல்லெண்ணெயிற் போட்டுக்காய்ச்சி வடிகட்டிச் சீசாவில் வைத்துக்கொள்க. இதனை மூலத்தின் மேல்தடவி வருவதால் மூலரோகம் தீரும்.

கந்தனுவிதையை இந்தத்தைலத்தைவிட்டு வெண்ணெய்போலரைத்து மூலத்தில் தடவிவருவதால் விசேஷ குணத்தைத்தரும்.

மேற்படி வேறு.

பழையநெய் பலம்-உ, இதில் ஒருபலம் ஆத்திவிதையைத்தூள் செய்து போட்டு இரண்டொன்று கொதிவருகிறவரையிற் காய்ச்சி இறக்கிவடிகட்டி வைத்துக்கொள்க. இதனை அடிக்கடி மூலத்தில் பூசிவருவதால் அந்த ரோகம் தீரும்.

மேற்படி வேறு.

அவுரியிலைச்சாறு ஆழாக்கு-க, நல்லெண்ணெய் ஆழாக்கு-உ, இவ்விரண்டையும் கலந்து காய்ச்சிக் கடுகுதிரள் பதத்தில் இறக்கிவடிகட்டி வைத்துக்கொள்க. இதனைத் தொடர்ச்சியாக மூலத்தில் தடவிவர அது நிர்மூலமாய்விடும்.

மேற்படி வேறு.

நல்லெண்ணெய் பலம்-ரு. இதில் நடுத்தரமான மூன்று ஊமத்தங்காய்களைத் துண்டித்துப்போட்டுக் காய்ச்சிப் பொன்னிறமாகச் சிவந்த பக்குவத்திலிறக்கி வடிகட்டிச் சீசாவில் வைத்துக்கொள்க. இதனை பஞ்சில்நனைத்து மூலத்தில்வைத்துக் கட்டிவரவேண்

டும். இவ்விதம் சிலநாட்கள் செய்துவரின் மூலரோகம், மூலரோகவேதனை ஆகியவைகள் தீரும்.

மேற்படி வேறு.

சுமார் முப்பது நாற்பது தேள்களை ஒரு சீஷாவிற்போட்டுச் சீஷாநிறைய நல்லெண்ணெயைவிட்டு வாய்க்குக் காரக்கிட்டு நாற்பதுநாள் வெயிலில்வைத்துத் தேளுடன் வைத்துக்கொள்க. இந்த எண்ணெயிற் கொஞ்சமெடுத்து மூலரோகத்திற் பூசிவர மூலரோகம் நாசமாகிவிடும். மூலமுளைகள் கரைந்துபோகும்; நீர்க்குண்டிக்காய் ஸ்தானத்தில் தடவிவர அங்குஜனிக்கும் அஸ்மரிரோகம் தீர்ந்துபோகும். தேள் கொட்டினவிடத்தில் ஒருதுளிவைக்க, அந்தவிஷம் உடனே இறங்கிப்போகும்.

மேற்படி வேறு.

கெந்தனைவிலைச்சாறு இரண்டுபங்கு, நல்லெண்ணெய் ஒருபங்கு. இவ்விரண்டையுங்கலந்து காய்ச்சி க்கடுகுதிரள்பதத்தில் இறக்கி வடிகட்டி அதில் கொஞ்சம் மைசாக்ஷிகைப அரைத்துக்கலந்து சீஷாவில்வைத்துக்கொள்க. இதனை மூலத்தின்மீது தடவிவர மூலரோகம் தீரும்.

மேற்படி வேறு.

வெங்காயத்தாள்சாறு அல்லது வெங்காயச்சாறு இரண்டுபங்கு, நல்லெண்ணெய் ஒருபங்கு, இவ்விரண்டையுங்கலந்து மேற்கண்டபடி சித்தப்படுத்தி, மேற்கண்டபடியே உபயோகித்துவர மேற்கண்ட குணங்களுண்டாம்.



மூலரோகத்தில் உபயோகப்படும் தூவுபொடி.

உலர்ந்த கருவிளம்பழத்தைச் சுட்டுக்கரியாக்கிப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொள்க. இதனை மூலரோகத்தின்மீது தூவிவர அது தீரும்.

மேற்படி வேறு.

மாசக்காய்த்தோல், உலர்ந்த மாதுளையோடு இவற்றின் சூரணம் வகைக்கு பலம்-௧. இவ்விரண்டையும் நன்குக் கிஸ்ரமித்து மூலத்தில்தூவிவர அது தீரும்.

மேற்படி வேறு.

சணல்விரையை வறுத்துக்கரியாக்கிப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து மூலத்தின்மீது தூவிவர மூலரோகம் தீரும். அடியிறங்கியிருப்பதன்மேல் தூவிவருவதனாலும் அதுவுந் தீரும்.

மேற்படி வேறு.

ஆட்டுக்காற்குளம்பு, ஆட்டுக்கொம்பு, முட்டையோடு எட்டிக்கொட்டை ஆகியவைகளில் ஒன்றைக் கரியாக்கிப்பொடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு மூலத்தின்மீது தூவிவர அந்தரோகம் தீரும்.

மேற்படி வேறு.

ஆளிவிதையை வறுத்துக் கரியாக்கிப்பொடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு ஆசனத்தில் தூவிவர அடியிறங்குதல், இரத்தமூலம் ஆகியவை தீரும்.

மேற்படி வேறு.

பழைய பித்தாலைச் சுட்டுக் காய்ச்சிப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து ஆசனத்தில் தூவி வருவதாலும் இரத்தமூலம் குணமாம்.

மூலரோகத்திற்காம் பிளாஸ்திரிகள்.

மூன்றுபலம் சீனக்காரத்தைப் பொரித்துக் கல்வத்திற்போட்டுப் பொடித்து வெண்ணெயைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டுசாமநேரமரைத்துப் பிளாஸ்திரி பதத்திலெடுத்துப் பீங்கான்சிமிழில் வைத்துக்கொள்க. இதனை மூலத்தின் மேற்பூசிவர மூலரோகம் தீரும்.

மேற்படி வேறு.

சுயசெந்தூரம் வராகனெடை-க. நெய் பலம்-க. இந்த மருந்தை வெண்கலப்பாத்திரத்திற்போட்டு நெய்யையுஞ்சேர்த்துத் தித்திக்கட்டையில் அல்லது வேப்பங்கட்டையில் ஒரு ரூபாயெடை கனமுள்ள துண்டைப் பிடித்து அதனால் மேற்படி மருந்தைக் கடையவேண்டும். இவ்விதம் இரண்டு மூன்று சாமம் கடைந்து பிளாஸ்திரிபதத்தில் எடுத்து வைத்துக்கொள்க. இதனை மூலரோகத்தின்மீது பூசிவருவதனால் மூலரோகம் தீரும்.

மேற்படி வேறு.

மயில்துத்தம் வராகனெடை-உ, நாமக்கட்டி வராகனெடை-க௦, லிங்கசெந்தூரம் வராகனெடை-க௦. நல்லெண்ணெய் வராகனெடை-ரு. மேற்கண்ட மருந்துகளைத் தனித்தனி பொடித்துக் கல்வத்திற்போட்டு மேற்படி எண்ணெயைச் சிறுகச்சிறுக வார்த்து ஒரு சாமநேரமரைத்துப் பீங்கான் சிமிழில்வைத்துக்கொ



ள்க. மலோபாதைக்கிருந்தபின் வெளிப்படும் மூலத்தில் மேற்படி பிளாஸ்திரியின் கொஞ்சமெடுத்துப் பூசி நன்றாகத் தேய்க்கவேண்டும். இவ்விதம் செய்வதால் ஆரம்பத்தில் வேதனை அதிகப்படும். ஆனால் மூலரோகம் தீர்ந்துபோகும். சிலநாள் தொடர்ச்சியாகச் செய்துவரவேண்டும்.

மூலரோகத்திற்காம் அரை ஸ்நானங்கள்.

வெள்ளைக்கிளியமரப்பட்டையை அல்லது மேற்படி இலையைத் தண்ணீரில்போட்டுக் காய்ச்சி அந்த ஜலத்தில் மூலரோகி, முறைப்படி அரைஸ்நானஞ் செய்துவர மூலரோகம், மூலரோகத்திலுண்டாகும் வேதனை, எரிவு, தினவு முதலியவை தீரும்.

மேற்படி ஜலத்தில் [illegible]ளைப்புள்ளவர்களை உட்காரச்செய்வதாலும் [illegible]க்கப்பிடித்து நீர்தாராளமாய்ப் போகும்.

மேற்படி வேறு.

நல்ல வேளையிலையை ஜலத்திற்போட்டுக் காய்ச்சி அந்த ஜலத்தினால் அரைஸ்நானம் செய்துவருவதாலும் அல்லது ஆசனத்தைக் கழுவிவருவதாலும் மூலரோகம் தீரும். இப்படிச் செய்துவருவதுடன் மூன்று வேளைகளிலும் [illegible] அப்போதைக்கப்போது கொஞ்சம் சாப்பிட்டுவரவேண்டும்.

மேற்படி வேறு.

ஒதியமரப்பட்டை, நாகமரப்பட்டை, மகிழம்பட்டை ஆகியவைகளைச் சமனாகச் சேர்த்துச் சலத்திற்போட்டுக் காய்ச்சி அந்த ஜலத்தில் அரைஸ்நானஞ்செய்துவருவதால் அல்லது அந்த ஜலத்தினால் ஆசனத்தை அடிக்கடி கழுவிவருவதால் மூலரோகம் தீரும்.

## மூலரோகத்திற்காம் ஆசனத்திரி.

விளாரிபிலையை அரைத்தவிழுது ஒருபங்கு, பழையவெல்லம் ஒருபங்கு. இவ்விரண்டையும் சேர்த்தரைத்துச் சிறுவிரற்கனம் ஆசனத்திரிசெய்து ஆசனத்திற் செலுத்திவைக்கவேண்டும். இவ்விதம் சிலதடவைகள்செய்யின் மூலரோகம் தீர்ந்துபோகும்.

## வெடியுப்பு ஆசனக்குளிகை.

காளாங்காய்ச்சல் வெடியுப்பு, பொரித்த படிக்காரம் இவை வகை-க-க்குச் சமனெடை. இவ்விரண்டையும் கல்வத்திலிட்டுச் சவுக்காரஜலத்தைச் சிறுகச்சிறுகவார்த்தரைத்து மாத்திரைகளாகச்செய்து வைத்துக்கொள்க. இதனை ஆசனத்தில்வைத்து வருவதால் மூலமுளைகளெல்லாம் கருகி உதிர்ந்துபோகும். ஆனால் ஆரம்பத்தில் கொஞ்சம் வேதனையுண்டாகும். ஆயினும் மூன்றுநாளையில் மூலமுளைகள் கரைந்து உதிர்ந்து போகும்.

## சீரக ஆசனக்குளிகை.

கருஞ்சீரகத்தை வறுத்துக் கரியாக்கிப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து தேனிற்குழைத்து உருண்டைமாத்திரைகளாகச்செய்து ஆசனத்தில்வைத்து வருவதால் மூலரோகம் தீரும்.

## அஸ்மரி அல்லது கல்லடைப்பு ரோகச்சிகிச்சை.

அஸ்மரியென்பது மணல்; நீர்க்குண்டிக்காய், நீர்ப்பை ஆகியவைகளில் ஜனிக்கும் மணல், கல் ஆகியவைகளுக்கு அஸ்மரிரோகம் என்றுபெயர். நீர்க்குண்டிக்காய்களில் ஜனிக்கும் மணல், கல் முதலியவை சற்று சிவந்தநிறமாயிருக்கும்; நீர்ப்பையில் ஜனிக்கும்



மணல், கல் ஆகியவை வெள்ளைநிறமாயிருக்கும். நீர்க்குண்டிக்காய் ஸ்தானத்தில் நோவிருந்தால் அதைச்சார்ந்த அஸ்மரிரோகமென்றும், நீர்ப்பைஸ்தானத்தில் நோவிருந்தால் நீர்ப்பைசம்பந்த அஸ்மரியென்றும் நிதானித்துக்கொள்ளவேண்டும். இந்தரோகத்தில் பிரதானமாய் வழவழப்பானவைகளும், கொழுப்பானவைகளுமான பதார்த்தங்களை உபயோகிக்கலாகாது. மலம் கட்டுப்பட்டு இறுகலாகாமல் இளகலாக இருக்கும்படி செய்துகொள்ளவேண்டும்.

## அஸ்மரிரோக உசிதங்கள்.

சாமந்திப்பூவிதழை உலர்த்திப்பிடித்து வஸ்திரகாயஞ்செய்தசூரணம் ஒருபங்கு, சீனிசர்க்கரை ஒருபங்கு. இவ்விரண்டையும் ஒன்றாகக்கலந்து நன்றாகமிஸ்ரமித்து வேளையொன்றுக்கு மூன்றுவராகனெடையாகக் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகித்துவர நீர்க்குண்டிக்காய் சம்பந்தமான அஸ்மரிரோகம் தீரும்.

## டி வேறு.

சாமந்திப்பூவிதழ் உலர்ந்ததானால் வராகனெடை -௫. பச்சையாயிருந்தால் வராகனெடை-௰. இதனை ஒன்றரை ஆழாக்கு கொதிக்கின்ற வெந்நீரில்போட்டுப் பத்துநிமிஷநேரம் மூடிவைத்திருந்து பிறகெடுத்துப் பிசைந்து வடிகட்டி அரைப்பலம் சீனிசர்க்கரையைக்கலந்து பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும்செய்துவர நீர்க்குண்டிக்காய் சம்பந்தமான அஸ்மரிரோகம் தீரும்.

## டி டி.

வேப்பிலையை எரித்தசாம்பல் படி-க. இதனை ஒருமண்பாத்திரத்தில்போட்டு நான்குபடி தண்ணீரை

து தில்லிட்டுச் செம்மையாகக்கலக்கிப் பாத்திரத்தை மூடிவைக்கவேண்டும். தினம் மூன்று அல்லது நான்கு தடவை கலக்கி வரவேண்டும். இவ்விதம் மூன்றுநாள் செய்து நாலாம்நாள் தெளிவை இறுத்துக்காய்ச்சி எடுத்துக்கொள்ளவேண்டும். இதற்கு வேப்பிலைச்சத்தென்றும், வேப்பிலைக்காரமென்றும், வேப்பிலை உப்பென்றும் பெயர். இதில் வேளையொன்றிற்கு அரை வராகனெடைவீதம் தேனில் அல்லது நெய்யில் அநுபானித்து உட்கொள்ளவேண்டும். வெள்ளரிவிதையை அரைத்துப் பிழிந்தபால், சோம்புக்கஷாயம், சோம்புத்திராவகம், நெருஞ்சிமுட்கஷாயம் ஆகியவைகளில் ஒன்றில் வியாதிபலத்திற்குத் தகுந்தபடி சமயோசிதம்போல் அநுபானித்துக்கொடுக்கலாம். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகித்துவரின் நீர்க்குண்டிக்காய் சம்பந்தமான அஸ்மரிரோகம், நீர்ப்பை சம்பந்தமான கல்லடைப்புரோகம் ஆகியவை தீரும்.

ஷை வேறு.

திராக்ஷைக்கொடியை எரித்தசாம்பல் வராகனெடை-௧௨. இதனை இரண்டுபலம் நெருஞ்சிசமூலச்சாற்றில் அல்லது நெருஞ்சிக்கஷாயத்தில் அநுபானித்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகித்துவரின் மேற்கண்ட இருவகை அஸ்மரிரோகங்களும் தீரும்.

ஷை வேறு.

கழற்சியிலையை உலர்த்தியெரித்துச் சாம்பலாக்கி வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். இரண்டு வராகனெடை மேற்படி பற்பத்தை ஆறு வரா



கனெடைதேனிற் குழைத்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் மேற்கண்ட இருவகை அஸ்மரிரோகங்களும் தீரும்.

ஷை வேறு.

எட்செடி சமூலத்தையுலர்த்தி எரித்துச் சாம்பலாக்கி வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொள்க. இரண்டு வராகனெடை மேற்படி பற்பத்தைப் பத்துவராகனெடை காடியிற்குழைத்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் நீர்க்குண்டிக்காய், நீர்ப்பை ஆகியவைகளின் அஸ்மரிரோகம் தீரும்.

ஷை வேறு.

காட்டெருமை கொம்பினைப்பொடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொள்க. இதற்குச் சமவெடை சர்க்கரையைச்சேர்த்து நன்றாகமிஸ்ரித்து வேளை-க-க்கு இரண்டு வராகனெடைவீதம் நெருஞ்சம் தண்ணீரில் அநுபானித்துட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கமேற்கண்ட இருவகை அஸ்மரிரோகங்களுந் தீரும்.

ஷை வேறு.

கழற்சிப்பருப்பைப்பொடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். முதல்நாள் முக்கால் வராகனெடையை மூன்று வராகனெடை தேனிற்குழைத்து உட்கொள்ளவேண்டும். மறுநாள் ஒரு வராகனெடை சூரணத்தைத் தேனிற்குழைத்து உட்கொள்ளவேண்டும். மூன்றாநாள் ஒன்றேகால் வராகனெடை சூரணத்தை உட்கொள்ளவேண்டும். இவ்வி

தம் ஒவ்வொருநாளும் கால்கால் வராகனெடையாக உயர்த்திவந்து பதினொராநாள் மூன்றேகால் வராகனெடையும் உட்கொள்ளவேண்டும். சூரணத்திற்குத்தக்கபடி தேனையும் அதிகப்படுத்திக்கொண்டு வரவேண்டும். பனிரண்டாம்நாள் மூன்று வராகனெடையும், பதின்மூன்றாநாள் இரண்டு வராகனெடையும்உட்கொள்ளவேண்டும். இவ்விதம் பிரதிதினமும் கால்கால் வராகனெடையாகக் குறைத்துவந்து முக்கால்வராகனெடையில் நிறுத்திக்கொள்ளவேண்டும். இவ்விதமே சூரணத்திற்குத் தக்கபடி தேனையும் குறைத்துவரவேண்டும். இவ்விதம் இருபத்திரண்டுநாட்கள்செய்யின் நீர்க்குண்டிக்காய் சம்பந்தமான அஸ்மரீரோகம், நீர்ப்பைசம்பந்தமான அஸ்மரீரோகம் ஆகியவைகள் தீரும். இன்னும் இதனால் நாட்பட்டசூடு, தூர்ப்பலம் ஆகியவைகளும்தீர்ந்து நல்லபலமுண்டாகும். இது ஒருவகைச் சற்பமாம்.

ஷை வேறு.

திராக்ஷையிலை பலம்-கவ, இதனை ஒன்றரை ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொன்று பாகமாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டிக் கொஞ்சம் சர்க்கரைசேர்த்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் அஸ்மரீரோகத்தினுண்டாகும் நோவு, கடுப்பு ஆகியவை தீரும் என ஒரு பிரபலமான பண்டிதர் எழுதுகிறார். இது அவருடைய அநுபவமாம்.

ஷை வேறு.

முள்ளங்கிச்சாறு பலம்-ரு. இதனை இடித்துச்சாறு பிழிந்து வைத்துக்கொள்ளவேண்டும். ஓமச்சூரணம் ப



வராகனெடை-ஐ, இதனைவாயில் போட்டுக்கொண்டு மேற்படி சாற்றைக்குடித்து விழுங்கிவிடவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் மேற்கண்ட இருவகை அஸ்மரீரோகங்களுந் தீரும்.

ஷை வேறு.

காக்கைக்கீரையென்னும் ஒருவகைக்கீரையுண்டு. இதனைச்சமைத்துச் சாப்பிட்டுவருவதனாலும் மேற்கண்ட இருவகை அஸ்மரீரோகங்கள், நீர்க்கட்டு, நீரடைப்பு ஆகியவை தீரும்.

ஷை வேறு.

பசரிக்கீரையைச் சமைத்துச் சாப்பிட்டுவருவதனால் கல்லடைப்பு, நீரடைப்பு ஆகியவை தீரும்.

ஷை வேறு.

ஆமணக்குத்[illegible] வெண்ணெய் போலரைத்து நீர்க்குண்டிக்காய்ஸ்தானத்தில் பற்றிட்டுவர நீர்க்குண்டிக்காயில் தங்கியிருக்கும்வாயு, அதனாலுண்டாகும் நோ[illegible]ஆகியவை தீரும்.

ஷை வேறு.

எள்ளிலையைத் தண்ணீரில் போட்டுக்காய்ச்சி அந்த ஜலத்தில் நோயாளியை உட்காரவைத்து அரைஸ்நானஞ்செய்வித்தால் நீர்த்தாரையில் அடைத்திருக்கும் கல்வெளிப்பட்டுப்போம்.

மேற்படி வேறு.

வெள்ளைக்கிளியனிலைச்சாறு [illegible]-க, இதிற்கொஞ்சம் சர்க்கரை சேர்த்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் பானஞ்செய்

யவும். இவ்விதம் செய்துவரின் குண்டிக்காய்சம்பந்த வியாதி தீரும். சூதகக்கட்டு உடைந்து சூதகம் நன்ராக வெளிப்படும்.

இந்தமரத்தின்பட்டைச்சாற்றிற்கும் மேற்கண்ட குணங்களேயாம்.

மேற்படி வேறு.

சதாவேலிச்சாறு இரண்டுபங்கு, நல்லெண்ணெய் ஒருபங்கு. இவ்விரண்டையுங் கலந்து காய்ச்சி நீர்சுண்டியபதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக்கொள்ளவும். இதனை நீர்க்குண்டிக்காய் ஸ்தானம், நீர்ப்பை, அடிவயிறு, இடுப்பு முதலிய ஸ்தானங்களில் மேற்பூசி வருவதனாலும் கல்லடைப்பு நீரடைப்பு ஆகியவை தீரும்.

மேற்படி வேறு.

இரும்பு மோதிரங்களைக் கைவிரல்களில் அல்லது கால்விரல்களில் தரித்துக்கொண்டிருப்பதனால் அஸ்மரிரோகமனுகாதென்றும், அப்படியிருந்தபோதிலும் நாளுக்குநாள் குறைந்துவிடுமென்றும் ஜோவெதிபூஸ் என்னும் மகாபண்டிதர் தம்முடையகிரந்தத்திற் சொல்லுகிறார்.

கல்லடைப்பிற்காம் கஷாயங்கள்.

அதிமதுரம், கொள்ளு இவைவகை-௧-க்கு வராகனெடை-௩, சோம்பு, வராகனெடை-௧௦, இவையெல்லாவற்றையும் சிதைத்து அரைப்படி ஜலத்திற்போட்டு ஒரு ஆழாக்காகச்சுண்டவைத்திறக்கி வடிகட்டி அதில் முக்கால் வராகனெடை லாசுருப்பை அல்லது நவச்சாரத்தைப்பொடித்துச் சேர்த்துக்கொஞ்சம் செ



ய்யையும் விட்டுப்பானஞ்செய்யவேண்டும். இவ்விதம், காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் நீர்க்குண்டிக்காய், நீர்ப்பை, நீர்த்தாரை ஆகியவைகளிலுள்ள கற்களைக்கரைத்து வெளிப்படுத்திவிடும்.

மேற்படி வேறு.

சாருணைத் பலம்-௪, கொண்டைக்கடலை பலம்-௧, இவ்விரண்டையும் சிதைத்து அரைப்படி ஜலத்திற்போட்டு ஒரு ஆழாக்காகச்சுண்ட வைத்திறக்கிப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் அஸ்மரிரோகம், கல்லடைப்புரோகம் ஆகியவைகள் தீரும்.

மேற்படி வேறு.

ஒருவகைச் [illegible]புல்வேர் (இந்தப் புல் மதராஸில் பெரும்பான்மையும் உபயோகப்பட்டுவருகிறது) மேற்படி பூ வராகனெடை-௩, இதனைக்காற்படி ஜலத்திற் போட்டு இரண்டுசாமநேரம் ஊறவைத்து வடிகட்டி வைத்துக்கொள்ளவேண்டும். வெள்ளரிவிதை, கெக்கரிவிதை, நெருஞ்சிமுள் இவை வகை-௧-க்கு வராகனெடை-உவ, கஞ்சா வராகனெடை-௧, இவையெல்லாவற்றையும் வெண்ணெய் போலரைத்து முன் சித்தப்படுத்தின ஜலத்தில் கரைத்து வடிகட்டிக்கொஞ்சம் சர்க்கரை சேர்த்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும்செய்துவரின் கல்லடைப்பு, நீரடைப்பு ஆகியவை தீரும்.

கல்லடைப்பிற்காம் சூரணங்கள்.

யூதக்கல் சூரணம்.

யூதக்கல்தூள் வராகனெடை-௩, மாவாம்பழ விதைப்பருப்பு, வெள்ளரி விதைப்பருப்பு, கெக்கரி வி

தைப்பருப்பு, சிறுநெருஞ்சிமுட்சூரணம், கொள்ளுப் பருப்புச்சூரணம் இவை வகை-க-க்கு வராகனெடை-அ, சேரம்பு, அஜ்மோதா ஓமம், கருவேலம்பிசின் இவற்றின் சூரணம் வகை-க-க்கு வராகனெடை-உ.

செய்முறை:—பருப்பினங்களை ஒன்றாகக்கலந்து வெண்ணெய் போலரைத்து மற்றச்சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து இதிற் சிறுகச் சிறுகச்சேர்த்து ஒரு சாம நேரமரைத்துச் சீஷாவில் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-உ, ந. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

அனுபானம்:—கொண்டைக்கடலை பலம்-க, இதனைச்சிதைத்து ஒன்றரை ஆழாக்கு ஜலத்தைவிட்டு மூன்றிலொரு பாகமாகச்சுண்டக்காய்ச்சி வடிகட்டிக்காய்ச்சி மேற்படி சூரணத்தை உட்கொண்டு அதன் மேல் இந்தக் கஷாயத்தைப் பானஞ்செய்யவேண்டும்.

உபயோகம்:—கல்லடைப்பு, நீரடைப்பு, நீர்க்குண்டிக்காய் சம்பந்த அஸ்மரிரோகம், நீர்ப்பை சம்பந்த அஸ்மரிரோகம், அஸ்மரிசம்பந்த நோவுகள், வேதனைகள் ஆகியவை தீரும்.

குறிப்பு.

பத்துப்பலம் தேனில் மேற்படி சூரணங்களைச் சேர்த்து மாஜூன் பாகப்படிசெய்து கொண்டால் அதற்கு யூதக்கல் மாஜூன் என்று பெயர்.

மரவுப்புச்சூரணம்.

மரவுப்பு, பொரித்த வெண்காரம் இவை வகை-க-க்குப் பலம்-க, இவ்விரண்டையும் சேர்த்து இர



ண்டுமணி நேரமரைத்துச் சீஷாவில் பத்திரப் படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-க, காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

அனுபானம்:—நெருஞ்சிச்சாறுபலம்-க, முன் சூரணத்தை உட்கொண்டு அதன் மீது இதைப் பானஞ்செய்யவும். நெருஞ்சிமுள்ளைச் சிதைத்துக் கஷாயஞ்செய்தும் பானஞ்செய்யலாம்.

உபயோகம்:-கல்லடைப்பு, நீர்க்கட்டு, பலவகை அஸ்மரிரோகங்கள் முதலியவை தீரும்.

அஸ்மரிரோக அரைஸ்நான முறைகள்.

அரை ஸ்நானம் இரண்டு வகைப்படும். சித்தப்படுத்தின கஷாயத்தை ஒரு தொட்டியில் அல்லது அதுபோன்ற பாத்திரத்தில்விட்டு அரையளவு ஜலமிருக்கும்படி உட்காரவைப்பது ஒன்று.

சித்தப்படுத்தின ஜலத்தைச்செம்பில் வைத்துக்கொண்டு நோயாளியைப் படுக்கவைத்து, நோயாளியின் இடுப்பு, அரை முதலிய ஸ்தானங்களில் தூரத்தில் பிடித்துக்கொண்டு தாரையாகவிடுவது ஒன்று.

அஸ்மரி அரைஸ்நானம்.

வேப்பிலை, முள்ளங்கியிலை, எள்ளிலை, துத்தியிலை, இவைவகை-க-க்குப் பலம்-க, இவற்றைச்சிறுக அரிந்து நான்குபடி ஜலத்திற்போட்டு மூன்றுபடியாகச் சுண்டவைத்திறக்கி மேற்கண்டவாறு அரைஸ்நானம், அல்லது தாரைஸ்நானஞ்செய்யவும். இவ்விதம் தின

ம் இரண்டு மூன்று தடவை செய்யலாம். அஸ்மரிரோகம், கல்லடைப்பு, நீரடைப்பு, நீர்க்கட்டு ஆகியவை தீரும்.

மேற்படி வேறு.

புருவெச்சம், அத்திவிதை, சதகுப்பை, கழற்சிப்பருப்பு, சோம்பு அல்லது சோம்புவேர், சிறு நெருஞ்சிமுள், முலாம்பழத்தின் மேற்றோல், வெந்தயம், உஷ்ணா இவை வகை-க-க்குப் பலம்-௩, இவற்றைச் சிதைத்து நான்குபடி ஜலத்திற்போட்டு மூன்றுபடியாகச் சுண்டவைத்திறக்கி முன்போல் அரைஸ்நானம் அல்லது தாரைஸ்நானம்செய்ய மேற்கண்டரோகங்கள் தீரும்.

திராக்ஷாதி ஷர்பத்.

விதைநீக்கின திராக்ஷைப்பழம் பலம்-௩, சிறுநெருஞ்சிமுள் பலம்-உ, மயிர்ச்சிக்கி வராகனெடை-கஅ, முலாம்பழவிதை வராகனெடை-க௦. (இதனை நையச் சிதைத்துக்கொள்ளவேண்டும்) சோம்பு வராகனெடை-அ. (இதனையும் நையச்சிதைத்துக் கொள்ளவேண்டும்.) திராக்ஷையிலே பழுப்பு இது கொழுந்தாக அல்லது இளசாக இருந்தால் உத்தமம். சீனிசர்க்கரை தேவையான அளவு.

செய்முறை:—முன் சரக்குகளையெல்லாம் ஒன்றாக்கலந்து இரண்டுபடி ஜலத்தில்விட்டு ஒருஇரவு ஊறவைத்துக் காலையிற்காய்ச்சி மூன்றிலொருபாகமாகச் சுண்டினபின் இறக்கி இளஞ்சூட்டிற்பிசைந்து வடிகட்டித் திப்பிநீக்கின கஷாயத்தைக் கிறக்கி அதற்கு மூன்



றுபங்கெடை சீனிசர்க்கரையைச்சேர்த்துக்காய்ச்சி ஷர்பத்பதத்திலிறக்கிச் சீசாவில்பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௩, ௫, காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—நீர்க்குண்டிக்காய் சம்பந்தமான அஸ்மரிரோகம், அதனாலுண்டாகும் நோவு, வேதனை ஆகியவை தீரும்.

அஸ்டரித் திலா.

ஆமணக்குப்பருப்பை வெண்ணெய்போலரைத்து ஜலத்தில் கரைத்துக்காய்ச்சிக் குழம்புப்பதத்தில் நீர்க்குண்டிக்காய் ஸ்தானத்தின்மேல் பற்றிடவும். இவ்விதம் தினம் இரண்டுதடவைகள் செய்துவரின் நீர்க்குண்டிக்காயில் வாயுசம்பந்தமாயுண்டாயிருக்கிற நோவு, வலி, அதனாலுண்டாகும் தொந்தரவுகள் ஆகியவை தீரும்.

பிரமேகவியாதியின் சிகிச்சைகள்.

இதன் பூர்வம், இதன் நாமங்கள், இது உண்டாகும் காரணம், இதன் இலக்ஷணங்கள், இதன் நிலைமைகள், இதன் முடிவு, இது சம்பந்தமாயுண்டாகும் வேறு வியாதிகள், இதற்கேற்ற யூநானி, இந்து, இங்கிலீஷ் அவுடதங்கள் ஆகியவைகளெல்லாம் வகைவிவரமாக நமது பிரமேகநிவாரணபோதினியென்னும் கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இதைப்பற்றி விவரமாகத் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் மேற்படி கிரந்தத்தை வாங்கி ஆதியோபாடந்தமாகக் கவனித்துவாசித்துத் தெரிந்துகொள்வார்களாக. இக்கிரந்தத்தை

வாசிப்பவர்களுக்கும் பிரயோசனப்படும்படி சில சுலபமான முறைகளையும் இங்கெழுதுவாம்.

## பிரமேக ஔஷதங்கள்.

கிருஷ்ணன்கொண்டைப்பூச்செடியெனவொருவகை மூலிகையுண்டு; இது சாதாரணமாக வயல்களில் அறுப்பறுத்தபின் தண்ணீரில்லாமல் தரைகாய்ந்திருக்கும்போது விசேஷமாக முளைத்திருக்கும். இதன்பூ சேவல் கொண்டையைப்போலிருக்கும். ஆகையால் இதற்குக் கோழிக்கொண்டைப்பூவென்றும் சிலர் சொல்லுவார்கள். இதன் விதை பிரமேகவியாதிக்கு மிகவும் ஏற்றது. இது நினைத்தபோது அகப்படாத சரக்காகையால் அகப்படும்காலங்களில் அவ்விதையைச்சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும். மேற்படி விதை பலம்-௫. இதனை இருவதுபாகமாகச்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். ஒருபாகத்தை எடுத்து அதற்கிரண்டுபங்கு கற்கண்டைச்சேர்த்துக் கல்வத்தில் அரைமணிநேரமரைத்து எடுத்துக் காலையில் உட்கொள்ளவேண்டும். இவ்விதம் இருபதுநாள் காலையில் ஒருவேளை உட்கொள்ளவும். மேற்கண்டவாறு ஒவ்வொருநாளும் புதிதாகச் [illegible]ப்படுத்திக்கொள்ளவேண்டும். முன்னதாகச் சித்தப்படுத்திக்கொண்டால் அவ்வளவு குணமில்லை. எல்லாவகைப் பிரமேகங்களும் தீரும்.

### குறிப்பு.

சில தேகிகளுக்கு அளவில் அதிகப்படுத்திக்கொடுக்கவேண்டியதாயிருக்கிறது. ஆகையால், தேகபலம் வியாதிபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி [illegible]



அதம்பால் நாலு வராகனெடைமுதல் ஐந்து வராகனெடைவரையில் இரண்டுபங்கு கற்கண்டைச் சேர்த்துப்பொடித்துக் காலையில் ஒருவேளைமாத்திரம் உபயோகித்துவரவும்.

பத்தியம்:—புளிப்பு,புளித்தவஸ்துக்கள், ஸ்திரீ, புகை ஆகியவைகளை நீக்கவேண்டியது. வாழைப்பூ, வாழைக்கச்சல் முதலிய துவர்ப்புவஸ்துக்களை அதிகமாகச் சேர்த்துவரவும்.

### மேற்படி வேறு.

ஆலவிழுதின்கொழுந்து தேவையான அளவு. இதனை நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ்செய்து சூரணத்திற்குச் சமனெடை கற்கண்டைச்சேர்த்து இரண்டொருமணிநேரமரைத்து நன்றாக மிஸ்ரமான பின்பு கார்க்குள்ள சீஸாவில் வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—வராகனெடை-௫, ௧௦. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும். இவ்விதம் ஏழுநாள் உபயோகிக்கவேண்டும்.

அநுபானம்:—இந்தச்சூரணத்தைப் பிரமாணப்படி உட்கொண்டு அதன்மேல் அரைஆழாக்கு அல்லது ஒருஆழாக்கு தண்ணீர்ப்பாலைப் பானஞ்செய்யவேண்டும். ஒருபங்கு பசுவின்பாலில் மூன்றுபங்கு தண்ணீரைச் சேர்த்ததற்குத் தண்ணீர்ப்பாலென்று பெயர்.

உபயோகம்:—பிரமேகஒழுக்கு, எரிவந்தம் முதலியவைகளெல்லாம் தீரும்.

மேற்படி வேறு.

கிஷாஸ்தா என்னும் [illegible]ப்பால் விராகனெடை-௬. இதனைப்பொடித்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு ஓரிரவுவைத்துக் காலையில் எடுத்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் இரண்டுவாரம் அல்லது மூன்றுவாரம் செய்துவரின் பிரமேக[illegible]முக்கு, எரிவக்தம், வேதனை முதலியவைகளெல்லாம் தீரும். தேகத்திலுள்ள உஷ்ணத்தைத் தணிக்கும்.

மேற்படி வேறு.

மாம்பட்டை பலம்-௨. இதனை நையச்சிதைத்து ஒருஆழாக்கு ஜலத்திற்போட்டு ஓரிரவுவைத்துக்காலையில் இறுத்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் ஏழுநாட்கள்செய்யின் பிரமேகவியாதி தீரும்.

பத்தியம்:—புளி, புகை, பெண் ஆகியவைகளை நீக்கவேண்டியது.

ஷை வேறு.

வாடாமல்லிகையிலை வராகனெடை-௩. இதனைச்சன்னமாக அரிந்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு ஓரிரவுவைத்துக் காலையிற்பிசைந்து வடிகட்டிக்கொஞ்சம் சர்க்கரைசேர்த்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் ஒருவாரம் பத்துநாள் செய்யின் நூதனப்பிரமேகம் தீரும்.

ஷை வேறு.

வெள்ளைப்போளம் வராகனெடை-௨. இதனைப் பொடித்து ஒருஆழாக்கு ஜலத்திற்போட்டு ஓரிரவுவைத்துக் காலையில் தெளிவையிறுத்துக் கொஞ்சம் சர்க்கரைசேர்த்துப்பானஞ்செய்யவேண்டும். இவ்வி-



தம் ஒருவாரம் அல்லது பத்துநாட்கள் செய்துவரின் பிரமேகம், நீர்த்தாரையிலுள்ள பிரமேகப்புண் ஆகியவை தீரும்.

மேற்படி வேறு.

மூன்று வராகனெடை பூவந்திக்கொட்டைச்சதையைச்சிதைத்து ஒருஆழாக்கு ஜலத்திற்போட்டு ஓரிரவுவைத்துக் காலையில் தெளிவைமாத்திரம் இறுத்துக்கொஞ்சம் சர்க்கரையைச்சேர்த்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் ஒருவாரம் செய்துவரின் பிரமேகம், பிரமேகப்புண் ஆகியவை தீரும்.

ஷை வேறு.

செம்பரத்தம்பூ.-(இதனைச் சப்பாத்துப்பூவென மதராஸில் சொல்கிறார்கள்.) இதில் முதல்நாள் ஒரு பூவைக்கொஞ்சம் கற்கண்டுடன் மென்று தின்னவேண்டும். இரண்டாநாள் இரண்டுபூவையும், மூன்றாநாள் மூன்றுபூவையும், நான்காநாள் நான்குபூவையும் கொஞ்சம் கொஞ்சம் கற்கண்டுடன்மென்று தின்னவேண்டும். பிறகு ஐந்தாநாள் மூன்றுபூவையும், ஆறாநாள் இரண்டுபூவையும், ஏழாநாள் ஒருபூவையும் முன்போல் கற்கண்டுடன்மென்று தின்னவேண்டும். இவ்விதம்செய்வதால் பிரமேகம், நீரெரிச்சல், நீர்ப்பையழலை, நீர்த்தாரையழலை, நீர்த்தாரைப்புண் முதலியவைகளெல்லாம் தீரும்.

பத்தியம்:—சூடானபதார்த்தங்கள், முக்கியமாய் மீன் கருவாடு கோழி முதலியவைகளை நீக்கவேண்டியது. துவர்ப்பான வஸ்துக்களை உபயோகித்துவரவும்.

### மேற்படி வேறு.

கோழிக்கொண்டைப்பூவின்சூரணம் வராகனெடை-௧. இதனை ஒருஆழாக்குபசுவின்பாலிற்போட்டு இரவில் கிலவில்வைத்துக் காலையில் கொஞ்சம் சர்க்கரைசேர்த்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் செய்துவருவதால் பிரமேகரோகம், பிரமியரோகம், ஆகியவைதீர்ந்து தாதுவிருத்தி முதலியவை உண்டாகும்.

### குறிப்பு.

இதனை இப்படிச் செய்வதைப்பார்க்கிலும் மேற்படிசூரணத்தை மேற்படி பிரமாணப்படி கொஞ்சம் ஜலத்திற்போட்டு இரவில் கிலவில்வைத்துக் காலையில் எடுத்துப் பானஞ்செய்து அதன்பின்பு ஜீரணசக்திக்குத்தகுந்தபடி அரை அல்லது ஒரு ஆழாக்கு புதிதாகக் கறந்த பசுவின்பாலைப் பானஞ்செய்துவருவது உத்தமம். இவ்விதம் செய்துவந்தாலும் மேற்கண்டரோகங்கள் தீரும்.

### மேற்படி வேறு.

வாழைப்பட்டையை இடித்துப் பிழிந்தசாறு பலம்-௨½. இதனைக் காலையிற் பானஞ்செய்யவேண்டும். தேகபலம் வியாதிபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி மேற்படிசாற்றில் ஐந்துபலம்வரையில் பானஞ்செய்யலாம். இவ்விதமே வாழைத்தண்டின்சாறு, வாழைக்கிழங்கின்சாறு ஆகியவைகளையும் உபயோகிக்கலாம். இவ்விதம் செய்வதால் நீரெரிச்சல், நீர்க்கடுப்பு, நீர்ப்பையழலை, நீர்த்தாரை அழலை முதலியவை தீரும்.



### ஷை வேறு.

சீனிசர்க்கரை வராகனெடை-௫. இதில் கால்ரூபாயெடைமுதல் அரைரூபாயெடைவரையில் ஆலம்பாலைச்சொட்டி உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலையில் ஒவ்வொருவேளை ஒருவாரம் அல்லதுபத்துநாள் உட்கொண்டுவந்தால் பிரமேகம், பிரமேக ஒழுக்கு, சீவநதம், நீர்த்தாரைப்புண் ஆகியவை தீரும்.

### மேற்படி வேறு.

மாவுப்பு வராகனெடை-௧௩. இதனை அரைஆழாக்குபசுவின் தயிரிற்போட்டுக்கலந்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் ஒவ்வொரு காலையிலும் ஒருவாரம் அல்லது பத்துநாள் உபயோகித்துவரின் பிரமேகம், நீரெரிச்சல், நீரடைப்பு ஆகியவை தீரும்.

### ஷை வேறு.

சுத்திசெய்த கெந்தப்பேரோஜா என்னும் தேவதாரிப்பிசின் குன்றிமணியெடை-௨, இதனைக்கொஞ்சம் வெல்லத்திற்றுள் வைத்து உட்கொண்டு அரைஆழாக்கு அல்லது ஒரு ஆழாக்கு நீர் மோரைப்பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலையில் ஒருவேளை ஒருவாரம் அல்லது பத்துநாள் உபயோகித்துவரின் பிரமேகம், நீரெரிச்சல், நீர்ப்பை அழலை, நீர்த்தாரை அழலை ஆகியவை தீரும்.

தேவதாரிப்பிசின் சுத்தி:—தேவதாரிப்பிசினை ஒரு பாத்திரத்தில் வைத்துக் கரிநெருப்பின்மீது வைத்தால் அது உருகும். அது உருகினவுடன் தண்ணீரில் சாய்த்து விடவேண்டும். குளிர ஆறினபி

ன்பு மறுபடியும் உருக்கிமுன்போற் சாய்க்கவேண்டும். இவ்விதம் மூன்றுதடவைகள் செய்யின் அதிலுள்ள கற்கரடு முதலியவை நீங்கிச் சுத்தியாகிவிடும்.

ஷை வேறு.

காட்டுவாழைஇலையை அரைத்துவிழுது பலம்-½ முதல் ஒன்றுவரை. இதனை அரை ஆழாக்கு தண்ணீரில் கரைத்துக்கொஞ்சம் சர்க்கரையும் சேர்த்துப்பானஞ்செய்ய வேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டு வேளையும் ஒருவாரம் அல்லது பத்துநாள் உபயோகிக்கின் பிரமேகரோகங்கள் தீரும்.

மேற்படி வேறு.

வெள்ளறுகு இலையை அரைத்தவிழுது பலம் அரைமுதல் ஒன்றுவரை இதனை அரைஆழாக்கு பசுவின்பாலில் அல்லது பசுவின் தயிரில் கலந்து பானஞ்செய்யவும். இவ்விதம்-காலையில் ஒவ்வொருவேளை ஏழுநாட்கள் செய்யின் பிரமேகரோகங்கள் தீரும்.

ஷை வேறு

வெள்ளறுகையரைத்தவிழுது வராகனெடை-௨, பிரமதண்டியிலையை அரைத்தவிழுது வராகனெடை-௨, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து அரைஆழாக்கு பசுவின் பாலில் அல்லது தயிரில் கலந்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலையில் ஒவ்வொரு வேளை ஒருவாரம் அல்லது பத்துநாட்கள் செய்யின் இரத்தப்பிரமேகம், சீழ்ப்பிரமேகம், நீர்க்கிரிச்சரம் முதலியவை தீரும்.



மேற்படி வேறு.

கருவேலிலை பலம்-௧, நெருஞ்சிசமூலம் பலம்-௧, இவ்விரண்டையும் இடித்துச்சாறுபிழிந்து அதில் சர்க்கரையைச்சேர்த்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலையில் ஒவ்வொருவேளை ஒருவாரம் அல்லது பத்துநாட்கள் உபயோகித்துவரின் பிரமேகரோகங்கள் தீரும்.

ஷை வேறு.

வாதுமைப்பிசின்தூள் வராகனெடை-௨, இதனை உட்கொண்டு அரை ஆழாக்கு அல்லது ஒரு ஆழாக்குப் பசுவின்பாலிற் கொஞ்சம் சர்க்கரையைக்கலந்து பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்யவும். இதனைத் தொடர்ச்சியாக உபயோகித்துவந்தால் எவ்விதமான பட்ட பிரமேகமும் தீரும்.

ஷை வேறு.

வெள்ளைக்குங்கிலியத்தூள் ஒருபங்கு, கற்கண்டுத்தூள் ஒருபங்கு. இவ்விரண்டையும் மிஸ்ரமித்து வேளை-௧-க்கு மூன்று வராகனெடை விதம் உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் ஒருவாரம் அல்லது பத்துநாள் உபயோகித்தால் பிரமேகத்தில் எரிவந்தம் நின்றபின் போய்க்கொண்டிருக்கும் வெள்ளை ஒழுக்கு நின்றுபோகும்.

ஷை வேறு.

மேற்படி வெள்ளைக்குங்கிலியச் சூரணம் வராகனெடை-௧௨, கற்கண்டுச்சூரணம் வராகனெடை-௧௨,

நல்லெண்ணெய் வராகனெடை-ந, வெள்ளறுகுத்திராவகம் அல்லது வெள்ளறுகுச்சாறு வராகனெடை-ந, இவையெல்லாவற்றையும் ஒன்றாக மிஸ்ரமித்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலையில் ஒவ்வொருவேளை ஒருவாரம் அல்லது பத்துநாட்கள் செய்யின் எல்லாவகைப் பிரமேகரோகங்களும் தீரும்.

## வெள்ளறுகுத் திராவகம்.

வெள்ளறுகை நிழலில் உலர்த்தி எட்டுப்பங்கு ஜலத்திற்போட்டு ஓரிரவு ஊறவைத்து வாலையிலிட்டு முறைப்படி திராவக மிறக்கிக்கொள்ளவும்.

## பிரமேகக்கஷாயம்.

உலர்த்தின வெள்ளறுகு, உலர்த்தின கருவேப்பிலை, இவையிரண்டும் வகை-க-க்கு பலம்-உ, இவற்றைக்காற்படி ஜலத்திற்போட்டு மூன்றிலொரு பாகமாகச்சுண்டக்காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொள்ளவும். சிலாசத்துத்தூள் அல்லது பற்பம் வராகனெடை-வ, இதனை வெண்ணெயிற் கலந்து உட்கொண்டு அதன்மீது முன் சித்தப்படுத்தின கஷாயத்தைப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் ஒருவாரம் அல்லது பத்துநாட் செய்யின் பிரமேகரோகங்கள் தீரும்.

## ஷடி வேறு.

நாமக்கோவை அல்லது சாதாக்கோவைவேர் பலம்-க, இதனைச்சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொரு பாகமாகச்சுண்டக்காய்ச்சி வடிகட்டிப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலை



மாலை இரண்டுவேளையும் உபயோகித்துவரின் பிரமேகரோகம் தீரும்.

## பிரமேக உசிதம்.

வேப்பிலை, சம்பங்கியிலை இவை வகைக்குச்சமனெடை, இவ்விரண்டையும் எட்டுப்பங்குஜலத்திற்போட்டுக்காய்ச்சி அரைப்பங்காகச் சுண்டினவுடன் இறக்கி ஆண்குறியிற்படும்படி வேதுபிடிக்கவேண்டும். இளஞ்சூடாயிருக்கையில் ஆண்குறியை அதற்குட்செலுத்திச்சற்றுநேரம் வைத்திருந்து அப்படியே மூத்திரம்பெய்து பிறகு வெந்நீரால் கழுவிச்சுத்திசெய்துவிடவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்யின் பிரமேகரோகம் தீரும்.

## ஷடி வேறு.

இம்பூகோல்விதை பலம்-உ, ஒருசிறு கலயத்திற்போட்டு அது நிறைய ஜலத்தைவிட்டு நான்கு ஜாமநேரம் வைத்திருந்தால் விதையெல்லாம் ஊறி குழகுழப்பாயிருக்கும். அதற்குள் ஆண்மர்மஸ்தானத்தைச்செலுத்தி ஐந்து நிமிஷநேரம் வைத்திருந்து உள்ளேவைத்திருக்கிறபடியே மூத்திரம் பெய்துபிறகு வெந்நீரால் கழுவிச்சுத்திசெய்துவிடவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்யின், பிரமேகரோகம், எரிவத்தம், பீஜத்திலுண்டான ஆண்குறி அழலை ஆகியவை தீரும்.

## பிரமேக ஊறற் கஷாயம்.

மருதோன்றியிலை, நெல்லிமுள்ளி, நற்சீரகம், கொத்துமல்லிவிதை, நெருஞ்சிமுள் இவை வகை-க-

க்கு வராகனெடை-௩, இவற்றைச்சிதைத்து ஒன்றரை ஆழாக்கு ஜலத்திற்போட்டு ஓரிரவு ஊறவைத்துக்காலையிற் பிசைந்து வடிகட்டி இதில் நான்கு வராகனெடை சீனிசர்க்கரையைக்கலந்து வைத்துக்கொள்க. வாதுமைப்பிசின் சூரணம் வராகனெடை-௬, இதனை உட்கொண்டு முன் சித்தப்படுத்தின ஊறற்கஷாயத்தைப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் ஒவ்வொரு காலையிலும் ஒருவாரம் அல்லது பத்துநாள் செய்யின் எல்லாவகைப் பிரமேகங்களும் தீரும்.

ஷை வேறு.

சிதைத்த கொண்டைக்கடலை பலம்-௧௦, புரசம்பூ, நற்சீரகம், இவை வகை-௧-க்குப் பலம்-௩, இவற்றைச்சிதைத்து அரைப்படி ஜலத்திற்போட்டு இருபத்து நான்குமணி நேரம் ஊறவைத்து மேல்தெளிவை யிறுத்து இரண்டுபாகமாக்கி ஒருபாகத்தைக்காலையிலும் மறுபாகத்தை மாலையிலும் பானஞ்செய்யவேண்டும், இவ்விதம் ஒருவாரம் பத்துநாள் செய்யின் எல்லாவகைப்பிரமேகங்களும் தீரும்.

குறிப்பு.

தேகம், வியாதி ஆகியவை பலமாயிருந்தால் கடலை.௮, பலமும், புரசம்பூ, சீரகம் இவ்விரண்டும் வகைக்கு ஒவ்வொரு பலமுமாகச்சேர்த்துக் கொள்ளலாம். சமயோசிதம்போல் சிகிச்சகர்கள் சரக்குகளின் அளவை அதிகப்படுத்தி உபயோப்பது யுக்தி, புத்தி ஆகியவைகளைச் சார்ந்ததாம். இவ்விஷயம் அனுபவத்தில் தானே தெரிந்துபோகும்.



## பிரமேகத்திற்காம் சூரணங்கள்.

### பிரமேக மதச் சூரணம்.

கல்மதம், வெள்ளைக் குங்கிலியம், கற்கண்டு இவற்றின் சூரணம் வகை-௧-க்கு வராகனெடை-௮. நீர்முள்ளிவிதை, சிறுநெருஞ்சிமுள், கிருஷ்ணன் கொன்றைப்பூச்செடி விதை அல்லது, கசகசா இவற்றின் சூரணம் வகைக்கு வராகனெடை ௩. சூரணங்களையெல்லாம் ஒன்றாகக் கலந்து கசகசாவையும் சேர்த்து இரண்டு மணிநேர மரைத்துப் பதினாறுபாகமாக்கி வைத்துக்கொள்க. ஒருபாகத்தை உட்கொண்டு அதன்மேல் அரை ஆழாக்கு ஆட்டுத்தண்ணீர்ப்பால் பானஞ்செய்யவேண்டும் இவ்விதம் ஏழுநாட்கள் செய்யின் எல்லா வகைப் பிரமேகங்கள், பிரமிய ரோகங்கள் ஆகியவை தீரும்.

### பிரமேக சீனச்சூரணம்.

பொரித்த படிக்காரத்தூள், பூங்காவி, இவை வகைக்குப் பலம் ௨. சீனிசர்க்கரை பலம் ௪. முன் இரண்டையும் பொடித்துச் சர்க்கரையையும் சேர்த்து ஒருமணிநேர மரைத்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை ௪ - ௫-காலை மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—பிரமேகநோய்க்கு, இரத்தப்பிரமேகம், சீழ்ப்பிரமேகம் ஆகியவை தீரும். நீரெரிச்சல், நீர்ப்பை அழலை, நீர்த்தாரை அழலை ஆகியவைகளும் தீரும்.

### பிரமேக முள்ளியாதிச்சூரணம்.

நீர்முள்ளிவிதை, பருப்புக்கீரைவிதை, கோழிக்கொண்டைப்பூச்செடிவிதை அல்லது கசகசா, சிறுநெருஞ்சிமுள், காகுவிதை, கல்மதம் இவற்றின்சூரணம் வகை-க-க்குப் பலம்-க. இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து ஒருமணிநேரமரைத்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-ரு. ச. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—பிரமேகம், இரத்தப்பிரமேகம், சீழ்ப்பிரமேகம், பிரமேகஒழுக்கு ஆகியவை தீரும்.

### பிரமேக பிசின் சூரணம்.

வாதுமைப்பிசின், கஞ்சாவிதை, கோழிக்கொண்டைப்பூச்செடிவிதை அல்லது கசகசா, வெள்ளைக்குங்கிலியம், நீர்முள்ளிவிதை, சிறுநெருஞ்சிமுள் இவற்றின்சூரணம் வகை-க-க்குப் பலம்-க. இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து ஒருமணிநேரமரைத்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-உ, ரு, காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—பிரமேகஒழுக்கு, பிரமேகச்சீழ் ஆகியவைகளைக் கட்டுப்படுத்தும். நாட்பட்ட பிரமேகத்தைப்போக்கும்.

### பிரமேக மஞ்சளாதிச் சூரணம்.

விரலிமஞ்சட்சூரணம், நெல்லிமுள்ளிச்சூரணம் இவை வகை-க-க்குப் பலம்-உ ரு, சீனிசர்க்கரை பலம்



-ரு. இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு ஒருமணிநேரமரைத்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-ரு, ச. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும். இதனை உட்கொண்டு இதன்மீது கொஞ்சம் தண்ணீரைப்பானஞ்செய்யவேண்டும்.

உபயோகம்:—புதிய பிரமேகமாயிருந்தால் ஒருவாரத்திற்குள் தீர்ந்துபோகும்; புராதனப் பிரமேகமாயிருந்தால் சிலநாட்கள் தொடர்ச்சியாக உபயோகிக்கின் அது தீர்ந்துபோகும்.

### பிரமேகப் புரசச் சூரணம்.

உலர்த்தின புரசங்கொழுந்து, புரசம்பிசின், புரசம்பட்டை, புரசம்பூ இவற்றின் சூரணம் வகை-க-க்குப் பலம்-கவ. சீனிசர்க்கரை பலம்-ரு. இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து கல்வத்தில் ஒருமணிநேரமரைத்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-உ. ரு. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும். இதனை உட்கொண்டு சீரணசக்திக்குத் தகுந்தபடி அரை ஆழாக்கு அல்லது ஒரு ஆழாக்கு பசுவின்பாலைப் பானஞ்செய்யவேண்டும்.

உபயோகம்:—பிரமேகம், பிரமேகஒழுக்கு, சீழ்ப்பிரமேகம் முதலியவை தீரும்.

### பிரமேக வெடியுப்புச்சூரணம்.

வெடியுப்புத்தூள், ஏலக்காய்விதைச்சூரணம் இவை வகை-க-க்குப் பலம்-க, இவ்விரண்டையும் மிஸ்ர

மித்து ஒருமணிநேரமரைத்து ஆறுபாகமாக்கி வைத்துக்கொள்ளவேண்டும். ஒருபாகத்தை வாயிற்போட்டுக்கொண்டுகொஞ்சம் தண்ணீரைப் பானஞ்செய்யவேண்டும். மூன்றுநாட்சென்றபின்பு நான்காநாள் முன்போல் முன்சூரணத்தைச் சித்தப்படுத்தி ஆறுபாகமாக்கி, ஒருபாகத்தை உட்கொள்ளவேண்டும். ஆனால், அதன்மீது தண்ணீருக்குபதிலாக அரைப்பலம் கருங்குறுவையரிசியைக் கொஞ்சம் ஜலத்தில் ஊறவைத்து அந்த ஜலத்தை இறுத்துப் பானஞ்செய்யவேண்டும். அது கிடைக்காதசமையங்களில் சாதாரணமாக நமது வீடுகளில் கிடைக்கும் கழுநீரில் கொஞ்சம் பானஞ்செய்யவேண்டும். இந்த ஆறுநாளைக்குள் பிரமேகம், நீரெரிச்சல், பிரமேகஒழுக்கு ஆகியவைகள் தீரும்.

## பிரமேக வித்தாதி மாத்திரை.

புருப்புக்கீரைவிதை, கசகசா, வெள்ளரிவிதைப் பருப்பு, கெக்கரிவிதைப்பருப்பு, முலாம்பழவிதைப்பருப்பு, தித்திப்புக்குமட்டி (தர்பூஜ்) விதைப்பருப்பு இவை வகை-௧-க்குப் பலம்-௨. சிறுநெருஞ்சிமுள், கருவேலப்பிசின், வாதுமைப்பிசின் இவை வகைக்கு வராகனெடை-௨. இஸப்கோல் விதைக்கோறை செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்டவைகளுள் சூரணஞ்செய்யவேண்டியவைகளைச் சூரணித்தும், மற்றவைகளையும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு ஒருமணிநேரமரைத்து எல்லாம் நன்றாக மிஸ்ரமானபின்பு மேற்படி கோறையைச் சிறுகச்சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்து அரை வராகனெடையுள்ள மாத்திரைகளா



கச்செய்து பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்க.

பிரமாணம்:—மாத்திரை-௨. அ. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—நீரெரிச்சல், பிரமேக ஒழுக்கு வெட்டைச்சூடு ஆகியவைகள் தீரும்.

பத்தியம்:—உஷ்ணபதார்த்தங்கள், மீன், கருவாடு ஆகியவைகளை நீக்கவேண்டியது. குளிர்ச்சியான காய்கறிகளைச் சேர்த்துக்கொள்ளவும்.

## பிரமேக ரோஜா மாத்திரை.

பேரோஜா என்னும் தேவதாரிசிப்பியின் தேவையான அளவு இன்னொரு இரும்புக்கரண்டியில்வைத்துச் சூடுகாட்டி உருகினவுடன் ஜலத்தில்சாய்த்துவிடவேண்டும். குளிர ஆறினபின்பு மறுபடியும் முன்போலுருக்கி முன்போல் சாய்க்கவேண்டும். இவ்விதம் மூன்று அல்லது ஏழுதடவைகள் உடக்கிஉடக்கி உருக்கி உருக்கிச் சாய்க்கின் சுத்தியாம். இதுவே தேவதாரிப்பிசினின் சுத்தியாம். இவ்விதம் சுத்திசெய்த தேவதாரிப்பிசின், வாதுமைப்பிசின்தான், வறுத்த பொட்டுக்கடலைமா இவை வகை-௧-க்குப் பலம்-௨.

செய்முறை:—இவை யெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு அரைமணிநேரமரைத்து எல்லாம் நன்றாய் மிஸ்ரமானபின்பு தண்ணீர்விட்டுச் சிறுகச்சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்துக் குன்றிமணிப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க காலைமாலை இரண்டு வேளையும் உபயோகிக்கலாம். தேகபலம் வியாதிபலம் ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோல் சமயோசிதமாக அளவில் அதிகப்படுத்தியும் கொடுக்கலாம்.

அநுபானம்:—சிறுநெருஞ்சிமுட்கஷாயம், அல்லது சிறுநெருஞ்சி சமூலச்சாறு பலம்-க-முதல்-க௨. இந்த மாத்திரையைச் சர்க்கரை அல்லது வெல்லத்தில் வைத்து விழுங்கி அதன்மேல் மேற்கண்ட திரவத்தைப் பானஞ்செய்யவேண்டும்.

உபயோகம்:—பிரமேகம், நீரெரிச்சல், பிரமேக ஒழுக்கு, நீர்த்தாரை அழலை முதலியவைகள் தீரும்.

## பிரமேகதோடை மாத்திரை.

ஆடாதோடை சமூலத்தை நிழலிலுலர்த்தி எரித்துச் சாம்பலாக்கி வஸ்திரகாயஞ்செய்த பஸ்பம் பலம்-க. வாதுமைப்பிசின் தூள் பலம்-க. வாதுமைப்பிசினை ஊறவைத்தகோழை செல்லத்தக்க அளவு

செய்முறை:—முன்னிரண்டையும் கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு மேற்படி கோழையை அல்லது தண்ணீரைச்சிறுகச் சிறுகவார்த்து ஒருசாம நேரமரைத்துக் குன்றிமணிப்பிரமாணம் மாத்திரைகள்செய்து நிழலில் உலர்த்திச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, உ. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

அநுபானம்:—அரைப்பலம் அத்திப்பூவை அல்லது கேந்திப்பூவைப் பனிரண்டுமணிநேரம் ஒரு அழ



க்கு ஜலத்தில் போட்டு ஊறவைத்து இறுத்து மாத்திரையை உட்கொண்டு அதன்மீது பானஞ்செய்யவேண்டும்.

உபயோகம்:—புதிய பிரமேகம், புராதனப்பிரமேகம் ஆகிய இருவகைப் பிரமேகங்களும் தீரும். நீரெரிச்சல், நீருகல், நீர்ப்பைரணம் ஆகியவைகளும் தீரும்.

## குறிப்பு.

மேற்படி ஆடாதோடைப்பற்பம் ஒருபங்கிற்கு அரைப்பங்கு வாதுமைப்பிசின் தூளைச்சேர்த்து முன்சொன்னபடி மாத்திரைசெய்து கொள்வதுமுண்டு. ஆனால் சமஎடை சேர்த்துக்கொள்வதே விசேஷம்.

## பிரமேககாக்ஷஜ மாத்திரை.

காக்கணஞ்சூரணம் வராகனெடை-அ, வெள்ளரி விதைப்பருப்பு, கெக்கரி விதைப்பருப்பு, பருப்புக்கீரை விதைச்சூரணம், மேற்புறணி நீக்கின அதிமதுரச் சூரணம், நன்றாகச்சிதைத்த கசகசா, இவை வகைக்கு வராகனெடை-அ, வாதுமைப்பிசின் தூள், கருவேலம்பிசின் தூள், பூங்காவித்தூள் இவை வகை-க-க்கு வராகனெடை-ச, அஞ்மோதா ஓமச்சூரணம் வராகனெடை-உ, அபினி வராகனெடை-க, இஸ்பகோல் கோழை செல்லத்தக்க அளவு.

செய்முறை:—அபினைக்கல்வத்திலிட்டு மேற்படி கோழையைச்சிறுகச் சிறுகவிட்டு வெண்ணெய் போலரைத்துப்பிறகு பருப்பினங்களைச் சேர்த்துமசிய அரைத்து மற்றச்சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து அதிற்சேர்த்து அரைமணி நேரமரைத்து எல்லாம்

மிஸ்ரமானபின்பு முன் சொன்னமுறைச்சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாமநேரமரைத்து அரைவராகனெடையுள்ள பில்லைமாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-௧, ௨. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

அனுபானம்:—சிறு நெருஞ்சிக்கஷாயம், அல்லது சிறு நெருஞ்சிச்சாறு பலம்-௧, அல்லது வெள்ளரிவிதையை அரைத்துப்பிழிந்த பால் பலம்-௧, மேற்படி மாத்திரையைச்சர்க்கரையில் அல்லது வெண்ணெயில் வைத்து உட்கொண்டு அதன்மீது முன் சொன்னதிரவத்தைப் பானஞ்செய்யவேண்டும்.

உபயோகம்:—பிரமேகம், நீர்க்குண்டிக்காய் ரணம், நீர்ப்பைரணம், நீர்த்தாரை அழலை ஆகியவைகளைக்குணப்படுத்தும். நீர்க்கட்டையுடைத்து நீரை அதிகப்படுத்தும்.

### பிரமேகத்திற்காம் பீச்சுமருந்துகள்.

### துத்தப்பீச்சுமருந்து.

மயில்துத்தம் வராகனெடை-௫, படிகாரம் வராகனெடை-௧௦, காய்ச்சுக்கட்டி வராகனெடை-௫, இவையெல்லாவற்றையும் பொடித்து மூன்று ஆழாக்கு ஜலத்திற்போட்டுக்காய்ச்சி அரைப்பாகமாகச் சுண்டினவுடன் இறக்கிவடிகட்டிச்சீஷாவில் வைத்துக்கொண்டுநீர்த்தாரையில் பீச்சாங்குழலால் முறைப்படி பீச்சிடவேண்டியது. இரண்டுதடவை செய்தால்போதுமானது. இதனால் சிலருக்கு வேதனை அதிகப்படும்.



அல்லது சிலருக்குஇரத்தம் கொஞ்சம் வெளிப்படும். எப்படியாயினும் பயமில்லை. வியாதி சீக்கிரம் வசப்பட்டுப்போம். அவசியமானால் ஸ்தனப்பாலைப் பீச்சிட்டால் இக்குணங்கள் மாறிப்போகும்.

உபயோகம்:பிரமேக ஒழுக்கு, நீரடைப்பு, புண், சீழ்ப்புண் முதலியவை தீரும்.

### ரோஜனப்பீச்சுமருந்து.

ரோஜனத்தூள் வராகனெடை-௫, நல்லெண்ணெய் வராகனெடை-௧௫, இந்த எண்ணெயில் மேற்படி தூளைப்போட்டுக்காய்ச்சித்தூள் கருகிப்போனபின் இறக்கிவடிகட்டிச் சீஷாவில் வைத்துக்கொள்ளவும். இதனைப் பீச்சாங்குழலிலிட்டு முறைப்படிபீச்சிட நீர்த்தாரை அழல், நீர்த்தாரை எரிச்சல், நீர்த்தாரை ரணம் ஆகியவை தீரும்.

### குறிப்பு.

இந்த எண்ணெயுடன் ஸ்தனப்பாலைச்சேர்த்து நன்றாக மிஸ்ரமித்து மேற்கண்டபடி பீச்சிடுவதால் அதிக விசேஷகுண முண்டாகும்.

### சிங்கிப்பீச்சுமருந்து.

மிருதார்சிங்கி, காய்ச்சுக்கட்டி, இரசாஞ்சனம், இவை வகை-௧-க்கு வராகனெடை-௫, வறுத்தமயில் துத்தம் குன்றிமணியெடை-௪, இவையெல்லாவற்றையும் மூன்று ஆழாக்கு ஜலத்திற் போட்டுக்காய்ச்சி அரைப்பாகமாகச் சுண்டினபின் இறக்கிவடிகட்டி வைத்துக்கொள்ளவும். இதிற் கொஞ்சமெடுத்துப்பீச்சாங்குழலால் முறைப்படி பீச்சிடவேண்டியது. தின

ம் இரண்டு அல்லது மூன்றுதடவைகள் வியாதிக்குத் தகுந்தபடி செய்துவருவதால் பிரமேகம், பிரமேக ஒழுக்கு, பிரமேகச்சீழ், நீர்த்தாரைஅழலை, நீர்த்தாரை ரணம், நீர்ப்பை ரணம் ஆகியவை தீரும்.

### அரிதகிப்பீச்சுமருந்து.

மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி இவை வகை-க-க்கு வராகனெடை-க மயில்துத்தத்தூள் வராகனெடை-அ, இவையெல்லாவற்றையும் நன்றாகச்சிதைத்து ஒன்றரை ஆழாக்கு ஜலத்திற்போட்டுப் பனிரண்டுமணிநேரம் ஊறவைத்துப்பிறகு பிசைந்து வடிகட்டிச் சீஷாவில் வைத்துக்கொள்ளவும். இதிற் கொஞ்சமெடுத்துப் பீச்சாங்குழலால் முறைப்படி பீச்சிடவேண்டியது. தினம் இரண்டு மூன்றுதடவைகள் பீச்சிட்டுவரின் பிரமேக ஒழுக்கு, பிரமேகச்சீழ் நீர்த்தாரை ரணம், நீர்ப்பை ரணம் ஆகியவை தீரும்.

### பிரமேகத்திற்காம் சொட்டு மருந்துகள்.

கோதுமைப்பார்சத்து, கருவேலம்பிசின் இவ்விரண்டும் சமனெடை. இவற்றைத்தண்ணீரில் ஊறவைத்துக்கோழையை எடுத்து அதற்குச்சமனெடை ஸ்தனப்பாலைச்சேர்த்து மிஸ்ரமித்து நீர்த்தாரையின்வாயில் சொட்டலாம். மேற்கண்ட இரண்டில் தனித்தனி ஒவ்வொன்றில் கோழையை எடுத்து ஸ்தனப்பாலுடன் சேர்த்தும் சொட்டலாம்.

கருவேலம் பிசின் கோழையை எடுத்துத் தனப்பாலுடன் சேர்த்தும் சொட்டலாம்; வாதுமை எண்ணெயுடன் ஸ்தனப்பாலைச்சேர்த்தும் சொட்டலாம்.



பழம்பாசியைச்சாறு பிழிந்து அதனுடன் ஸ்தனப்பாலைச்சேர்த்தும் சேர்க்காமலும் சொட்டலாம்.

இந்தப் பிரயோகங்களால் நீர்ப்பையிலுள்ள ரணம், அழலை, எரிவந்தம் ஆகியவைகள் தீரும்.

### பிரமேகத்திரி.

கத்தைக்காம்பு, மிருதார்சிங்கி, வெள்ளைக்குங்கிலியம், கருவேலம்பிசின், பூங்காவி, இவைவகை-க-க்குச்சமனெடை. இவற்றை மெல்லிதாக அரைத்து மெல்லிய வஸ்திரத்தில் புரட்டிச்சிறுதிரியாகச்செய்து நீர்த்தாரையின்வாயில்செலுத்திவைக்கவேண்டும். இவ்விதம் தினம் ஒருவேளை செய்யின் பிரமேகரோகம் தீரும்.

### அதிமூத்திரரோக சிகிச்சைகள்.

நீர்ப்பையானது பெரும்பான்மையும், தன் தொழிலில் ஒழுங்கீனமாகப்போவதாலும், அங்கு குளிர்ச்சி அதிகப்படுவதாலும் மூத்திரம் அதிகமாகப்போகும். இதற்காகச்சூடானவும், துவர்ப்பானவுமாகிய வஸ்துக்களை உபயோகப்படுத்திச் சீர்ப்படுத்தவேண்டும். அவைபின்வருகிற விதமாம்.

### அதிமூத்திர உசிதமுறைகள்.

நறுவிலிக் கொழுந்தை இடித்துப்பிழிந்தசாறு வராகனெடை-ரு, சீனிசர்க்கரை வராகனெடை-ரு, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் மூத்திரம் அதிகமாகப்போதல், மூத்திரம் அடிக்கடி இறங்குதல் ஆகியவை தீரும்.

ஷை வேறு.

கொட்டிக் கிழங்குச் சூரணம் வராகனெடை-௫, சீனிசர்க்கரை வராகனெடை-௫, இவ்விரண்டையும் மிஸ்ரமித்து உட்கொள்ளவேண்டும் இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் உட்கொண்டவரின் மூத்திர ஒழுக்கு தீரும்

ஷை வேறு.

சருவேலங்காயை நிழலிலுலர்த்தி நெய்யில்வறுத்து இடித்தசூரணம் வராகனெடை-௫, சீனிசர்க்கரை வராகனெடை-௫, இவ்விரண்டையுமிஸ்ரமித்து உட்கொள்ளவேண்டும், இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் சொட்டுமூத்திரரோகம் தீரும்.

ஷை வேறு.

மாசக்காய்ச்சூரணம் வராகனெடை-௧, திருநீற்றுப்பச்சைவிதை வராகனெடை-௧௦, சர்க்கரை வராகனெடை-௧. இவற்றைமிஸ்ரமித்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் உட்கொண்டவரின் சித்திராமூத்திரரோகம் தீரும்.

குறிப்பு.

பெரும்பான்மையும் சிறுபிள்ளைகள் படுக்கையில் மூத்திரம் பெய்துகொள்வதுண்டு பெரியவர்களைப் பார்க்கிலும் சிறுபிள்ளைகளில் இந்தவியாதி அதிகமாகக்காணப்படும். இவ்விதம் அடிக்கடி நேரிடுவது வியாதியேயாம். ஆகையால் மேற்கண்ட சிகிச்சையால் குணமுண்டாகும். பிள்ளைகளின் வயதிற்குத் தகுந்தபடி அளவைக் குறைத்துக்கொள்ளவேண்டியது சிகிச்சகர்களின் கடமையாம்.



மேற்படி வேறு.

சன்னராஷ்டச் சூரணம் வராகனெடை-௯ சீனிசர்க்கரை வராகனெடை-௧. இவ்விரண்டையும் மிஸ்ரமித்துத் தண்ணீருடன் உட்கொள்ளவேண்டும். இவ்விதம் செய்துவரின் சித்திரை மூத்திரரோகம் தீரும். இந்தரோகத்தில் இது அதிக குணத்தைத் தரத்தக்கது.

மேற்படி வேறு.

புருவெச்சம் வராகனெடை-௨௦. இதனைக் கொஞ்சம் பச்சையரிசிமாவில் அல்லது புழுங்கலரிசிமாவில் கலந்து தண்ணீர்விட்டுப்பிசைந்து ரொட்டிசுட்டுத்தின்னவேண்டும். தினம் இரண்டுவேளை உபயோகித்துவரின் சித்திராமூத்திரரோகம் தீரும்.

மேற்படி வேறு.

ஆண்வெள்ளாட்டுக்கொம்பைச் சுட்டகரியைத் தூள்செய்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வராகனெடை-௨, இதனைக் கொஞ்சம் தேனிற்குழைத்து உட்கொள்ளவேண்டும், இவ்விதம் தினம் இரண்டுவேளை செய்துவரின் சித்திராமூத்திரரோகம் தீரும்.

அதிமூத்திர குந்திரிக்கச் சூரணம்.

குந்திரிக்கச்சூரணம், கோரைக்கிழங்கு, சன்னராஷ்டம், கருஞ்சீரகம், மாசக்காய்த்தோல், கடலழிஞ்சிப்பட்டை, காடியில் மூன்றுநாள் ஊறவைத்துலர்த்தின கொத்துமல்லிவிதை இவற்றின் சூரணம் வகை-௧-க்குப் பலம்-௧. இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு ஒருமணிநேரமரைத்து நன்றாகமிஸ்ரமானபின்பு சீசாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௧௩, ௨௰.

அநுபானம்:— அத்திப்பட்டை, அத்திப்பட்டைக்கஷாயம், நாகப்பட்டைக்கஷாயம் முதலியவைகளாம்.

உபயோகம்:—மூத்திரம் அளவில் அதிகமாயிறங்குதல், அடிக்கடி மூத்திரம்போகுதல், மூத்திரம்தானே ஒழுகுதல், சொட்டுமூத்திரம் முதலிய ரோகங்கள் தீரும்.

## அதிமூத்திரதிலதச் சூரணம்.

கல், மண் முதலியவை ஆய்ந்து சுத்திசெய்த எள் பலம்-௫. ஓமச்சூரணம் பலம்-௨௰. சினிசர்க்கரை பலம்-௭௰.

செய்முறை:—எள்ளைக் கல்வத்திற்போட்டு மசிய அரைத்துப் பிறகு ஓமச்சூரணத்தைச்சேர்த்து அரைத்து நன்றாகமிஸ்ரமானபின்பு சர்க்கரையைச்சேர்த்து ஒருமணிநேரமரைத்துக் கார்க்குள்ளசீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௧. ௧. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—அதிமூத்திரரோகம், மூத்திரஒழுக்கு, சொட்டுமூத்திரம் முதலியவை தீரும். பசிதீபனமுண்டாகும். இளைத்ததேகம் பருக்கும்.

## அதிமூத்திர திரிபலாதி ஜவாரிஷ்.

மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், (இவ்விரண்டையும் தனித்தனிஇடித்து வஸ்திரகாயஞ்செய்யாமல் தெள்ளிவாதுமைப்பெண்ணெயை அல்



லது பசுவினெய்யைத்தெளித்து நெய்ப்பசையுண்டாக்கிக் கொள்ளவேண்டும்) நெல்லிமுள்ளி, பூமாதுளம்பூ, கோரைக்கிழங்கு இவை வகை-௧-க்கு வராகனெடை-௫, குந்திரிக்கம், ஓமம் இவற்றின்சூரணம் வகைக்கு வராகனெடை-௨௰. தேன் பலம்-௧௦.

செய்முறை.—தேனைக்காய்ச்சி நுரைநீக்கி மேற்படி சூரணங்களையெல்லாம் ஒன்றாகக்கலந்து சிறுகச்சிறுகத்தூவி நன்றாகக்கிளறிக் கிண்டி இறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௧, ௫. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—அதிமூத்திரரோகம், மூத்திரவொழுக்கு, அடிக்கடி மூத்திரம்போகுதல், சொட்டுமூத்திரம் ஆகியவை தீரும்.

## அதிமூத்திரகந்தச் சூரணம்.

கோரைக்கிழங்குச்சூரணம் பலம்-௨௰. இதனை ஒரு பாத்திரத்திற்போட்டு இது அமிழ்ந்திருக்கும்படியாகக் காடியைவிட்டு மூன்றுநாள் ஊறவைத்துப் பிறகு வெயிலில்வைத்து ஈரமில்லாமல் உலர்த்திக் கொள்ளவேண்டும். பிறகு தேனைத்தெளித்து வெயிலில்வைக்கவேண்டும். இவ்விதம் மூன்றுநாள் தேனைத்தெளித்து வெயிலில்வைத்தெடுத்துப் பொடித்துக்கொள்ளவும். சினிசர்க்கரை பலம்-௫. இதனைப் பாகுசெய்து பாகுபதத்தில் முன்சித்தப்படுத்தின சூரணத்தைச் சிறுகச்சிறுகத்தூவி நன்றாகமிஸ்ரமித்துக் கிண்டிக் கிளறி இறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௩, ௫. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—அதிமூத்திரரோகம், சோர்வு, அசதி, நீர்ப்பை கருப்பை ஆகியவைகளிலுள்ள குளிர்ச்சி ஆயவைகளைக்கண்டிக்கும். இரைப்பை, சால், இவற்றிலிருக்கும் குளிர்ச்சியைநீக்கி அங்குச்சூடுண்டாக்கும். இன்னும் வாயுக்களைக்கண்டிக்கும்.

### அதிமூத்திர குந்திரிக்க ஜவாரிஷ்.

குந்திரிக்கம், மாதளம்பூ இவற்றின்சூரணம் வகை-௩-க்கு வராகனெடை-௫, ரூமிமஸ்தகிச் சூரணம் வராகனெடை-௨. தேன் பலம்-௫.

செய்முறை:—தேனைக்காய்ச்சி நுரைநீக்கிக்கிறக்கிக் குளிர ஆறினபின்பு மேற்படி சூரணங்களை ஒன்றாகக்கலந்து ஆவி மத்தாற்கடைந்து சீஷாவில் பத்திரப்படுத்தவேண்டியது.

### குறிப்பு.

ரூமிமஸ்தகியைச் சூட்டுடன்சேர்த்தால் அது அதிக கசப்பாகிச் சாப்பிடமுடியாமற்போம். முன் இரண்டு சரக்குகளையும் தேனிற்சூட்டுடன்சேர்த்து இறக்கிக் குளிர ஆறினபின்பு ரூமிமஸ்தகிச் சூரணத்தைச் சேர்த்துக்கொள்ளலாம். மேற்கண்ட இருவகைகளில் அவரவர்கள் இஷ்டமான ஒருவகையாகச்செய்துகொள்ளலாம்.

பிரமாணம்:—வராகனெடை-௫, க௦. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.



உபயோகம்:—அதிமூத்திரரோகம், மூத்திரஇறிவு, மூத்திரக்கசிவு, சொட்டுமூத்திரம் ஆகியவை தீரும்.

### அதிமூத்திர ஆத்தை ஜவாரிஷ்.

சன்னாரக்சூரணம் பலம்-உ௦. மாதளம்பூ, குந்திரிக்கம் இவற்றின்சூரணம் வகைக்குப் பலம்-க௦. தேன்பலம்-௫க.

செய்முறை:—தேனைக்காய்ச்சி நுரைநீக்கி மேற்படி சூரணங்களை ஒன்றாகக்கலந்து சிறுகச்சிறுகப் பாகில் ஆவி மத்தாற்கடைந்து பிறகு ஆறினபின் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௨-௩. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—அதிமூத்திரரோகம், கசிவுமூத்திரம், மூத்திரஇறிவு முதலியவை தீரும்.

### அதிமூத்திரப் பற்று

புளியங்கொட்டை மேற்றோல், முருங்கையிலை இவ்விரண்டையும் வெண்ணெய்போலரைத்து நாபிக்குக்கீழ் அடிவயிற்றில் பற்றிடவேண்டும். இவ்விதம் தினம் இரண்டுதடவைகள் செய்துவரின் அதிமூத்திரரோகம் தீரும்.

### நீரடைப்பு அதாவது
### மூத்திரஅடைப்பின் சிகிச்சைகள்.

மூத்திர அடைப்பென்பது மூத்திரம் இறங்காமல் நின்றுபோவதாம் இப்படி நேரிடுவதற்கு அநேக காரணங்களுண்டு அஸ்மரிரோகத்தாலும் நீர்நின்று

போவதுண்டு. ஆகையால் நீரடைப்பிற்கு அஸ்மரிரோகங் காரணமாயிருந்தால் அஸ்மரிரோகசிகிச்சைகளைச் செய்யவேண்டும். இன்னும் வேறுவியாதிகளினால் நீர்கட்டுப்பட்டிருந்தால் அந்த வியாதிக்கு அனுகூலமான சிகிச்சைகளைச் செய்யவேண்டும். இக்காரணங்களெல்லாம் அனுபவத்தால் தெரியவருமெனினும் நீரடைப்பிற்காம் சூக்ஷ்மமுறைகளை இங்கெழுதுவாம்.

## நீரடைப்புசிதங்கள்.

கேக்திரியிலை பலம்-௨. இதனைப்பிடித்துச் சாறுபிழிந்து இதில்கொஞ்சம் சர்க்கரையைச்சேர்த்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் செய்துவர நீரடைப்பு தீர்ந்து மூத்திரம் வெளிப்படும்.

## ஷை வேறு.

பூனைக்காலிவிதைப்பருப்புச்சூரணம் குன்றிமணியெடை-௫, இதனை அரைஆழாக்கு ஜலத்திற்கலக்கிப் பானஞ்செய்துவர நீரடைப்புதீர்ந்து நீர்தாராளமாகப் போகும்.

## ஷை வேறு.

வெள்ளைச்சாட்டரணைச்சாறு பலம்-௨ இதனை கால்ஆழாக்குப் பசுவின்பாலிற்கலந்து சாப்பிட்டுவர மூத்திரக்கட்டுடைந்து மூத்திரம் அதிகமாய் வெளிப்படும்.

## ஷை வேறு.

நீரடைப்பு நோயாளியை இளவெந்நீரில் உட்காரவைத்து அரைஸ்நானம் செய்விப்பதாலும் நீரடைப்புதீர்ந்து நீர்வெளிப்பட ஏதுவாகும்.



## மேற்படி வேறு.

கடுகு வராகனெடை-வ, நாலாங்காய்ச்சல் கம்பி வெடியுப்பு வராகனெடை-வ, சீனிசர்க்கரை வராகனெடை-௨. முன்னிரண்டையும் அரைமணிநேரமரைத்துச் சர்க்கரையைச்சேர்த்து நன்றாகமிஸ்ரமித்து இரண்டுபாகமாக்கி ஒருபாகத்தை உட்கொள்ளவேண்டும். ஒருவேளை சாப்பிட்டாற்போதுமானது. எவ்வித நீர்க்கட்டையும் உடைத்து வெளிப்படுத்திவிடும்.

## மேற்படி வேறு.

கொடிப்பவளம் குன்றிமணியெடை-௧. இதனை ஜலத்தில் இழைத்துக்கொஞ்சம் ஜலத்திற்கரைத்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் செய்துவர நீர்க்கட்டு, நீரடைப்பு ஆகியவை தீரும்.

## மேற்படி வேறு.

நெருஞ்சிமுள், வெள்ளரிவிதை, கெக்கரிவிதை, சோம்பு, முலாம்பழவிதை இவை வகை-௩-க்கு வராகனெடை-௨, இவற்றைச் சிதைத்து மூன்றுமணிநேரம் ஜலத்தில் ஊறவைத்துப் பிறகு வெண்ணெய்போலரைத்து அரை ஆழாக்குஜலத்திற்கரைத்து வடிகட்டிப் பானஞ்செய்யவேண்டும். அவசியமானால் கொஞ்சம் சர்க்கரையும் சேர்த்துக்கொள்ளலாம். இவ்விதம் செய்துவர மூத்திரஅடைப்பு, நீர்க்கட்டு ஆகியவை தீரும்.

## ஷை வேறு.

கிளிஞ்சிலைப்பொடித்து வெண்ணெய்போலரைத்து அடிவயிற்றில் பற்றிடவேண்டியது. இவ்விதம் இ

ரண்டு மூன்று தடவைசெய்யின் நீர்க்கட்டுதீர்ந்து நீர் வெளிப்படும்.

டை வேறு.

கலியாணப்பூசணிக்காய் விதையை வெண்ணெய் போலரைத்து அடிவயிறு முதலிய ஸ்தானங்களில் பற்றிடுவதனாலும் நீர்க்கட்டு தீரும்.

டி வேறு.

கலியாணப்பூசணிக்காய்ச்சதையை வெண்ணெய் போலரைத்து அடிவயிறு, இடுப்பு முதலிய ஸ்தானங்களில் பற்றிட நீர்க்கட்டுதீர்ந்து நீர்தாராளமாகப் போகும்.

மேற்படி வேறு

சேவல் சினியைச் சோம்புதிராவகத்தைவிட்டு அல்லது சோம்புக்கஷாயத்தைவிட்டு வெண்ணெய் போலரைத்து நாபியைச்சுற்றிலும் பற்றிடவேண்டும் இவ்விதம் செய்வதால் நீரடைப்பு தீர்ந்து நீர்தாராளமாகவெளிப்படும்.

மேற்படி வேறு.

எலிப்புழுக்கை பலம்-உ, இதனை அரைத்துத் தண்ணீரிற் கரைத்துக்கொதிக்கவைத்து அடிவயிற்றிற்பற்றிட நீர்க்கட்டு தீரும்.

டை வேறு.

கம்பளிப்பூச்சியிலைச்சாற்றில் வெடியுப்பை அரைத்து அடிவயிற்றில் பற்றிடுவதனால் நீர்க்கட்டு தீர்ந்து நீர்தாராளமாகப் போகும். சரக்கொன்றைப்புளி ஒருபங்கு, வெடியுப்பு ஒருபங்கு. இவ்விரண்டையும் ஜலத்திற் கரைத்துக்குழம்புப்பதமாகக் கொதிக்கவை



த்து அடிவயிற்றில் பற்றிட்டு வர நீர்க்கட்டு தீர்ந்து நீர் நன்றாகப்போகும். மலமும் போகும்.

மேற்படி வேறு.

வெடியுப்பை ஜலத்திற் கரைத்து மெல்லிய வஸ்திரத்தை நனைத்து அடிவயிற்றிற் போடவேண்டும். அது உலருமுன் அதை நீக்கி மறுதுண்டு வஸ்திரத்தை நனைத்துப்போடவேண்டும். இவ்விதம் அடிக்கடி மாற்றிப்போட்டுவருவதால் நீரடைப்பு தீர்ந்துநீர்தாராளமாகப்போகும்.

டை வேறு.

கொஞ்சம் சூடனைக்குச்குச்சிபோல் நீளமாகச் சீவி நீர்த்தாரைவாய்க்குட் செலுத்திவைக்க நீர்க்கட்டு தீர்ந்து நீர் வெளிப்படும்.

டை வேறு.

நீர்க்கட்டின் காரணம் விக்கமாயிராவிட்டால் வெடியுப்புத்துண்டை நீர்த்தாரையின் வாயிற் செலுத்திவைக்க நீர்க்கட்டு தீரும்.

மேற்படி வேறு.

அரை வராகனெடை பாதரசத்தைப்பிச்சாங்குழலிற்போட்டு நீர்த்தாரைக்குள் பீச்சுவதால் எவ்வித நீரடைப்பும் தீரும். ஆனால், இதனை அநுபோகசாலிகள் உபயோகிக்கவேண்டும்.

டை வேறு.

சிலேப்பேன் ஒன்றை நீர்த்தாரைக்குள் விடுவதனாலும் நீரடைப்பு தீருமெனச்சொல்லப்பட்டிருக்கிறது.

### ஷை வேறு.

மூட்டைப்பூச்சியை அரைத்துச் சிறுதிரியாகச்செய்து நீர்த்தாரை வாய்க்குட்செலுத்தி வைப்பதாலும் நீர்க்கட்டு தீரும்.

### ஷை வேறு.

முள்முருக்கம்பூ பலம்-௨, இதனை அரைப்படி ஜலத்திற் போட்டுக்காய்ச்சி இளஞ்சூட்டுடன் நாபிக்குக் கீழ்த்தாரையாகவிட்டு வரவேண்டும். இவ்விதம் அடிக்கடி செய்வதால் நீர்க்கட்டு தீரும். இந்த ஜலத்தில் வஸ்திரத்தை நனைத்து நாபிக்குக் கீழ் ஒற்றிடமிடுவதாலும் குணமுண்டாகும்.

### நீர்க்கட்டுக் கஷாயம்.

சிறுநெருஞ்சிமுள், சோம்பு, நீர்முள்ளிசமூலம், சுரைக்கொடி, தென்னைவேர், பனைவேர் இவை வகைக்குப் பலம்-௩, இவற்றைச்சிதைத்து மூன்று ஆழாக்கு ஜலத்திற்போட்டு ஒரு ஆழாக்காகச்சுண்டவைத்து இறக்கிவடிகட்டிப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் தினம் இரண்டு மூன்று வேளைகள் செய்துவரின் நீரடைப்பு, நீர்க்கட்டு ஆகியவை தீரும்.

### நீரடைப்புகலிங்க மூலக்கஷாயம்.

ஆற்றுத்தும்மட்டிவேர் வராகனெடை-௧௦, இதனைச்சிதைத்து இரண்டு ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொருபாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டி அதிற் கொஞ்சம் வெண்ணெயைச்சேர்த்துப் பானஞ்செய்யவேண்டும். இதனால் நீர்க்கட்டு தீரும்; மலக்கட்டும் தீர்ந்து மலம்போகும்.



### குறிப்பு.

தேகபலம் வியாதிபலம் ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோல் இந்த வேரின் பிரமாணத்தை அதிகப்படுத்திக்கொள்ளலாம். இது வைத்தியர்களின் யுக்தி புத்தி அநுபவம் ஆகியவைகளைச்சேர்ந்தது.

### இரத்தமூத்திர சிகிச்சைகள்.

இரத்தமூத்திரமாவது மூத்திரத்தோடு இரத்தம் கலந்து வருவதாம். இதற்காம் சில சூக்ஷுமமான முறைகளை எழுதுவாம்.

### இரத்தமூத்திர உசிதம்.

அரை வராகனெடை காட்டுக்கொள்ளுச்சூரணத்தை உட்கொண்டு அதன்மீது மூன்று வராகனெடை வெண்சந்தனத்தூளை அரை ஆழாக்கு ஜலத்திற் போட்டு ஆறுமணிநேரம் ஊறவைத்துப்பிசைந்து வடிகட்டிப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் தினம் இரண்டு மூன்றுதடவைகள் செய்துவரின் இரத்தமூத்திரரோகம் தீரும்.

### மேற்படி வேறு.

மூன்று செம்பரத்தம் பூவைமென்று தின்னவேண்டும். தினம் இரண்டு மூன்றுதடவைகள் மேற்கண்டவாறு உட்கொண்டுவரின் இரத்தமூத்திரரோகம் தீரும்.

### இரத்தமூத்திர சீன மாத்திரை.

பொரித்தபடிக்காரம், மான்கொம்பைச்சுட்டகரி, வாதுமைப்பிசின், பூங்காவி, மாதுளம்பூ, கருவேலம்பிசின் இவை வகை-௪-க்கு வராகனெடை-௨௰, இவை

யெல்லாவற்றையும் இடித்துத்தூள்செய்து ஜலத்தை விட்டு ஒருசாம நேரமரைத்து அரைவராகனெடை யுள்ள மில்லை மாத்திரைகளாகச்செய்து வைத்துக் கொள்க.

பிரமாணம்:—மாத்திரை-க, உ, காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—இரத்தமூத்திரரோகம், மூத்திரத்திலுண்டாகும் எரிச்சல், அழலை ஆகியவை தீரும்.

இரத்தமூத்திர அரைஸ்நானம்.

மாதுளைவோடு, மசூரிப்பருப்பு, கருவேலங்காய் ஆலம்விழுது, கம்பு, வெண்சந்தனம், இவை வகை-க-க்குப் பலம்-உ, இவற்றைச்சிதைத்து ஆறுபடி ஜலத்திற்போட்டு நான்குபடியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி ஒரு தொட்டியில்விட்டு ரோகியினை உட்கார வைத்து அரைஸ்நானம் செய்விக்கவேண்டும். இவ்விதம் செய்விப்பதால் இரத்தமூத்திரரோகம், பெரும்பாடு முதலியவை தீரும்.

பீஜரோகச்சிகிச்சை.

பீஜத்திலுள்ள விதைகள் பருத்துப்போவதற்கு அண்டம் பருத்தல் அல்லது ஓதம் என்றுபெயர் இது பலவகையானபடியால் மருந்து, ஆயுதப்பிரயோகம், சூடுபோடுதல் முதலிய பலசிகிச்சைகளுமுண்டு. ஆயினும் இங்கு சில சூக்ஷமமான முறைகளையும் இலகுவான முறைகளையும் எழுதுவாம்.

அண்டரோக உசிதங்கள்.

முள்முருக்கின் வேர்ப்பட்டையை நிழலிலுலர்த்தி இடித்துவஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொள்ளவும்.



பிரமாணம்:—வராகனெடை-க, உ, இதனைக் கொஞ்சம் ஜலத்திற் கரைத்துப் பானஞ்செய்யவேண்டும். அவசியமானால் கொஞ்சம் சர்க்கரையும் சேர்த்துக்கொள்ளலாம். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகித்துவரின் அண்டவாதம், பீஜவீக்கம் ஆகியவை தீரும். வியாதி நாட்பட்டதாயிருந்தால் தொடர்ச்சியாக நாற்பதுநாள் சாப்பிடவேண்டும். வியாதி தீருகிறவரையில் இடையில் விட்டுவிட்டும் உபயோகிக்கலாம்.

பத்தியம்:—வியாதி கடினமாயிருந்து தேகபலமுமிருந்தால் புளியை நீக்கி உப்பைவறுத்து உபயோகித்துக்கொள்ளவும். இந்த விஷயம் சிகிச்சகர்களின் யுக்தி புத்தி ஆகியவைகளைச்சார்ந்தது.

ஷை வேறு

ஆஸ்விதை வராகனெடை-ரு, இதனைச்சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டுக்காய்ச்சி மூன்றிலொருபாகமாகச் சுண்டினவுடன் இறக்கி வடிகட்டி அதில் பத்து வராகனெடை பசுவின்நெய்யை அல்லது கல்லப்பு நெய்யைவிட்டு இளஞ்சூட்டுடன் நின்றபடியே பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் சிலநாட்கள் செய்துவரின் அண்டவாதம், பீஜவீக்கம், பீஜப்பைவீக்கம், பீஜப்பைவலி ஆகியவை தீரும்.

ஷை வேறு.

பொரித்த சீனக்காரம் பலம்-க, பழையவெல்லம் பலம்-ரு, இவ்விரண்டையும் சேர்த்து இரண்டுமணிநேரமரைத்து நான்கு குன்றிமணியெடையுள்ள மாத்

திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, காலையில் மாத்திரம் ஒருவேளை உட்கொள்ளவேண்டும். அதன்மீது கொஞ்சம் நெய்யையும் சாப்பிடவேண்டும்.

பத்தியம்:-உப்பை அறவே நீக்கவேண்டும். ரொட்டிசுட்டு இடித்துத்தூள்செய்து அதில் கொஞ்சம் நெய்யையும் சர்க்கரையையும் சேர்த்துச்சாப்பிடவேண்டும். ரொட்டியைத்தவிர வேறு பதார்த்தங்கள் ஆகா.

### அண்டவாத குந்திரிக்கச்சூரணம்.

குந்திரிக்கம், வாய்விளங்கம், பழையசெங்கல், இவற்றின் சூரணம் வகை-க-க்குப் பலம்-த், இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து ஒருமணிநேரமரைத்துச்சீஷாவில் வைத்துக்கொள்க.

பிரமாணம்:—வராகனெடை-கஉ, உ. இதனைப் பத்து வராகனெடை நெய்யிற் குழைத்து உட்கொள்ளவேண்டும். காலையில் ஒருவேளை அல்லது காலைமாலை இரண்டுவேளை சமயோசிதம்போல் உபயோகிக்கவேண்டும். முதல்நாளே வாந்தியாகிவிட்டால் அம்மிக்குழவிபோல் நீண்டு வீங்கியிருக்கும் அண்டவாதம் வீக்கம் வடிந்து சரிப்பட்டுப்போகும்.

### பீஜப்புண்கமேலா எண்ணெய்.

கமேலாமா தேவையான அளவு, இதனை எள்ளெண்ணெயிற் குழைத்து பீஜத்தின் மீதுள்ள புண்ணின் மேற்போட்டுவர அது ஆறிக்குழி தூர்ந்துபோம்.



சிலருக்கு பீஜப்பையின்மேற் புண்கண்டு பீஜத்தின் விதையின் மேற்சவ்விலும் பற்றிப்போவதுண்டு. அவ்வித புரைப்புண்களுக்கும் இதனை மெல்லிய சீலைத்துண்டில் நனைத்துப்புரையிற் செலுத்திவைத்து வருவதனாலும் சதைவளர்ந்து குழிதூர்ந்துபோம். இது பீஜப்புண்களையாற்றுவதில் மிகவும் சிறந்தது.

### பீஜப்புண் பொடி.

காடுக்கொள்பருப்பைப் பொடித்துத்தூள்செய்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு பீஜத்தின்மீதுள்ள புண்களின் மீது தூவிவருவதனால் அதி சீக்கிரம் ஆறிப்போம்.

### பீஜவீக்க ஒற்றிடம்.

முள் முருக்கம்பூ பலம்-உ, இதனை ஒருபடி ஜலத்திற்போட்டு அரைப்படியாகச்சுண்டவைத்து அந்த ஜலத்தைப்பீஜத்தின் மீது தாரையாகவிட்டுக்கழுவி முன் வேகவைத்த பூவை அடையாகத்தட்டிப் பீஜத்தின்மீது வைத்துக்கட்டவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்யின் பீஜவீக்கம், அதனாலுண்டாகும் வேதனை ஆகியவைகள் தீரும்.

### குறிப்பு.

மேற்கண்ட ஜலத்தைத்தக்கம்பிளித்துணியில் நனைத்து ஒற்றிடமிடலாம். முன் வேகவைத்த பூவை மெல்லிய வஸ்திரத்தில் முடிந்துகொண்டு இளஞ்சூடாக ஒற்றிடமிடலாம் எவ்விதமாயினும் சமயோசிதம்போல உபயோகித்தால் பீஜங்களின்வீக்கம், அங்குண்டாகும் வேதனை ஆகியவை தீரும். பீஜவீக்கத்திற்கு முள் முருக்கம்பூ மிகவும் சிறந்தது.

பீஜவீக்கத்திற்கு.

ஒட்டை இலத்தி இரண்டுபங்கு, மஞ்சள்தூள் ஒருபங்கு. இவ்விரண்டையும் சேர்த்தரைத்துக்கொஞ்சம் ஜலத்திற் கரைத்துக்காய்ச்சிக் குழம்புப்பதத்தில் இளஞ்சூட்டுடன் பீஜங்களின் மீதுபற்றிடவேண்டும். இவ்விதம் சிலதடவைகளின் செய்யின் பீஜவீக்கம், பீஜவலி, முதலிய வேதனைகள் தீரும்.

ஷை வேறு.

பேரீச்சங்காய் விதையை இடித்துத் தூளாக்கி வஸ்திரகாயஞ்செய்து கொள்ளவேண்டும். இந்தத் தூள் மூன்றுபங்கு, துத்திவிதைச் சூர்ணம் ஒருபங்கு, இவ்விரண்டையுங்கலந்து கொஞ்சம் காடி சேர்த்துக்கொதிக்கவைத்துப் பீஜத்தின்மீது பற்றிடவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்துவரின் கல்லைப்போல் கெட்டிப்பட்ட பீஜவீக்கம் கரைந்துபோகும். அதனாலுண்டான, வலி, வேதனை ஆகியவை தீரும்.

ஷை வேறு.

மஞ்சள்தூள் தேவையான அளவு, இதனை முட்டை வெள்ளையம்புலியில் குழைத்து பீஜத்தின் மீது பற்றிடவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்யின் பீஜத்தின் மீது, அடி, உதை, குத்து முதலியவற்றாலுண்டான நோவு முதலியவை தீரும். எவ்விதமாயினும் பீஜத்தின் மீதுண்டான ஊமைக்காயம், தாபிதம் முதலியவைகளுக்கு மேற்படிபற்று சிறந்தது.

ஷை வேறு.

நற்சீரகம் இரண்டுபங்கு, மிளகு ஒருபங்கு, இவ்விரண்டையும் வெண்ணெய் போலரைத்துக்காடியிற் கலந்து கொதிக்கவைத்து இளஞ்சூட்டுடன் பீஜத்தின் மீது பூசிவரக்கல்லைப்போல் கெட்டியாயிருக்கிற பீஜவீக்கங்கள் தீரும். அவற்றாலுண்டாகும் வேதனை, வலி முதலியவைகளும் தீரும்.



ஷை வேறு.

சீரகச்சூர்ணம், தேன், ஆட்டுப்பித்து நீர் இவையெல்லாவற்றையும் சமனாகச்சேர்த்து பீஜத்தின் மீது பற்றிடவேண்டும். இவ்விதம் செய்துவருவதால் பீஜவீக்கம் கரைந்து அதனாலுண்டாகும். வேதனை முதலியவை தீரும்.

நாபியுசிதம்.

ஓமச்சூரணம் தேவையான அளவு. இதனை வழமைக்கு விரோதமாக உப்பியிருக்கிற நாபியின்மீது பூசி அரையணு அகலமுள்ள சயத்துண்டை அதன்மீது வைத்து இறுக்கிக்கட்டிவிடவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்துவரின் உப்பியிருக்கிற நாபி சுருங்கிவழமைபோல் சரிப்பட்டுவிடும்.

பீஜாரணநீர்.

கருவேலம்பட்டை பலம்-௪, இதனை நையச்சிதைத்து இரண்டாழாக்கு ஜலத்திற்போட்டு ஒரு ஆழாக்கு ஜலமாகச்சுண்டவைத்து இறக்கி வடிகட்டிப் பீஜத்தின் மீதுள்ளரணங்களின் மேல்விட்டுக் கழுவிவருவதால் அவை சீக்கிரம் ஆறுவதற்கேதுவாம்.

பீஜச்சோறிக்கட்டு.

கஞ்சா இலை பலம்-௨, உலர்ந்ததானால் பலம்-௧. இதனைக் காற்படி ஜலத்திற்போட்டுக்காய்ச்சி, அரைப்

பாகமாகச் சுண்டினபின் இறக்கி வடிகட்டித் திப்பியைத் தனியே வைத்துக் கொள்ளவும். அந்த ஜலத்தைவிட்டுப் பீஜத்தைக்கழுவவேண்டும்; முன் இலையை அரைத்து அடையாகத்தட்டிப் பீஜத்தின்மீதுவைத்துக் கட்டவேண்டும். இப்படிச் சிலதடவைகள்செய்யின் பீஜத்தின்மீதுள்ள சொறி, பீஜத்தின்மீதுள்ள யானைச்சொறி, பீஜத்தின்வீக்கம், அந்த்ர வேதனை முதலியவைதீர்ந்து நல்ல நித்திரையுண்டாகும்.

### மேற்படி வேறு

ஆட்டுப்புழுக்கையை எரித்துச்சாம்பலாக்கி வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவேண்டும். இந்தச் சாம்பல் ஒருபங்கு, குராசானிஓமம் ஒருபங்கு. இவ்விரண்டையும் ஜலம்வார்த்து வெண்ணெய்போலரைத்துக் கொஞ்சம் ஜலத்தைச்சேர்த்துக் கொதிக்கவைத்துப் பீஜங்களின்மீது பற்றிடவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்யின் அண்டச்சொறி, அண்டவீக்கம், அண்டவேதனை ஆகியவை தீரும்.

### மேற்படி வேறு.

தேற்றான்பழவிதை இதனை நறுக்கித் தாளிச்சாற்றைவிட்டு வெண்ணெய்போலரைத்துப் பீஜங்களின்மீது பற்றிடவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்யின் பீஜச்சொறி, பீஜவலி ஆகியவை தீரும்.

### குறிப்பு.

தேற்றாம்பழத்தைச் சிலர் வாந்திப்பழமென்றுஞ் சொல்லுகிறார்கள். வாந்திக்கு உபயோகப்படுத்தும் பழத்தின்விதைதான் இங்கு வேண்டியது.



### மேற்படி வேறு.

ஆமணக்கு வேர்த்தோலைக் காடிவிட்டுவெண்ணெய்போலரைத்துக் கொஞ்சம் காடியைச்சேர்த்துக்கொதிக்கவைத்து இளஞ்சூடாகப் பீஜத்தின்மீது பற்றிடவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்யின் அண்டச்சொறி, பீஜவீக்கம், பீஜவாயு ஆகியவை தீரும்.

### ஷை வேறு.

குட்டிக்கிளா வேர்த்தோலைக்காடி விட்டரைத்துக்காடியிற்குழப்பிக் கொதிக்கவைத்து இளஞ்சூடாயிருக்கும்போது பீஜங்களில் பற்றிடவேண்டும். இவ்விதம் தினம் இரண்டுமூன்று தடவைகள் செய்துவரின் பீஜவீக்கம், பீஜவலி ஆகியவை தீரும்.

### ஷை வேறு.

கையாந்தகரை, எலிப்புழுக்கை, அம்மம்பூண்டிலை அல்லது குப்பைமேனியிலை இவை வகை-க-க்குப் பலம்-உ, செம்பைவிதை பலம்-ரு.

செய்முறை:—செம்பை விதையைப்பொடித்து மற்ற இலைகளையும் சேர்த்து வெண்ணெய்போலரைத்து அவசியமானால் கொஞ்சம் ஜலமும்வார்த்து பீஜத்தின் மேற்பற்றிடவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்துவரின் பீஜவீக்கம், பீஜவலி ஆகியவை தீரும்.

வேறு ஸ்தானங்களிலுள்ள வீக்கத்தின் மீது இதனைப்பூசிவர அந்த வீக்கமும் வாடிவற்றிப்போம்.

ஷை வேறு.

துவரம் பருப்பைத் தண்ணீர்வார்த்து வெண்ணெய் போலரைத்துச் சிறுபிள்ளைகளின் பீஜத்தின் மேற்பூசி வரச் சிறுபிள்ளைகளின் அண்டவாதம் தீரும்.

ஷை வேறு.

உலர்ந்த கஞ்சா பலம்-க, இதைச் சன்னமாக இடித்து மூன்று ஆழாக்கு ஜலத்திற் போட்டு, ஆறுமணி நேரம் ஊறவைத்து வடிகட்டித் திப்பியைத் தனியே வைத்துக்கொள்ளவும். இந்த ஜலத்தில் பீஜம் முழுவதும் அமிழ்ந்திருக்கும்படி சகிக்கக்கூடியவரையில் வைத்துக்கொண்டிருக்க வேண்டியது. பிறகு முன் எடுத்த திப்பியை அல்லது வேறு கஞ்சா இலையை அரைத்துப் பில்லை செய்து பீஜத்தில் வைத்துக் கட்டவேண்டியது. இவ்விதம் சிலதடவைகள் செய்யின் பீஜவீக்கம், பீஜவேதனை ஆகியவை நீங்கி நல்ல நித்திரையுண்டாகும்.

ஷை வேறு.

மசூரிப்பருப்பு, மாதுளம்பழஓடு இவை வகைக்குச் சமனெடை. இவற்றைத் தண்ணீரில் போட்டு வேகவைத்து வெண்ணெய் போல் வெந்தபதத்தில் அரைத்து அடைபோல் தட்டிப் பீஜத்தின் மீது வைத்துக் கட்டவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்யின் பீஜத்தில் கூட்டினுண்டான வீக்கம், பீஜத்தின் நோவு ஆகியவை தீரும்.

ஷை வேறு.

ஆமணக்குப்பருப்பை வெண்ணெய் போலரைத்து பீஜத்தின்மீது தடவிவரவேண்டும். இவ்விதம் அடு



த்தடுத்துச் சிலதடவைகள் செய்துவரின் பெருத்திருக்கிற பீஜம் சிறுத்துப்போம்.

மேற்படி வேறு.

மாசக்காய்ச்சூரணம், அமுக்குராக்கிழங்குச்சூரணம் இவ்விரண்டையும் கலந்து காடியை அல்லது தண்ணீரைவிட்டு வெண்ணெய் போலரைத்துக் கொஞ்சம் ஜலத்தில் அல்லது காடியில் கலந்து கொதிக்க வைத்துக் குழம்புப்பதத்தில் இளஞ்சூடாயிருக்கும்போது பீஜத்தின் மீது பற்றிடவேண்டும். இவ்விதம் தினம் இரண்டுமூன்று தடவைகள் செய்துவரின் அண்டவாத வீக்கம், அண்டவாயு ஆகியவை தீரும்.

ஷை வேறு.

கிச்சிலிக்கிழங்கைத் தண்ணீர்வார்த்து வெண்ணெய் போலரைத்துக் கொஞ்சம் ஜலத்திற் கரைத்துக் கொதிக்க வைத்துப் பீஜத்தின் மீதுபூசி வெற்றிலையை வைத்துக்கட்டிவிடவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்துவரின் பீஜவீக்கம், பீஜவாயு முதலியவை தீரும்.

ஷை வேறு.

மருவின்சமூலத்தை இடித்துப் பிறகு அம்மியில் வைத்து வெண்ணெய் போலரைத்து, அடை [illegible] செய்து பீஜத்தின்மீது வைத்து அதன்மீது [illegible] லையை வைத்துத் துணியால் கட்டிவிடவேண்டும். இவ்விதம் அடுத்தடுத்துச் சிலதடவைகள் செய்துவரின், குளிர்ச்சி சம்பந்தமாயுண்டான பீஜவீக்கம், அது சம்பந்தமாயுண்டான நோவு முதலியவை தீரும்.

ஷை வேறு.

குரோசானிஓமம், யவைமா, சுரைக்கொடி, கொத்துமல்லிக்கீரை, பழம்பாசியில், செஞ்சந்தனம் இவைகளைச்சமனெடையாக எடுத்து வெண்ணெய் போலரைத்து பீஜத்தின் மீது பற்றிடவேண்டும். இவ்விதம் சிலதடவை செய்துவரின் உஷ்ணசம்பந்தமான பீஜவீக்கம், அது சம்பந்தமானவலி ஆகியவை தீரும்.

மேற்படி வேறு.

வெந்தயம், ஆளிவிதை, இவ்விரண்டையுந்தூள் செய்து தேனிற்குழைத்து பீஜத்தின்மீது பற்றிட்டு வரச்சீதள சம்பந்தமாயுண்டான பீஜவீக்கம், அண்டவாயு ஆகியவை தீரும்.

ஷை வேறு.

காட்டுவாழைப்பட்டையைபிடித்து அம்மியில் வைத்து ஜலம்வார்த்து வெண்ணெய் போலரைத்து பீஜங்களின்மீது பூசிவர பீஜத்தின் மீதுண்டாகியிருக்கும் வறட்டுச்சொறி, அட்டைச்சொறி ஆகியவை தீரும்.

ஷை வேறு.

திருநீற்றுப்பச்சையிலையை வெண்ணெய் போலரைத்துப்பீஜத்தின்மீது பற்றிட்டு வரப்பீஜவீக்கம், பீஜவலி, ஆகியவை தீரும்.

வாயுரோகச் சிகிச்சை.

வாயுவானது எந்தெந்தஸ்தானத்திற் பற்றி நிற்கிறதோ அந்தந்த ஸ்தானத்தின் பேரைச்சுட்டி வழங்குவது வைத்தியசாஸ்திர முறை. கீல்களைப்பற்றி நின்றால் கீல்வாயு, கீல்வாதம் என்றும், விரல்களைப்பற்றி



நின்றால் அங்குலிவாதமென்றும், தோட்பட்டையைப்பற்றி நின்றால் தோள்வாதமென்றும், முதுகைப்பற்றி நின்றால் முதுகுவாதமென்றும், இடுப்பைப்பற்றி நின்றால் அரைவாதம் அல்லது சந்துவாதம் என்றும், புட்டத்திலிருந்து குதிகால் வரையிலுள்ள நரம்பைப் பற்றி நின்றால் நரம்புவாதமென்றும் இவ்விதம் அந்தந்த ஸ்தானத்தைப்பற்றிப் பல நாமங்களாகச்சொல்லப்படும். இவற்றிற்குப்பிரதான சிகிச்சை உள்ளுக்கு பேதிக்கு அடிக்கடி கொடுத்து துர்நீர்களை வெளிப்படுத்திப்பிறகுமற்ற சிகிச்சைகளைச் செய்யவேண்டியது. இவ்வித பேதிமுறைகளெல்லாம் நமது அநுபோக வைத்திய நவநீதம் ஒன்பதாம் பாகத்தில் வகைவிவரமாக எழுதப்பட்டிருக்கின்றன. ஆகையால் அவ்வகை முறைகளை நீக்கி சூக்ஷ்மமானவேறு உசிதமுறைகளையும், இலகுவான முறைகளையும் இங்கெழுதுவாம்.

வாயுரோக உசிதமுறைகள்.

கொத்துமல்லிவிதைச்சூரணம் பலம்-௫. சீனிசர்க்கரை பலம்-௫. இவ்விரண்டையுங்கலந்து ஒருமணிநேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு சீஷாவிற்படுத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௫ - கூ. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவேண்டும்.

உபயோகம்:—கீல்வாயு, இடுப்புநோய் ஆகிய தீரும்.

ஷை வேறு.

கசகசா பலம்-௫. இதிலுள்ள கல் முதலியவைகளை நீக்கிச் சுத்திசெய்துஐந்துபலம் சீனிசர்க்கரையை

ச்சேர்த்து நன்றாகமிஸ்ரமித்து வைத்துக்கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—வராகனெடை ௫. ௬, காலைமாலை இரண்டுவேளையும் மென்றுதின்னவேண்டும்.

உபயோகம்:—மார்நோய், இடுப்புவலி ஆகியவை தீரும்.

### கோங்கணி கற்பம்.

முதல்நாள் வாலுழுவையரிசி ஒன்றை விழுங்கவேண்டும்; இரண்டாம்நாள் இரண்டரிசி, மூன்றாநாள் மூன்றரிசி, இவ்விதம் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு அரிசியை அதிகப்படுத்தி நூறு அரிசிவரையில் சாப்பிடவேண்டும்; நூற்றியோராநாள் தொண்ணூற்றொன்பது, அதற்கடுத்தநாள் தொண்ணூற்றெட்டு இவ்விதம் ஒவ்வொருநாளும் குறைத்துக்கொண்டே ஒன்றுவரையில் கொண்டுவந்துவிடவேண்டும். இதனை அதிகப்படுத்தும்போது சூடு அதிகப்பட்டால் அங்கிருந்து குறைத்துக்கொண்டுவரவேண்டும். இவ்விதம் ஒருமுறை செய்வதற்குள் எல்லாவிதக் கில்வாயுகள், எல்லாவித வாயுரோகங்கள், கபரோகங்கள் ஆகியவைகளைப் போக்குவதுமின்றித் தேகசுகத்தைக் காப்பாற்றிவரும். பசிதீபனம் அதிகப்படும்.

### எரண்ட கற்பம்.

ஆமணக்கம்பருப்பொன்றை முதல்நாள் விழுங்கிவிடவேண்டும்; இரண்டாநாள் இரண்டு பருப்பையும் மூன்றாநாள் மூன்றுபருப்பையும் இவ்விதம்தினம் ஒவ்வொருபருப்பாக ஏழுபருப்புவரையில் அதிகப்படுத்தவேண்டும். எட்டாம்நாள் ஆறுபருப்பையும், ஒரு



ன்பதாநாள் ஐந்துபருப்பையும் விழுங்கவேண்டும். இவ்விதம் தினம் ஒவ்வொன்றாகக் குறைத்துக்கொண்டே ஒன்றுவரையில் கொண்டுவந்து விடவேண்டும். இதனால் சிலருக்குவாந்தியுண்டாகும்; பேதியுமாகும். ஆகையால், தேகசுபாவம்தெரிந்து அதிக ஜாக்கிரதையாக உபயோகிக்கவேண்டும். இப்படிச் செய்வதால் கைகால்பிடிப்பு, சுபாவமாயுள்ள மலபந்தம், அடிக்கடியுண்டாகும் குன்மரோகம் முதலிய ரோகங்களை நன்றாகக் கண்டிக்கும்.

### வாயு உசிதம்.

சிறுகுட்டிவிளாவேரை எரித்துக்கரியாக்கிப்பொடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொள்ளவேண்டும். வேளையொன்றிற்கு இதில் அரை வராகனெடைவீதம் மூன்று வராகனெடை நெய்யிற்குழைத்துச் சாப்பிடவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகித்துவரின் இடுப்புவலி, இடுப்புப்பிடிப்பு ஆகியவைகளைக்கண்டிக்கும்.

### மேற்படி வேறு.

செம்பைவிதையைச்சூரணித்து வைத்துக்கொள்ளவேண்டும். இதில் வேளையொன்றிற்கு அரை வராகனெடைவீதம் மூன்றுவராகனெடை தேனில் அல்லது நெய்யிற்குழைத்துச் சாப்பிடவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் எல்லாவித வாயுரோகங்களும் தீரும்.

### மேற்படி வேறு.

கசகசாத்தோல் ஐந்துவராகனெடைமுதல் பதினைந்துவராகனெடைவரையில் உபயோகிக்கலாம். இ

தனைச்சிதைத்து இரண்டொருஆழாக்கு ஜலத்தில் ஆறுமணிநேரம் ஊறவைத்து இறுத்துப் பானஞ்செய்யவேண்டும். நாள்தோறும் கிரமேணுவாக அதிகப்படுத்தியும் வரவேண்டும். போதையுண்டாகாமலிருக்கவேண்டும். போதையுண்டானால் பிரமாணம் அதிகமென அந்த அளவைக் குறைத்துவிடவேண்டும். இதன்பிரமாணம் தேககபாவத்திற்குத் தகுந்தபடி வித்தியாசப்படுமாகையால் தாம் தாமே தம்தம் அனுபவத்தில் இதன்பிரமாணத்தை நிச்சயித்துக்கொள்ளலாம். இந்தப் பிரமாணப்படி ஜலத்தைப் பானஞ்செய்துவருவதால் தேகத்தின் எல்லா அவயவங்களிலுமுண்டாகும் வாயுரோகங்கள் தீரும். இது பார்வைக்குச் சுலபமாயிருப்பினும் அதிகப் பிரயோசனமானது.

மேற்படி வேறு.

கப்பிவெடியுப்புத்தூள் வராகனெடை-௨. வாதுமைப்பிசின்தூள் குன்றிமணியெடை-௬, தேன் வராகனெடை-௫. இம்மூன்றையுங்கலந்து காலையில் ஒருவேளை உட்கொள்ளவேண்டும். முன்னிரண்டு சரக்குகளையும் நல்லெண்ணெயிற்குழைத்து நோவுள்ளவிடத்திற் பூசவேண்டும். இப்படிச்செய்வதால் இடுப்புவலி, கைகால்நோவு முதலியவை தீரும்.

ஷை வேறு.

கொப்பரைத்தேங்காய் மேற்றோலை நீக்கிப் பலம்-௨. கற்கண்டு பலம்-௨. இவ்விரண்டையும் சேர்த்துக் கொஞ்சம் கொஞ்சமாக மென்று தின்னவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் சிலநாட்கள்



தொடர்ச்சியாகச்செய்துவரின் இடுப்புவலி, இடுப்புப்பிடிப்பு, இடுப்பின்தூர்ப்பலம் ஆகியவை நீங்கும்.

வீரியக் கஷாயம்.

சோம்பு, காசினிவிதை, மணித்தக்காளிவற்றல், மயிர்ச்சிக்கி இவைவகை-௧-க்குவராகனெடை-௨. சோம்புவேர் (இது அகப்படாவிட்டால் இதனிடை சோம்பைச் சேர்த்துக்கொள்ளவும்.) காசினிவேர்த்தோல், அதிமதுரம், கோரைவேர்ப்பட்டை இவை வகை-௧-க்கு வராகனெடை-௨௰, சிமைச்சாமந்திப்பூ வராகனெடை-௫, குல்கந்து பலம்-௧.

செய்முறை:—முன்சொன்ன சரக்குகளை நையச்சிதைத்து மூன்று ஆழாக்கு ஜலத்திற்போட்டு ஒரு ஆழாக்காகச் சுண்டவைத்து வடிகட்டி அதில் குல்கந்தைப்போட்டுக்கரைத்து மறுபடியும் வடிகட்டிப்பானஞ்செய்யவேண்டும். இதனால், இரண்டொருதடவை மலம்போகும். அதிகமாய் மலம்போனால் ஒருவேளை போதுமானது. அப்படியாகாவிட்டால் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவேண்டியது.

உபயோகம்:—நீல்வாயு, மேகவாயு, உஷ்ணவாயு முதலியவாயுரோகங்கள் தீரும்.

ஷை வேறு.

அத்திப்பட்டை, மேற்றோல் சீவினசுக்கு, கொத்துமல்லிவிதை இவை வகை-௧-க்குப் பலம்-௨௰, இவற்றை நன்றாகச்சிதைத்துத் தூளாக்கிவைத்துக்கொள்ளவேண்டும். இதில் ஒருபலம் எடுத்து மூன்று ஆழாக்கு ஜலத்திற்போட்டு ஆறுமணிநேரம் ஊறவைத்துக்

காய்ச்சி நான்கிலொருபாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டிப் பானஞ்செய்யவும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் இடுப்புவலி, இடுப்புப்பிடிப்பு முதலியரோகம் தீரும்.

## சில்வாயுச்சூரணம்.

ஆளிவிதை, ஓமம், கருஞ்சீரகம், வெந்தயம், இவற்றின் சூரணம் வகை-க-க்குப் பலம்-க, இவையெல்லாவற்றையும் மிஸ்ரமித்துக் கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-உ, ௩. இதனை வாயிற் போட்டுக்கொஞ்சம் தண்ணீர்குடித்து விழுங்கி விடவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:-சில்வாயு, கபசம்பந்தமான ரோகங்கள், வாதசம்பந்தரோகங்கள் ஆகியவை தீரும். இது அதிகப்பிரயோசனமுள்ளது இதற்கு தேகரக்ஷகன் என்று மறுபெயருமுண்டு.

## ஷை வேறு.

வாலுழுவையரிசி, தகரைவிதை அல்லது வேர்ப்பட்டை, கார்போகரிசி, ஆளிவிதை இவற்றின் சூரணம் வகை-க-க்குப் பலம்-க, இவையெல்லாவற்றையும் மிஸ்ரமித்துக் கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௩, க. இதனை வாயிலிட்டுக்கொஞ்சம் தண்ணீர்குடித்து விழுங்கி



விடவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரவும்.

உபயோகம்:—சீதளசம்பந்தமான வாயுரோகங்கள் தீரும்.

## வாயுசரிஞ்சான் சூரணம்.

சரிஞ்சான் மிசிரிச்சூரணம் வராகனெடை-க0, சூக்குசிலாவாரைச்சூரணம் வராகனெடை-எ, மஞ்சட்கடுக்காய்த்தோற் சூரணம் வராகனெடை-௬, சுத்திசெய்த சிவதைவேர்ச்சூரணம் வராகனெடை-௩, மேற்றோல் நீக்கின சாதுமைப்பருப்பு வராகனெடை-௩. உலர்ந்த மருதோன்றியிலைச்சூரணம் வராகனெடை-உ. குங்குமப்பூ வராகனெடை-வ, சீனிசர்க்கரை வராகனெடை-கரு.

செய்முறை:—குங்குமப்பூவைக் கல்வத்திலிட்டுக்கொஞ்சம் பன்னீரை அல்லது தண்ணீரைவிட்டு வெண்ணெய் போலரைத்து சாதுமைப்பருப்பைச் சேர்த்துமசிய அரைத்து மற்ற சூரணங்களையும் சர்க்கரையையும் ஒன்றாகக்கலந்து அதிற் சேர்த்து ஒருமணி நேரமரைத்து நன்றாய் மிஸ்ரமானபின்பு சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-[illegible] ரு. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்க[illegible]ந்த நாளைக்குள் தேகத்திலுள்ள துர்நீர்கள் பக[illegible]ப்பட்டுப்போகும்.

உபயோகம்:—சில்வாயுகளைக்கண்டிக்கும். அசுத்தமாகங்களைப் பேதிமூலம் வெளிப்படுத்தும்.

## கீல்வாயு சித்திரமூல மாத்திரை.

கரியபோளத்தூள் வராகனெடை-க௰, மஞ்சட்சிக்காய்த்தோற் சூரணம் வராகனெடை-ரு, சுத்திசெய்த சிவதை வேர்ச்சூரணம், காஞ்சான் மிளிச்சூரணம், மைசாக்ஷித்தூள், இவை வகைக்-க-க்கு வராகனெடை-உ, மேற்றோல் சீவினசுக்கு, கொடிவேலிவேர்ப்பட்டை, கடுகு, இந்துப்பு, உலர்த்தின ஆற்றுத்தும்மட்டிக்காய்ச்சதை, மஞ்சிஷ்டி, இவற்றின் சூரணம் வகைக்-க-க்கு வராகனெடை-க, ஓமம், அரிசித்திப்பிலி, மிளகு இவற்றின் சூரணம்வகைக்-க-க்கு வராகனெடை-௩, சீனிசர்க்கரை அல்லது கற்கண்டுத்தூள் வராகனெடை-ரு.

செய்முறை:—மேற்கண்ட சரக்குகளையெல்லாம் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு ஒருநாழிகையரைத்து எல்லாம் நன்றாக மிஸ்ரமானபின்பு தண்ணீரைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுசாம நேரமரைத்து நான்கு குன்றிமணியெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்திச்சீசாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, ௩. தேகபலம், வியாதிபலம் ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோல் உபயோகிக்கவேண்டியது. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—கீல்வாயு, வாயுரோகங்கள் ஆகியவைகளைக்கண்டிக்கும். மலத்தை இளக்கும். அதிகமாக மலம்போகவேண்டுமானால் மாத்திரைகளை அதிகப்படுத்திக்கொடுக்கவும். இரண்டொருவேளை தே



கபாவத்தைத்தெரிந்து பிறகு சமயோசிதம்போல் உபயோகிக்கவேண்டும்.

## கீல்வாயு மைசாக்ஷி மாத்திரை.

சுத்திசெய்த மைசாக்ஷி பலம்-உ, பனைவெல்லம் பலம்-ச.

செய்முறை:—மைசாக்ஷியைக் கல்வத்திலிட்டு வேப்பிலைக்கஷாயம் கொஞ்சம்விட்டு வெண்ணெய் போலரைத்துப்பிறகு வெல்லத்தையும் சேர்த்து ஒருசாம நேரமரைத்து ஒரு வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, உ மாத்திரையைக் கொஞ்சம் வெந்நீரிற்கொள்ளவேண்டும். காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம். ஆரம்பத்தில் பேதிக்குக்கொடுத்து துர்மலத்தை நீக்கிப்பிறகு இதனை உபயோகிக்கவேண்டும்.

உபயோகம்:—கீல்வாயு, தொடைவாயு, முதுகுவாயு, முதலிய பலவாயுரோகங்கள் தீரும்.

## கீல்வாயு மாத்திரை.

தண்ணீர்விட்டான் கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, அரிசித்திப்பிலி, ஓமம், கண்டந்திப்பிலி இவற்றின் சூரணம் வகைக்-க-க்கு வராகனெடை-ரு; சதாவரி, சித்திரமூலவேர்ப்பட்டை, மேற்றோல் சீவினசுக்கு அமுக்குராக்கிழங்கு இவற்றின் சூரணம் வகைக்கு வராகனெடை-உ, பனைவெல்லம் வராகனெடை-கரு.

செய்முறை:—சூரணங்களையெல்லாம் கலந்து கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்து எல்லாம் நன்றாக மிஸ்ரமானபின்பு வெல்லத்தையும் சேர்த்துத் தண்ணீரைச்சிறுகச் சிறுகவிட்டு இரண்டுஜாம நேரமரைத்து ஒரு வராகனெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, உ. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

அநுபானம்:—நெய், தேன், பனைவெல்லம், சீனி சர்க்கரை ஆகியவைகளாம்.

உபயோகம்:—ஆரம்பத்தில் பேதிக்குக்கொடுத்து தேகத்திலுள்ள அசுத்தமாசுகளை நீக்கிப்பிறகு இதை உபயோகிக்கவேண்டும். கீல்வாயு, இடுப்புவலி, இடுப்புப்பிடிப்பு, மூலரோகம் ஆகியவை தீரும்.

சர்வாங்கவாயு மாத்திரை.

மருசட், கடுக்காய்த்தோல், கடுக்காய்ப்பிஞ்சு, சோம்பு, மிளகு, அரிசித்திப்பிலி, கழற்சிப்பருப்பு, கருஞ்சீரகம், இவற்றின் சூரணம் வகைக்குப் பலம்-க, விதை நீக்கின திராக்ஷைப்பழம் பலம்-ரு.

செய்முறை:—எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து அரைமணிநேரம் அரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு திராக்ஷைப்பழத்தையும் சேர்த்து இரண்டுஜாம நேரமரைத்து ஒரு வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, உ. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.



அநுபானம்:—தேன், நெய், சர்க்கரை முதலியவைகளாம்.

உபயோகம்:—சர்வாங்கத்திலுமுள்ள வாயுரோகம், வலிகள் ஆகியவைகளைக்கண்டிக்கும்.

பத்தியம்:—தேகபலம், வியாதிபலம் ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோல் சமயோசிதமாகப் பத்தியமேற்படுத்தவும். வியாதி இலகுவாயிருந்தால் பத்தியமில்லாமலே உபயோகிக்கலாம்.

கீல்வாதலிங்க மாத்திரை.

சுத்திசெய்த ஜாதிலிங்கம், விரலிமஞ்சள், அஞ்மோதாஓமம், அக்கிராகாரம், உலர்த்தின வேப்பிலை, உலர்த்தினஓமம், உலர்த்தின வெண்ணொச்சியிலை, ஆற்றுத்தும்மட்டிவேர்த்தோல், கொள்ளுக்காய் வேளைவேர், தகரைவேர், மிளகு, மலைவேப்பம்வேர்ப்பட்டை, எருக்கின்வேர்ப்பட்டை, சுத்திசெய்த சேராங்கொட்டை, இவற்றின் சூரணம் வராகனெடை-உ௰, பனைவெல்லம் பலம்-ரு௰.

செய்முறை:—இலிங்கத்தை நேர்மையாகப்பொடித்து மற்றச் சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து அதனுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும். சேராங்கொட்டையைக் கல்வத்திலிட்டு முகம் கண் முதலியவைகளில் தெறிக்காமல் அதிக ஜாக்கிரதையுடன் நன்றாக நசியவரைத்து முன் சூரணங்களை அதிற்சேர்த்து ஒருமணிநேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு வெல்லத்தையும்சேர்த்து இரண்டுஜாமம் அரைத்து அரை வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, உ. காலை மாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

அநுபானம்:—நெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—கீல்வாயு, கீல்பிடிப்பு, கிரந்திமேகம், விரணமேகம் ஆகியவை தீரும்.

பத்தியம்:—புளிப்புவஸ்துக்கள், வாயுபதார்த்தங்கள், இறைச்சி, உப்பு ஆகியவைகளை நீக்கவேண்டியது, பாற்சாதம், கோதுமைரொட்டி ஆகியவைகளை உபயோகிக்கவேண்டியது. உப்பைச்சேர்க்காமல் தனக்கிஷ்டமான வேறு ஆகாரங்களை உபயோகிக்கலாம்.

## குறிப்பு.

இதில் சேராங்கொட்டைக்குப்பதிலாக ஒரு வராகனெடை சேராங்கொட்டைக் குழித்தைலத்தைச் சேர்த்துக்கொள்வது உத்தமம்.

## கீல்வாத லிங்கசூத மாத்திரை.

சுத்திசெய்த ஜாதிலிங்கம், சுத்திசெய்த இரசம், அபின் இவை வகை-க-க்கு வராகனெடை-க ஓமச்சூரணம் வராகனெடை-உ௰. சேராங்கொட்டைக் குழித்தைலம் வராகனெடை-உ. பழைய புனவெல்லம் வராகனெடை-உ௰. இஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—லிங்கத்தையும் இரசத்தையும் சேர்த்து இரசம் மடிகிறவரையிலரைத்துச் சேராங்கொட்டைத் தைலத்தையுஞ்சேர்த்து அரைத்து, நன்றாக இரசம் மடிந்தபின்பு மற்றச் சூரணங்களைச்சேர்த்து அரைமணிநேரமரைத்து எல்லாம் நன்றாகமிஸ்ரமானபின்பு வெல்லத்தையும் சேர்த்தரைத்துப் பிறகு இஞ்சிச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்து நான்கு குன்றிமணியெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.



பிரமாணம்:—மாத்திரை-க. உ. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

அநுபானம்:—நெய், தேன் முதலியவைகளாம்.

உபயோகம்:—கீல்வாயு, வேறுபலவகை வாயுக்கள், மேகவாயு, விரணமேகம் ஆகியவை தீரும்.

பத்தியம்:—மேற்கண்டவைகளேயாம்.

## கீல்வாத அபின் மாத்திரை.

அபின், கொடிவேலிவேர்ப்பட்டைச்சூரணம் இவை வகை-க-க்கு வராகனெடை-உ. காஹுவிதை, ஓமம் இவற்றின்சூரணம் வகை-க-க்கு வராகனெடை-௰, இஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—அபினியைக் கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு வெண்ணெய்போலரைத்து மற்றச் சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து அதிற்சேர்த்து மேற்படிசாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்து இரண்டு குன்றிமணியெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்திச்சீஷாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

அநுபானம்:—சர்க்கரை, வெல்லம் ஆகியவைகளாம்.

உபயோகம்:—கீல்வாயு, அங்குலிவாதம், நரம்புவாதம் முதலிய பலவாதரோகங்கள் தீரும்.

பத்தியம்:—புளி, புகை, பெண் ஆகியவைகளை நீக்கவும்.

கீல்வாத ஏலக்ட் அல்வா.

மேற்சொல்லிய சுக்குச்சூரணம், ஆமணக்கம்பருப்பு இவை வகை-க-க்குப் பலம்-ரு. சீனிசர்க்கரை, நெய் இவை வகை-க-க்குப் பலம்-அ. பசுவின்பால் ஆழாக்கு-ரு.

செய்முறை:—ஆமணக்கம்பருப்பை வெண்ணெய்போலரைத்து செம்பிற்போட்டுச் சிவக்கவறுத்துப் பாலை அதில்விட்டுக் காய்ச்சிக் கிளறிக்கொண்டேயிருந்து குழம்புப்பதமாகுங்கருணத்தில் சுக்குத்தூளையும் சர்க்கரையையும் சேர்த்து நன்றாகக் கிளறி நெய்யை மாகப்பிட்டுச் செம்மையாக மிஸ்ரமித்துக் கீழிறக்கிப்பின் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவேண்டியது.

பிரமாணம்:—வராகனெடை-க, உ. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம். இன்னும் வியாதிபலம் தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி அதிக அளவாகவும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—இடுப்புவலி, இடுப்புப்பிடிப்பு முதலிய பலவாயுரோகங்கள் தீரும்.

கீல்வாயு காஞ்சான் மாஜூன்.

காஞ்சான் சூரணம் வராகனெடை-க. குச்சிகாம்பு முதலியவைநீக்கி இடித்துச்சூரணித்த நிலாவாரைச்



சூரணம் வராகனெடை-ரு. மேற்சொல்லிய சுக்கு, கிலக்கடம்பு, நற்சீரகம், அரிசித்திப்பிலி இவற்றின் சூரணம் வகை-க-க்கு வராகனெடை-உ. தேன் பலம்-ரு.

செய்முறை:—தேனைக்காய்ச்சி, நுரைநீக்கி எல்லாச்சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து அதிற்சேர்த்து நன்றாகமிஸ்ரமித்துக் கீழிறக்கி ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-உ, ரு. இதனைச் சாப்பிட்டு மேலேகொஞ்சம் வெந்நீர்பானஞ் செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—கீல்வாயு, மேகப்பிடிப்பு முதலிய பலவாயுரோகங்கள் தீரும்.

இடுப்புநோய்க் கட்டு.

ஆமணக்கம்பருப்பு, லாகூருப்புத்தூள் அல்லது இந்துப்புத்தூள், மைதாலக்கடிச்சூரணம் இவை வகைக்கு வராகனெடை-ரு. பெருங்காயத்தூள் வராகனெடை-கஉ. மைமா அல்லது கோதுமைமா பலம்-ரு. இவையெல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்து அம்மியில்வைத்து ஜலம்வார்த்து வெண்ணெய்போலரைத்து ஒரு அடையாகத்தட்டி ஓட்டில்போட்டு ஒரேபக்கமாக வேகவைத்து எடுத்து நோவுள்ளவிடத்தில்வைத்துக் கட்டவேண்டும். இவ்விதம் இரண்டொருதடவைகள் செய்யின் இடுப்புவலி, இடுப்புப்பிடிப்பு ஆகியவை தீரும்.

## கீல்வாதக் கட்டு.

ஊமத்தனிலையை ஓட்டில்போட்டு வதக்கி நோவுள்ள இடத்தில்வைத்துக் கட்டவேண்டும். மூன்றுமணிநேரம் வைத்திருந்து அதை அவிழ்த்து நீக்கிவிட்டு முன்போல் இலையைவதக்கி முன்போற் கட்டவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் மடக்கிமடக்கிச்செய்துவரின் கீல்வாயு, முழங்கால்வாதம் ஆகியவை தீரும்.

## ஷை வேறு

மேற்படி இலையை அரைத்துக்கொஞ்சம் எண்ணெய்விட்டுச் சூடாக்கிக்கிளறி அடையாகத்தட்டி நோவுள்ள இடத்தில் வைத்துக்கட்டவேண்டும். மூன்றுமணிக்குப்பிறகு அதை அவிழ்த்து நீக்கிவிட்டுமுன்போற் சித்தப்படுத்தி முன்போற் கட்டவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் அடுத்தடுத்துச் செய்யின்கீல்வாயு, முழங்கால்வாயு, கணுக்கால்வாயு, அங்குலிவாதம், இடுப்புநோய் முதலிய பலவாயுரோகங்கள் தீரும்.

## கீல்வாத ஒற்றடம்.

மேற்படி இலையை எண்ணெய்விட்டு வதக்கிப் பொட்டணமாகக்கட்டிக்கொண்டு நோவுள்ள விடத்தில் இளஞ்சூடாக ஒற்றிடவேண்டும். சூடாறிவிட்டால் மறுபடியும் வதக்கிக்கொள்ளவேண்டும். கூடுமானால் அப்போதைக்கப்போது புதிய இலையைவதக்கி ஒற்றிடம்செய்வது சிரேஷ்டம்.

## கீல்வாதக்கட்டு வேறு.

பசுவின் புதியசாணத்தைக் கொஞ்சம் ஜலம்விட்டுக்கரைத்துக் கெட்டிப்பதமாகக்காய்ச்சி அடைதட்டி நோவுள்ளவிடத்தில்வைத்துக் கட்டவேண்டியது. இரண்டுமணிநேரம்சென்றால் அதை நீக்கிவிட்டு மறுபடியும் முன்போல் புதிய சாணத்தைவைத்துக் கட்டவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் அடுத்தடுத்துச் செய்துவரின் கீல்வாயு முதலிய வாதரோகங்கள் தீரும்.



அடையாகத்தட்டிவைத்துக் கட்டக்கூடாதவிடமாயிருந்தால் அந்த ஸ்தானங்களில் முன்போல் சித்தப்படுத்திப்பற்றிடுவதனாலும் குணமுண்டாகும்.

## ஷை கட்டு வேறு.

முன்னுள்ள கள்ளியின்முட்களைநீக்கிவிட்டு அதை இரண்டாகப்பிளந்து ஓட்டில்போட்டு வெதுப்பி நோவுள்ளவிடத்தில் வைத்துக் கட்டிவிடவேண்டும். இருபத்துநான்கு மணிக்கொருதடவை இவ்விதம் செய்துவரவும். இவ்விதம் சிலதடவைகள்செய்யின் கீல்வாதம், முழங்கால்வாதம், அங்குலிவாதம், அரைவாதம் முதலிய வாயுரோகங்கள் தீரும்.

## ஷை வேறு.

மருதோன்றியிலை, ஆமணக்கிலை இவ்விரண்டையும் சமனாகச்சேர்த்து அரைத்து ஓட்டில்போட்டுவெதுப்பி அடையாகத்தட்டி நோவுள்ளவிடத்தில் வைத்துக்கட்டவேண்டும். ஆறுமணிநேரம்சென்றால் அதை நீக்கிவிட்டு முன்போல் புதிதாகச் சித்தப்படுத்தி முன்போற் கட்டவேண்டும். இவ்விதம் சிலதடவைகள்செய்யின் முழங்கால்வாதம், கீல்வாதம், இடுப்புவலி ஆகியவை தீரும்.

கட்டக்கூடாதவிடத்தில் முன்போல் சித்தப்படுத்திப் பற்றிடுவதாலும் குணமுண்டாகும்.

அங்குலிவாதப் பற்று.

பனைமர, துத்திவிதைச்சூரணம் இவ்விரண்டையும் சமனாகச்சேர்த்து ஜலம்வார்த்துவெண்ணெய்போலரைத்து நோவுள்ளவிடத்தில் பற்றிடவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்துவரின் உஷ்ணசம்பந்தமான அங்குலிவாதம் தீரும்.

ஷை வேறு.

பழம்பாசியிலையை வெண்ணெய்போலரைத்து நோவுள்ளவிடத்தில் பற்றிட்டுவர உஷ்ணசம்பந்தமான அங்குலிவாதரோகம் தீரும்.

ஷை வேறு.

ஆட்டாம்புழுக்கையைப் பொடித்துத் தேனிற்குழைத்துப் பற்றிடுவதால் அங்குலிவாதரோகம் தீரும்.

முழங்கால் வாதப்பற்று.

காட்டுமுருங்கைவிதைப்பருப்பை வெண்ணெய்போலரைத்து நோவுள்ளவிடத்தில் பற்றிட்டுவர முழங்கால்வாதம் தீரும்.

காட்டுமுருங்கைவிதை அகப்படாவிட்டால் காட்டுமுருங்கைவிதையை உபயோகிக்கலாம்.

முருங்கைப்பட்டையை வெண்ணெய்போலரைத்துப் பற்றிடுவதாலும் மேற்கண்ட குணங்களுண்டாம்.



கீல்வாதப் பற்று.

சாம்பிராணியைப்பொடித்து ஜலம்விட்டரைத்து நோவுள்ளவிடத்தில் பற்றிட்டுக்கொஞ்சம் தணலில் காய்ச்சவேண்டும். இவ்விதம் செய்வதால் சீதளசம்பந்தமான வாதரோகங்கள் தீரும்.

மேற்படி வேறு.

மைதாலக்கடிச் சூரணத்தை ஜலத்திற்குழைத்துச் சூடாக்கி நோவுள்ளவிடத்தில் பற்றிடவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்யின் முதுகு, தொடைமுதலிய இடங்களிலுள்ள நோவு, பலவகை வாயு ஆகியவை தீரும்.

மேற்படி வேறு

மைதாலக்கடிச்சூரணத்தை முட்டைவெள்ளையிற்குழைத்து நோவுள்ளவிடத்திற்பூசி அதன் மீது மெல்லிய காகிதத்தை ஒட்டவைக்கவேண்டும். மூன்றுமணிநேரம் சென்றபின்பு அதனை வெந்நீரால்கழுவி நீக்கிவிட்டு முன்போற் பற்றிடவேண்டும். இவ்விதம் அடுத்தடுத்துச் சிலதடவைகள்செய்யின் கீல்வாதம் முதலிய பலவாயுரோகங்கள் தீரும்.

மேற்படி வேறு.

பருத்திக்கொட்டையை இடித்து தண்ணீரில்போட்டு நன்றாகவேகவைத்து வெண்ணெய்போலரைத்து நோவுள்ளவிடத்தில் பற்றிடவேண்டும். இவ்விதம் தினம் இரண்டுதடவைகள்செய்துவரின்கீல்வாதம், கணுக்கால்வாதம், அரைவாதம் முதலிய பலவாயுரோகங்கள் தீரும்.

மேற்படி விதையை வேகவைத்து அரைத்து அடையாகத்தட்டி நோவுள்ளவிடத்தில் வைத்துக்கட்டவேண்டும். இவ்விதம் தினம் இரண்டுதடவைகள்செய்துவரின் மேற்கண்டரோகங்கள் தீரும்.

மேற்படி வேறு.

வேப்பங்கொழுந்து, வேப்பம்பட்டையின் உள்ளிருக்கிறசதை ஆகிய இரண்டையும் சமனாகச்சேர்த்து வெண்ணெய்போலரைத்துத் தண்ணீரில் குழைத்துக் குழம்பாகக்கொதிக்கவைத்து நோவுள்ளவிடத்தில் பற்றிட்டுவரக் கீல்வாதம் முதலிய பலவாயு ரோகங்கள் தீரும்.

ஷை வேறு.

ஆற்றலரி இலையை இடித்துத் தண்ணீரில் போட்டு வேகவைத்து வெண்ணெய்போலரைத்து நோவுள்ளவிடத்தில் பற்றிட்டுவருவதாலும் அங்குலிவாதம், கணுக்கால்வாதம், கீல்வாதம் ஆகியவை தீரும்.

மேற்படி வேறு.

ஆட்டாம்புழுக்கைச்சூரணம் இரண்டுபங்கு, யவைக்கோதுமைமா ஒருபங்கு. இவ்விரண்டையுங்கலந்து காடியிற்குழைத்துக் கொதிக்கவைத்துக்கொஞ்சம் நல்லெண்ணெயைவிட்டு மிஸ்ரமித்து நோவுள்ளவிடத்திற் பூசிவரவேண்டும். இவ்விதம் சில தடவைகள்செய்யின் கீல்வாதம் முதலிய பலவாயுரோகங்கள் தீரும்.

மேற்படி வேறு.

குசும்பாவிதையைத் தூள்செய்துகாடியிற்குழைத்து நோவுள்ளவிடத்திற் பூசிவர உஷ்ணசம்பந்தமான அங்குலிவாதம், உஷ்ணசம்பந்தமான கீல்வாதம் ஆகியவை தீரும்.



மேற்படி வேறு.

எள், சீமைச்சாமந்திப்பூ இவை வகை-௧-க்கு வராகனெடை-௩. ஆமணக்குப்பருப்பு வராகனெடை-௧௦ இவையெல்லாவற்றையும் அம்மியில்வைத்து ஜலம்வார்த்து வெண்ணெய்போலரைத்து நோவுள்ளவிடத்தில் பற்றிடவேண்டும். இந்தப் பிரமாணப்படி அவசியமானால் அதிகமாகச் சித்தப்படுத்திக்கொள்ளவேண்டும் தினம் இரண்டுமூன்றுதடவைகள் செய்துவரின் கீல்வாதம், சந்துவாதம், அரைவாதம் முதலியவை தீரும்.

மேற்படி வேறு.

ஆமணக்கம்வேர்த்தோலை வெண்ணெய்போலரைத்து நோவுள்ளவிடத்தில் பற்றிடவேண்டும் இவ்விதம் தினம் இரண்டு அல்லது மூன்றுதடவை செய்துவரின் அங்குலிவாதம், கீல்வாதம் ஆகியவை தீரும்.

ஷை வேறு.

நாட்டுச்சவுக்காரம் ஒருபங்கு, மருதோன்றியிலை ஒருபங்கு- முதலில் மருதோன்றியிலையை அரைத்துப் பிறகு சவுக்காரத்தையும்சேர்த்து நோவுள்ளவிடத்தில் பற்றிடவேண்டும். இவ்விதம் தினம் இரண்டுதடவைகள் செய்துவரின் கீல்வாதம், அங்குலிவாதம் முதலிய வாதரோகங்கள் தீரும்.

மேற்படி வேறு.

மேற்றோல்சீவின சுக்குச்சூரணம் பலம்-௨. சுத்திசெய்த இரசம் வராகனெடை-௧. இவ்விரண்டை

யும் இரண்டொருசாமம் சேர்த்தரைத்து இதிற்கொஞ்சமெடுத்து நோவுள்ளவிடத்தில் வைத்துத் தேய்க்கவேண்டும். இவ்விதம் ஒவ்வொருமணிக்கொருதடவைசெய்துவரின் அங்குலிவாதம், கீல்வாதம், முழங்கால்வாதம் ஆகியவைதீரும். இதனை அதிகமாக அழுத்தித் தேய்க்கலாகாது. அதிகமாகத் தேய்த்தால் எரிக்கமுண்டாகும்.

மேற்படி வேறு.

காட்டுமுருங்கையிலையை அரைத்துத்தண்ணீரிற் குழைத்துக் கொதிக்கவைத்து இளஞ்சூட்டுடன் பற்றிடவேண்டும். இவ்விதம் தினம் இரண்டு மூன்றுதடவை செய்துவரின் பலவித வாயுரோகங்கள் தீரும்.

மேற்படி வேறு

தவசிமுருங்கையிலையை அரைத்து மேற்கண்டபடி செய்வதனாலும் மேற்கண்ட குணங்களுண்டாகும்

ஷை வேறு.

மேற்றோல் சீவினசுக்கு, அமுக்கிராக்கிழங்கு, மருதம்பட்டை இவற்றின் சூரணம் வகை-க-க்குச் சமனெடை, இம்மூன்றையும் ஒன்றாகக்கலந்து தண்ணீர்வார்த்து வெண்ணெய் போலரைத்துக்கொஞ்சம் கொதிக்கவைத்து நோவுள்ளவிடத்தில் பற்றிடவேண்டும். இவ்விதம் தினம் இரண்டுதடவைகள் செய்துவரின் கீல்வாயு, வாயுரோகங்கள் ஆகியவை தீரும்.

ஷை வேறு.

ஓமச்சூரணம் தேவையான அளவு. இதனைத் தேனிற் குழைத்துப்பூசிவரக் கீல்வாயு, வீக்கம் ஆகியவை தீரும்.



ஷை வேறு.

மசூரிப்பருப்பைக்காடியில் ஊறவைத்து வெண்ணெய் போலரைத்துக்காடியிற் குழைத்துக்கொதிக்கவைத்து நோவுள்ளவிடத்தில் பற்றிட்டுவரக் குதிகால்வாயு, உள்ளங்கால் வாயு முதலிய வாயுரோகங்கள் தீரும்.

மேற்படி வேறு.

இலவின் இலையை அரைத்து நல்லெண்ணெயிற் குழைத்துப்பற்றிட்டுவரக் கீல்வாதம், அங்குலிவாதம் ஆகியவை தீரும்.

வாயுரோகப்புகை.

கழற்சியிலையைத்தண்ணீரில் போட்டு வேகவைத்து நன்றாக வெந்தபதத்தில் நோவுள்ளவிடத்தில் முறைப்படி ஆவிபிடித்துவெந்த இலையைப்பிழிந்து மேல் வைத்துக்கட்டவேண்டும். இவ்விதம் தினம் இரண்டுதடவைகள் செய்துவரின் தோட்பட்டை நோவு, முதுகுநோவு ஆகியவை தீரும்.

பத்தியம்:—காற்றுப்படாமல் இருக்கவேண்டியது.

ஷை வேறு.

காட்டுவாகையிலை, வெண்ணொச்சியிலை, காட்டுமுருங்கையிலை அல்லது நாட்டுமுருங்கையிலை இவற்றைத் தண்ணீரில்போட்டு வேகவைத்துத் தேகமுழுவதிலும் ஆவிபிடிக்கவேண்டியது. இவ்விதம் தினம் ஒருதடவை அல்லது இரண்டுதடவை செய்துவரின் குளிர்ச்சி சம்பந்தமான வாயுரோகம், சேர்க்கோவை ஆகியவை தீரும்.

ஷை வேறு.

வெண்ணொச்சியிலை, சதகுப்பை, மருதோன்றியிலை இவையெல்லாம் சமவெடை. இவற்றை ஜலத்திற் போட்டு வேகவைத்துத் தேகமுழுதிலும் ஆவிபிடிக்க கில்களில் கரடுகட்டிப்போதல், கைகால் முதலிய அவயவங்களின்நோவு ஆகியவை தீரும்.

ஆவிபிடிக்கும் முறை.

நோயாளியைப் பிரம்புக்கட்டிலின்மீது படுக்கவைத்துத் தலைதவிரமற்ற விடங்களில் கம்பிளியால் மூடிவிடவேண்டும். கட்டிலைச்சுற்றிலும் கோணி முதலிய உரத்த வஸ்துக்களால் ஆவிபோகாமல் திரைபோல் கட்டிவிடவேண்டும். காய்ச்சின ஜலத்தை ஒரு பாத்திரத்தில்விட்டு கட்டிலின் கீழ்மத்தியில் நோயாளியின் முதுகில் ஆவிபடும் விதமாக்வைக்க வேண்டியது. பாத்திரத்திலுள்ள தண்ணீர் ஆறி ஆவியெழாமலிருந்தால் செங்கல்லை அடுப்பிற்போட்டுச்சுட்டு முன்னமே சித்தப்படுத்தி வைத்துக்கொள்ளவேண்டியது பாத்திரத்தில் ஆவிகுறைந்தவுடன் இந்தக்கல்லை அதிற் போட்டால் பழையபடி ஆவியெழும்பும், பத்து அல்லது பதினைந்து நிமிஷம் ஆவிபிடித்தால் போதுமானது.

ஷை வேறு முறை.

பிரம்பு நாற்காலியில் நோயாளியை உட்காரவைத்துக்கழுத்து வரையில் கம்பிளியால் மூடி நாற்காலியைச்சுற்றிலும் திரைகட்டிவிடவேண்டும். சித்தப்படுத்தின ஆவிபிடிக்கும் ஜலத்தை ஒரு சிறுபாத்திரத்தில்விட்டு நாற்காலியின்கீழ் வைத்து முறைப்படி ஆவிபிடிக்கவும்.



இன்னும் பலவகைகள் நம்பாட்டிமார்களுக்குத் தெரியும் அவரவர்கள் இஷ்டப்படி ஆவிபிடித்துக கொள்ளவும்.

## வாயுரோகங்களுக்கு உபயோகமாம் மேற்பூச்சுத்தைலங்கள்.

கீல்வாத இலுப்பை நெய் உசிதம்.

இலுப்பையெண்ணெய் அல்லது நெய் (இது இலுப்பைக்கொட்டைப்பருப்பைச் செக்கில்போட்டு ஆட்டியெடுக்கப்படுகிறது. இதுநெய்யைப்போல மஞ்சள் நிறமாக இருக்கும்; குளிர்காலங்களில் நெய்யைப்போல் உறைந்து கெட்டியாகிப்போகும். இது பெரும்பாலார்க்குத் தெரிந்ததே ஆயினும் இதன் உபயோகம் வைத்திய சம்பந்தமாக அநேகருக்குத் தெரியாதென்று சொல்லலாம். இது மலிந்த வஸ்துவாயினும் பிரதானமாகக் கீல்வாதரோகங்களில் அதிகம் உபயோகப்படத்தக்கது.) இதிற் கொஞ்சமெடுத்து நோவுள்ளவிடத்தில் மெதுவாகத் தேய்த்து அனல்காட்டவேண்டும். இவ்விதம் தினம் இரண்டு அல்லது மூன்று தடவைகள் செய்துவரின் சீதளசம்பந்தமான கீல்வாதம் வாயுரோகங்கள், ஆகியவை தீரும். அடிக்கடி அரைப்பிட்டு வெந்நீரால் கழுவிச்சுத்திசெய்து கொண்டும் வரவேண்டும்.

கீல்வாத வெண்ணொச்சித்தைலம்.

வெண்ணொச்சிச்சாறு இரண்டுபங்கு, நல்லெண்ணெய் ஒருபங்கு. இவ்விரண்டையுங்கலந்து காய்ச்சிக்கடுகுதிரள் பதத்தில் இறக்கிவடிகட்டி வைத்துக்

கொள்ளவேண்டும். நோவுள்ளவிடத்தில் இந்தத்தை லத்தைப்பூசித்தேய்த்தும் வரவேண்டும்.

வியாதிபலமாயிருந்தால் இந்தத்தைலத்தைப்பூசி அதன் மீது வெண்ணொச்சியிலையை இடித்து வதக்கி வைத்தும் கட்டலாம்.

கீல்வாத எரண்டத்தைலம்.

ஆமணக்கம்வேர்த்தோல் பலம்-௪௦, இதனைச்சி தைத்து எட்டுப்படி ஜலத்திற்போட்டு எட்டிலொன் றாகக்காய்ச்சி வடிகட்டி அதில் ஒருவீசை ஆமணக் கெண்ணெய் சேர்த்துக்காய்ச்சிக்கடுகுதிரள் பதத்தில் இறக்கிவடிகட்டி வைத்துக்கொள்ளவேண்டும். இதனை அவசியமான விடங்களில் பூசித்தேய்த்துவரக்கீல்களி லுள்ளவாயு, கீல்பிடிப்பு, சந்துவாதம் இடுப்பு நோவு முதலிய பலவாயுக்கள் தீரும்.

கீல்வாத மூக்கூட்டெண்ணெய்.

ஆளிவிதை யெண்ணெய், கடு கெண்ணெய், நல லெண்ணெய் இவை வகை-க-க்குப் பலம்-ரு, ஊமத்த ஞ்செடிசமூலம் பலம்-ரு, (இதனை மைபோல இடித் துக்கொள்ளவேண்டும்.)

செய்முறை:—முன் மூன்று எண்ணெய்களையும் கலந்து சித்தப்படுத்தின மூலிகையையும் அதிற் போ ட்டுக்காய்ச்சி நீர்சுண்டின பதத்தில் இறக்கிவடிகட்டி வைத்துக்கொள்ளவேண்டும். இதனை நோவுள்ளவிட த்தில் பூசித்தேய்த்து ஆமணக்கிலை வைத்துக்கட்டிவ ருவதனால் கீல்வாதம், வாயுரோகங்கள் ஆகியவை தீரும்.



கீல்வாத எருக்குத்தைலம்.

எருக்கின் வேர்ப்பட்டை பலம்-௪௦, இதனைப்ப ஞ்சுபோல் சிதைத்து எட்டுப்படி ஜலத்திற்போட்டு எட்டிலொருபாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டி நாற்பது பலம் நல்லெண்ணெயிற்கலந்து காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக்கொள் ளவேண்டும். இதனை நோவுள்ள விடத்தில் மேற்பூசி வருவதால் கீல்வாதரோகம், வாயுரோகம், கைகால் பிடிப்பு முதலிய பலவகை வாயுரோகங்கள் தீரும்.

ஷை வேறு.

எருக்கிலைச்சாறுபடி-௨, நல்லெண்ணெய்படி-௧, இரண்டையுங்கலந்து மேற்கண்டவாறுசித்தப்படுத்தி மேற்கண்டபடி உபயோகித்துவர, மேற்கண்ட ரோக ங்கள் தீரும்.

கீல்வாத பூண்டுத்தைலம்.

நல்லெண்ணெய் பலம்-௧௨, தோலுரித்த வெள் ளைப்பூண்டு பலம்-௩, சேராங்கொட்டை எண் -௪, இவையெல்லாவற்றையும் சேர்த்து அடுப்பேற்றி ச்சிறுதீயாக எரித்துப்பூண்டுகருகி கொட்டை மிதக் குமளவுடன் கீழிறக்கி ஆறினபின்பு வடிகட்டி வைத்துக் கொள்ளவும். இதனை நோவுள்ளவிடத்தில் பூசிவருவ தனால் கீல்வாதம், பக்ஷவாதம், பலவகை வாயுக்கள் ஆகியவை தீரும்.

கீல்வாத தோன்றித்தைலம்.

மருதோன்றிவிதை பலம்-௩, மேற்றோல் சீவின சுக்கு பலம்-௧, நல்லெண்ணெய் பலம்-௮.

செய்முறை:—முன் இரண்டு சரக்குகளையும் ஒன்றுகச்சிதைத்து நான்கு ஆழாக்கு ஜலத்திற்போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டி மேற்படி எண்ணெயிற் கலந்து காய்ச்சிக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக்கொள்ளவும். இதனைநோவுள்ளவிடத்தில் பூசிவருவதால் இடுப்புவலி, கெண்டைக்கால்வலி, விரல்களின்வலி, பக்கசூலை ஆகியவைகள் தீரும்.

௩௨. வேறு.

மருதோன்றியிலையை ஜலம்வார்த்து அரைத்த விழுது பலம்-௧௦, நல்லெண்ணெய் பலம்-௫, இவ்விரண்டையுங்கலந்து காய்ச்சி இலைகரிந்துபோன பதத்தில் இறக்கிவடிகட்டி வைத்துக்கொண்டு நோவுள்ளவிடத்தில் பூசிவரப்பலவகை வாயுரோகங்கள் தீரும்.

கில்வாத ஓமத்தைலம்.

ஓமச்சூரணம் பலம்-௨, இதனை ஜலம்வார்த்து வெண்ணெய் போலரைத்து ஐந்துபலம் நல்லெண்ணெயிற் கலக்கிக்காய்ச்சிக்கடுகுதிரள் பதத்தில் இறக்கிவடிகட்டி வைத்துக்கொண்டு நோவுள்ளவிடங்களில் பூசிவருவதால் கில்வாயு, கில்வாதம் ஆகியவை தீரும்.

ஓமச்சூரணத்தை நல்லெண்ணெயிற் குழைத்து நோவுள்ளவிடத்திற் பூசிவருவதாலும் கில்வாயு முதலிய வாயுரோகங்கள் தீரும்.

கில்வாத புகையிலைத்தைலம்.

புகையிலை பலம்-௧௦, நல்லெண்ணெய் பலம்-௫, புகையிலையை மெல்லிதாகக்கத்தரித்து முக்காற்படி



ஜலத்திற்போட்டு ஓரிரவு ஊறவைத்துக்காலையில் அடுப்பேற்றி மூன்றிலொருபாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டி முன் எண்ணெயுடன் சேர்த்துக்காய்ச்சிக் கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டிப் பத்திரப்படுத்தவும். இதனை மேற்பூசிவருவதனால் கில்வாதம், முழங்கால் வாதம், முழங்கை முதலிய மூட்டுக்களிலுள்ள வாயுரோகங்கள் ஆகியன தீரும்.

கில்வாத கொள்ளு எண்ணெய்.

திருநீற்றுப்பச்சையிலைச்சாறுபடி-௮, நல்லெண்ணெய்படி-௮, இவ்விரண்டையுங்கலந்து அடுப்பேற்றிச்சிறுதீயாகஎரித்துக்கடுகுதிரள் பதத்தில் இறக்கிவடிகட்டிக்கொள்ளவும். பிறகு ஒருபலம் கொண்டைக்கடலையைச்சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு ஓரிரவு ஊறவைத்துக்காலையில் பிசைந்து வடிகட்டி அதில் மூன்று வராகனெடை நற்சீரகத்தைச் சிதைத்துப்போட்டு அரைப்பாகமாகச் சுண்டினவுடன் இறக்கிவடிகட்டி முன் எண்ணெயிற் சேர்த்து மறுபடியும் காய்ச்சிக்கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—வராகனெடை-௨ முதல் ௩ காலையில் ஒருவேளை அல்லது காலைமாலை இரண்டுவேளை சமயோசிதம்போல் உபயோகிக்கலாம்.

இதனுடன், இதனை நோவுள்ளவிடங்களிற் பூசிக்கொஞ்சம் அனல் காட்டியும் வரவேண்டியது.

உபயோகம்:—கணுக்கால்வாதம், கில்வாதம் ஆகியவை தீரும்.

### கீல்வாத பட்டைத் தைலம்.

சிதைத்த பறங்கிப்பட்டை பலம்-உ௫, நல்லெண்ணெய் பலம்-௫.

செய்முறை:—மேற்படி பறங்கிப்பட்டையை ஒரு படி ஜலத்திற்போட்டு ஆறுமணிநேரம் ஊறவைத்துப் பிறகு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துக்காற்படியாகச் சுண்டவைத்திறக்கி இளஞ்சூட்டுடன் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கின கஷாயத்தில் மேற்படி எண்ணெயையுங்கலந்து காய்ச்சிக்கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—வராகனெடை-௪ ௦, ௮. காலையில் ஒருவேளை அல்லது காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

இதனை உள்ளுக்கு உபயோகப்படுத்துவதுடன் நோவுள்ளவிடங்களிலும் பூசிவரவேண்டும்.

உபயோகம்:—கீல்வாயுக்கள், முதுகுநோய், மேகவாயுக்கள் முதலிய பலவகை வாயுக்கள் தீரும்.

பத்தியம்:—வியாதி பலமாயிருந்தால் அதற்குத் தகுந்த பத்தியமும் ஏற்படுத்தவும்.

### வாதரோகவௌவால் எண்ணெய்.

பருமனான பழந்தின்னி வௌவால் ஒன்று. இதன் வயிற்றைக்கீறி அதற்குள்ளகுடல் முதலியவைகளை நீக்கிச் சுத்திசெய்து துண்டுகளாகத் துண்டித்து அதற்குச்சமனெடை நல்லெண்ணெயிற் போட்டுக்காய்ச்சி அது கருகினபதத்திலிறக்கி வடிகட்டிச் சீஷாவில் பத்திரமாக வைத்துக்கொள்ளவும்.



பிரமாணம்:—வராகனெடை-௪ ௦. ௮ காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும். இதனை மேலுக்கும் பூசிவரவேண்டும்.

உபயோகம்:—கீல்வாதம், வலிப்புகள், பக்ஷவாதம், கிரிக்குவாதம், சளை, இருமல் ஆகியவை தீரும். இதனைத் தலைநேரமத்தில் தடவிச் சிவிவருவதாலும் பாலிய நரைதீர்ந்து [illegible] போகும்.

### கீல்வாத ஜலவணெண்ணெய்.

மருதோன்றியிலை பலம்-உ௦. உலர்ந்ததாளு பலம்-௫௦. இதனை இரண்டுபடி ஜலத்திற்போட்டுக்காய்ச்சி அரைப்படியாகச் சுண்டினபதத்திலிறக்கி இளஞ்சூட்டுடன் பிசைந்து வடிகட்டிப் பத்துப்பலம் நல்லெண்ணெயிற்கலந்து காய்ச்சிக் கடுகுதிரள்பதத்திலிறக்கி வடிகட்டிச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௪ ௦. ௮. காலைமாலை [illegible] வேளையும் உபயோகிக்கவும்.

இதனை [illegible] க்கு உபயோகிப்பதுடன் மேலுக்கும் பூசிவரவேண்டும்.

உபயோகம்:-கீல்வாதம், வாயுரோகம், மேகவாயு முதலிய பலவாயுரோகங்கள் தீரும்.

### கீல்வாத மூலிகை யெண்ணெய்.

(a) மருதோன்றியிலை, வெண்ணொச்சியிலை, திருநீற்றுப்பச்சையிலை, ஊமத்தையிலை, எருக்கிலை, ஆமணக்கிலை, மணித்தக்காளியிலை இவை வகைக்குப் பலம்-௧௦, நல்லெண்ணெய் தேவையான அளவு.

(b) மருதோன்றிவிதை வராகனெடை-௫, சதகுப்பை வராகனெடை-௫. ஓமம் வராகனெடை-௧௦.

(c) அபின் வராகனெடை-௨. கசிந்சான் பிசிரிச் சூரணம் வராகனெடை-௫.

செய்முறை:- (a) யிலுள்ள மூலிகைகளையெல்லாம் இடித்துச் சாறுபிழிந்து அந்தச்சாற்றிற்குச் சமனெடை நல்லெண்ணெயைச்சேர்த்துக் காய்ச்சிக் காய்ச்சும்போது (b) யிலுள்ளவைகளை ஜலம்வார்த்து வெண்ணெய்போலரைத்து அதிற்கலக்கிக் கிருதபதத்திலிறக்கி வடிகட்டி, (c) யிலுள்ள அபினை அதிற்கலந்து கசிந்சான்பிசிரிச் சூரணத்தையும் அதிற்போட்டுக்கலக்கிச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

இதனை நோவுள்ளவிடத்தில் மேற்பூசி வருவதால் கீல்வாதம், வாயுரோகங்கள் முதலியவை தீரும்.

வியாதிபலமாயிருந்தால் வேளையொன்றிற்கு வராகனெடை மூன்றுமுதல் ஐந்துவரையில் உள்ளுக்கும் கொடுத்துவரலாம். இன்னும் தேகபலம் வியாதிபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி அளவை அதிகப்படுத்தியும் உபயோகிக்கலாம். இந்தவிஷயம் அனுபவத்தில்தானே தெரிந்துகொள்ளக்கூடும்.

கீல்வாத நவ எண்ணெய்.

மேற்கூறியுள்ள இஞ்சிச்சாறு ஆழாக்கு-௮, நல்லெண்ணெய் ஆழாக்கு-௨. இவற்றைக்கலந்து காய்ச்சிக் கிருதபதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக்கொள்ளவும்.



இதனை இரண்டுதடவை நோவுள்ளவிடங்களில் தேய்த்துவரக் கீல்வாதம், வாயுரோகங்கள் ஆகியவை தணிக்கப்படும்.

இன்னும் வியாதிபலமாயிருந்தால் வேளை ஒன்றிற்கு வராகனெடை-[illegible] வீதம் காலைமாலை இரண்டுவேளையும் அல்லது அதில் ஒருவேளை உபயோகித்துவரலாம்.

கீல்வாத தாழைத்தைலம்.

நல்லெண்ணெய் வீசை-௧, தாழம்பூவிதழ்கள் பலம்-௨௦. இதனைச் சன்னமாக நறுக்கி மேற்படி எண்ணெயிற்போட்டு இரண்டுநாளையும் ஒருஜாடியிற்போட்டுச் சூரியவெளியில் காயவைத்துப் பிறகு இந்த எண்ணெயைத் தேய்த்து நோவுள்ளவிடங்களிற் பூசிவரக் கீல்வாதம், முதுகுவாதம் ஆகியவை தீரும். தளர்ந்து சோர்ந்துபோன அவயவங்கள் இறுகிப் பலப்பட்டுப்போம்.

[illegible] எண்ணெய்.

சதுரக்கள்ளி [illegible] ஒருபலம், எள்ளெண்ணெய் ஒருபலம். இவ்விரண்டையும் சேர்த்துக்காய்ச்சிக் கிருதபதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக்கொண்டு நோவுள்ள ஸ்தானங்களில் பூசிவருவதால் முதுகுநோய், கீல்வாதம், வாயுரோகம் ஆகியவை தீரும்.

குஷ்டரோகசிகிச்சை.

குஷ்டரோக வகைகள், இதன் இலக்ஷணம், சாத்தியா சாத்தியங்கள் முதலியவைகளெல்லாம் நமது பிள்ளைத்தமிழ்க் கிரந்தத்தில் வகைவிவரமாகச்சொல்

வைப்பட்டிருக்கின்றன. ஆயினும், சில சூக்ஷ்ம முறைகளையும் இங்கெழுதுவாம்.

இந்த வியாதியானது நாட்பட்டுத் தேகத்தில் நிலைத்துவிட்டால் அசாத்தியமாய் விடுமாகையால் இந்த வியாதிகண்ட ஆரம்பத்திலேயே பலதடவை தகுந்த பேதிக்குச் சாப்பிட்டுத் தேகத்திலுள்ள துர்நீர்களை நீக்கிச் சுத்திசெய்து கொண்டேயிருக்கவேண்டும். இவ்விதம் அடிக்கடி செய்துவருவதுடன் விசனம், மனவருத்தம், இராக்காலங்களில் விழித்திருத்தல் முதலியவைகளை அறவே நீக்கவேண்டியது. இன்னும் குஷ்டரோகிகளுக்கு ஏற்ற ஆகாரமானது ஆட்டின் பாலேயாம்.

## குஷ்டரோக உசிதங்கள்.

### நுணா உசிதம்.

முற்றின நுணாமரப்பட்டையை நிழலிலுலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ்செய்து கொள்ளவேண்டும். இந்த மரத்தின் தெற்குப்பக்கத்தில் வடக்குமுகமாக உட்கார்ந்துகொண்டு மரத்தின் வடக்குப்பக்கத்திலுள்ள பட்டையைச்சீவவேண்டும். இப்படிச்சீவி மேற்கண்டவாறு உலர்த்தியிடித்த சூரணம் வேளை-௧-க்கு வராகனெடை-௩- விதம் காலைமாலை இரண்டுவேளையும் உட்கொண்டு அதன்மீது கொஞ்சம் ஜலத்தைப்பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் நாற்பது நாட்கள் செய்யின் மூன்று வருஷத்திற்குட்பட்ட குஷ்டரோகங்கள் தீரும். வியாதி பாக்கியிருந்தால் மறுபடியும் நாற்பதுநாள் உபயோகிக்கவும்.



### மீன்கொல்லி உசிதம்.

மீன்கொல்லிமரமென ஒருவகை மரமுண்டு. அதன் பட்டையைத் தூள்செய்து சிறுகுளங்களில் அல்லது குட்டைகளில் தூவினால் மீன்களுக்கு மயக்கங்கண்டு மிதந்துபோம். ஆகையால் அதற்குமீன் கொல்லி மரமெனப் பெயர்வந்தது. இந்தப்பட்டையை நிழலில் உலர்த்தியிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணத்தை வேளை-௧-க்கு மூன்று வராகனெடை விதம் காலைமாலை இரண்டுவேளையும் உட்கொண்டுவரின் குஷ்டரோகம், இரத்தக்கொதிப்பு ஆகியவை தீரும்.

### வெண் கடலையுசிதம்.

கொண்டைக்கடலைத்தோல் பலம்-௩, இதனை அரைப்படி ஜலத்திற்போட்டுப் பனிரண்டுமணிநேரம் ஊறவைத்துப் பிசைந்து வடிகட்டிப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலையில் ஒவ்வொருவேளை முப்பதுநாள் அல்லது நாற்பதுநாள் செய்துவர குஷ்டரோகம் தீரும். வியாதிபாக்கியிருந்தால் பின்னும் ஒருமுறை உபயோகிக்கவும்.

பத்தியம்:—சோறு, பால், தயிர், மோர், முதலிய வெண்ணிறமான வஸ்துக்கள், புளிப்பு வஸ்துக்கள் ஆகியவைகள் ஆகா; இறைச்சி, வெல்லம், சர்க்கரை ஆகியவைகளை உபயோகிக்கவும்.

### வேப்புசிதம்.

வேப்பம்மத ஜலத்தை தேகத்தின்மீது பூசிவரக் குஷ்டரோகம் தீரும்.

## குஷ்டதிராவக உசிதம்.

கொன்றைக்காய் வேளைசமூலம் விதை-௧, இதனைச்சன்னமாக அரிந்து ஆறுபடி ஜலத்திற்போட்டுப்பனிரண்டுமணிநேரம் ஊறவைத்து வாலையிலிட்டுமுறைப்படி திராவக மிறக்கிக்கொள்ளவும்.

பிரமாணம்:—பலம்-௨, ௩. காலைமாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—குஷ்டரோகம், இரத்தக்கெடுதி ஆகியவை தீரும். இரத்தம் சுத்திப்படும்.

## மேற்படி வேறு.

வேப்பம்பூ விதை-௧. இதனை எட்டுப்படி ஜலத்தில் பனிரண்டு மணிநேரம் ஊறவைத்து வாலையிலிட்டு முறைப்படி திராவக மிறக்கிக்கொள்ளவும்.

பிரமாணம்:—பலம்-௨, ௩. காலைமாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:-இரத்தக்கெடுதி, இரத்தக்கொதிப்பு ஆகியவை தீரும். இரத்தசுத்தியுண்டாகக் குஷ்டரோகம் தீரும்.

## குஷ்ட ஜலவூறற் கஷாயம்.

மருதோன்றியிலை வராகனெடை-௪. இதனை மூன்றாழாக்கு ஜலத்திற்போட்டு இரவில் ஊறவைத்துக்காலையிற்பிசைந்து வடிகட்டி அதிற்கொஞ்சம் சர்க்கரையைச்சேர்த்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலையில் ஒவ்வொருவேளை நாற்பதுநாள் செய்யின் இரத்தசுத்தியுண்டாகிக் குஷ்டரோகந் தீரும்.



## குஷ்ட வாகை யுசிதம்.

காட்டுவாகையிலை பலம்-௧; மிளகுவராகனெடை-௨. இவ்விரண்டையும் வெண்ணெய்போலரைத்துத் தண்ணீரில்கலக்கி வடிகட்டிப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலையில் ஒவ்வொருவேளை நாற்பதுநாள் உபயோகிக்கின் இரத்தசுத்தியுண்டாகிக் குஷ்டரோகந்தீரும்.

## குஷ்ட கருவேல் உசிதம்.

கருவேலம்பட்டை பலம்-௧. இதனை நைபச்சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு இரவில் ஊறவைத்துக் காலையில்பிசைந்து வடிகட்டிப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலையில் ஒவ்வொருவேளை நாற்பதுநாள் உபயோகிக்கின் இரத்தத்திலுள்ள தோஷங்கள் நீங்கிக் குஷ்டரோகம் தீரும்.

## குஷ்டபச்சை யுசிதம்.

சமுத்திரப்பச்சை மாத்திரப்பட்டையை நிழலில் உலர்த்தியிடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வராகனெடை-௩. இதனையுட்கொண்டு மேலே கொஞ்சம் தண்ணீர் குடிக்கவேண்டும். இவ்விதம் மூன்றுநாள்மூன்றுவேளை உபயோகித்து, மறுமூன்றுநாளும் உபயோகிக்காமல் விட்டுவிடவேண்டும். அதற்கடுத்த மூன்றுநாளும் முன்கண்டபடி உபயோகிக்கவேண்டும். இவ்விதம் மும்மூன்றுநாள் உபயோகித்தும், அடுத்த மும்மூன்றுநாள் உபயோகிக்காமலும் இருபத்தொருநாட்கள் செய்யவேண்டும். இந்த இருபத்தொருநாளும் பச்சைப்பருப்புசேர்த்த கிச்சடிச்சாதம் சாப்பிடவேண்டும். இதன் ஆரம்பத்தில் வாந்தியாகும். வியாதிக்கே

த்திருந்தால் ஆரம்பத்தில் வாத்தியாகிப்பின்னால் தின்றுபோகும். கொஞ்சம் நாட்பட்ட வியாதியாயிருந்தாலும் இந்தச் சிகிச்சையால் குணமுண்டாகும்.

குஷ்ட நிம்பலவணஉசிதம்.

உலர்ந்த வேப்பிலை தேவையான அளவு. இதனை எரித்துச் சாம்பலாக்கிப் புடைத்துக் கல், கரி முதலியவைகளைப்போக்கி அளந்து அதற்கு நான்குபங்கு ஜலத்தைவிட்டுக்கரைத்து மூன்றுநாள் வைக்கவேண்டும். ஒவ்வொருநாளும் இரண்டுமூன்றுதடவை கலக்கியும் வரவேண்டும். நான்காம்நாள் தெளிவையிறுத்துக்காய்ச்சி உப்பெடுத்துக் கொள்ளவேண்டும்.

பிரமாணம்:—வராகனெடை-வ, ௨, காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

அநுபானம்:—தேன், நெய் முதலியவைகளாம்.

உபயோகம்:—குஷ்டரோகம், சொறி, சிரங்கு, படர்தாமரை முதலியவை தீரும். இரத்தசுத்தியுண்டாகும்.

குஷ்ட அபின் உசிதம்.

குஷ்டரோக ஆரம்பத்தில் அரைக்குன்றிமணியெடை அபினைத் தின்னவேண்டும். இவ்விதம் சிலநாட்கள் தொடர்ச்சியாகச்செய்துவரின் குஷ்டரோகம் விருத்தியாகாமல் தடைபட்டுப்போம்.

இவ்விதமே சுக்கசாத்தோற்சூரணம் வராகனெடை அரை, இதனைத்தேனில் அல்லது நெய்யில் குழைத்துக் காலைமாலை இரண்டுவேளையும் உட்கொண்டுவரக் குஷ்டரோகம் விருத்தியாகாமல் தடைபட்டுப்போம்.



இவ்விதம் சிலர் அநுபவத்தினால் கண்டு எழுதியிருக்கிறார்கள்.

குஷ்ட ஊறற்கஷாயம்.

ஆரசமூலம், அமுக்குராக்கிழங்கு, பிரமதண்டி-லை, மஞ்சட்கடுக்காய்த்தோல் இவை வகை-க-க்கு வராகனெடை ஒன்றரை, இவற்றைச்சிதைத்து ஒன்றரை ஆழாக்கு ஜலத்திற்போட்டு ஓரிரவு ஊறவைத்து மறுநாட்காலையில் ஜாக்கிரதையுடன் ஒருகுச்சியால்நன்றுக்கலக்கி வடிகட்டிப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் காலையில் ஒவ்வொருவேளை நாற்பதுநாட்செய்யின், இரத்தசுத்தியுண்டாகிக் குஷ்டரோகந்தீரும்.

குஷ்ட வேப்புச்சூரணம்.

[illegible]லை, வேப்பம்பட்டை, வேப்பம்பூ, வேப்பம்விதை, வேப்பம்வேர்ப்பட்டை இவை வகை-க-க்குப்பலம்-௨. மிளகு, மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, கார்போகரிசி இவை வகை-க-க்குப்பலம்-க, இவையெல்லாவற்றையும் இடித்துத்தூள்செய்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—வராகனெடை-கவ, முதல்-ஏ, வராகனெடைவரை, காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

அநுபானம்—மஞ்சிஷ்டிக்கஷாயம்.

பத்தியம்:—இறைச்சி, உப்பு, உஷ்ணமான பதார்த்தங்கள் ஆகியவைகளை நீக்கவேண்டியது.

உபயோகம்:—இரத்தத்திலுள்ள தோஷங்கள் நீங்கி இரத்த சுத்தியுண்டாகிக் குஷ்டரோகம் தீரும்.

### ௬௨ வேறு

உலர்ந்த வேப்பிலைச்சூரணம் பலம்-௫, கழுவின எள் பலம்-௫, லாகூருப்பு அல்லது இந்துப்புத்தூள் வராகனெடை-௨௦, பனைவெல்லம் பலம்-௧௦.

செய்முறை:—முதலில் எள்ளை மசியப்பொடித்துப்பிறகுமற்ற இரண்டையும் சேர்த்து ஒருமணிநேரமரைத்துப்பிறகு வெல்லத்தையும் சேர்த்து இரண்டுமணி நேரமரைத்துப்பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௫, காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—குஷ்டம், வெண்குஷ்டம், மேகத்தழும்பு, மேகப்புள்ளி ஆகியவை தீரும்.

### குஷ்டநாபி மாஜூன்.

சுத்திசெய்த கருநாபிச்சூரணம் வராகனெடை-௨, மஞ்சட்கடுக்காய்த்தோல், கொடிவேலி வேர்ப்பட்டை இவற்றின் சூரணம் வகைக்கு-க்கு வராகனெடை-௧௦, மிளகுச்சூரணம் வராகனெடை-௫, தேன் பலம்-௯, பசுவின்நெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படிச்சூரணங்களையெல்லாம் ஒன்றாகக்கலந்து பசுவின்நெய்யைத்தெளித்து நெய்ப்பசையுண்டாக்கித் தேனைக்காய்ச்சி மேற்படி சூரணத்தைத் தூவிக்கிண்டிக்கிளறிக் கீழிறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.



பிரமாணம்:—வராகனெடை-௧, ௧½, காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

அனுபானம்:—இரசபற்பம், இரசகற்பூரபற்பம், பாஷாணபற்பம், தாம்பிரபற்பம், தாம்பிரசெந்தூரம் முதலியவைகளில் அனுபானித்து உட்கொள்வதனால் அதிக பிரயோசனமுண்டாம்.

உபயோகம்:—குஷ்டரோகம் தீரும். இரத்தசுத்தியுண்டாகும். தேகபலம் முதலியவைகளுமுண்டாகும்.

### குஷ்ட நிவாரண ஷர்பத்.

[illegible]தூள் பலம்-௯, இதனை இரவில் இரண்டுபடிகடல் ஜலத்தில் ஊறவைத்துக்காலையில் அடுப்பேற்றிக்காய்ச்சி அரைப்பாகமாகச் சுண்டினபின் வடிகட்டி இருபதுபலம் சர்க்கரையைச் சேர்த்துக்காய்ச்சிப் பாகுபதத்திலிறக்கிச்சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-௫, ௯. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

அனுபானம்:—தூக்கமரத்தூள் பலம்-௧, இதனை ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு அரைப்பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டி மேற்படி ஷர்பத்தை இதில் பிரமாணப்படி அனுபானித்துட்கொள்ளவேண்டும். இவ்விதம் நாற்பதுநாள் உபயோகிக்கவும்.

பத்தியம்:—புளிப்பு வஸ்துக்கள், பால், தயிர், பயற்றினங்கள் ஆகியவைகளை நீக்கவேண்டியது.

உபயோகம்:—இரத்தக் கெடுதியினாலுண்டான வியாதிகள், குஷ்டரோகம், இரத்தக்கொதிப்பு ஆகியவைகளைக்கண்டிக்கும்.

ஷை வேறு.

ஆற்றலரி வேர்ப்பட்டை பலம்-ரு, இதனைச்சிதைத்து ஒருபடி ஜலத்திற் போட்டுக்காற்படியாகச் சுண்டவைத்து அரைவீசை சர்க்கரையைச் சேர்த்துக்காய்ச்சி ஷர்பத் பதத்தில் இறக்கி ஆறினபின் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-க, ஆரம்பத்தில் ஒரு வராகனெடை ஆரம்பித்து இரண்டு நாளைக்கொரு தடவை கால்வராகனெடை அதிகப்படுத்தலாம் இவ்விதம் மூன்று வராகனெடை வரையில் அதிகப்படுத்தவும். இது விஷதருமமுள்ளதாகையால் தேககபாவம்முதலியவைகளை நிதானித்து அதிகஜாக்கிரதையுடன் உபயோகிக்கவேண்டியது. இதுசிவப்புக்கெந்தகத்தைப்போலக்குஷ்டத்தை நிவிர்த்தி செய்வதில் மிகவும் சிறந்தது. ஆனால், அதிக ஜாக்கிரதையுடன் உபயோகிக்கவும்.

உபயோகம்:—இரத்தத்திலுண்டான தோஷங்கள் நீங்கி அது சுத்தியாகும். குஷ்டரோகம், அது சம்பந்தமான புண்புரை ஆகியவை தீரும்.

குஷ்டகுத மாத்திரை.

சுத்திசெய்த இரசம் வராகனெடை-உ, சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம் வராகனெடை-க, குந்திரிக்கச்சூரணம் வராகனெடை-அ, சேவல் சீனிச்சூரணம் வராகனெடை-௩, கருவேலம் பிசின்தூள் வராகனெடை-உ, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு, வெள்ளாட்டின் ஏழு பித்துக்களின் நீர்.



செய்முறை:—இரசத்தையும் பாஷாணத்தையும் சேர்த்து அரைத்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு அரைக்கவேண்டியது. இரசம் நன்றாக மடிந்தபின்பு மற்றச்சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து கொஞ்சங் கொஞ்சமாக இதிற் சேர்த்து மேற்படி எலுமிச்சம் பழச்சாற்றையே சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாம நேரமரைத்துக் கல்வத்துடன் வைத்து சரமுலர்ந்தபின்பு மேற்படி பித்து ஜலத்தைச்சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாம நேரமரைத்து அரைக்குன்றிமணியளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திச்சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

அனுபானம்:—சர்க்கரை, வெல்லம் முதலியவைகளாம்

பத்தியம்:—புளி, புளிப்பு வஸ்துக்கள் முதலியவைகள் ஆகா.

உபயோகம்:—குஷ்டம், குஷ்டத்திலுண்டாகும் வீக்கம், புண், அவயவக்குறைவு முதலியவை தீரும்.

குஷ்டதார பற்பம்.

சுத்திசெய்த தாளகம் பலம்-க, (இது ஒரேகட்டியாக இருக்கவேண்டும்) கழற்சிப்பருப்புச்சூரணம் பலம்-உ, சீனக்காரத்தூள் பலம்-ரு.

செய்முறை:—சீனக்காரத்தை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு சட்டியில் கீழேபரப்பி அதன் மத்தியில் கழற்சிப்பருப்புச் சூரணத்தைப்பரப்பி அதன்மீது தாளகத்தை வைத்து அதன்மீது பாக்கி அரைவாசி கழற்சிப்பருப்புச் சூரணத்தைப் போட்டு அதன்மீது பாக்கிபடிக்காரத்தைப் போட்டு நாலுபக்கமும் சமமாக அழுத்திவிட்டு மேற்சட்டி மூடி ஐந்துசீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் பத்துப்பங்கெரு வறட்டியிற்புடமிட்டு ஆறினபின் எடுக்கத் தாளகமானது பற்பமாகியிருக்கும். இதனை யெடுத்துச் சீசாவிற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—அரிசியெடை—உ. சு காலைமாலை இரண்டுவேளையும் நாற்பதுநாள் உபயோகிக்கவும்.

அநுபானம்:—வெண்ணெய், வெல்லம் முதலியவைகளாம்.

உபயோகம்:—குஷ்டரோகம், குஷ்டசம்பந்தமான புண், வீக்கம், சிரங்கு முதலியவைகள் தீரும்.

பத்தியம்:—வியாதிபலம், தேகபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி புளி, உப்பு, இறைச்சி முதலியவைகளை நீக்கிவைக்கவேண்டியது. கோதுமைரொட்டி, பாலன்னம், உப்பில்லாக்கிச்சடி ஆகியவைகளைச் சேர்த்துக்கொள்ளவும்.

மேற்படி வேறு.

சுத்திசெய்த தாளகம் பலம்-ஈ. இதனைப்பொடித்து வெள்ளையும்புளியைச் சிறுகச்சிறுகவார்த்து நான்குசாமமரைத்து வில்லைசெய்துலர்த்தி சாமில்லா



மல் உலர்ந்தபின்பு ஐந்துபலம் படிக்காரத்தைப்பொடித்து இரண்டுபாகமாக்கி ஒரு சிறுசட்டியிற்பரப்பி அதன்மீது முன் சித்தப்படுத்தின வில்லையைவைத்து அதன்மீது மறுபாகி படிக்காரத்தைப்போட்டு அழுத்திவிட்டு மேற்சட்டிமூடி ஐந்துசீலைமண்செய்துலர்த்திக் கவசத்தின் எட்டுப்பங்கு வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாகியிருக்கும்.

பிரமாணம், அநுபானம், உபயோகம், பத்தியம் ஆகியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

வெண்குஷ்டரோகச் சிகிச்சை.

இது அநேகருக்குத் தெரிந்த ரோகம். சருமத்தின் மீது வெண்ணிறமுண்டாகிச் சதைக்குள்ளும்சென்று பற்றியிருக்கும். இந்த வெண்குஷ்டம், வெள்ளைமேகம் எனப்பெயர்கள் கூறப்படுகின்றன. சருமத்தின் மேலே தடிப்புகளுமின்றி வெண்ணிறமாக இருப்பது முண்டு. இதற்கு வெண்மேகத்தழும்பு என்று சொல்லப்படுகிறது. ஆனால், இந்தவகையும் குஷ்டரோகத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. வெண்குஷ்டமானது சதையைப்பற்றிவிட்டால் அது தீருவது அசாத்தியம். வெண்மேகத்தழும்பானது ஆரம்பத்தில் சிகிச்சை செய்யப்பட்டால் தீர்ந்துவிடும். இந்த வியாதியில் பிரதானமானது கபச்சத்தைப்பக்குவப்படுத்தி வெளிப்படுத்துவதேயாம். குளிர்ச்சியான வஸ்துக்களையும் நீக்கவேண்டியது அவசியம்.

வெண்குஷ்டச் சூரணம்.

வேம்பின்பழம், பூ, இலை, இவைகளை உலர்த்தித் தனித்தனியிடித்துச் சமனெடையாக நிறுத்தெடுத்

தப்பிநரு ஒன்றாகக்கலந்து சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வாரகனெடை-௩. தினம் ஆரம்பித்துக் கிரமேணவாய் மூன்று வாரகனெடைவரையில் அதிகப்படுத்திக் காலைமாலை இரண்டுவேளையும் நாற்பதுநாள் உபயோகிக்கவேண்டும். இவ்விதம் செய்யின் வெண்குஷ்டரோகம் தீரும்.

மேற்படி வேறு.

சிவகரந்தை அல்லது கொட்டைக்கரந்தைச் சூரணம் பலம்-௫. சமுத்திரப்பச்சைச்சூரணம் பலம் இரண்டரை, இவ்விரண்டையுங்கலந்து ஒருசாமநேரமரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்க.

பிரமாணமும், உபயோகமும்:-வாரகனெடை-வ- முதல்-உவ. வரை இதனை நாள்தோறும் கிரமேணவாக அதிகப்படுத்திக்கொண்டு வரவேண்டியது. இதனைக் காலைமாலை இரண்டுவேளையும் நாற்பதுநாள் உபயோகித்துவரின் வெண்குஷ்டரோகம் தீரும்.

குறிப்பு.

சிவகரந்தையானது சிரேஷ்டம். அது அகப்படாதகாலங்களில் கொட்டைக்கரந்தையைச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

ஷை வேறு.

கார்போகரிசிச்சூரணம் பலம்-௧௨. உப்புத்தூள் பலம்-௯. இவ்விரண்டையும்சேர்த்து ஒருசாமநேரமரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.



பிரமாணம்:—வாரகனெடை-௪, ௯, காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும். இதனை நாற்பதுநாள் உபயோகித்துவரின் வெண்குஷ்டரோகம் தீரும்.

பத்தியம்:—கடலைமாவின் ரொட்டியைத் தவிர மற்றொன்றுமாகாது.

மேற்படி வேறு.

அத்திப்பட்டைச்சூரணம் பலம்-௫. லாலாவிதைச்சூரணம் பலம் ௫. இவ்விரண்டையுங்கலந்து ஒருமணிநேரமரைத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:—வாரகனெடை-௧ முதல்-௩ வரை. காலைமாலை இரண்டுவேளையும் நாற்பதுநாள் உபயோகித்தால் வெண்குஷ்டரோகம் தீரும்.

ஷை வேறு.

ஓமச்சூரணம் பலம்-௫. பூங்காவித்தூள் பலம் இரண்டரை, இவ்விரண்டையுங்கலந்து கல்வத்திலிட்டு ஒருமணிநேரமரைத்துச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வாரகனெடை-௧, ௧௨, காலைமாலை இரண்டுவேளையும் நாற்பதுநாள் உபயோகிக்கின் வெண்குஷ்டம் தீரும்.

பத்தியம்:—உப்பு, நெய் ஆகியவைகளைச்சேர்க்காமல் கோதுமைரொட்டி தின்னவேண்டும். மேற்கண்டவிதமாக அரிசிரொட்டியையும் உபயோகிக்கலாம்.

## வெண்குஷ்ட மாத்திரை.

பேயத்திப்பட்டைச்சூரணம் பலம் மூன்றரை, கொடிவேலி வேர்ப்பட்டைச்சூரணம் வராகனெடை-கஅ, கந்தகத்திசெய்த செவ்வியக்கிராம்பு வராகனெடை-கஅ, கடுக்காய்ப்பிஞ்சுச்சூரணம், கொத்துமல்லி விதைச்சூரணம் இவை வகைக்கு-கஅ வராகனெடை, பசுவின்கன்று மூத்திரம் படி-அரை.

செய்முறை:—மேற்படிச் சூரணங்களையெல்லாம் ஒன்றாகக்கலந்து அதில் மேற்படி மூத்திரத்தைவிட்டுக்கரைத்து அடுப்பேற்றிக் கொதிக்கவைத்துக் குழம்பானபதத்தில் இறக்கிக் கல்வத்திற்போட்டுக் கெட்டிப்பதமாகிறவரையில் அரைத்து அரை வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்திச் சீசாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க. காலைமாலை இரண்டுவேளையும் ௪௰-நாள், அல்லது ௫௰-நாள் உட்கொண்டுவரின் வெண்குஷ்டரோகம் தீரும்.

## வேறு.

பின் கண்டதுக்கிறபடி பக்குவப்படுத்தின கார்போகரிசிச்சூரணம், கண்டங்கத்திரிச் சூரணம், வேப்பம்வேர்ப்பட்டைச்சூரணம் வேப்பமரப்பட்டைச்சூரணம், வேப்பிலைச்சூரணம் இவை வகைக்குப் பலம்-உ, கருஞ்சீரகப்பொடி பலம் உ, இதனைச் சேர்த்து நன்றாக ஜலத்திற்போட்டு அரைப்பாகமாகக் கண்டவைத்து வடிகட்டின கஷாயம் செல்லத்தக்க அளவு.



செய்முறை:—மேற்படிச்சூரணங்களையெல்லாம் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு அரைமணி நேரம் அரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு மேற்படி கஷாயத்தைச்சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்து அரை வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்திச்சீசாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க. உ-ஐ காலைமாலை இரண்டுவேளையும் நாற்பதுநாள் உபயோகித்துவரின் வெண்குஷ்டரோகம் தீரும்.

## கார்போகரிசிப்பக்குவம்.

கார்போகரிசி தேவையான அளவு, இதனைச் சிவப்புநிறமுள்ள சுத்தசாரியின் மூத்திரத்தில் போட்டு இருபத்தொருநாள் ஊறவைக்கவேண்டும். பிறகு அதனை நெய்த்து மேற்றோலைப்போக்கி நிழலில் உலர்த்திக்கொள்ளவேண்டும். பிறகு இதனை இடித்துச்சூரணமாக்கி வஸ்திரகாயஞ்செய்து கொள்ளவேண்டும்.

## வெண்குஷ்ட மாத்திரை வேறு.

மேற்கண்டபடி பக்குவப்படுத்தின கார்போகரிசிச்சூரணம் பலம்-உ, எள்பலம்-உ, தேன் செல்லத்தக்க அளவு. எள்ளைக்கல்வத்திலிட்டு மைபோலப்பொடித்து மேற்படி சூரணத்தையும் சேர்த்து, அரைமணி நேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு மேற்படி தேனைச்சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்துக்கால் வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொள்க.

பிரமாணம்:—மாத்திரை-க, உ-க காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும். இவ்விதம் நாற்பதுநாள் உபயோகிக்கின் வெண்குஷ்டம் தீரும்.

௸ வேறு

அஜ்மோதா ஓமம், கார்போகரிசி, வாசித்தகரை விதை, தாமரைக்கெட்டைப்பருப்பு இவற்றின் தனித்தனிச்சூரணம் வகை-க க்குப் பலம். உ. இவற்றை கல்வத்திலிட்டு அரைமணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு தேனைச்சிறுகச்சிறுகவார்த்து ஒருசாம நேரமரைத்து ஒரு வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து வைத்துக்கொள்ளவும்.

பிரமாணம்:—மாத்திரை-க, உ. காலைமாலை இரண்டுவேளையும் நாற்பதுநாள் உபயோகிக்கின்வெண்குஷ்டரோகம் தீரும்.

௸ வேறு

பூங்காவி, சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், கார்போகரிசிச்சூரணம் இவை வகை-க-க்குப் பலம் -உ, இஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—கெந்தகத்தைக் கல்வத்திலிட்டுத் தூள்செய்து கொள்ளவும். பூங்காவியையும் அப்படியே தூள்செய்துகொள்க. பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்து எல்லாம் நன்றாக மிஸ்ரமானபின்பு மேற்படி இஞ்சிச்சாற்றைச்சிறுகச் சிறுகவார்த்து ஒருசாம நேரமரைத்து ஒரு வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து, நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.



ஒரு மாத்திரையை எடுத்துத் தூள்செய்து அரை ஆழாக்கு ஜலத்திற்போட்டு இரவு வைத்துக்காலையில் இறுத்து அந்த ஜலத்தைப் பானஞ்செய்துவிட்டு முண்டையை மேனியிற் றேய்த்துக்கொண்டு வெயிலில் உட்கார்ந்திருக்கவேண்டும். உடலெல்லாம் வியர்த்து போனபின்பு எழுந்துவிடவேண்டும். இவ்விதம்தொடர்ச்சியாக [illegible] நாட்கள் செய்துவரின் வெண்குஷ்டரோகம் தீரும். இதனைத் தொடர்ச்சியாகச்செய்துகொண்டேயிருந்தால் வெளுப்பெல்லாம் மாறிச் சுபாவநிறமுண்டாகும்.

பத்தியம்:—புளிப்பு வஸ்துக்கள், வாயுபதார்த்தங்கள் ஆகியவைகளை நீக்கவேண்டியது.

மேற்படி வேறு.

கரு ஊமத்தன் விதை வராகனெடை-௪, இதில் அரைவாசியை வறுத்தும், அரைவாசியை வறுக்காமலும் சேர்த்துக்கொள்ளவேண்டும். கொடிவேலி வேர்ப்பட்டை, மிளகு, இவற்றின் சூரணம் வகை-க க்கு வராகனெடை-௪. ஊமத்தன் விதையைத்தனித்தனியே இடித்துச்சூரணஞ்செய்து கொள்ளவேண்டும். இம் மூன்று வகைச்சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு தண்ணீரைச்சிறுகச் சிறுகவிட்டு ஒருசாம நேரமரைத்து இரண்டு குன்றிமணியெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்திச் சீஷாவில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை க. காலைமாலை இரண்டுவேளையும் நாற்பதுநாள் உபயோகிக்கின் வெண்குஷ்ட

ம், வெண்மேகத்தழும்பு, வெண்மேகப்புள்ளி முதலிய ரோகங்கள் தீரும்.

பத்தியம்:—ஒருவேளை பாலன்னம் சாப்பிடவேண்டியது.

ஷை வேறு.

* கருவங்கபஸ்பம் வராகனெடை-ரு, என்று வராகனெடை-ரு, கார்போகரிச்சூரணம் வராகனெடை-ரு, உலர்ந்த வேப்பிலைச்சூரணம் வராகனெடை-ரு, சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகத்தூள் வராகனெடை-கூ.

செய்முறை:—இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து அரைமணி நேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு தண்ணீரைச்சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்து ஒரு குன்றிமணியெடை மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—மாத்திரை-க.

அனுபானம்:—சர்க்கரை, வெல்லம் ஆகியவைகளாம்.

உபயோகம்:—காலைமாலை இரண்டுவேளையும் நாற்பதுநாள் உபயோகிக்கின் வெண்குஷ்டரோகம், வெண் புள்ளிமேகம் ஆகியவை தீரும்.

## வெண்குஷ்ட தைலங்கள்.

### பெருச்சாளி எண்ணெய்.

பருமனான பெருச்சாளி ஒன்று. இதன் வயிற்றைக்கிறிக் குடல் முதலியவைகளையெல்லாம் நீக்கி

* இதன் முறைகள் அநேகம் எமது அனுபோக வைத்தியசிகாமணியிற் சொல்லப்பட்டிருக்கின்றன.



விட்டுத் தோலையுமுரித்துத் துண்டுதுண்டாகத் துண்டித்து ஐம்பதுபலம் நல்லெண்ணெயிற்போட்டுக்காய்ச்சி மாமிசம் முதலியவைகளெல்லாம் கருகினபதத்தில் இறக்கிவடிகட்டிச்சீசாவில் பத்திரப்படுத்தவும். மெல்லிய வஸ்திரத்தை நாலைந்தாகமடித்து இந்த எண்ணெயில் நனைத்து இராவில் அவசியமான இடத்தில் வைத்துக்கட்டிக்காலையில் அவிழ்த்து வெந்நீரால் கழுவிவிடவேண்டும். இவ்விதம் தொடர்ச்சியாக ஐம்பது நாட்கள் செய்யின் வெண்ணிறமாறித் தேக நிறத்தோடொத்துப்போகும்.

### வெண்குஷ்ட கோஜ்ஜனித்தைலம்.

வாலுழுவைபரிசி தேவையான அளவு. இதனைச் சிவப்புப்பசுவின் மூத்திரத்தில் இருபத்தொருநாள் ஊறவைத்துப்பதமாக உலர்த்தி முறைப்படி குழித்தைலமிறக்கி வெண்குஷ்டத்தின்மீது பூசிவரவேண்டும். இவ்விதம் தொடர்ச்சியாகச் சிலநாட்கள் செய்துவரின் வெண்ணிறம்மாறிச் சுபாவநிறமுண்டாகிவிடும்.

### வெண்குஷ்ட கத்தரியெண்ணெய்.

முத்தல்கத்திரிக்காய் விதை-க. இவற்றைத் துண்டுகளாகத் துண்டித்து எட்டுப்படி ஜலத்தில் போட்டுக்காய்ச்சி ஒருபடியாகச்சுண்டவைத்து இறக்கி வடிகட்டி இதில் அரைவீசை நல்லெண்ணெயைச்சேர்த்துக்காய்ச்சி நீர்சுண்டிக்கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிகட்டி வைத்துக்கொண்டு வெண்குஷ்டத்தின் மீது தொடர்ச்சியாகப் பூசிவருவதால் வெண்ணிறம் மாறிச் சுபாவநிறமுண்டாகும்.

### குறிப்பு.

இதற்கு உண்டான கிரமமான கத்தரிக்காய், அல்லது செங்கிறமான கத்தரிக்காய் மிகவும் சிறந்தது.

### வெண்குஷ்ட பேரிச்சன் தைலம்.

ஐந்துபலம் நல்லெண்ணெயில் ஐந்து பேரிச்சங்காயைச்சிதைத்துப்போட்டு அவையெல்லாம் கரிந்து போனபின்பு எண்ணெயுடன் கல்வத்திற்போட்டு வெண்ணெய் போலரைத்துப்பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும். இதனை அவசியமானவிடத்தில் மேற்பூசி வருவதால் வெண்ணிறம் மாறிச்சுபாவ நிறமாகும்.

### ௸ வேறு.

நல்லெண்ணெய் பலம்-1, விதை நீக்கிச்சுத்தி செய்த பேரிச்சங்காய்-1, இவ்விரண்டையும் சேர்த்துக்காய்ச்சி பேரிச்சங்காய் நன்றாகக்கரிந்து போனபின்பு கல்வத்திற்போட்டு வெண்ணெய் போலரைத்து முடிவில் அரை வராகனெடை இலிங்கத்தைச்சேர்த்து மறுபடியும் அரைத்து நன்றாக மிருதுவானபின்பு வழித்துப் பீங்கான் சிமிழில் வைத்துக்கொள்ளவும். இதனை மேலுக்குப் பூசிவருவதால் வெண்குஷ்டம், வெள்ளைத்தழும்பு, மேகப்பட்டை, புரைரணம் ஆகியவை தீரும்.

### வெண்குஷ்ட மேற்பூச்சுப் பிரயோகங்கள்.

1 கார்போகரிசி, ஊசித்தகரைவிதை, பூங்காவி, இவற்றின் சூரணம் வகைக்குச்சமனெடை. இவற்றைக்கலந்து கல்வத்திலிட்டு, இஞ்சிச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து ஒருசாம நேரமரைத்துப் பீங்கான் சிமிழில் வைத்துக்கொள்க. இதிற் கொஞ்சமெடுத்து



அவசியமான விடத்திற்பூசி அங்கு சற்றுநேரம் வெயிற்படும்படியாகச் செய்யவேண்டும். இவ்விதம் சிலநாட்கள் தொடர்ச்சியாகச்செய்துவந்தால் வெண்ணிறம் மாறிப்போகும்.

### மேற்படி வேறு.

முள்முருக்கின் விதைப்பருப்புச்சூரணம் பலம்-1, ஆறுகா வராகனெடை-10, கந்தகக்காய்புத்தூள் வராகனெடை-5, எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—தூளைப்பொடித்து மற்றச்சரக்குகளையும் சேர்த்து மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து ஒருசாமநேரமரைத்து அரை வராகனெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து உலர்த்தி வைத்துக்கொள்ளவேண்டும். அவசியமானபோது எலுமிச்சம்பழச்சாற்றில் அல்லது தண்ணீரில் இழைத்து மேற்பூசவேண்டும். இவ்விதம் தொடர்ச்சியாகச் சிலநாட்கள் செய்துவரின் வெண்குஷ்டம், மேகத்தழும்பு, படர்தாமரை ஆகியவை தீரும்.

### ௸ வேறு.

கருஞ்சீரகத்தைக்காடியிட்டு வெண்ணெய்போலரைத்துத் தொடர்ச்சியாக மேற்பூசிவர வெண்ணிறம் மாறிப்போம்.

### ௸ வேறு.

நவச்சாரத்தூளைத்தேன்விட்டு வெண்ணெய்போலரைத்து மேற்பூசிவர வெண்குஷ்டம், வெள்ளைத்தழும்பு ஆகியவை தீரும்.

மேற்படி வேறு.

ஆளிவிதைச்சூரணத்தில் காடியைவிட்டு வெண்ணெய் போலரைத்துத் தொடர்ச்சியாக மேற்பூசிவர வெண்குஷ்டம், வெள்ளைத்தழும்பு, வெள்ளைப்புள்ளி ஆகியவை தீரும்.

மேற்படி வேறு.

சீருஞ்சீரகம் வராகனெடை-௧, கார்போகரிசி வராகனெடை-௩, ஊமத்தன்விதை வராகனெடை-௨, எருக்கின்பழுப்பு எண்-௮, மேற்கண்ட சரக்குகளைச் சூரணித்து இவைகளையும் சேர்த்து வெண்ணெய் போலரைத்து வைத்துக்கொண்டு கொஞ்சம் தண்ணீரில் குழைத்து மேற்பூசிவர வெண்ணிறம் மாறிச்சுபாவநிறமுண்டாகும்.

மேற்படி வேறு.

தவசிமுருங்கையிலை, முள்ளங்கிவிதை இவ்விரண்டையும் சேர்த்து ஜலம்வார்த்து வெண்ணெய் போலரைத்து வைத்துக்கொண்டு மேற்பூசிவர வெண்ணிறம் மாறிப்போம்.

ஷை வேறு.

ஆட்டுநீர்க்குண்டிக்காயை நான்குதுண்டுகளாகச் செய்து கெந்தகப்பொடியை அதன்மீது தூவி இரும்புக்கம்பியில் கோர்த்துக்கொண்டு கரிநெருப்பில் வாட்டினால் ஜலம்வடியும்; அந்த ஜலத்தைச்சேகரித்து வைத்துக்கொண்டு மேற்பூசிவர வெண்குஷ்டம், வெண்மேகத்தழும்பு ஆகியவை தீரும்.

மேற்படி வேறு

புளியங்கொட்டைப்பருப்பு, கார்போகரிசி, இவ்விரண்டையும் சேர்த்து ஜலம்வார்த்து வெண்ணெய்

199



போலரைத்துச்சலத்தைவிட்டுக் குழப்பிக் குழம்புப்பதமாக வைத்துக்கொண்டு ஒரு குச்சியால் எடுத்து அவசியமானவிடத்தில் பூசிவர வெள்ளைநிறம் மாறிச் சுபாவ நிறமுண்டாகும்.

மேற்படி வேறு.

கறிமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், நெல்லிமுள்ளி, கொம்பரக்கு, நெல்லிக்காய்க்கெந்தகம், ஊசித்தகரைவிதை, இவற்றின் சூரணம் வகைக்கு வராகனெடை-௩, இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து ஒருமணி நேரமரைத்து நன்றாக மிருதுவானபின்பு தண்ணீர்விட்டு வெண்ணெய் போலரைத்து இதனை மேற்பூசிவர வெண்மேகத்தழும்பு, வெள்ளை மேகப்புள்ளி ஆகியவை தீரும்.

மேற்படி வேறு

தாளகத்தூள், பூநீறு இவை வகைக்கு வராகனெடை-௨. இவற்றைச் சேர்த்தரைத்து நன்றாக மிருதுவானபின்பு சிறுநீரைச்சிறுகச் சிறுகவிட்டு ஒருசாம நேரமரைத்துப் பின்கான் சிமிழில் வைத்துக் கொள்ளவும். இதனைச்சிறுநீரிற் குழைத்து மேற்பூசிவர வெண் மேகத்தழும்பு, வெண்ணிறம் ஆகியவை தீரும்.

ஷை வேறு.

மஞ்சிஷ்டி, கொடிவேலி வேர்ப்பட்டை, எள், பூங்காவி, இவை வகைக்குச்சமனெடை. இவற்றுள் பொடிக்கவேண்டியவைகளைப் பொடித்து மற்றவைகளையும் ஒன்றாகச்சேர்த்து ஒருமணி நேரமரைத்து நன்றாகமிருதுவானபின்பு காடியைவிட்டு வெண்ணெய்

போலரைத்து எடுத்து வைத்துக்கொண்டு மேற்பூசிவர வெள்ளைப்புள்ளி, வெள்ளைத்தழும்பு ஆகியவை தீரும்.

௬௨. வேறு.

முள்ளங்கிவிதைத்தூள், கொடிவேலி வேர்ப்பட்டைச்சூரணம், சின்னராஷ்டச்சூரணம், நெல்லிமுள்ளிச்சூரணம் இவை வகைக்கு வராகனெடை-௧. இவற்றைக் கல்வத்திலிட்டு ஒருமணி நேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு காடியைச்சிறுகச் சிறுகவார்த்து வெண்ணெய்ப் போலரைத்துப் பீங்கான் சிமிழில் வைத்துக்கொண்டு அதற்குரியபாகமான இடத்திற் பூசிவர வெள்ளைப்புள்ளி, வெள்ளைத்தழும்பு ஆகியவை மாறிப்போம்.

சுண்ணாம்பு பங்கு ஒன்று, நீறுபங்கு ஒன்று, இவ்விரண்டையும் சேர்த்துத் தண்ணீர்விட்டு வெண்ணெய்ப் போலரைத்து வைத்துக்கொண்டு வெண்ணிறமாயிருக்கிற இடத்தில் கொஞ்சமெடுத்துப்பூசி அது காய்ந்தவுடன் சற்று கெட்டித்துணியால் அழுத்தித் தேய்த்து நீக்கவேண்டும். மறுபடியும் முன்போல் பூசிக் காய்ந்தபின்பு முன்போல் அழுத்தித்தேய்த்து நீக்க வேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்வதால் அங்குள்ள சர்மம் சின்னஞ்சிறுமொக வந்துவிடும் அங்குசிவந்து தாபிதமாகிவிடும். அங்கு நல்லெண்ணெய் தடவிவருவதால் தாபிதந்தீர்ந்து சுபாவநிறமுண்டாகிவிடும். இது ஒருவகை முரட்டுச்சிகிச்சை.

௬௩. வேறு.

கார்போகரிசி தேவையான அளவு. இதனைத் தயிரில் மூன்றுநாள் ஊறவைத்து உலர்த்திச் சூரணித்



போட்டு முறைப்படி குழித்தைலமிறக்கி அதிற்கொஞ்சம் கந்தகத்தைப் பொடித்துப்போட்டுக் கலக்கி வைத்துக்கொண்டு மேற்பூசிவருவதால் வெண்ணிறம், வெண்புள்ளி ஆகியவை மாறிப்போம்.

மேற்படி வேறு.

காக்குப்பூச்சியை ஒருபாத்திரத்திற்போட்டு வாய்பந்தனம்செய்து பூமியில்புதைத்து இரண்டொருமாதம்சென்று எடுத்தால் எல்லாம் மண்ணைப்போலிருக்கும். இதிற்கொஞ்சமெடுத்துக் காடியில் அல்லது தண்ணீரிற்குழைத்து மேற்பூசிவர வெண்ணிறம், வெண்புள்ளி ஆகியவை மாறிப்போம்.

மேற்படி வேறு.

கருஞ்சீரகத்தைக் காடிவிட்டு வெண்ணெய்ப்போலரைத்து எடுத்து வைத்துக்கொண்டு மேற்பூசிவர வெண்குஷ்டம் மாறிப்போம்.

மேற்படி வேறு.

புகையிலைவிதையைச் செக்கில் ஆட்டியெடுத்த தைலத்தை மேற்பூசிவரச் சின்னாள்களுக்குள் வெண்ணிறம்மாறிச் சுபாவநிறமுண்டாகிவிடும்.

௬௪. வேறு.

வாலுழுவைச்சருகைச் சுட்டெரித்த சாம்பல் பங்கு-௪. மிருதார்சிங்கித்தூள் பங்கு-௧. நல்லெண்ணெய் பங்கு-௧௦. முன் இரண்டையும்சேர்த்தரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு எண்ணெயைவிட்டு மூன்றுமணிநேரம் அரைத்து வழித்துப் பீங்கான்சிமிழில் வைத்துக்

கொண்டு மேற்பூசிவர வெண்குஷ்டம், வெள்ளைமேகப்புள்ளி ஆகியவை மாறிப்போகும்.

மேற்படி வேறு.

கடுகெண்ணெயை மேற்பூசி வருவதனாலும் வெண்ணிறம் மாறிப்போம்.

ஷை வேறு.

பேயத்திவேர்ப்பட்டைச்சூரணம், கார்போகரிசிச்சூரணம், வெண்காரத்தூள், புளி இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து அரைமணிநேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு தண்ணீரைச் சிறுகச்சிறுகவிட்டு வெண்ணெய்போலரைத்து எடுத்து வைத்துக்கொண்டு மேற்பூசிவர வெண்குஷ்டம், வெண்புள்ளி ஆகியவை தீரும்.

ஷை வேறு.

முள்ளங்கிவிதைத்தூள் வராகனெடை-௧௦ தவசிமுருங்கைவேர்ப்பட்டைச் சூரணம், கோஷ்டச்சூரணம் இவை வகைக்கு வராகனெடை - ௨. இவற்றை ஒன்றாகச்சேர்த்து அரைமணிநேரமரைத்து நன்றாகமிஸ்ரமானபின்பு பழங்காடியைவிட்டு வெண்ணெய்போலரைத்து மேற்பூசிவர வெண்குஷ்டம், வெள்ளைத்தழும்பு ஆகியவைதீரும்.

படர்தாமரைச் சிகிச்சை.

இது சருமத்தைப்பற்றினரோகம். இதனையும் ஒருவகைக் குஷ்டம் என்கிறார்கள். இதில் அரிப்பு அதிகமாக இருக்கும். சனத்தைப்பற்றிவிட்டால் அசாத்தியமாகமுடியும். இது, மண்டல் அதிகப்படுவதாலும், இரத்தக் கொதிப்பினாலுமுண்டாகும். ஆரம்பத்தில்



பேதிக்குக்கொடுத்து அர்நீரை வெளிப்படுத்தவேண்டும். அட்டையைவிட்டு இரத்தமும் வாங்கலாம். பிறகு கீழ்க்காணும் சிகிச்சைகளைச் செய்யலாம்.

படர்தாமரை உசிதம்.

இதனைச் சொறிந்துவிட்டு நெய்யைப்பூசிச் சுண்ணாம்புநீரை வஸ்திரகாயஞ்செய்து இதன்மீது தெளித்து வைக்கவேண்டும். ஆறுமணிநேரம் சென்றபின்பு வெந்நீரைவிட்டுக் கழுவிவஸ்திரத்தால் துடைத்து முன்போற்சொறிந்து நெய்யைப்பூசிச் சுண்ணாம்புநீரைத் தெளித்துவைக்கவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்துவரின் படர்தாமரைரோகம் தீரும்.

மேற்படி வேறு.

புளியங்கொட்டையை எலுமிச்சம்பழச்சாற்றில் இழைத்துப் படர்தாமரையின்மீது போட்டுவர அது உதிர்ந்துபோகும்.

ஷை வேறு.

தவசிமுருங்கையிலையைக் காடிவிட்டரைத்து படர்தாமரையீது பூசிவரப் பட்டையாக உதிர்ந்துபோகும்.

ஷை வேறு.

கொட்டிக்கிழங்கை எலுமிச்சம்பழச்சாற்றைவிட்டு வெண்ணெய்போலரைத்துப் பூசிவர மேற்படி வியாதி தீரும்.

ஷை வேறு.

பத்திராஞ்இலை ஒருபங்கு, உப்பு ஒருபங்கு இவ்விரண்டையும்சேர்த்து வெண்ணெய்போலரைத்துமேற்பூசிவர அது தீரும்.

மேற்படி வேறு.

தளிர எலுமிச்சம்பழச்சாற்றை, அதைச்சொறிந்து அதன்மீது பூசவேண்டும். இவ்விதம் தினம் இரண்டு மூன்றுதடவைகள் செய்துவரின் அதுபட்டு [illegible]ந்து போகும்.

மேற்படி வேறு.

முள்ளிக்கீரைவேரை எலுமிச்சம்பழச்சாற்றில் வெண்ணெய்போலரைத்துப் பூசிவருவதாலும் அது உதிர்ந்துபோகும்.

இதன் இலையை மேற்கண்டவாறு அரைத்துப் பூசுவதனாலும் அது உதிர்ந்துபோகும்.

ஷை வேறு.

கருஞ்சீரகத்தைக் காடியைவிட்டு வெண்ணெய் போலரைத்துப் பூசிவருவதனாலும் படர்தாமரை தீரும்.

மேற்படி வேறு.

ஊசித்தகரைவேர்ப்பட்டையை எலுமிச்சம்பழச்சாற்றைவிட்டு வெண்ணெய்போலரைத்துப் பூசிவரப் படர்தாமரை தீரும்.

மேற்படி வேறு.

கோதுமைத்தயிலத்தை மேற்பூசி வருவதனாலும் மேற்படிரோகம் தீரும்.

கோதுமையை ஜலத்திற்போட்டுக்கழுவி இராவில் காற்றுபடவைத்துக் காலையில் சமமான கல்லின்மீது வைத்து இரும்பைப் பழுக்கக்காய்ச்சிக் கோதுமையி



ன்மீதுவைத்து அழுத்தினால் ஒருவித தைலம் வெளிப்படும். இதுவே கோதுமைத் தைலமாம்.

ஷை வேறு.

சரக்கொன்றையிலையை அரைத்துப் பூசிவருவதனாலும் மேற்கண்டரோகம் தீரும்.

சரக்கொன்றைக்காய்க்குள்ளிருக்கும் சதையை எடுத்து ஜலத்தைவிட்டு அரைத்துப் பூசிவர மேற்படி வியாதி தீரும்.

ஷை வேறு.

முள்ளங்கிவிதையை எலுமிச்சம்பழச்சாற்றைவிட்டு வெண்ணெய்போலரைத்து மாத்திரைகளாகச்செய்து உலர்த்திவைத்துக்கொண்டு எலுமிச்சம்பழச்சாற்றில் அல்லது தண்ணீரில் இழைத்துப்பூசிவர மேற்படி வியாதி தீரும்.

ஷை வேறு.

எட்டிக்கொட்டையைக் காடியைவிட்டிழைத்துப் பூசிவருவதனாலும் மேற்படி வியாதிதீரும்.

மேற்படி வேறு.

ஆட்டுமுறாகிலுள்ள ஞமேனாக்கொடியை எடுத்து வைத்துத் தேய்த்துவரப் படர்தாமரை, சொறி ஆகியவை தீரும்.

ஷை வேறு.

அத்திப்பாலைப் படர்தாமரையின்மீது தேய்த்து வருவதனாலும் அந்த வியாதி தீரும்.

ஷை வேறு.

மனோசிலையைப்பொடித்து ஜலத்தைவிட்டுவெண்ணெய்போலரைத்துப் பூசிவருவதனாலும் மேற்படிவியாதி தீரும்.

ஷை வேறு.

வஜ்ஜிரத்தைத் தண்ணீரில்இழைத்துப் பூசவும். அது வெளிப்படுகிறவரையில் அதைவிடாது.

மேற்படி வேறு.

இரசத்தைக் காடிவார்த்து வெண்ணெய்போலாகிறவரையில் அரைத்துப் பூசிவர அது உதிர்ந்துபோகும்.

ஷை வேறு.

மருதோன்றியிலையைக் காடிவிட்டு வெண்ணெய்போலரைத்துப் பூசிவரப் படர்தாமரை தீரும்.

மேற்படி வேறு.

இலவங்கப்பாளத்தைப் பொடித்துக் காடியைவிட்டு வெண்ணெய்போலரைத்துப் பூசிவரப் படர்தாமரை தீரும்.

ஷை வேறு.

வேப்பிலையை வெண்ணெய்போலரைத்துத் தயிரில்குழைத்துப் பூசிவரப் படர்தாமரை தீரும்.

ஷை வேறு.

மாசிக்காய்த்தோல் ஒருபங்கு. (இதனை மைபோலரைத்துக்கொள்ளவேண்டும்.) வடிகட்டின சுண்ணாம்புநீர் ஒன்றரைப்பங்கு. இவ்விரண்டையுங்கலந்து நாலுபங்கெடை ஜலத்திற்போட்டு ஓரிரவு ஊறவைத்துக்காலையில் மேற்றெளிவை எடுத்துப்படர்தாமரை



யைச் சொறிந்துவிட்டு மேற்பூசவேண்டும். ஒருதடவை எடுத்தஜலத்தைப் பலதடவைகள் உபயோகிக்கலாம். இவ்விதம் சிலதடவைகள் செய்யின் படர்தாமரைபட்டு உதிர்ந்துபோகும்.

இதனைச் சற்று பலமாகச்செய்துகொள்ளவேண்டுமானால் சாக்கிற்கு மூன்றுபங்கு அல்லது இரண்டுபங்குஜலத்தைச்சேர்த்துச் செய்துகொள்ளவும்.

மேற்படி வேறு.

எருக்கின்பூ ஒருபங்கு. ஊசித்தகரைவிதைச்சூரணம் ஒருபங்கு. இவ்விரண்டையுஞ்சேர்த்து வெண்ணெய்போலரைத்துத் தயிரிற்குழைத்துப் பூசிவரப் படர்தாமரைச்சொறி, படர்தாமரை ஆகியவைதீரும்.

ஷை வேறு.

கரிமஞ்சளைச்சுட்டுக் கரியாக்கிப் பொடித்தசூரணம் ஒருபங்கு, சுண்ணாம்புநீர் ஒருபங்கு, வெற்றிலை ஒருபங்கு. இம்மூன்றையுஞ்சேர்த்து ஜலம்வார்த்து வெண்ணெய்போலரைத்துப் படர்தாமரையைச் சொறிந்து அதன்மீது பூசிவர அது தீரும்.

மேற்படி வேறு.

முள்முருக்கின் கொட்டைச்சூரணம், காய்ச்சுக்கட்டிச்சூரணம் இவ்விரண்டும் சமஎடை. இவற்றைத் தண்ணீர்விட்டு வெண்ணெய்போலரைத்து மாத்திரைகளாகச்செய்து உலர்த்திவைத்துக்கொண்டு காடியில் அல்லது எலுமிச்சம்பழச்சாற்றில் இழைத்துத் தேய்த்துவரப் படர்தாமரை தீரும்.

ஷை வேறு.

நெல்லிமுள்ளி, செஞ்சந்தனம், ஆவாரம்பிசின் வெள்ளைக்குங்கிலியம், வெண்காரம், காய்ச்சுக்கட்டி இவற்றின்சூரணம் வகைக்குச் சமனெடை. இவற்றை ஒன்றாகக்கலந்து எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டு வெண்ணெய்போலரைத்து மாத்திரைகளாகச்செய்து நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு தண்ணீரில் அல்லது காடியில்இழைத்துப்பூசிவரப் படர்தாமரை தீரும்.

மேற்படி வேறு.

ஊசித்தகரைவிதையை ஜலத்திற்போட்டு ஊறவைத்து நன்றாக ஊறினபின்பு வெண்ணெய்போலரைத்துப் படர்தாமரையின்மீது பூசி ஆறுமணிநேரஞ்சென்று வெந்நீரைவிட்டுக்கழுவி மறுபடியும் முன்போற் பூசவேண்டும். சொறியின்மீதும் இவ்விதம் செய்யலாம். இவை தேகமுழுவதிலும் இருந்தால் இதனைத்தேய்த்துச் சற்றுநேரம் தாமதித்து வெந்நீர்ஸ்நானஞ்செய்யவும். இவ்விதம் சிலதடவைகள் செய்யின், படர்தாமரை, வறட்டுச்சொறி ஆகியவை தீரும்.

மேற்படி வேறு.

பூநீற்றைப்பொடித்து வஸ்திரகாயஞ்செய்து ஆறுதடவை தண்ணீரால் கழுவினநெய்யுடன் மிஸ்ரமித்து மேற்பூசிவரப் படர்தாமரை, சொறி ஆகியவை தீரும்.

மேற்படி வேறு.

வெண்சந்தனத்தூள், வெண்காரத்தூள், அபின் இவை வகைக்குச் சமனெடை. இம்மூன்றையும் எலு



மிச்சம்பழச்சாற்றைவிட்டு வெண்ணெய்போலரைத்துப் படர்தாமரையைச்சொறிந்து அதன்மீது பூசிவர அது உதிர்ந்து தலையெடுக்காமற்போகும்.

மேற்படி வேறு.

ஊசித்தகரைவிதைச்சூரணம் பங்கு-௩. பூநீற்றுத்தூள் பங்கு-௨. மாவுப்பு பங்கு-௪. இவற்றையொன்றாகக்கலந்து காடியைவிட்டு வெண்ணெய்போலரைத்து வைத்துக்கொள்ளவும். எருமைக்கன்றின் சாணத்தால் தட்டினவறட்டித் துண்டினால் படர்தாமரையைச்சொறிந்துவிட்டு அதன்மீது முன்மருந்தைப் பூசவேண்டும். இவ்விதம் தினம் இரண்டுமூன்றுதடவைகள் செய்யின் மூன்றுஅல்லது நான்குநாளைக்குள் படர்தாமரை எடுபட்டுப்போகும்.

ஷை வேறு.

ஊசித்தகரைவிதைச்சூரணம், நெல்லிமுள்ளிச்சூரணம், காய்ச்சுக்கட்டிச்சூரணம் இம்மூன்றையுங்கலந்து தயிர்த்தண்ணீரைவிட்டுவெண்ணெய்போலரைத்துப் படர்தாமரையைச்சொறிந்து அதன்மீது பூசவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்துவரின் படர்தாமரை தீரும்.

ஷை வேறு.

வங்கசெந்தூரம், கெந்தகம், மஞ்சட்சூரணம், மிளகுச்சூரணம், வெண்காரத்தூள் இவைவகைக்குச் சமனெடை. இவற்றை ஒன்றாகக்கலந்து அரைமணிநேரம் அரைத்து நன்றாகமிஸ்ரமானபின்பு நெய்யைவிட்டு அரைமணிநேரமரைத்துத் தினம் இரண்டுமூன்றுதடவை பூசிவரப் படர்தாமரை தீரும்.

மேற்படி வேறு.

சுத்திசெய்த இரசம், சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம், மயில்துத்தத்தூள், வெண்காரத்தூள் இவ்வகைக்குச் சமனெடை. இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு மற்ற இரண்டையும்சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றைச்சிறுகச் சிறுகவார்த்து வெண்ணெய்போலரைத்து வைத்துக்கொண்டு படர்தாமரையைச்சொறிந்து அதன்மீது பூசவேண்டும். இவ்விதம் தினம் இரண்டு அல்லது மூன்றுதடவைகள் செய்துவரின் படர்தாமரை தீரும்.

மேற்படி வேறு.

வெள்ளைக்குங்கிலியத்தூள், கெந்தகத்தூள், வெண்காரத்தூள், குராசாணி ஓமச்சூரணம் இவ்வகைக்குச்சமனெடை. இவற்றை ஒன்றாகக்கலந்து தண்ணீர்விட்டு வெண்ணெய்போலரைத்து மாத்திரைகளாகச்செய்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இதனை எலுமிச்சம்பழச்சாற்றில் அல்லது தண்ணீரில் இழைத்து மேற்பூசிவரப் படர்தாமரைரோகம் தீரும்.

மேற்படி வேறு.

மிருதார்சிங்கித்தூள், கெந்தகத்தூள், நவச்சாரத்தூள், வெண்காரத்தூள், மாசக்காய்ச்சூரணம், மிளகுச்சூரணம், கத்தைக்காம்புச்சூரணம், அபின், ஆவாரம்பிசின்தூள் இவை வகைக்குச் சமனெடை. இவற்றை ஒன்றாகக்கலந்து எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து வெண்ணெய்போலரைத்து மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்



டு தண்ணீரில் அல்லது எலுமிச்சம்பழச்சாற்றில் இழைத்துப் பூசிவரப் படர்தாமரைரோகம் தீரும்.

மேற்படி வேறு.

உழமண்ணை வஸ்திரகாயஞ்செய்து தண்ணீர்விட்டு வெண்ணெய்போலரைத்துப் படர்தாமரையின்மீது பூசினால் அது தீரும்.

ஷை வேறு.

முள்ளங்கிவிதையைத் தூள்செய்து சித்தாவிலைச்சாற்றைவிட்டு வெண்ணெய்போலரைத்து மாத்திரைசெய்து உலர்த்திவைத்துக்கொண்டு தண்ணீரில் இழைத்து மேற்பூசிவரப் படர்தாமரை தீரும்.

அக்கிரோகச் சிகிச்சை.

இது இரத்தத்தில் அதிகக் கொதிப்புக்கண்டு அதிக தீக்ஷணியத்தால் உண்டாகிறது. இன்னும் கபசத்து அதிகப்படுவதனாலும் உண்டாகும். இதில் அதிக தீக்ஷணியமான பேதியை உபயோகிக்கலாகாது. இரத்தக்கொதிப்பைச் சாந்தப்படுத்தும் அவுடதங்களை உபயோகிக்கவேண்டும். இதற்குச் சாதாரணமாகத் தட்டையானிடத்திற்போய்ப் பூங்காவினுள் உலாத்திக்கொண்டுவருவது விட்டுவழமை. காவியானது இரத்தக்கொதிப்பைச் சமப்படுத்தத் தகுந்ததேயாம்.

அக்கிரோக உசிதம்.

கொன்றைக்காய்வேளை சமூலம் வராகனெடை-உ. இதனை அரைஆழாக்கு ஜலத்திற்போட்டு அரையபாகமாகக்கண்டவைத்துப் பானஞ்செய்விக்கவேண்டும்.

இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் சிறுவர்களுக்குண்டாம் அக்கிரோகம் தீரும்.

பெரியவர்களுக்கானால் ஐந்து வராகனெடை சேர்த்துக்கொள்ளலாம்.

௸ வேறு.

இரசாஞ்சனச்சூரணம் குன்றிமணியெடை-௧, இதனை வெண்ணெயிற் குழைத்துக் கொடுக்கவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் சிறுவர்கள் அக்கிரோகம் தீரும்.

அக்கிரோக ஊறற்கஷாயம்.

செஞ்சந்தனத்தூள், மருதோன்றியிலை, கொத்துமல்லிவிதை இவை வகை-௪-க்கு வராகனெடை-௪, ஆத்திப்பூ வராகனெடை-௨, இவற்றைச்சிதைத்து ஏழுபாகமாக்கி ஒருபாகத்தை அரை ஆழாக்கு ஜலத்திற்போட்டு ஆறுமணிநேரம் வைத்திருந்து பிறகு பிசைந்து வடிகட்டிக்குடிப்பாட்டவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் சிறுவர்கள் அக்கிரோகம், இரத்தக்கொதிப்பு ஆகியவை தீரும்.

மேற்படி வேறு.

தாமரைப்பூ, காசினிவிதை, சீமையிலந்தைப்பழம், (உன்னாப்) ஆலுபுகாரா, கொட்டைநீக்கின புளி இவை வகை-௪-க்கு வராகனெடை-௩. இவற்றைச்சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு நன்குகப் பிசைந்து அசையாமல் வைத்துவிடவேண்டும். காலையில் தெளிவையிறுத்துக் கொஞ்சம் சர்க்கரை சேர்த்துப்பானஞ்செய்யவேண்டும். கூடுமானால் ஆறு



வராகனெடை சீமையிலந்தைப்பழ ஷர்பத்தைச் சேர்த்துப்பானஞ்செய்வதால் அதிகப்பிரயோசன முண்டாகும். இவ்விதம் காலைந்துநாள் செய்யின் பெரியவர்கள் அக்கிரோகம் தீரும்.

சிறுவர்களுக்கானால் அளவைக்குறைத்துக்கொள்ளவும்.

௸ வேறு.

ரோஜாப்பூ, தாமரைப்பூ, செஞ்சந்தனத்தூள், வெண்சந்தனத்தூள், விதை நீக்கின சீமையிலந்தைப்பழம், ஆரா, காசினிவிதை இவை வகை-௧-க்கு வராகனெடை-௧௰, இவற்றைச்சிதைத்து ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு ஆறுமணிநேரம் சென்று தெளிவையிறுத்து ஆறு வராகனெடை சீமையிலந்தைப்பழ ஷர்பத்தைச் சேர்த்துப்பானஞ் செய்யவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் பெரியவர்கள் அக்கிரோகம் தீரும்.

பத்தியம்:—இந்த ரோகிகளுக்கு யவையரிசிக்கஞ்சி, கிச்சடிச்சாதம், சுரைக்காய், காருக்கீரை, காசினிக்கீரை, பாலக்கீரை, பச்சைப்பயற்றம் பருப்பு ஆகியவைகள் அதிகம் ஏற்றது.

அக்கிரோக மாத்திரை.

[illegible]ங்காவி, செஞ்சந்தனத்தூள், பிரமதண்டிவேர், அவுரியிலை, கொத்துமல்லிவிதை, சிவகரந்தையிலை இவை வகைக்கு வராகனெடை-௩, மலைவேப்பிலை, வேப்பிலை இவை வகைக்கு எண்ணில்-௫, மருதோன்றியிலை வராகனெடை-௧௰, பிளாச்சூரணம், சாமக்கட்டித்தூள் வகைக்கு வராகனெடை-௰.

செய்முறை:—மருதோன்றியிலையையும் கொத்துமல்லிவிதையையும் இடித்து, ஒரு ஆழாக்கு ஜலத்திற்போட்டு இரவு முழுவதுங் காலையிற் பிசைந்து பிறகு தெளியவைத்து அந்தத் தெளிவையிறுத்து வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு மேற்கண்டவைகளில் இலைகளைக் கல்வத்திற்போட்டு வெண்ணெய் போலரைத்து மற்றவைகளையும் ஒன்றாகக்கலந்து அதிற் சேர்த்து அரைமணி நேரமரைத்து நன்றாக மர்த்தனமான பின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற ஜலத்தைச் சிறுகச் சிறுகவிட்டு ஒரு சாம நேரமரைத்து அரைக்குன்றிமணியெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

பிரமாணம்:—சிறுவர்களுக்கு மாத்திரை-க, பெரியவர்களுக்கு மாத்திரை-உ, காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—அக்கிரோகம், அக்கிரோகத்திலுண்டாகும் சுரம், எரிவந்தம், அர்ப்பலம் ஆகியவை தீரும்.

௨. வேறு.

—ஜாதிக்குசனக்குரணம், மிளகுசூரணம், அபினி, வேப்பிலை, காட்டுக்கொள்பருப்பு, கலியாணமுருங்கிவிதைப்பருப்பு இவை வகைக்கு வராகனெடை-க.

செய்முறை:—பருப்புவகைகளைக் கல்வத்திலிட்டு வெண்ணெய் போலரைத்து மற்றச்சூரணங்களையும் ஒன்றாகக்கலந்து அரைமணி நேரமரைத்து ஜலத்தைச்



சிறுகச் சிறுகவார்த்து ஒருமணி நேரமரைத்துக் காற்குன்றிமணியெடையுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

பிரமாணம்:—சிறுவர்களுக்கு மாத்திரை-க, பெரியவர்களுக்கு மாத்திரை-உ, ௩. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

அநுபானம்:—சிறுவர்களுக்கு அவரவர்களின் தாய்ப்பால்; மற்றவர்களுக்குத் தனப்பால்.

உபயோகம்:—அக்கிரோகம், அக்கிரோகத்திற் காணும் சுரம், எரிவந்தம் முதலியவை தீரும்.

அக்கிரோக மேற்பூச்சு.

சதாபிலையைக்காடிவிட்டு வெண்ணெய் போலரைத்து ரோஜாப்பூ எண்ணெயிற் குழைத்துப்பூசிவர அக்கிரோகம் தீரும்.

சொறிரோகச்சிகிச்சை.

இது வறட்டுச்சொறி, நைப்புச்சொறியென இருவகைப்படும். இது சருமத்தைப்பற்றினரோகம். இது, உஷ்ணக்ஷோபம் அதிகப்படுவதனாலும், மண்டலசத்து அதிகப்படுவதனாலும் இரத்தங்கெட்டுப் பெரும்பான்மையும் உண்டாகிறது. இந்த வியாதியில் தினந்தோறும் ஸ்நானஞ்செய்து தேகத்தைச்சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டியது பிரதானம். இன்னும் ஸ்திரீசங்கமம், மிளகாய், கத்தரிக்காய், நல்லெண்ணெய், உப்பு, உப்புசம்பந்தமான வஸ்துக்கள், ஆகியவைகளை நீக்கிவைக்கவேண்டியது, பிரதிதினமும் தொடர்ச்சி

யாகத் தாராத் திரிபலாதியை உபயோகித்துவரவேண்டும். பிறகு பின்கானும் சிகிச்சைகளையும் செய்துவரலாம்.

### சொறிரோக உசிதம்.

கொட்டைநீக்கின புளி பலம்-க, இதனை ஒன்றரை ஆழாக்கு ஜலத்திற் கரைத்து இரவில் ஊறவைத்துக்காலையில் தெளிவையிறுத்துப் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் சிலநாட்கள் தொடர்ச்சியாகச் செய்துவரின் இரத்தத்திலுள்ள தோஷங்கள் நீங்கிச் சொறிரோகம் தீரும்.

### ஷை வேறு.

ஐந்துபலம் புளியைஒருபடி ஜலத்திற் கரைத்து வைத்துத் தெளிவையிறுத்துச் சமனெடை சர்க்கரையைச்சேர்த்து ஷர்பத்தாகச்செய்து வைத்துக்கொண்டு ஒன்றரைப்பலம்வீதம் ஆரவிலைக்கஷாயத்துடன் பானஞ்செய்துவருவதாலும் சொறிரோகம் தீரும்.

### மேற்படி வேறு.

பசுவின்பால் பலம்-க௨, காடிஷர்பத் பலம்-௨. இவ்விரண்டையும் கலந்து தக்ஷணம் பானஞ்செய்யவேண்டும். இவ்விதம்சிலநாட்கள் செய்துவரின் வறட்டுச்சொறிதீரும்.

### சொறிஊறற் கஷாயம்.

நிலவேம்பு, தாரா, பிஞ்சுக்கடுக்காய், இவை வகைக்கு வராகனெடை-௫, இவற்றைச்சிதைத்து ஆறுமணிநேரம் தண்ணீரில் ஊறவைத்து வெண்ணெய்போலரைத்து ஜலத்திற்கரைத்து வடிகட்டிப்பானஞ்செய்யவேண்டும். இவ்விதம் சிலநாட்கள் செய்துவரின் வறட்டுச்சொறிதீரும்.



### ஷை வேறு.

சுத்திசெய்த நெல்லிக்காய்க்கெந்தகத்தூள், கஸ்தூரி மஞ்சட்சூரணம் கார்போகரிசிச்சூரணம், இவை வகைக்கு வராகனெடை-௨௰, தாளசமூலச்சூரணம் வராகனெடை-௫, இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து அரைமணி நேரமரைத்து மூன்றுபாகமாகச் செய்து ஒருபாகத்தை ஒரு ஆழாக்கு ஜலத்திற் போட்டு ஓரிரவு ஊறவைத்துக்காலையில் வடிகட்டிப்பானஞ்செய்து அடியிலிருக்கும் திப்பியை நல்லெண்ணெயிற் குழப்பித்தேகத்தின்மீது பூசிச்சற்றுநேரமிருந்து அரைப்பிட்டுவெந்நீரில் ஸ்நானஞ்செய்துவிடவேண்டும். இவ்விதம் மூன்றுநாட்கள் செய்யின் சொறிரோகம் தீரும்.

### சொறிரோக ஹல்வா.

மஞ்சட்கடுக்காய்த்தோல், கருந்துக்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, பிஞ்சுக்கடுக்காய், உலர்ந்தின கொள்ளுக்காய் வேளையிலை இவற்றின் சூரணம் வகை-க-க்கு, வராகனெடை-௨, அபின் வராகனெடை-௨, தாளசமூலச்சூரணம் வராகனெடை-௰, சர்க்கரை பலம் ௭௨.

செய்முறை:—மூன் சூரணங்களையெல்லாம் ஒன்றாகக்கலந்து நெய்யைத்தெளித்து நெய்ப்பசையுண்டாக்கி வைத்துக்கொள்க. அபினைக்கல்வத்திலிட்டுக் கொஞ்சம் ஜலம்விட்டு வெண்ணெய்போலரைத்து முன் சூரணத்தைச் சிறுகச் சிறுகச் சேர்த்து ஒன்றாக

மிஸ்ரமித்துக் கொள்ளவேண்டும். பிறகு சீனிசர்க்கரையைப்பாகுசெய்து பாகுபதத்தில் முன் சூரணத்தைச் சிறுகச் சிறுகத்தூவி நன்றாகக்கிண்டிக்கிளறிக்கீழிறக்கி ஆறினபின்பு பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-ரு, அ. காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும்.

உபயோகம்:—வறட்டுச்சொறி, கைப்புச்சொறி ஆகியவை தீரும்.

ஷை வேறு.

பிஞ்சுக்கடுக்காய்ச்சூரணம் பலம்-உ௦, அபின் வராகனெடை-ரு, சீனிசர்க்கரை பலம்-௬௦, கடுக்காய்ச்சூரணத்தில் அபினைச்சேர்த்து நன்றாக மிஸ்ரமாகும் வரையில் அரைத்து எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். சீனிசர்க்கரையைப்பாகுசெய்து பாகுபதத்தில் மேற்படி சூரணத்தைச்சிறுகத்தூவி நன்றாகக்கிண்டிக்கிளறிக்கீழிறக்கி ஆறினபின் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

பிரமாணம்:—வராகனெடை-வ, முதல்-உ, காலைமாலை இரண்டுவேளையும் உபயோகிக்கலாம்.

உபயோகம்:—கைப்புச்சொறி தீரும். இரத்தத்திலுள்ள உவர்ப்புக்கபம் நீங்கி அது சுத்தப்படும்.

சொறிரோக மாத்திரை.

மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, வாய்விளங்கம், இவற்றின் சூரண



ம் வகைக்கு-க-க்கு வராகனெடை-௪, சுத்திசெய்த சிவதை வேர்ச்சூரணம் வராகனெடை-அ.

செய்முறை:—இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து தண்ணீரைவிட்டு ஒருசாம நேரமரைத்து ஒரு வராகனெடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

பிரமாணம்:—மாத்திரை-உ, க. பேதி அதிகமாக வேண்டுமானால் தேகசுபாவத்திற்குத்தகுந்தபடி ஐந்து ஏழு மாத்திரைகளை உபயோகிக்கலாம்.

உபயோகம்:—கைப்புச்சொறி தீரும். கபச்சத்து, பித்தநீர் முதலியவைகளைப் பேதியால் வெளிப்படுத்தும்.

சொறிரோக எண்ணெய்கள்

சிலையெண்ணெய்.

மனோசிலை பலம்-க, பசுவின்நெய் பலம்-உ௪, மனோசிலையை நேர்மையாகப்பொடித்து நெய்யிற் கலந்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துவரப் புகையெழும்பும். புகை அடங்குகிற வரையில் எரித்துப்புகை அடங்கினவுடன் சற்றுவாயகன்ற பாத்திரத்தில் தண்ணீரைவிட்டு அதில் விட்டுவிடவேண்டும். குளிர்ந்த பிறகு மேலே மிதக்கும் நெய்யைவழித்து வேறு பாத்திரத்தில் வைத்துக்கொள்க. இதனைச் சொறியின்மீது பூசிவரச்சொறிரோகம் தீரும்.

கேந்தி யெண்ணெய்.

தேவையான நெல்லிக்காய்க்கெந்தகம். இதனைக் கல்வத்திற்போட்டுப் பொடித்து எருக்கம்பாலைச் சிறு

கச்சிறுகவார்த்து எட்டுச்சாம நேரமரைத்துச் சிறுவில்லைகளாகச்செய்து நிழலிலுலர்த்தி ஒரு பாத்திரத்திற் போட்டு அது நிறைய தைலத்தைவிட்டு அடுப்பேற்றி நான்குசாம நேரமெரித்து இறக்கி ஆறினபின் மேலே மிதக்கும் எண்ணெயை வழித்துத்தனியே வைத்துக்கொண்டு மேற்பூசிவர வறட்டுச்சொறி, சைப்புச்சொறி, படர்தாமரை ஆகியவை தீரும்.

### எருக்கெண்ணெய்.

நல்லெண்ணெய் பலம்-ரு, இதனை அடுப்பேற்றிக்காய்ச்சி நன்றாகக்கொதிக்கிற பதத்தில் இருபத்தொரு எருக்கிலைகளை ஒவ்வொன்றாக மேற்படி எண்ணெயிற் போடவேண்டும். ஒரு இலையைப்போட்டு அது கருகினபிறகு மற்றொன்றைப் போடவேண்டும். இவ்விதம் இலைகளெல்லாம் கரித்து சாம்பலானபிறகு அதை இறக்கி ஆறினபிறகு ஒரு வராகனெடை மனோசிலையை நேர்மையாகப்பொடித்து அதிற்போட்டுநன்றாகக்கலக்கிச் சீஷாவில் வைத்துக்கொண்டு மேற்பூசிவரச் சொறிரோகம் தீரும்.

### தாளக எண்ணெய்.

தாளகம் பலம்-உ, நல்லெண்ணெய் பலம்-ரு தாளகத்தை நேர்மையாகப்பொடித்து வைத்துக்கொள்க. எண்ணெயைக் காய்ச்சிக்கொதிக்க ஆரம்பித்தவுடன் மேற்படி தூளைக்கொஞ்சங் கொஞ்சமாக அதிற் போட்டுவரவேண்டும். மர அகப்பையால் கைவிடாமல் துழாவியும் வரவேண்டும். எல்லாத்தூளையும் போட்டபின்பு எண்ணெயானது மயில் கழுத்துவருணமாகி நெருப்புபற்றிக்கொள்ளும். அந்தச்சமயத்



தில் [illegible]பாத்திரத்தை மூடிவிடவேண்டும். இப்படிச்செய்வதால் சுவாலை அவிந்துபோகும். பழையபடியும் அடுப்பேற்றி எரித்தால் எண்ணெயில் தீபிடிக்கும். உடனே மூடிவிட்டால் அவிந்துபோகும். இவ்விதம் ஐந்துதடவை தீப்பிடித்து அவிந்தபிறகு இறக்கி ஆறினபின்பு சீஷாவில் பத்திரப்படுத்தவும். இதனைச் சொறியின் மீதுபூசி வெயிலில் உட்கார்ந்திருந்து வெந்நீரில் ஸ்நானஞ்செய்யவேண்டும். இவ்விதம் தினம் ஒருதடவை செய்துவரின் சொறிரோகம், படர்தாமரை ஆகியவை தீரும்.

### தகரையெண்ணெய்.

ஊசித்தகரைவிதை பலம்-உச, இதனைப்பொடித்து ஜலம்வார்த்து வெண்ணெய்போலரைத்துக்கொள்ளவேண்டும். நெல்லிக்காய்க் கெந்தகத்தூள் பலம்-க, பசுவின் பால்படி-உ, நெய் பலம்-கரு, இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து காய்ச்சி நீர்சுண்டிக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி வடிகட்டி வைத்துக்கொள்ளவும். இந்த எண்ணெயை மேற்பூசிவரச் சொறிரோகம், படர்தாமரை ஆகியவை தீரும். இதன் கடுகைத்தேய்த்தும் ஸ்நானஞ் செய்துவரலாம்.

### கருப்பெண்ணெய்.

குன்றிமணிப்பருப்பு, நெல்லிமுள்ளி, மிளகு, கடுக்காய்ப்பிஞ்சு இவற்றின் சூரணம் வகை-க-க்கு வராகனெடை-ரு, மயில் துத்தத்தூள் வராகனெடை-ரு, நல்லெண்ணெய் பலம்-ரு, நல்லெண்ணெயைக்காய்ச்சிக்கொதித்தவுடன் குன்றிமணிப்பருப்புத்தூளைப் போட்டுத்துழாவி அது கரித்து தீய்ந்துபோனவுடன் நெல்

வெமுள்ளிச்சூரணத்தைப் போட்டுத் துழாவி அது தீய்ந்து கரிந்துபோனவுடன் கடுக்காய்த்தூளைப்போட்டுத் துழாவி அது தீய்ந்து கரிந்துபோனவுடன் இறக்கி ஆறினபின்பு மிளகுத்தூளைப்போட்டு நன்றாக மிஸ்ரமித்துச் சீஷாவில் வைத்துக்கொண்டு மேற்பூசிவரச் சொறிக் கொப்பளங்கள், சொறி சிரங்கு ஆகியவை தீரும்.

## அலரியெண்ணெய்.

நல்லெண்ணெய் பலம்-௩, அலரியிலை எண்-௨0. எண்ணெயைக்காய்ச்சிக் கொதித்தவுடன் அதில் ஒரு இலையைப்போடவேண்டும். அது எரிந்து போனவுடன் மறு இலையைப்போடவேண்டும். இவ்விதம் இருபது இலையும் சென்றபின்பு இறக்கி ஆறவிட்டுச் சீஷாவிற் பத்திரப்படுத்தவும். இதனை மேற்பூசிவருவதால் நைப்புச்சொறி, வறட்டுச்சொறி ஆகியவை தீரும். ஒவ்வொருநாளும் அரைப்பிட்டுக் கழுவியும் வரவேண்டும்.

## அபின் எண்ணெய்.

நல்லெண்ணெய் பலம்-௫, அபின் பலம்-௨, இவ்விரண்டையுங்கலந்து அடுப்பேற்றி அபின் கருகிப்போகிற வரையிற் காய்ச்சி இறக்கி ஆறினபின்பு சீஷாவில் வைத்துக்கொள்ளவும். இதனை மேற்பூசிவருவதால் சொறிரோகம் தீரும்.

## சொறிரோக மேற்பூச்சு.

மயில்துத்தத்தூள், புகையிலைத்தூள் இவை வகை-க-க்கு வராகனெடை-க, கமேலாமா வராகனெடை-௪, நல்லெண்ணெய் செல்லத்தக்க அளவு. முன்



சரக்குகளை ஒன்றாகச்சேர்த்து நல்லெண்ணெயை விட்டு வெண்ணெய் போலரைத்து தேற்பற்றிட்டு வரச் சொறி சிரங்கு, சொறி ஆகியவை தீரும்.

## மேற்படி வேறு.

பலாப்பூவை யுலர்த்தி எரித்துச்சாம்பலாக்கி நல்லெண்ணெயிற் குழப்பி மேற்பூசிவரச் சொறிரோகம் தீரும்.

## ஷை வேறு.

மயில்துத்தத்தூள், சுத்திசெய்த இரசம், மிளகுச்சூரணம் இவை வகை-க-க்கு வராகனெடை-௩, துப்பாக்கிமருந்து வராகனெடை-௫. நெய் பலம்-௨. துப்பாக்கிமருந்தைத்தவிர மற்றவைகளைக் கல்வத்திலிட்டுக் கால்மணிநேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின் துப்பாக்கிமருந்தைச்சேர்த்துக் கைபால் மிஸ்ரமித்து நெய்யையுஞ்சேர்த்து ஒன்றாகக்கலந்து வைத்துக் கொண்டு மேற்பூசிப் பருப்பைபரைத்துத் தேய்த்து வெந்நீரில் ஸ்நானஞ்செய்துவரச் சொறி, சொறிசிரங்கு ஆகியவை தீரும்.

## ஷை வேறு.

எருக்கம்பாலை உலர்த்தி எரித்துச்சாம்பலாக்கி நல்லெண்ணெயிற்குழைத்து மேற்பூசி ஒருசாமஞ்சென்று வெந்நீரில் ஸ்நானஞ்செய்யவும். இவ்விதம் செய்துவரச் சொறி, சொறிசிரங்கு ஆகியவை தீரும்.

## மேற்படி வேறு.

முருங்கைவேர்ப்பட்டை பலம்-க. இதனைச்சிதைத்து ஒருபலம் எண்ணெயிற்போட்டுக்காய்ச்சி எ

ரிக்துகரிந்துபோனபிறகு எடுத்து எண்ணெயுடன்சேர்த்து அரைத்து மேற்பூசி ஒருசாமநேரஞ்சென்று வெந்நீரில் ஸ்நானஞ்செய்யவும். இவ்விதம் செய்துவரின் மேற்கண்ட ரோகங்கள் தீரும்.

மேற்படி வேறு.

பவக்கிரைவித்து ஒருபங்கு, கசகசா ஒருபங்கு. இவ்விரண்டையுஞ்சேர்த்து வெண்ணெய்போலரைத்து தேகத்தின்மீதுபூசி ஒருசாமநேரஞ்சென்று வெந்நீரில் ஸ்நானஞ்செய்யவேண்டும். இவ்விதம் செய்துவர மேற்கண்டரோகம் தீரும்.

ஷை வேறு.

உதிர்ந்துபோன ஆலம்பழுப்பு, காய்ந்துபோன கள்ளிக்கொம்பு, கசகசாத்தோல் இம்மூன்றையும் தனித்தனி சட்டசரி சமனெடை. இவற்றைத் தூள்செய்து ஒன்றாகக்கலந்து நல்லெண்ணெயிற்குழப்பி மேற்பூசி ஒருசாமநேரஞ்சென்று வெந்நீரில் ஸ்நானஞ்செய்யவேண்டும். இவ்விதம் செய்துவரின் மேற்கண்ட ரோகங்கள் தீரும்

மேற்படி வேறு.

துப்பாக்கிமருந்தை நல்லெண்ணெயிற்குழைத்து மேலேபூசிச் சற்றுநேரம் வெயிலில் இருந்து வெந்நீரில் ஸ்நானஞ்செய்யவேண்டும். இவ்விதம் செய்துவரின் மேற்கண்டரோகங்கள் தீரும்.

மேற்படி வேறு.

வெடியுப்பைத் தூள்செய்து அதில் நல்லெண்ணெயைவிட்டு வெண்ணெய்போலரைத்து எண்ணெ



யிற்குழப்பி மேலே பூசிவரச் சொறி, சொறிசிரங்கு ஆகியவை தீரும்.

மேற்படி வேறு

மருதோன்றிஇலை, மருதோன்றிப்பூ இவ்விரண்டையும் வெண்ணெய்போலரைத்து நல்லெண்ணெயிற்குழப்பி மேலேபூசிவரச் சொறிசிரங்கு, சொறி ஆகியவை தீரும்.

ஷை வேறு.

நாட்டுச்சவுக்காரத்தைத் தண்ணீர்விட்டு வெண்ணெய்போலரைத்து மேலேபூசிச் சற்று தாமதித்து வெந்நீரில் ஸ்நானஞ்செய்துவரச் சொறிசிரங்கு, சொறி ஆகியவை தீரும்.

ஷை வேறு.

வெண்காரத்தூள், சம்பங்கிவெண்ணெய், பன்னீர், எலுமிச்சம்பழச்சாறு இவை வகைக்குப் பலம் ௧. இவையெல்லாவற்றையும் சேர்த்தரைத்து ஒருவராகனெடை கூடன்தூளைப்போட்டு நன்றாக மிஸ்ரமித்து மேலேபூசிவர வறட்டுச்சொறி, நைப்புச்சொறி, சொறிசிரங்கு ஆகியவை தீரும்.

மேற்படி வேறு.

கெல்லிக்காய்க்கெந்தகம், சுத்திசெய்த இரசம், மயில்துத்தம் (இதனை வறுத்துக்கொள்ளவும்) இவை வகைக்கு வராகனெடை ௨. இரசத்தையும் கெந்தகத்தையும் தொக்கித்தரைத்து நன்றாகக்கருத்தபின்பு மயில்துத்தத்தூளையும்சேர்த்து அரைமணிநேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு முப்பத்துமூன்றுதடவை

ஜலத்தைவிட்டுக் கழுவினநெய்யிற் குழைத்து மேலே பூசி ஒருமணிநேரம் சென்றபின்பு தண்ணீரில் ஸ்நானஞ்செய்யவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்யின் வறட்டுச்சொறி, கைப்புச்சொறி ஆகியவை தீரும்.

மேற்படி வேறு.

வங்கசெந்தூரம், நெல்லிக்காய்க்கெந்தகம், முர்தார்சிங்கி, மயில்துத்தம் இவை வகைக்கு வராகனெடை-௩. இவற்றைத் தனித்தனிபொடித்து ஒன்றாகக் கலந்து அரைமணிநேரம் அரைத்துப்பன்னிரண்டு வராகனெடை நெய்யிற்குழைத்து மேலேபூசிவரச் சொறி, சொறிசிரங்கு ஆகியவை தீரும்.

மேற்படி வேறு.

மயில்துத்தம், நெல்லிக்காய்க்கெந்தகம், சூடன் இவை வகைக்கு வராகனெடை-௫. பத்துத்தடவை ஜலத்தைவிட்டுக் கழுவினநெய் பலம்-௧. மூன்றையும் தனித்தனிபொடித்து ஒன்றாகக்கலந்து அரைமணிநேரமரைத்து நெய்யிற்குழைத்து மேலேபூசிச் சற்றுநேரம் வெயிலிலிருந்து பிறகு வெந்நீரில் ஸ்நானஞ்செய்யவேண்டும். இவ்விதம் சிலதடவைகள் செய்யின் சொறிரோகம், சொறிசிரங்கு ஆகியவை தீரும்.

நரம்புச்சிலந்தி ரோகசிகிச்சை.

இது, அநேகருக்குத் தெரிந்தவியாதி. கஷ்டத்தையும் துன்பத்தையும் கொடுக்கத்தக்கது. இதற்குத் தக்க பலமருந்துகள் அனுபோகவைத்திய நவநீத பத்தாம்பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆ



யினும் இதனைக் கவனிப்போருக்கும் உபயோகமாகும்படி சில யூநானிமுறைகளை இங்கெழுதுவாம்.

நரம்புச்சிலந்தி உசிதம்.

வெண்காரத்தூள் வராகனெடை-௨. இதனை ரோஜாப்பூ எண்ணெயிற்குழைத்து உருண்டையாகச் செய்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்யவும். நெய்ச்சாதம், நெய் சேர்ந்தபதார்த்தங்கள் ஆகியவைகளை அதிகமாக உபயோகப்படுத்தவும். நெய்யை அதிகமாகவும் உபயோகிக்கவும். இவ்விதம் சிலநாட்கள் செய்யின் நரம்புச்சிலந்திரோகம் தீரும்.

ஷை வேறு.

பசிக்கீரை வேர்த்தோலை வெண்ணெய்போலரைத்து மேல்வைத்துக் கட்டிவர நரம்புச்சிலந்திரோகம் தீரும்.

ஷை வேறு.

மலைவேப்பிலை எண் ௭. இவற்றை ஒவ்வொன்றாக வாயிற்போட்டு விழுங்கிவிடவேண்டும். இவ்விதம் பிரதிதினமும் உட்கொண்டுவந்தால் நரம்புச்சிலந்திரோகம் தீரும்.

ஷை வேறு.

கரியபோளத்தைத் தூள்செய்து நெய்யிற்குழைத்து மேலேதடவித் துணிவைத்துக் கட்டவேண்டும். மறுநாள் இரண்டுபங்கு போளத்தைத் தூள்செய்து முன்போற்பூசி முன்போற் கட்டவேண்டும். மூன்றாநாள் மூன்றுபங்கு போளத்தைத் தூள்செய்து நெய்

யிற்குழைத்து முன்போற் கட்டவேண்டும். இவ்விதம் ஒருமுறைசெய்யின் நரம்புச்சிலந்திரோகம் தீரும்.

மேற்படி வேறு.

பூநாகத்தை உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்க. அரைமுதல் ஒருவராகனெடை சூரணத்தைத் தேனிற்குழைத்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்துவரின் நரம்புச்சிலந்திப்புண் அதிசீக்கிரம் ஆறிப்போகும்.

ஷை வேறு.

மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, மேற்றோல் நீக்கின சுக்கு, வாலுழுச்சருகுச்சாம்பல் இவற்றின்சூரணம் வகைக்குப்பலம்-க. இவையெல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து அரைமணிநேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு எடுத்து வைத்துக்கொள்க.

பிரமாணம்:— வராகனெடை-உ, நான்கு வராகனெடைதேனில் குழைத்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலைமாலை இரண்டுவேளையும் செய்யவும்.

உபயோகம்:—நரம்புச்சிலந்தி, நரம்புச்சிலந்திப்புண் ஆகியவை தீரும்.

ஷை வேறு.

நல்லெண்ணெயை இளஞ்சூடாக்கிச்செய்து நரம்புச்சிலந்தி, வீக்கம் முதலியவையுள்ள ஸ்தானங்களில் பூசி எண்ணெய்ப்பசையுண்டாக்கி எருக்கிலையை வதக்கி ஒற்றிவிட்டு அதனையே அதன்மீது வைத்துக்க



ட்டிவிடவேண்டும். இவ்விதம் தினம் இரண்டொருதடவை செய்யலாம். இவ்வாறு செய்துவர, நரம்புச்சிலந்தி, அதனாலுண்டான வீக்கம், வேதனை முதலியவை தீரும்.

ஷை வேறு.

வெள்ளைச்சாரணை வேர்த்தோலை ஒரு பிடிச் சிற்றாமணக்கிலையுடன் வெண்ணெய் போலரைத்து வில்லையாகச்செய்து மேலே வைத்துக்கட்டவேண்டும். தினம் இரண்டு தடவைசெய்யலாம். இவ்விதம் சிலதடவைகள் செய்யின் மேற்கண்ட ரோகங்கள் தீரும்.

குறிப்பு:

மேற்கண்டதில் கொஞ்சம் சுக்குச்சூரணத்தையும் சேர்த்துக்கொண்டால் இன்னும் விசேஷம்.

மேற்படி வேறு.

தோலுரித்த வெங்காயம் பலம்-௩, தோலுரித்த வெள்ளைப்பூண்டு பலம்-௩, சோரக்கொட்டை ஒன்று, நாட்டுச்சவுக்காரம் வராகனெடை-க, கடுகுத்தூள் வராகனெடை-உ. இவையெல்லாவற்றையும் வெண்ணெய் போலரைத்துப் பில்லையாகச்செய்து மேலே வைத்துக்கட்டவேண்டும். பனிரண்டு மணிநேரம் சென்றபின்பு அதனை அவிழ்த்துவிட்டு முன்போல் இதப்படுத்தி மறுபடியும் கட்டவேண்டும். இவ்விதம் நாலைந்து நாட்கள் செய்யின் நரம்புச்சிலந்தி, அதனாலுண்டாகும் வீக்கம் ஆகியவை தீரும்.

### ஷை வேறு.

வெள்ளைக்குங்கிலியத்தூள் பலம்-௰, சவுக்காரம் பலம்-௧, அபின் வராகனெடை-௨௰, நல்லெண்ணெய் பலம்-௮, முன் மூன்றையும் அரைத்து எண்ணெயிற் காய்ச்சி பிளாஸ்திரி பதத்தில் இறக்கி வெற்றிலையில் அல்லது வாழையிலையில் தடவி மேலே வைத்துக்கட்ட வேண்டும். இவ்விதம் தினம் காலைமாலை இரண்டுவேளையும் செய்யின் நரம்புச்சிலந்திப்புண், நரம்புச்சிலந்தி ஆகியவை தீரும்.

### ஷை வேறு.

நேர்வாளப் பருப்பைத் தண்ணீர் வார்த்தரைத்துக் கட்டுவதாலும் ஷை வியாதி குணப்படும்.

### மேற்படி வேறு.

கருஞ்சீரகத்தைத் தூள்செய்து தயிர் வார்த்தரைத்துப் பூசிவருவதால் நரம்புச்சிலந்தி தீரும்.

### ஷை வேறு.

உளுந்துமா பலம்-௨, பெருங்காயம் வராகனெடை-௨, இவ்விரண்டையும் சேர்த்துத் தண்ணீர்வார்த்தரைத்துப்பில்லை செய்து மேல்வைத்துக் கட்டிவருவதால் மேற்படிரோகம் குணப்படும்.

### ஷை வேறு.

காட்டுப்புறா வெச்சத்தைப்பொடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம் வராகனெடை-௫, வெல்லம் வராகனெடை-௫, இவ்விரண்டையும் சேர்த்தரைத்துப்



பத்து மாத்திரைகளாகச் செய்து வைத்துக்கொள்க. வேளையொன்றிற்கு ஒவ்வொரு மாத்திரையாகக் காலைமாலை இரண்டுவேளையும் உபயோகித்துவர மேற்படி ரோகம் தீரும்.

## பிளாஸ்திரி வகைகள்.

### வெள்ளைப் பிளாஸ்திரி.

வெள்ளைமெழுகு பலம்-௧, கற்பூரத்தூள் வராகனெடை-௧, நல்லெண்ணெய் பலம்-௫, வங்கபஸ்பம் பலம்-௧.

செய்முறை:—எண்ணெயைக்காய்ச்சிக் கொதிகண்டவுடன் மெழுகைப் போட்டுத்தீயை மெதுவாக எரித்து மற்றவைகளையும் அதிற் சேர்த்து அரைத்து வைத்துக்கொள்க. இதனை வஸ்திரத்துண்டில் தடவி மேற்போட்டுவர இரணங்களை ஆற்றிக்குணப்படுத்திவிடும்.

### கமேலாக்களிம்பு

கமேலா வராகனெடை-௮, மெழுகு வராகனெடை-௨௰, குங்கிலியத்தூள் வராகனெடை-௨, காய்ச்சக்கட்டித்தூள் வராகனெடை-௧, மிருதார்சிங்கித்தூள் வராகனெடை-௰, மயில்துத்தத்தூள் வராகனெடை-௰, பசுவின்நெய் வராகனெடை-௮.

செய்முறை:—நெய்யை ஜலத்தைவிட்டு நன்றாகத் தேய்த்துக்கழுவி மற்றவைகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு அரைத்து பிளாஸ்திரி பதத்தில் பீங்கான் ஜாடியில் வைத்துக்கொள்க. இதனை

வஸ்திரத்துண்டில் தடவிமேலே போட்டுவருவதனால் புண்கள், ரணங்கள் ஆகியவை ஆறும்.

## குங்கிலியக்களிம்பு.

குங்கிலியத்தூள் பலம்-௩, கால் கெஜங்கம்பிளியை எரித்தசாம்பல், கத்தைக்காம்புத்தூள், மிருதார்சிங்கித்தூள், கல்மதத்தூள் இவை வகைக்கு வராகனெடை-௫, நெய் பலம்-மூன்றரை. மேற்கண்ட சரக்குகளை ஒன்றாகக்கலந்து அரைமணி நேரமரைத்து எல்லாம் மிஸ்ரமானபின்பு நெய்யைச்சேர்த்து இரண்டுமணி நேரமரைத்து பிளாஸ்திரிபதத்தில் பீங்கான் ஜிமிழில் வழித்து வைத்துக்கொள்க. இதனைத் துணித்துண்டில் தடவிக்குழிப்புண்ணிற் போட்டுவரக்குழிதூர்ந்து சதை வளர்ந்து புண் ஆறும்.

## மெழுக்கு பிளாஸ்திரி.

மெழுக்கு பலம்-ஒன்றரை, பழைய பஞ்சை எரித்து வடிகட்டின சாம்பல் பலம்-௩, வசம்புச்சூரணம் பலம்-௧, நெய் பலம்-இரண்டரை, மயில்துத்தத்தூள் குன்றிமணியெடை-௨.

செய்முறை:—நெய்யையும் மெழுக்கையும் சேர்த்து அடுப்பின்மீது வைத்துக்காய்ச்ச அது உருகும். அத்தருணத்தில் பஞ்சின் சாம்பலைத்தூவி நன்றாகக்கிளறிக்கீழிறக்கி மயில்துத்தத்தூளைச்சேர்த்து நன்றாக அரைத்துப்பீங்கான் ஜிமிழில் வைத்துக்கொள்க. இதனைத்துண்டு வஸ்திரத்தில் தடவி மேற்போட்டுவர ஆறாதரணமெல்லாம் ஆறும். இரணத்தை ஆற்றுவதில் இதுமிகவும் சிறந்தது.



## குறிப்பு.

வசம்பைச் சுட்டுச்சாம்பலாக்கி மேற்கண்ட எடை சேர்த்துக்கொண்டால் மிகவும் சிரேஷ்டம். ஆனால், நெய்யை அதிகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

## இங்கிலீஷ் பிளாஸ்திரி.

மெழுக்கு பலம்-அரை, பொரித்த வெங்காரம் வராகனெடை-அரை, வங்கசெந்தூரம் வராகனெடை-அரை, மிர்தார்சிங்கித்தூள் வராகனெடை-௧, மயில் துத்தத்தூள் குன்றிமணியெடை-௨, நெய் பலம்-௩.

செய்முறை:—நெய்யையும் மெழுக்கையும் காய்ச்சி மெழுக்கு உருகினவுடன் மற்றச்சரக்குகளையும் அதிற்போட்டு நன்றாக மிஸ்ரமித்துக் கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்துப்பீங்கான் ஜிமிழில் வைத்துக்கொண்டு வஸ்திரத்துண்டில் தடவிப்போட்டுவர ஆறாதரணங்களெல்லாம் ஆறும்.

## சிங்கி பிளாஸ்திரி.

கற்கடக சிங்கித்தூள், கடுமைமா இவை வகைக்கு வராகனெடை-௩, மயில்துத்தத்தூள் வராகனெடை-அரை, இவ்விரண்டையுங்கலந்து கல்வத்திலிட்டு அரைமணி நேரமரைத்து நன்றாக மிஸ்ரமானபின்பு நல்லெண்ணெயைவிட்டு அரைத்துப்பிளாஸ்திரிபதத்தில் எடுத்து வைத்துக்கொள்க. இதனைத் துணித்துண்டில்தடவி மேற்போட்டுவரப் புண் ரணம் ஆகியவை ஆறும்.

## குக்கிலியக்களிம்பு வேறு.

வெள்ளைக்குக்கிலியத்தூள் ஒருபலம், மஞ்சள் மெழுகு அரைப்பலம். நல்லெண்ணெய் நான்குபங்கு எண்ணெயையும் மெழுகையும் சேர்த்துக்காய்ச்சி மெழுகு உருகினபதத்தில் கீழிறக்கி மேற்படி குக்கிலியத்தூளைப்போட்டு நன்றாக மிஸ்ரமித்துக்கல்வத்திலிட்டு அரைத்துப் பீங்கான் ஜாடியில் வைத்துக்கொள்க. இதனைச்சீலைத்துண்டில் தடவி மேற்போட்டுவர ரணங்கள், புண்கள் ஆகியனவும் ஆறும்.

## மெழுக்குப்ளாஸ்திரி வேறு.

மஞ்சள் மெழுக்கு, வெள்ளைக்குக்கிலியத்தூள், காய்ச்சக்கட்டித்தூள், வகைக்கு வராகனெடை-ஈ. கற்பூரத்தூள் வராகனெடை-க, நல்லெண்ணெய் பலம்-க.

செய்முறை:—நல்லெண்ணெயையும் மெழுக்கையும் கலந்து வெள்ளைக்குங்கிலியத்தூளைப்போட்டு நன்று கொதிவருகிறவரையில் வைத்துப்பிறகு காய்ச்சுக்கட்டித்தூளைத் தூவிக்கீழிறக்கி நன்றாகக்கடைந்து பிறகு சூடனைச்சேர்த்து மிஸ்ரமித்துப் பீங்கான் பாத்திரத்திற் பத்திரப்படுத்தவும். இதனை வஸ்திரத்துண்டில் தடவி மேலேபோட்டுவரப் புண்கள், குழிப்புண்கள், புரைப்புண்கள், மேகப்புண்கள் ஆகியவை தீரும்.

## குங்கிலியப் பிளாஸ்திரி.

வெள்ளைக்குக்கிலியத்தூள், காசுக்கட்டித்தூள் இவை வகைக்கு வராகனெடை-ஒன்றரை, மயில்துத்தத்தூள் குன்றிமணியெடை-உ, இவற்றைக்கல்வத்திலிட்டு நல்லெண்ணெயைச்சிறுகச் சிறுகவார்த்து அரைத்து [illegible]த்தில் வழித்து வைத்துக்கொள்க. இதனைச்சீலைத்துண்டில் தடவி மேற்போட்டுவர எல்லாவகைப்புண்களும் ஆறும். இது ஒரு அநுபவசித்தமானமுறை.



## ஐங்கால் பிளாஸ்திரி.

கடுகெண்ணெய் பலம்-ஐ, ஐங்காலப்பச்சைத்தூள் வராகனெடை-ச, குங்குமத்தூள் குன்றிமணியெடை-ச, மஞ்சள்மெழுக்கு பலம்-ஐ.

செய்முறை:—எண்ணெயையும் மெழுக்கையும் உருக்கி மெழுகு உருகினவுடன் கீழிறக்கி மற்றச்சரக்குகளையும் அதிற்சேர்த்து நன்றாகமிஸ்ரமித்துக் கல்வத்திலிட்டரைத்துச் ஜாடியில் வைத்துக்கொள்க. இதனைச் சீலைத்துண்டில் தடவி மேற்போட்டுவரக் குழிப்புண், மேகப்புண், புரைப்புண் ஆகியவை தீரும்.

## வெள்ளை மெழுக்குப் பிளாஸ்திரி.

குளிர்காலமாயிருந்தால் நெய் ஒருபலம் வெயிற்காலமாயிருந்தால் நெய் பலம்-உ. மயில்துத்தத்தூள் வராகனெடை-வ, வெள்ளைமெழுக்கு பலம்-உ. வங்கசெந்தூரம் வராகனெடை-கவ. நெய்யையும் மெழுகையும்சேர்த்துருக்கி மெழுகு உருகினவுடன் கீழிறக்கி மற்றவைகளையும்சேர்த்து நன்றாகமிஸ்ரமித்துக் கல்வத்திலிட்டு அரைத்து வழித்துவைத்துக்கொள்க. இதனைத் துணியில் தடவி மேற்போட்டுவர எல்லாவகை ரணங்களும் ஆறும்.

## குங்கிலியப் பிளாஸ்திரி வேறு.

வெள்ளைக் குங்கிலியத்தூள் பலம் ௪. நெய்ப்பலம் அரை, மஞ்சள் மெழுகு வராகனெடை ௨. நெய்யையுருக்கி மெழுகை அதிற்போட்டு அது உருகினவுடன் குங்கிலியத்தூளையும்போட்டுக் கிறக்கிக் கல்வத்திலிட்டரைத்துச் சிமிழில்வைத்துக்கொள்க. புண்ணைக்கழுவி அதன்மேல் இதைத் தடவவேண்டும். இவ்விதம் தினம் இரண்டுமூன்றுதடவை செய்துவரின் பலவகைச் சிரங்குகளு மாறும்.

## பூனைக்காலிக்களிம்பு.

பூனைக்காலிவிதைப்பருப்புச்சூரணம் பலம் ௪. வேப்பிலை, இலவம்இலை இவை வகைக்குப் பலம் ௨. நல்லெண்ணெய் பலம் ௩.

செய்முறை:—முன்கண்ட இரண்டு இலைகளையும் சேர்த்தரைத்துக் காலரை இலைமுள்ள சிறுபில்லைகளாகச்செய்து கொள்க. எண்ணெயைக்காய்ச்சிக்கிறக்கி மேற்படி பில்லைகளைப்போட்டு எண்ணெய் ஆறினபின்பு மேற்படி சூரணத்தையும்போட்டுக்கடைந்து பிளாஸ்திரிபதத்தில் எடுத்து வழித்துச் சிமிழில்வைத்துக்கொள்க. இதனைச் சீலைத்துண்டில் தடவி ரணங்களின்மீதுபோட்டுவர ரணக்கிருமிப்புண், அழிபுண் முதலியவை தீரும்.

## சர்வரணப் பிளாஸ்திரி.

பழஞ்செருப்பைச் சுட்டெரித்துக் கரியாக்கிப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்த சூரணம், பாக்கைச்



சுட்டுக்கரியாக்கி வஸ்திரகாயஞ்செய்த சூரணம், கடுக்காய்க்கொட்டையைச் சுட்டெரித்த கரிச்சூரணம், எருக்கன்வேரையைச் சுட்டெரித்த கரிச்சூரணம், மிருதார்சிங்கித்தூள், காய்ச்சுக்கட்டிச்சூரணம் இவைவகைக்கு வராகனெடை இரண்டரை, நெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சூரணங்களையெல்லாம் ஒன்றாகக்கலந்து நெய்யிற்காய்ச்சி அதிற்போட்டு நன்றாகக்கடைந்து பிளாஸ்திரிபதத்தில் வழித்துச்சிமிழில் வைத்துக்கொண்டு இரணங்களின்மீது பூசிவர எல்லாவகை ரணங்களும் தீரும்.

## பவுத்திரப் பிளாஸ்திரி.

பழஞ்செருப்பைச் சுட்டெரித்த கரிச்சூரணம், காய்ச்சுக்கட்டிச்சூரணம், அப்ளாக்காரம், கல்மதம், தேன்மெழுகு இவை வகைக்குப் பலம் அரை. இவற்றுள் பொடிக்கவேண்டியவைகளைப்பொடித்து வஸ்திரகாயஞ்செய்து கொள்ளவேண்டும். தண்ணீரால் நூறுதடவைகழுவின பசுவின்நெய் தேவையான அளவு.

செய்முறை:—நெய்யில் மெழுகைச்சேர்த்து உருக்கி அது உருகினவுடன் இறக்கி ஆறினபின்பு மேற்படி சூரணங்களையெல்லாம் அதிற்சேர்த்துக்கடைந்து பிளாஸ்திரிபதத்தில் வழித்துச் சிமிழில்வைத்துக்கொண்டு மேற்பூசிவரப் பவுத்திரரணங்கள் ஆறும்.

## தண்ணீர்ப் பிளாஸ்திரி.

வெள்ளைக்குங்கிலியம், செய்வகைக்குறி பலம்-௩. காய்ச்சுக்கட்டி, படிக்காரம், மயில்துத்தம் இவை வகை-க-க்கு வராகனெடை ஏழரை.

செய்முறை:—மேற்கண்ட சரக்குகளில் சூரணிக்கவேண்டியவைகளைச் சூரணித்தும் பொடிக்கவேண்டியவைகளைப் பொடித்தும் வைத்துக்கொள்க. நெய்யையும் குங்கிலியப்பொடியையும் சேர்த்துக்கொஞ்சம் தண்ணீர்விட்டு இரண்டுமணிநேரம் கையால் மர்த்தித்துப் பிறகு மற்றச் சூரணங்களையுங்கலந்து கடைந்து பிளாஸ்திரிபதத்தில் வைத்துக்கொள்க. இதனை மேற்பூசிவர எல்லாவகை ரணங்கள், சீலோடுகிற ரணங்கள் முதலியவை தீரும். இதனை ரணங்களின்மீது போட்டால் குளிர்ந்து சில்லிட்டிருக்கும்.

## தண்ணீர்ப் பிளாஸ்திரி வேறு.

மைசாக்ஷித்தூள், சுத்திசெய்த இரசம் இவை வகை-க-க்கு வராகனெடை-௪. இரசாஞ்சனச்சூரணம் வராகனெடை-உ.

செய்முறை:—மைசாக்ஷி சூரணத்தைத் தண்ணீரிற்குழைத்துப் பிறகு இரசாஞ்சனச்சூரணத்தையும் அதிற்கலந்து இரசத்தைச்சேர்த்து அது மடிகிறவரையிலரைத்து வழித்துச் சிமிழில் பத்திரப்படுத்தவும். இதனை எல்லாவகை ரணங்களிலும் உபயோகிக்கலாம். சீலோடுகிற ரணமும் அழிரணமும் முதலியவைகளையும் குணப்படுத்தும்.



## ரண எண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய் பலம்-௩, சிற்றாமணக்கிலைச்சாறு பலம்-௩. கற்சுண்ணாம்புச்சூரணம் வராகனெடை-௫.

செய்முறை:—முன் இரண்டு திரவத்தையுஞ்சேர்த்துக் காய்ச்சி நீர்சுண்டினபதத்திலிறக்கி அதில் மேற்படி சுண்ணாம்பைச் சேர்த்தரைத்துப் பிளாஸ்திரிபதமாக எடுத்து வைத்துக்கொள்ளவும். இதனை மேற்பூசிவர எல்லாவகைரணங்கள், சிலாரணம், புரைரணம், அழிரணம், குழிரணம் முதலியவைகள் ஆறும்.

## எலும்பு முறிவுசிதம்.

காட்டப்பட்ட செங்கற்சூரணம் ஒருபங்கு, பசுவின்பால் படி-௨. இவ்விரண்டையுங்கலந்து தேவையான அரிசியைக்களைந்து இதிற்சேர்த்துச் சமைத்துச்சாப்பிட்டுவர எலும்பு முறிந்திருப்பது கூடிப்போம்.

## ஷை வேறு.

சாயஇலையென ஒருவகையுண்டு. இதனை அரைத்து மேல்வைத்துக்கட்டி இருபத்துநான்குமணிநேரஞ்சென்று அவிழ்க்கவேண்டும். இவ்விதம் மூன்றுகட்டுக்கட்டினால் முறிந்திருக்கிற எலும்பு சேர்ந்துபோகும்.

ஸ்திரீ குக்ஷாமய சிகிச்சாபோதினி
மூன்றாம் பாகம் முற்றுப் பெற்றது.

7673